# TNPSC
# தேர்வுப் பெட்டகம்

tnpscthervupettagam.com

**நடப்பு நிகழ்வுகள் -**
**செப்டம்பர் 2024**




SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004
shankariasacademy.com

# உள்ளடக்கம்

**TNPSC துளிகள் ........ 10**

**தமிழ்நாடு செய்திகள் ........ 27**

- தமிழ்நாட்டின் புதிய நகராட்சிகள் 2024 ........ 27
- MRMBS திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகள் ........ 27
- சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி - TANGEDCO ........ 28
- 19 ஆம் நூற்றாண்டின் முத்திரைத் தாள் ........ 29
- 2024 ஆம் ஆண்டிற்கான காவிரி நீரின் பங்கு ........ 29
- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பெற்ற கடன்கள் ........ 30
- தைஞ்சா பசுந்தாள் உரம் ........ 31
- சென்னை ஃபார்முலா 4 கார் பந்தயம் ........ 31
- 2024 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பதிவான உறுப்பு தானம் ........ 32
- நான் முதல்வன் - உயர்வுக்குப் படி திட்டம் ........ 33
- பல்நோக்கு ஒருங்கிணைந்தப் போக்குவரத்து பேருந்து வளாகம் ........ 34
- பரம்பிக்குளம் ஆழியார் திட்ட ஒப்பந்தம் ........ 34
- காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களுக்கான புதிய கொள்கை 2024 ........ 35
- செயலில் உள்ள நிறுவனங்களில் பெண் இயக்குநர்கள் – தமிழ்நாடு ........ 36
- இணைய வெளிப் பாதுகாப்பு கொள்கை 2.0 ........ 36
- தமிழ்நாடு சிறு நீர்மின்னாற்றல் உற்பத்திக் கொள்கை – 2024 ........ 37
- நீரேற்றுப் புனல் மின்னாற்றல் சேமிப்பு திட்டக் கொள்கை 2024 ........ 38
- நீலாங்கரையில் கோனோகார்பஸ் மரம் (சென்னை) ........ 38
- தமிழகத்தில் கண் தானம் 2024 ........ 39
- 900 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டுத் திட்டங்கள் ........ 39
- பள்ளிக் கல்வித் துறையின் சாதனைகள் ........ 40
- இறப்பு பணிக்கொடை அதிகரிப்பு ........ 41
- நீலகிரி வரையாடுகளுக்கு ரேடியோ கழுத்துப் பட்டை ........ 42
- 2035 ஆம் ஆண்டில் 1 GT $CO_2$ குறைப்பு ........ 42
- சூரிய ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வு ........ 43
- LEZ பற்றிய மாநில திட்டக்குழு அறிக்கை ........ 44
- சென்னையின் காற்று மாசுபாடு ........ 44
- சமூக நீதி தினம் 2024 ........ 45
- முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம் 2024 ........ 45
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஜான் மார்ஷலின் சிலை ........ 46
- தமிழகத்தில் உடல் உறுப்பு தான தினம் - செப்டம்பர் 23 ........ 46
- காவிரி நீர்ப் பகிர்வு 2024 ........ 46
- மலேரியா ஒழிப்பு இலக்கு ........ 47

**தேசியச் செய்திகள் ........ 48**

- விக்யான் தாரா திட்டம் ........ 48

இந்தியாவின் கிராமப்புறங்களில் சுகாதார நிலை குறித்த அறிக்கை 2024 ........ 48
போலந்திலிருந்து அவுரிநெல்லி இறக்குமதி ........ 49
எழுத்தறிவு மற்றும் முழு அளவிலான எழுத்தறிவு வரையறை ........ 50
பயன் மிகு பொதுக் குறை தீர்ப்பிற்கான வழிகாட்டுதல்கள் ........ 51
GREAT திட்டம் ........ 52
UDAN திட்டம் 5.4 ........ 52
10 மாநிலங்களில் 12 தொழில்துறை திறன்மிகு நகரங்கள் ........ 53
தேசிய மருத்துவப் பதிவேடு தளம் 2024 ........ 54
PMJDY திட்டத்தின் 10 ஆண்டுகள் ........ 54
SPICED திட்டம் ........ 55
பாரத சுழிய உமிழ்வு சரக்குகள் இடமாற்றக் கொள்கை 2024 ........ 55
SHe-Box இணைய தளம் ........ 56
வாகன உடைப்புக் கொள்கை 2024 ........ 56
வேளாண் உள்கட்டமைப்பு நிதி 2024 ........ 57
சமையல் எண்ணெய் குறித்த நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை ........ 57
மருந்து சட்டத்தின் 170வது விதி ........ 58
NAMAN திட்டம் ........ 59
இந்திய அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கி (IPPB) ........ 59
விவசாயிகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் ........ 60
இந்தியாவின் 23வது சட்ட ஆணையம் ........ 60
eShram இணைய தளப் பதிவு ........ 61
எண்ணிம வேளாண் திட்டம் ........ 62
LGBTQI+ சமூகத்திற்கான முன்னெடுப்புகள் ........ 63
இந்தியாவின் முதல் துளிமக் கணினி ........ 63
இந்திய நதிகளில் அதிகபட்ச நீர் வளப் பாதுகாப்பு சார்ந்த இடர்கள் ........ 64
VisioNxt முன்னெடுப்பு ........ 65
இந்தியப் பெருங்கடல் பல்லுயிர்ப் பெருக்க பெருங்கடல் தகவல் அமைப்பு ........ 65
2023 ஆம் ஆண்டில் அதிகபட்ச ஊழல் புகார்கள் ........ 66
உலகளாவிய நெகிழி மாசுபாட்டில் முன்னணியில் உள்ள நாடு ........ 66
நீதிபதிகளின் பதவி உயர்வு குறித்து உச்ச நீதிமன்றம் 2024 ........ 67
ஒருங்கிணைந்த ஓய்வூதிய வழங்கீட்டு முறை ........ 68
தேசிய சிறு சேமிப்புத் திட்டங்களில் மாற்றங்கள் ........ 69
உச்ச நீதிமன்றத்தின் புதிய கொடி மற்றும் சின்னம் ........ 70
சுகாதார நலனில் மாறுதல்கள் குறித்த அறிக்கை 2022-23 ........ 70
அனைவருக்குமான சுகாதாரக் காப்பீடு ........ 71
PM E- DRIVE திட்டம் ........ 72
நில நீர்வழி நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாடு ........ 73
INS மால்பே மற்றும் INS முல்கி ........ 73
மீன்பிடித் தொழிலாளர்களுக்கு எண்ணிம அடையாள அட்டைகள் ........ 73
மௌசம் திட்டம் ........ 74

போர்ட் பிளேர் தீவின் பெயர் மாற்றம் ..... 75
பொது விமானப் போக்குவரத்து தொடர்பான டெல்லி பிரகடனம் ..... 76
BHASKAR தளம் ..... 76
இந்திய இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையம் ..... 77
சத்பவ் நடவடிக்கை ..... 78
இந்தியாவினை பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக மாற்றுவதற்கான தொலை நோக்குத் திட்டம் ..... 78
இந்தியக் கடற்படையின் 'வினேத்ரா' ..... 79
கடல்சார் விவகாரங்கள் சார்ந்த சர்ச்சை தீர்வு மையம் ..... 79
இந்தியாவின் சொந்த கார்பன் சந்தை ..... 79
மத்திய அரசின் ஆறு முன்னெடுப்புகள் ..... 80
வந்தே மெட்ரோ இரயில் சேவை ..... 81
சணல் உற்பத்தியில் சரிவு ..... 81
ஆண்டின் 3வது தேசிய லோக் அதாலத் ..... 82
இந்தியாவில் ஒரே நேரத்தில் தேர்தல் ..... 83
PM-AASHA திட்டத்தின் மறுசீரமைப்பு ..... 84
NPS வாத்சல்யா ..... 85
மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநில அரசுகளின் பங்களிப்பு ..... 85
சிந்து நதி நீர் ஒப்பந்த மறுபரிசீலனை ..... 86
விண்வெளித் திட்டங்களுக்கான நிதி ..... 87
உயிரி-RIDE திட்டம் ..... 88
பல்வேறு தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி 2023-24 ..... 88
வெண்மை புரட்சி 2.0 ..... 89
மியான்மர் எல்லையில் வேலி ..... 90
பரம் வீர் பயணம் ..... 91
6வது உணவுப் பாதுகாப்பு குறியீடு 2024 ..... 91
INSPIRE– MANAK திட்டம் ..... 92
அம்ரித் கட்லா மீன் ..... 93
முக்கிய IPEF ஒப்பந்தங்கள் ..... 93
PM-JUGA திட்டம் ..... 94
உணவு இறக்குமதி நிராகரிப்பு எச்சரிக்கைக்கான இணைய தளம் ..... 94
புற்றுநோய் சார்ந்த பல் தொகையியல் தரவு தளம் ..... 95
‘ஏக் பெட் மா கே நாம்’ செயலி ..... 95
நாய் வடிவ எந்திரம் - இந்திய இராணுவம் ..... 96
ஒருங்கிணைந்த பெருங்கடல் ஆற்றல் குறித்த தகவல் தொகுப்பு வரைபடம் ..... 96
இந்தியாவில் KAVACH 4.0 பாதுகாப்பு அமைப்பு ..... 97
குழந்தைகள் சம்பந்தப்பட்ட பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் சார்ந்த நடவடிக்கைகள் ..... 98
சர்வதேசச் செய்திகள் ..... 99
வரலாறு காணாத குளிர்கால வெப்பநிலை – ஆஸ்திரேலியா ..... 99
மிகப்பெரிய சரக்குப் பொருள் ஏற்று ஆளில்லா விமானம் - சீனா ..... 99
புதிய தற்கொலை தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா விமானங்கள் - வட கொரியா ..... 100

அஸ்னா புயல் ..... 100
பசிபிக் தீவுகள் மன்றம் 2024 ..... 101
பருவநிலை மற்றும் நிலையான மேம்பாட்டு ஒத்துழைப்பு கட்டமைப்பு ..... 101
பண வழங்கீட்டுக் கடவுக் குறியீட்டுச் சேவை ..... 102
சர்வதேச செயற்கை நுண்ணறிவு உடன்படிக்கையின் சட்டப்பூர்வ பிணைப்பு ..... 103
அதிவெப்பமான வடக்கு அரைக்கோள கோடைக்காலம் ..... 103
நோய்க் கிருமிகளின் தோற்றம் குறித்த உலகளாவியக் கட்டமைப்பு ..... 104
தாலிபான்களின் புதிய "அறநெறிச் சட்டம்" ..... 105
சீன-ஆப்பிரிக்க கூட்டுறவு மன்றம் (FOCAC) 2024 ..... 105
சுவிட்சர்லாந்து - உலகின் சிறந்த நாடு ..... 106
நீதித்துறை சீர்திருத்த மசோதா – மெக்சிகோ ..... 106
பிரிக்ஸ் அமைப்பில் துருக்கி ..... 107
நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் உற்பத்தி செயல்முறையினால் ஏற்படும் முக்கிய மாசுபாட்டைச் சமாளிப்பதற்கான உலகளாவிய வழிகாட்டுதல் ..... 108
PCAPS திட்டம் ..... 108
ஜிம்பாப்வேயில் யானைகளை கொல்லும் திட்டம் ..... 109
தொழுநோய் ஒழிப்பு – ஜோர்டான் ..... 109
இலங்கையின் புதிய அதிபர் 2024 ..... 110
கேன்சர் மூன்ஷாட் முன்னெடுப்பு ..... 111
புதிய கோவிட் வைரஸ் மாற்றுரு - XEC ..... 111
பொருளாதாரச் செய்திகள் ..... 112
ஒருங்கிணைந்த கடன் வழங்கீட்டு இடைமுகம் ..... 112
2023-24 ஆம் ஆண்டிற்கான சிறந்த முதலீட்டு இடங்கள் ..... 113
இந்தியாவின் தங்க நுகர்வு குறித்த கணிப்பு ..... 113
இந்திய ரிசர்வ் வங்கியின் ஐந்து உத்தி சார் முன்னுரிமைகள் ..... 114
அதிகளவிலான அந்நியச் செலாவணிப் பதிவு 2024 ..... 114
UPI - உலகின் முன்னணி எண்ணிமப் பண வழங்கீட்டுத் தளம் ..... 115
MSCI EM குறியீடு ..... 116
பாசுமதி அரிசியின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை ..... 117
காப்பீடுகள் மீதான வரி விகிதங்களின் மறுபரிசீலனை ..... 118
வர்த்தக இணைப்பு இணையதளம் ..... 118
திடீர் இலாப வரி ரத்து ..... 119
முறைசார் தங்கக் கடன்கள் ..... 119
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 120
நிலவில் உள்ள மண்ணின் தனிம மிகுதி அளவீடுகள் ..... 120
டனேஜர் 1 ..... 121
ஆன்டிஹைப்பர் ஹைட்ரஜன்-4 ..... 121
மனித மூளையில் நுண்நெகிழிகள் ..... 122
SLIM நிலவு ஆய்வு திட்டம் – ஜப்பான் ..... 123
J0529-4351 ..... 124
2025 ஆம் ஆண்டில் மனித உருவம் கொண்ட எந்திரம் வயோமித்ரா ..... 124

ஜெஸெரோ பள்ளத்தின் விளிம்பெல்லை ....... 125
ஓரோபூச்சே வைரஸ் ....... 125
NEOWISE தொலைநோக்கி ....... 126
அல்சைமர் நோய்க்கான புதிய இரத்தப் பரிசோதனை ....... 126
1,700 பழமையான மற்றும் அறியப்படாத வைரஸ் இனங்கள் ....... 127
GNSS - ரிஃப்ளெக்டோமெட்ரி ....... 128
புதிய சீரொளிக் கற்றை சார் ஆயுதம் – சீனா ....... 128
உலோக-கரிமக் கூறுகள் ....... 129
பேடியா நடவடிக்கை – உத்தரப் பிரதேசம் ....... 129
சனிக்கோளின் வளையங்கள் ....... 130
FWD 200B ....... 131
ஜோம்பி பூஞ்சை ....... 132
சூரியசக்தி சார் பரவளைய ஆடி ஒளிகுவிப்பு தொழில்நுட்பம் ....... 133
IISER நிறுவனத்தின் CsPbBr3 ....... 133
ஈர்ப்பு மற்றும் குவைய ஈர்ப்பு விசையின் ஒருங்கிணைப்பு ....... 134
அக்னி-4 உந்துவிசை எறிகணை சோதனை 2024 ....... 135
உலகின் முதல் அணுக் கடிகாரம் ....... 135
பூமியின் மூன்றாவது ஆற்றல் புலம் – துருவக் காற்று ....... 136
புதன் கோளின் தென் துருவம் ....... 137
யூரோபா கிளிப்பர் ஆய்வுக் கலம் ....... 137
மனிதர்களால் உருவாக்கப்பட்ட விண்கல் மழை ....... 138
புதிய வெட்லேண்ட் வைரஸ் ....... 139
நிலவில் மர்ம அதிர்வுகள் ....... 139
VL-SRSAM எறிகணை 2024 ....... 140
விலங்குகளின் மிகப்பெரிய மரபணு ....... 141
போலரிஸ் டான் பயணம் ....... 141
செந்நிற வலைப்பின்னல் நெபுலாவின் படம் ....... 142
தற்காலிக ‘சிறு-நிலவு’ 2024 ....... 143
பகுதியளவு சந்திர கிரகணம் ....... 143
சில்லுகளில் மனித உறுப்பு செயல்பாட்டு தொழில்நுட்பம் ....... 144
பாரதிய அந்தரிக்ஸ் நிலையம் ....... 145
அடுத்தத் தலைமுறை நுட்பம் சார்ந்த ஏவு வாகனம் ....... 146
கருந்துளை கண்டறியும் செயலி ....... 147
புதிய இரத்த வகைக் குழு அமைப்பு – MAL ....... 147
ஸாங்'இ-6 கலத்தின் நிலவு மண் மாதிரிகள் ....... 148
ஊசி வழி அல்லாத கோவிட்-19 தடுப்பு மருந்து ....... 148
பாலோமர் 5 ....... 149
IISc நிறுவனத்தின் சல்பைடு அயனியேற்றம் ....... 149
பூமியில் சனிக்கோளில் உள்ளது போன்ற வளையம் ....... 150
மாபெரும் கருந்துளை ....... 150

சுற்றுச்சூழல் செய்திகள் ............ 152
ஆர்க்டிக் பகுதியின் நிரந்தர உறைபனியில் நச்சுத்தன்மை மிக்க பாதரசம் ............ 152
அல்ப்காரகுஷ் கிர்கிசிகஸ் ............ 152
திபெத்தின் செடாங்பு கல்லி பகுதியில் நிலச்சரிவு ............ 152
உலகளாவிய மீன் வளங்களின் அவல நிலை 2024 ............ 153
வடக்கு வழுக்கைத் தலை அரிவாள் மூக்கன் ............ 154
பூமியின் அதிகபட்ச வெப்பநிலை பதிவு ............ 155
அட்லாண்டிக் பெருங்கடலில் வெப்பநிலை வீழ்ச்சி ............ 156
அர்னோக்ஸின் மூக்கு திமிங்கலம் ............ 156
போபா காப்புக் காடு ............ 157
குதிக்கும் சிலந்திகளின் புதிய இனங்கள் – தமிழ்நாடு ............ 157
அரிய மதராஸ் முள்ளம்பன்றி ............ 158
அண்டார்டிக் டிராகன்ஃபிஷ் ............ 158
அட்லஸ் அந்துப்பூச்சி ............ 159
புதிய ‘டான்சிங் கேர்ள்ஸ்’ இஞ்சி இனங்கள் ............ 159
புதிய மஞ்சள் இனங்கள் ............ 160
காற்று தர மேலாண்மைப் பரிமாற்றத் தளம் ............ 161
மிரிஸ்டிகா சதுப்பு நிலக் காடு ............ 161
நீள்வட்ட வடிவ ஆமை ............ 162
மீன்களில் ஃபிலுவோக்செடைன் தாக்கங்கள் ............ 162
அண்டார்டிகாவின் பனிச் சரிவு ஆபத்து ............ 163
‘நன்னீர் சதுப்பு நிலங்களில் சேமிக்கப்படும் கார்பன்’ பற்றிய இந்தியாவின் முதல் ஆய்வு ............ 164
இந்தியாவின் இரண்டாவது பெரிய வண்ணத்துப்பூச்சி இனம் ............ 165
வேலி-அக்குளம் ஏரி ............ 165
ஓசோன் மாசுபாடு மற்றும் வெப்பமண்டல வன வளர்ச்சி ............ 166
175 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான மிக வெப்பமான ஆகஸ்ட் மாதம் ............ 166
ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு ............ 167
அரிய சாண வண்டு இனங்கள் ............ 168
வெள்ளை காண்டாமிருகங்களின் பாதுகாப்பு நிலை 2024 ............ 168
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ............ 169
மத்திய வங்கியாளர் அறிக்கை 2024 ............ 169
ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் 2024 ............ 170
2024 ஆம் ஆண்டு உலகளாவிய காற்று அறிக்கை ............ 170
காற்றின் தரம் மற்றும் பருவநிலை அறிக்கை 2024 ............ 171
TIME இதழின் உலகின் சிறந்த நிறுவனங்கள் பட்டியல் 2024 ............ 172
உலகளாவிய இணையவெளிப் பாதுகாப்புக் குறியீடு 2024 ............ 172
ஆரோக்கியமான நீண்ட ஆயுளின் ஆற்றலை வெளிக்கொணர்தல் ............ 173
காண்டாமிருகத்தின் நிலை குறித்த அறிக்கை 2024 ............ 174
ஆசியாவின் அதிகாரம் மிக்க நாடுகள் குறியீடு ............ 174
மாநிலச் செய்திகள் ............ 175

நிலத்தடி நீரில் ஃப்ளூரின் மாசுபாடு 2024 ........ 175
புதிய முஸ்லிம் திருமண மசோதா – அசாம் ........ 176
குதுப் ஷாஹி கல்லறை வளாகம் - ஹைதராபாத் ........ 177
ஓவிட்ராப் பொறிகள் - கர்நாடகா ........ 177
அபராஜிதா மசோதா - மேற்கு வங்காளம் ........ 178
உண்மையான GSDP வளர்ச்சி 2024 ........ 179
சௌராஸ் பழங்குடி - வாழ்விட உரிமைகள் ........ 180
பூஜ்ஜிய நேரம் – இமாச்சலப் பிரதேசம் ........ 181
ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி ........ 181
கிளர்ச்சிக் குழுக்களுடன் அமைதி ஒப்பந்தம் – திரிபுரா ........ 182
பசுமை ஹரியானா கொள்கை விளக்க அறிக்கை – 2024 ........ 182
சூட்டியா தினம் - அசாம் ........ 183
ஆசிய அரசுக் கழுகு வளங்காப்பு மையம் ........ 184
ஆரம்ப சுகாதார நிலையங்களில் AYUSH மருத்துவர்கள் ........ 185
9வது லடாக் ஜன்ஸ்கார் திருவிழா 2024 ........ 185
நாகா கிங் மிளகாய் திருவிழா ........ 185
அஷ்டலட்சுமி மஹோத்ஸவம் ........ 186
டெல்லியின் புதிய முதல்வர் ........ 186
இந்திய மாநிலங்களின் சார்புநிலை பொருளாதாரச் செயல்திறன் ........ 187
தற்கொலை தொடர்பான பொருளாதாரச் சுமை ........ 188
கர்மா விழா அல்லது கர்மா நாச் ........ 189
2022 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான கொடுமைகள் ........ 189
அமுர் ஃபால்கன் - தமெங்லாங் மாவட்டம் (மணிப்பூர்) ........ 190
இந்தியாவின் முதல் காகிதம் இல்லா தேர்தல் – மத்தியப் பிரதேசம் ........ 191
நிலகைமான் மற்றும் காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல் ........ 191
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 192**
24வது சர்வதேச அன்னை தெரசா விருதுகள் ........ 192
தேசிய நல்லாசிரியர் விருது 2024 ........ 192
நியூசிலாந்தின் மாவ்ரி மன்னர் ........ 193
7வது அனுபவ் விருதுகள் 2024 ........ 193
M.A.ஈஸ்வரன் - சுதந்திரப் போராட்ட வீரர் ........ 194
TIME100 இதழின் செயற்கை நுண்ணறிவில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்கள் - 2024 ........ 195
லான்ஸ் நாயக் சரண் சிங் - 100வது பிறந்தநாள் ........ 195
ஸ்வச் வாயு சர்வேக்சன் விருது 2024 ........ 195
தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் 2024 ........ 196
76வது பிரதான ஒளிப்பரப்பு நிகழ்ச்சிகளுக்கான எம்மி விருதுகள் 2024 ........ 196
RE-INVEST சந்திப்பு ........ 196
2024 ஆம் ஆண்டு உலகத் திறன்கள் போட்டி ........ 197
துபாயில் இந்தியப் பெண்கள் விருதுகள் 2024 ........ 197
ISSக்குப் பயணிக்கும் முதல் இந்திய விண்வெளி வீரர் ........ 198

ஜாக்சன் ஹோல் சிம்போசியம் 2024 ........ 198
விளையாட்டுச் செய்திகள் ........ 199
பாரீஸ் பாராலிம்பிக்ஸ் 2024 ........ 199
மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகள் 2024 (திருத்தப் பட்டது) ........ 199
2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டி (இறுதிப் பதிப்பு) ........ 200
மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டி 2024 – பதக்கப் பட்டியல் ........ 200
அமெரிக்க டென்னிஸ் ஓபன் போட்டி 2024 ........ 201
4வது தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2024 ........ 202
சமமான பரிசுத் தொகை ........ 203
செஸ் ஒலிம்பியாட் போட்டி 2024 ........ 203
முக்கிய தினங்கள் ........ 204
தேசிய ஊட்டச்சத்து வாரம் - செப்டம்பர் 01 முதல் 07 வரை ........ 204
உலக தேங்காய் தினம் - செப்டம்பர் 02 ........ 204
தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05 ........ 204
சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05 ........ 205
உலக துச்சேன் நோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 07 ........ 205
சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 07 ........ 206
சர்வதேச காவல்துறை ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 07 ........ 206
நீல வானத்துக்கான தூயக் காற்றிற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 07 ........ 206
சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 08 ........ 207
உலக உடலியக்க மருத்துவ தினம் - செப்டம்பர் 08 ........ 207
தாக்குதலிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான ஐநா சபையின் சர்வதேச தினம் - செப்டம்பர் 09 ........ 207
உலக தற்கொலை தடுப்பு தினம் - செப்டம்பர் 10 ........ 208
தேசிய வனத் தியாகிகள் தினம் - செப்டம்பர் 11 ........ 209
இமயமலை திவாஸ் - செப்டம்பர் 09 ........ 209
இந்தி மொழி திவாஸ் - செப்டம்பர் 14 ........ 210
சர்வதேச தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 12 ........ 210
உலக முதலுதவி தினம் - செப்டம்பர் 14 ........ 210
தெற்கு நாடுகளுக்கான அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 16 ........ 211
தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15 ........ 211
சர்வதேச மக்களாட்சி தினம் - செப்டம்பர் 15 ........ 212
உலக ஓசோன் தினம் - செப்டம்பர் 16 ........ 212
சர்வதேச இருதய மற்றும் இரத்தக் குழாய் சிகிச்சை முறை சர்வதேச தினம் - செப்டம்பர் 16 ........ 213
உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் - செப்டம்பர் 17 ........ 214
8வது இந்திய நீர் வாரம் 2024 ........ 214
சர்வதேச சம ஊதிய தினம் - செப்டம்பர் 18 ........ 215
உலக மூங்கில் தினம் - செப்டம்பர் 18 ........ 215
உலக நீர் கண்காணிப்புத் தினம் - செப்டம்பர் 20 ........ 216
உலகத் துப்புரவு தினம் - செப்டம்பர் 20 ........ 216
சர்வதேச அமைதி தினம் - செப்டம்பர் 21 ........ 216

சர்வதேசக் கடலோரத் தூய்மை தினம் - செப்டம்பர் 21 ....217
உலக அல்சைமர் நோய் தினம் - செப்டம்பர் 21 ....217
சர்வதேச சிகப்பு பாண்டா கரடி தினம் - செப்டம்பர் 21 ....217
உலக காண்டாமிருக தினம் - செப்டம்பர் 22 ....218
உலக நதிகள் தினம் - செப்டம்பர் 22 ....218
சர்வதேச சைகை மொழி தினம் - செப்டம்பர் 23 ....218
உலக மனிதக் குரங்கு தினம் - செப்டம்பர் 24 ....219
உலக ரோஜா தினம் - செப்டம்பர் 22 ....219
நாட்டு நலப்பணித் திட்ட தினம் - செப்டம்பர் 24 ....220
உலக மருந்தாளுனர் தினம் - செப்டம்பர் 25 ....220
அந்த்யோதயா திவாஸ் - செப்டம்பர் 25 ....221
உலக கடல்சார் தினம் - செப்டம்பர் 26 ....221
அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26 ....222
உலக கருத்தடைத் தினம் - செப்டம்பர் 26 ....222
உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26 ....223
உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27 ....223
உலக வெறிநாய்க்கடி நோய் (ரேபீஸ்) தினம் - செப்டம்பர் 28 ....223
சர்வதேசப் பொது தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28 ....224
உலக இதய தினம் - செப்டம்பர் 29 ....224
சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30 ....224
இதரச் செய்திகள் ....225
சருமப் பராமரிப்பு தயாரிப்புப் பொருட்களில் நுண்நெகிழிகள் ....225
நிலையான விகித மருந்துக் கலவை சார்ந்த மருந்துகளுக்குத் தடை ....226
7வது இராஷ்ட்ரிய போஷான் மாதம் 2024 ....227
கோமாரி நோய் பாதிப்பில்லாத மண்டலங்கள் ....227
திருவாசகத்தின் அச்சிடல் வரலாறு ....228
லோதல் துறைமுகம் பற்றிய ஆய்வு ....229
PresVu கண் சொட்டு மருந்து ....229
A1 அல்லது A2 ரக பால் எனப்படும் கோரல்கள் ....230
வேலையின்மை மற்றும் இதய நோய் ஆபத்து ....231
அங்கோர் வாட் – கம்போடியா ....231
ISO/UNDP PAS 53002 ....232
FTI-TTP திட்டம் ....232
ICAR-NISA நிறுவனத்தின் 100வது ஆண்டு நிறைவு ....233

# TNPSC துளிகள்

- சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் (ICC) தற்போதைய தலைவர் கிரெக் பார்க்லேவுக்கு அடுத்து BCCI செயலாளர் ஜெய் ஷா அதன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமேசான் காடுகளில் மீண்டும் மரங்களை வளர்ப்பதற்கு நிதி திரட்ட உதவுவதற்காக, உலக வங்கியானது 225 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒன்பது ஆண்டு காலப் பத்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சென்னையில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப் போட்டியில் MRF சலூன்ஸ் பட்டத்தை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையை டயானா பூண்டோல் பெற்றுள்ளார்.
- உலக கேட்பொலி காட்சி & பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் (WAVES) முதலாவது 'Create in India Challenge - Season 1' மூலம் திறமையான நபர்களை உலக அரங்கில் முன்னிலைப் படுத்தவும் அவர்களுக்கு ஆதரவளிக்கவும் மத்திய அரசானது தயாராக உள்ளது.
- தனது ஊழியர்களுக்காக மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் மாநிலமாக மகாராஷ்டிரா மாறியுள்ளது.
- தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனச் சங்கம் அல்லது NASSCOM சங்கத்தின் தலைவராக சிந்து கங்காதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பெங்களூருவின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் (IIM-B) ஆனது, தனியார் பங்கு (PE) மற்றும் துணிகர முதலீடு (VC) ஆகியவற்றை மையமாகக் கொண்ட இந்தியாவின் முதல் உலகளாவிய சிறப்பு மையத்தினை நிறுவச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- வரவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பெருங்கடல் ஒப்பந்தம் எனப் படும் தேசிய அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட பல்லுயிர்ப் பெருக்க ஒப்பந்தத்தில் (BBNJ) இந்தியா கையெழுத்திட உள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கெவன் பரேக் ஜனவரி மாதம் முதல் ஆப்பிள் Inc நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக (CFO) பொறுப்பேற்பார் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.
- சென்னை சென்ட்ரலில் இருந்து நாகர்கோவில், மதுரை முதல் பெங்களூரு கண்டோன்ட் மற்றும் மீரட் நகரிலிருந்து லக்னோ வரை என மூன்று புதிய வந்தே பாரத் விரைவு ரயிலைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- அமேசான் நிறுவனமானது ரூஃபஸ் எனப்படும் தனது மிக ஆக்கப் பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளினை இந்திய வாடிக்கையாளர்களின் பயன்பாட்டிற்காக வெகு விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்தியாவில் உள்ள சீமென்ஸ் ஹெல்த்னியர்ஸ் என்ற ஒரு பெரு நிறுவனம் ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குரங்குக் காய்ச்சலுக்கான RT-PCR பரிசோதனைக் கருவியை உருவாக்கியுள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) மற்றும் பானக்கியா பயோடெக் லிமிடெட் ஆகியவை முதல் முறையாக DengiAll எனப்படுகின்ற டெங்கு தடுப்பூசிக்கான மூன்றாம் கட்ட மருத்துவப் பரிசோதனையை இந்தியாவில் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளன.

- இந்திய வர்த்தகக் கூட்டமைப்பு (ICC) ஆனது டெல்லியில் படைப்பாக்கம் மிக்க பொருளாதாரத்திற்கான அகில இந்திய முன்னெடுப்பினை (AIICE) மிகவும் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா அறக்கட்டளையானது, அகமதாபாத்தில் உள்ள குஜராத் பல்கலைக் கழகத்துடன் இணைந்து 8வது தர்ம தம்மா மாநாட்டினை ஏற்பாடு செய்து உள்ளது.
- இந்திய விமானப்படை (IAF) ஆனது முதலாவது எகிப்து சர்வதேச விமானக் சாகச காட்சி நிகழ்வில் (2024) பங்கேற்பதற்காக தனது சாரங் ஹெலிகாப்டர் சாகச காட்சிக் குழுவினை அனுப்பியுள்ளது.
- காந்திநகரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, நர்மதா நதிப் படுகையின் நிலை மதிப்பீடு மற்றும் மேலாண்மைத் திட்டத்தை (CAMP) மேற் கொள்வதற்காக நர்மதா நதி படுகை மேலாண்மை மையத்தினை (cNARMADA) நிறுவியுள்ளது.
- சௌமியா சுவாமிநாதன் அவர்கள், ஆர்வலர் கல்பனா சங்கர் எழுதிய 'The Scientist Entrepreneur: Empowering Millions of Women' என்ற ஒரு சுயசரிதை புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- பஞ்சாப் மாநிலம் ரோபார் பகுதியைச் சேர்ந்த ஐந்து வயதுடைய தேக்பீர் சிங், ஆப்பிரிக்காவின் 5895 மீ உயரமுள்ள கிளிமஞ்சாரோ சிகரத்தை அடைந்த முதல் இளம் ஆசிய நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- மாலத்தீவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டியின் மருஹபா கோப்பைப் போட்டியில் இந்திய அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.
- 1986 ஆம் ஆண்டு பணி நியமன தொகுதியினைச் சேர்ந்த இரயில்வே நிர்வாக இயந்திரப் பொறியாளரான சதீஷ் குமார், இரயில்வே வாரியத்தின் புதிய தலைவராகவும், தலைமைச் செயல் அதிகாரியாகவும் (CEO) நியமிக்கப் பட்டு உள்ளார்.
    - இரயில்வே நிர்வாகத்தின் 119 ஆண்டுகால வரலாற்றில் அதன் தலைமைப் பொறுப்பேற்ற முதல் தலித் நபர் இவர் ஆவார்.
- மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியானது (எம்எம்சி) "மேம்பட்ட ஆராய்ச்சிக்கான ICMR மையம் (CAR): கிராமப்புற சுகாதார மாற்றம் (RAHAT)" எனும் திட்டத்திற்கான ஆறு நிறுவனங்களில் ஒன்றாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ரிலையன்ஸ் ஜியோவானது முழு செயற்கை நுண்ணறிவு (AI) வாழ்க்கைச் சுழற்சியில் 'JioBrain' எனப்படும் கருவிகள் மற்றும் பயன்பாடுகளின் ஒரு தொகுப்பை உருவாக்கி வருகிறது.
- பாகிஸ்தானைச் சேர்ந்த ஜோசப் பிரான்சிஸ் ஏ. பெரேரா என்ற கிறிஸ்தவர், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் (சிஏஏ) கீழ் கோவாவில் இந்தியக் குடியுரிமையைப் பெற்ற முதல் நபர் ஆவார்.
- இமாச்சல பிரதேசத்தில் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயதை 18 வயதில் இருந்து 21 ஆக உயர்த்தும் மசோதாவை அம்மாநிலச் சட்டசபை நிறைவேற்றியுள்ளது.
- ஹரியானா சதுரங்கச் சங்கம் நடத்திய 61வது இந்தியச் சதுரங்கச் சாம்பியன்ஷிப் போட்டியின் பட்டத்தை ஆந்திரப் பிரதேச கிராண்ட் மாஸ்டர் கார்த்திக் வெங்கடராமன் வென்றார்.

- சமீபத்தில் வெளியிடப்பட்ட உத்தரப் பிரதேசத்தின் எண்ணிம ஊடகக் கொள்கை 2024 ஆனது, ஊடகத்தின் வழியே அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்தி மக்களுக்கு கொண்டு சேர்க்க தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு மாதம் ரூ.8 லட்சம் வரை செலுத்த அனுமதிக்கிறது.
- ஷன்ஷான் சூறாவளியானது சமீபத்தில் ஜப்பானைப் பலத்த மழையுடன் தாக்கியது.
- மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் வாத்வான் துறைமுகத்திற்கு இந்திய பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- சமீபத்தில் கோவாவில் இந்தியக் கடலோரக் காவல்படையினால் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட முதல் மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பலான 'சமுத்திர பிரதாப்' இயக்கப் பட்டது.
- இரண்டாவது இந்தியா-சிங்கப்பூர் அமைச்சர்களின் வட்டமேசை (ISMR) மாநாடு சமீபத்தில் சிங்கப்பூரில் நடைபெற்றது.
- அவசரநிலை மேலாண்மைத் துறையில் ஒத்துழைப்புக்கான ரஷ்ய-இந்தியக் கூட்டு ஆணையத்தின் இரண்டாவது கூட்டம் மாஸ்கோவில் நடைபெற்றது.
- பெர்க்சையர் ஹாத்வே என்ற நிறுவனம் $1 டிரில்லியன் மதிப்பீட்டை எட்டியுள்ள ஒரு நிறுவனமாகவும் இந்த மைல்கல்லை எட்டிய முதல் தொழில்நுட்பம் சாராத அமெரிக்க நிறுவனம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது.
- கூகுள் டீப் மைண்டின் இந்தியப் பிரிவு, மோர்னி (இந்தியாவுக்கான பல மாதிரிகளின் பிரதிநிதித்துவம்) என்ற இந்திய மொழி செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தை உருவாக்க உள்ளது.
    - இது 125 இந்திய மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகளை உள்ளடக்கிய மற்றும் அதற்குச் சமமான இந்திய செயற்கை நுண்ணறிவை உருவாக்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு அரசானது, தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்களை அமைப்பதற்காக கூகுள் நிறுவனத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளது.
- நோக்கியா நிறுவனமானது சென்னையில் உள்ள அதன் நீடித்த நிலையான வலை அமைப்புகளின் (கம்பி வடம் சார்ந்த இணைப்புகள்) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகளை 450 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்துவதற்காகவும், 100 வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, நேபாளத்தின் முதல் 'ஆரோக்கியமான நகரம்' மற்றும் ஆசியாவின் இரண்டாவது ஆரோக்கியமான நகரமாக அங்கு கவ்ரேபாலஞ்சோக் என்ற மாவட்டத்தின் துலிகேல் நகராட்சியை அறிவித்துள்ளது.
- ரெயில்டெல் கார்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (RailTel) என்ற நிறுவனத்திற்கு சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்புகளுக்கான (EMS) உலகளாவிய அங்கீகாரத்தின் தர நிலையான ISO 14001:2015 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.
- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ஆனது, ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான தகவல் மற்றும் திறன்களை வழங்கி, அவர்களை வேலைவாய்ப்பிற்கு ஏற்றவர்களாக மாற்றுவதற்கான "ஓய்வு பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான அதிகாரமளிப்பு பயிற்சி" (RESET) என்ற திட்டத்தினை தொடங்கியுள்ளது.

- வானளாவிய கட்டமைப்புகள் தினம் ஆனது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 03 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
  - இது நவீன வானளாவிய கட்டமைப்புகளை வரையறுக்கும் கட்டிடக்கலை மற்றும் பொறியியலின் கண்கவர் சாதனைகளைக் கொண்டாடுகிறது.
- பல்வேறு புகைப்படங்களின் மூலம் தரையிறங்கும் தளங்களின் புவியியல் இருப்பிடத்தைத் துல்லியமாக அடையாளம் காணும் வகையிலான சிறிய ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கான வான்வழி அடிப்படையிலான தகவல் வழங்கீட்டுத் தானியங்கு தரையிறங்கும் அமைப்புகளுக்கான காப்புரிமையை அண்ணா பல்கலைக் கழகம் பெற்றுள்ளது.
- அமெரிக்காவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமான ஓஹ்மியம் ஆனது, பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்காகவும் மின்பகுப்பான்களைத் தயாரிக்கச் செய்வதற்காகவும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 400 கோடி ரூபாய் முதலீட்டில் தனது உற்பத்தி அலகினை நிறுவ உள்ளது.
- நிதி அமைச்சகம் ஆனது, SJVN, Solar Energy, தேசிய நீர் மின்னாற்றல் உற்பத்திக் கழகம் மற்றும் ரெயில்டெல் ஆகிய 4 புதிய நிறுவனங்களை இந்தியாவின் நவரத்னா அந்தஸ்து பெற்ற நிறுவனங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.
- முன்னாள் உச்ச நீதிமன்ற வழக்கறிஞரும், புகழ்பெற்ற சட்ட அறிஞருமான A.G.நூராணி சமீபத்தில் காலமானார்.
- இந்திய உலகளாவிய நிதியம் (WWF) ஆனது, கழுகுகளின் எண்ணிக்கையினை கணக்கிடல் மற்றும் மிகவும் அருகிய நிலையில் உள்ள இந்தப் பறவை இனங்கள் குறித்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- அமெரிக்க-இந்திய உத்தி சார் கூட்டாண்மை மன்றம் ஆனது, ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தில் மூன்றாவது இந்திய-அமெரிக்கப் பாதுகாப்பு மேம்பாட்டு சூழல் அமைப்பின் (INDUS-X) உச்சி மாநாட்டை நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியின் மகளிருக்கான 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக் குழல் துப்பாக்கிச் சுடுதல் SH1 போட்டியில் ரூபினா பிரான்சிஸ் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- ப்ரீத்தி பால் மகளிருக்கான 200 மீட்டர் T35 வகை தடகளப் போட்டியில் வெண்கலம் மற்றும் 100 மீட்டர் T35 வகை தடகளப் போட்டியில் வெண்கலம் வென்றதையடுத்து, தடகளப் போட்டிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஆற்றிய அளப்பரிய ஆதரவினை அங்கீகரிப்பதற்காக பிரான்சு நாட்டின் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அவர்களுக்கு ஒலிம்பிக் ஆர்டர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவிலேயே முதன்முறையாக, கேரளாவின் தலைமைச் செயலாளர் பதவியில் இருந்து விலகும் டாக்டர் V. வேணு, தனது மனைவி சாரதா முரளீதரனிடம் தனது பதவியை ஒப்படைத்தார்.
- கேரள சுற்றுலாத்துறையானது 'ஹாலிடே ஹெய்ஸ்ட்' என்ற தலைப்பிலான அதன் புதிய எண்ணிமச் சந்தைப்படுத்துதல் பிரச்சாரத்திற்காக, மதிப்பு மிக்க பசிபிக் ஆசிய பயணக் கூட்டமைப்பு (PATA) தங்க விருதினைப் பெற்றுள்ளது.

- ஊழியர்களைப் பணி சார்ந்த தொடர்பிலிருந்து தங்களை "துண்டிக்கும் உரிமையை" அனுமதிக்கும் நாடாக ஆஸ்திரேலியா சமீபத்தில் மாறியுள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (RIL) நிறுவனமானது 2023-24 ஆம் நிதியாண்டில் 10,00,122 கோடி ரூபாய் (119.9 பில்லியன் டாலர்) ஆண்டு வருமானத்துடன் 10 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டிய முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- ஜப்பானிய திரைப்படத் தயாரிப்பாளர் ஹயாவோ மியாசாகி, ஆசியாவின் நோபல் பரிசு என்று பொதுவாக அழைக்கப்படும் 2024 ஆம் ஆண்டிற்கான ரமோன் மகசேசே விருதை வென்றுள்ளார்.
- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சகமானது, பூசாவில் க்ரிஷி நிவேஷ் மற்றும் AgriSURE நிதி என்ற ஒருங்கிணைந்த வேளாண் முதலீட்டு இணைய தளத்தினைத் தொடங்கி வைத்துள்ளது.
- சர்வதேச கிரிக்கெட் சபையின் 2025 ஆம் ஆண்டு உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன் ஷிப் போட்டியானது இலண்டனில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பூமியின் துருவப் பகுதிகளுக்கு மேலே விண்வெளிப் பகுதியில் மேற்கொள்ளப்பட உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஃப்ராம்2 எனப்படுகின்ற விண்வெளிப் பயணத்திற்கான விண்கலத்தில் 4 பேரை விண்வெளிக்கு அனுப்ப உள்ளது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் 75வது ஆண்டு நினைவாக அதன் புதிய கொடி மற்றும் சின்னத்தை வெளியிட்டார்.
    - இந்திய உச்ச நீதிமன்றத்தின் 75வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில் ஒரு நினைவு தபால் தலையைப் பிரதமர் வெளியிட்டார்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆதரவு பெற்ற ஒரு புத்தொழில் நிறுவனமானது இந்தியாவின் முதல் உராய்வு நீர்த்தாரை பீச்சு இயந்திரத்தை வடிவமைத்துள்ளது என்ற நிலையில் இது வெப்பத்தை உருவாக்காமல் எளிதில் தீப்பற்றக் கூடியப் பொருட்களை வெட்டுவதற்குப் பயன்படுகிறது.
    - இதனைக் குறைக்கடத்தி, விமானப் போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் வைரத் தொழில்துறைகளில் பயன்படுத்தலாம்.
- 24வது தேசிய மேலாண்மை உச்சி மாநாட்டில் நெய்வேலி லிக்னைட் கழகம் - இந்தியா லிமிடெட் நிறுவனமானது சிறப்பான பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நடைமுறைகளுக்கான முன்னணி நிறுவன விருதைப் பெற்றுள்ளது.
- ஈட்டன் நிறுவனமானது, சென்னையில் 200 கோடி ரூபாய் முதலீட்டில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் உலகளாவிய பொறியியல் மையத்தை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவருக்கான உயரம் தாண்டுதல் T63 பிரிவில் இந்தியாவின் ஷரத் குமார் (பீகார்) மற்றும் மாரியப்பன் தங்கவேலு (தமிழ்நாடு) முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது புது டெல்லியில் இரண்டு நாட்கள் அளவிலான தேசிய மாவட்ட நீதித்துறை மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
- மேம்பட்ட அளவீட்டுக் கட்டமைப்பு மற்றும் திறன் மிகு கட்டமைப்பு உள்ளிட்டவை தொடர்பான அமெரிக்க நிறுவனமான ட்ரில்லியன்ட் நெட்வொர்க்ஸ் நிறுவனமானது, தமிழகத்தில் 2,000 கோடி ரூபாயினை முதலீடு செய்ய உள்ளது.

- ஃபார்ச்சூன் இதழின் 500 காப்பீடு மற்றும் நிதி நிறுவனங்களுள் ஒன்றான அஷ்யூரன்ட், சென்னையில் தனது முதலாவது உலகளாவியத் திறன் மையத்தினை (GCC) நிறுவ உள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆனது, அதன் போஷான் டிராக்கர் முன்னெடுப்பிற்காக 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய மின் ஆளுகை (தங்கம்) விருதை வென்றுள்ளது.
- சித்தார்த்த அகர்வால் இங்க்லிஷ் கால்வாயை (இங்கிலாந்து மற்றும் பிரான்சு இடையே அமைந்துள்ளது) நீந்தி கடந்த (49) மிகவும் அதிக வயதான இந்திய நீச்சல் வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ஜெர்மனியின் ஹன்னோவரில் நடைபெற்ற உலக காது கேளாதோருக்கான துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ராஜஸ்தான் ஜெய்ப்பூரைச் சேர்ந்த அனுயா பிரசாத் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- பெங்களூருவில் நடைபெற்ற 63வது தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டினைச் சேர்ந்த R.வித்யா இராம்ராஜ் மகளிருக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தினை 53.23 வினாடிகளில் நிறைவு செய்து P.T.உஷாவின் 39 ஆண்டு காலத்தியச் சாதனையை முறியடித்துள்ளார்.
- சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பு (ITTF) அறக்கட்டளையின் முதல் இந்தியத் தூதராக தமிழ்நாட்டினைச் சேர்ந்த ஷரத் கமல் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனமான பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட் ஆனது, ஹில்கோல் (BBV131) எனப்படும் ஒரு புதிய ஒற்றை மாற்றுரு வாய்வழி காலரா தடுப்பு மருந்தினை (OCV) அறிமுகப்படுத்தியுள்ளது.
- லிங்கன் எலக்ட்ரிக், விஷே துல்லியம் மற்றும் விஸ்டியன் ஆகிய நிறுவனங்களுடன் 850 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்து இட்டுள்ளது.
- இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு இடையில் நடத்தப்படும் வருணா எனப் படும் 22வது இருதரப்புக் கடல்சார் பயிற்சியானது மத்தியத் தரைக் கடலில் பிரெஞ்சுக் கடற்படையினால் நடத்தப்பட்டது.
- மத்திய அரசானது, அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் அமைந்து உள்ள கலாத்தியா விரிகுடாவில் அமைந்து உள்ள சர்வதேச கப்பல் போக்குவரத்து மையத்தினை 'பெரிய துறைமுகமாக' அறிவித்துள்ளது.
- மஹாராஷ்டிரா அரசானது, மும்பையில் 27வது தேசிய மின் ஆளுமை மாநாட்டினை (NCeG) நடத்தியது.
- பீகாரின் இராஜ்கிர் நகரில் 2024 ஆம் ஆண்டு மகளிர் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை போட்டி நடைபெற உள்ளது.
- கடும் காற்று மற்றும் மழையுடன் கூடிய யாகி எனும் ஒரு அதி சூறாவளியானது வியட்நாமைத் தாக்கியது.
- மத்திய கல்வித் துறை அமைச்சகம் ஆனது, புது டெல்லியில் “Spectrum of Literacy” என்ற தலைப்பிலான ஒரு சர்வதேச மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்தியாவின் முதல் சிலிக்கான் கார்பைடு உற்பத்தி மையம் ஆனது ஒடிசா மாநிலத்தின் புவனேஸ்வர் நகரில் உள்ள இன்ஃபோ வேலி எனுமிடத்தில் உள்ள EMC பூங்காவில் அமைக்கப்பட்டு வருகிறது.

- இந்தியா, மாலத்தீவு, மொரீஷியஸ் மற்றும் இலங்கை ஆகியவை கொழும்பு நகரில் கொழும்பு பாதுகாப்பு மையத்தின் (CSC) செயலகத்தினை அமைப்பதற்கான சாசனம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- தி எகனாமிக் டைம்ஸ் இதழின் உலகத் தலைவர்கள் மன்றம் (WLF) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- தேசிய ஒற்றைச் சுகாதார இயக்கத்தின் கீழ், பெருந்தொற்றுக்கான தயார்நிலையை மதிப்பிடுவதற்காக இராஜஸ்தானின் அஜ்மீர் மாவட்டத்தில் "விஷானு யுத் அபியாஸ்" (வைரஸ் பெருந்தொற்று நடவடிக்கை பயிற்சி) என்ற ஒரு விரிவான தேசிய மாதிரிப் பயிற்சி நடத்தப்பட்டது.
- இருதரப்பு உறவுகள் சார்ந்த பயணமாக புருனே சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பெற்றுள்ளார்.
- சனந்த் என்னுமிடத்தில் ஒரு நாளைக்கு 6.3 மில்லியன் சில்லுகள் என்ற வீதத்தில் குறை கடத்திகள் உற்பத்தி செய்யும் அலகுகளை நிறுவுவதற்கான கெய்ன்ஸ் நிறுவனத்தின் முன்மொழிதலுக்கு குஜராத் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழ்நாடு மாநில சட்டச் சேவைகள் ஆணையம் ஆனது, கொத்தடிமைத் தொழிலாளர் மற்றும் மனிதக் கடத்தல் நிகழ்வுகளில் உயிர் பிழைத்தவர்களை மீட்கவும், அது குறித்து வழக்குத் தொடரவும், அவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்கவும் வேண்டி, நெருக்கடிகளுக்கான ஒற்றைத் தீர்வு வழங்கீட்டு குழுக்களின் (OSCT) மகத்தானப் பணிக்காக UNICEF விருதைப் பெற்றுள்ளது.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது வாரணாசியில் உள்ள சம்பூர்ணானந்த் சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் பிரதானக் கட்டிடத்தில் முப்பரிமாண வேத அருங்காட்சியகம் என்பதிதினை அமைக்க உள்ளது.
- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, இந்தியாவிற்கு வெளியே வேறொரு நாட்டில் அமைக்கப்பட்ட முதல் முழு அளவிலான இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக வளாகமாக விளங்க உள்ள தனது அபுதாபி வளாகத்தைச் சமீபத்தில் தொடங்கியது.
- இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் வகையில், உலகின் முதல் திருவள்ளுவர் மையம் சிங்கப்பூரில் அமைக்கப்பட உள்ளது.
    - வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்காக இந்த நகரில் இந்திய முதலீட்டு அலுவலகம் நிறுவப்படும்.
- 2030 ஆம் ஆண்டு இளையோர் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியா தயாராகி வருகிறது என்பதோடு, இது 2036 ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நாட்டின் இலட்சியமிகு இலக்கிற்கு முன்னோடியாகும்.
- 'மும்பை சமாச்சார்- 200 நாட் அவுட்' எனும் ஆசியாவின் பழமையான செய்தித்தாளின் முக்கியத்துவம் வாய்ந்த 200 ஆண்டு காலப் பயணத்தைக் குறிக்கும் வகையிலான ஆவணப் படம் வெளியிடப்பட்டுள்ளது.
- வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்கும் முயற்சியில், தலைநகர் பெய்ஜிங் உட்பட ஒன்பது பிராந்தியங்களில் முழுவதுமாக வெளிநாட்டுக்குச் சொந்தமான தனியார் மருத்துவ மனைகளை நிறுவ சீனா விரைவில் அனுமதிக்க உள்ளது.
- அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் ஆஸ்திரேலியாவின் காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம் (CSIRO) இந்தியா ஆஸ்திரேலியா விரைவு புத்தாக்கம்

மற்றும் புத்தொழில் நிறுவன விரிவாக்கம் (RISE) மேம்பாட்டுத் திட்டத்தின் பருவநிலை சார்ந்த திறன்மிகு வேளாண் தொழில்நுட்பக் கூட்டமைப்பிற்கு இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து விண்ணப்பங்களை வரவேற்பதாக அறிவித்துள்ளன.

- ஐக்கிய அரபு அமீரகமானது, அரபு நாடுகளின் முதல் அணுமின் நிலையமான பராக்கா அணுசக்தி ஆலையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- மத்தியத் தரைக் கடல் பகுதியில் நடைபெற்ற 'வருணா' எனப்படும் இந்தியா – பிரான்சு இடையிலான இருதரப்பு கடற்படைப் பயிற்சியில் இந்தியக் கடற்படையின் P8i என்ற போசிடான் விமானம் பங்கேற்றுள்ளது.
- ஐக்கியப் பேரரசு மற்றும் இந்தியா தங்களது நிதி மற்றும் தொழில்முறை சேவைக் கூட்டுறவினை வலுப்படுத்துவதற்காக ஐக்கியப் பேரரசு-இந்தியா உள்கட்டமைப்பு நிதி இணைப்பு (UKIIFB) முன்னெடுப்பினை அதிகாரப் பூர்வமாகத் தொடங்கியுள்ளன.
- HDFC வங்கியானது குறிப்பாக இணைய தளம் மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் மற்றும் பகுதி நேரப் பணியாற்றும் தொழிலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட GIGA எனப்படும் புதிய நிதித் தொகுப்பினை வெளியிட்டது.
- இந்தியாவில் முதன்முறையாக, ஸ்டார் சுகாதார மற்றும் அது சார்ந்தக் காப்பீட்டு நிறுவனமானது இந்தியாவில் பார்வைத் திறனற்ற நபர்களை ஊக்குவிப்பதற்காக பிரெய்லி காப்பீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முதல் கூட்டுத் தளபதிகள் மாநாடு (JCC) ஆனது லக்னோவில் 'சஷக்த் மற்றும் சுரக்சித் பாரத்: ஆயுதப் படைகளை மாற்றியமைத்தல்' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- 2024 ஆம் ஆண்டிற்கான முதன்மை அறிவியல் ஆலோசகர்களின் வட்டமேசை (CSAR) மாநாடு ஆனது பாரிஸ் நகரில் யுனெஸ்கோவின் தலைமையகத்தில் நடைபெற்றது.
- இந்தியக் கடலோரக் காவல்படை (ICG) ஆனது, தென் கொரியாவின் இன்சியான் நகரில் நடைபெற்ற 20வது ஆசிய கடலோரக் காவல்படைகளுக்கான முகமைகளின் (HACGAM) தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றது.
- ஜென்சோல் இன்ஜினியரிங் என்ற ஒரு நிறுவனமானது, இந்தியாவின் முதல் உயிரி எரிபொருளிலிருந்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் திட்டத்தின் பொறியியல், கொள் முதல் மற்றும் கட்டமைப்பு (EPC) பணிகளுக்காக மிகக் குறைந்த மதிப்பீட்டினை முன் வைத்த ஏலதாரராக உருவெடுத்துள்ளது.
    - இந்த மையமானது தினசரி சுமார் 25 டன் உயிரிக் கழிவுகளைச் செயல்முறைக்கு உள்ளாக்கி, 18 மாதங்களில் மேம்பட்ட வாயுமயமாக்கல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 1 டன் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும்.
- ஜபில் இங்க். மற்றும் ராக்வெல் ஆட்டோமேஷன் ஆகியவை தமிழ்நாட்டின் திருச்சி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழில் துறை மையங்களை நிறுவுவதற்கான திட்டங்களில் 2,666 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளன.
- தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆனது, அதன் மீண்டும் மஞ்சப்பைப் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப் படும் நெகிழிப் பைகளுக்குப் பதிலாக புதுமையான மற்றும் விலை குறைந்த துணிப் பைகளை உருவாக்கும் நோக்கில் 'பேக்-அத்தான்' சவாலை நடத்தி வருகிறது.
- தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் நிறுவனர் T.வெள்ளையன் சமீபத்தில் காலமானார்.

- இரவீந்திரநாத் தாகூரின் கோரா என்ற புதினத்தினை தமிழில் மொழிபெயர்த்ததற்காக சாகித்ய அகாடமி விருது பெற்ற பிரபல ஆங்கிலப் பேராசிரியர் K.செல்லப்பன் சமீபத்தில் காலமானார்.
- பாராளுமன்றத்தின் அலுவல் மொழிக் குழுவின் தலைவராக அமித் ஷா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மூத்த விளையாட்டுத் துறை நிர்வாக அதிகாரி இரந்தீர் சிங் ஆசிய ஒலிம்பிக் சபையின் (OCA) தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டில் அமெரிக்காவை முந்தி இந்தியாவானது இரண்டாவது பெரிய 5G கைபேசி சந்தையாக மாறியுள்ளது.
- இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 20வது யுத் அபியாஸ்-2024 பயிற்சியானது இராஜஸ்தானில் தொடங்கியது.
- அதிபர் இம்மானுவேல் மேக்ரான், சுமார் 50 நாட்களுக்கும் மேலான ஒரு தற்காலிக அரசாங்கத்திற்குப் பிறகு, பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக ஐரோப்பிய ஒன்றிய பிரெக்ஸிட் பேச்சுவார்த்தையாளர் மைக்கேல் பார்னியரை நியமித்துள்ளார்.
- BRICS புதிய மேம்பாட்டு வங்கியில் (NDB) அல்ஜீரியாவின் அங்கத்துவம் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, அவ்வமைப்பின் ஒன்பதாவது உறுப்பினராக அது மாறியுள்ளது.
- யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா வங்கியானது கார்பன் கணக்கீட்டு நிதியியல் (PCAF) கூட்டாண்மையில் கையெழுத்திட்ட முதல் பெரிய வங்கியாக மாறியுள்ளது.
- இரண்டு நாட்கள் அளவிலான முதல் சர்வதேச சூரிய சக்தி திருவிழாவானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ஐதராபாத் அருகே நிறுவப்படுவதற்காக முன் மொழியப்பட்ட செயற்கை நுண்ணறிவு நகரில் உலக வர்த்தக மையத்தினை அமைப்பதற்காக உலக வர்த்தக மையங்களின் சங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெலுங்கானா அரசு கையெழுத்திட்டு உள்ளது.
- ஜப்பானின் அய்ச்சி-நாகோயா நகரில் நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் பண்டையச் செயல்பாடான யோகாசனம் ஒரு மாபெரும் செயல்விளக்க நிகழ்வாகச் சேர்க்கப்பட்டது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை முதன்முறையாக பொது அணுசக்தி கூட்டுறவிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளன.
- இலண்டனில் உள்ள செயின்ட் ஜேம்ஸ் பூங்காவானது புதிய தேசிய இராணி இரண்டாம் எலிசபெத் நினைவிடத்தினை அமைப்பதற்கான இடமாக ஐக்கியப் பேரரரசு நாட்டின் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் இந்தியத் தேசியக் கொடியினை ஏந்தி அணியினை வழி நடத்தும் வீரர்களாக வில்வித்தை வீரர் ஹர்விந்தர் சிங் மற்றும் தடகள வீராங்கனை ப்ரீத்தி பால் ஆகியோர் கலந்து கொண்டனர்.
- இந்தியக் குத்துச்சண்டை வீராங்கனை தீபாலி தாபா, ஐக்கிய அரபு அமீரகத்தின் அல் ஐன் நகரில் நடைபெற்ற போட்டியில் முதல் ஆசியப் பள்ளி மாணவி சாம்பியன் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.

- சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியில் (ISA) முழு உறுப்பினராக இணைந்த 101வது நாடாக நேபாளம் மாறியுள்ளது.
- இந்திய அரசானது, பொது விமானப் போக்குவரத்து தொடர்பான 2வது ஆசிய பசிபிக் அமைச்சர்கள் மாநாட்டினை புது டெல்லியில் நடத்தியது.
- சிரியா அணியானது இந்திய அணியினை வீழ்த்தி ஹைதராபாத்தில் நடந்த 4வது இன்டர்காண்டினென்டல் கோப்பை கால்பந்து சாம்பியன்ஷிப் (2024) போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு SEMICON இந்தியா நிகழ்வானது உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டா நகரில் நடைபெற்றது.
- 1979 ஆம் ஆண்டு ஜூலை 06 ஆம் தேதியன்று, "ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டு மையம் (CIRDAP)" நிறுவப்பட்டதன் நினைவாக ஜூலை 06 ஆம் தேதியானது உலக ஊரக மேம்பாட்டுத் தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சதுப்புநில வளங்காப்பு மையத்தினை நிறுவதற்காக முன்பு மொழியப்பட்ட இடமான முத்துப்பேட்டைக்குப் பதிலாக கடலூர் மாவட்டத்தில் உள்ள பிச்சாவரத்திற்கு மாற்ற தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் முதல் 8 மாதங்களில் இலங்கை சுற்றுலாவின் முன்னணி ஆதாரச் சந்தையாக இந்தியா தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2024-25 முதல் 2028-29 ஆம் ஆண்டு வரையிலான நிதியாண்டில் பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா-IV (PMGSY-IV) திட்டத்தினை செயல்படுத்துவதற்காக வேண்டி ஊரக மேம்பாட்டுத் துறையின் முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது சீமென்ஸ் ஹெல்த்நியர் என்ற நிறுவனத்தின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட IMDX குரங்குக் காய்ச்சல் வைரஸ் நோய் கண்டறிதலுக்கான RT-PCR சோதனைக்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- அபுதாபி நேஷனல் ஆயில் கம்பெனி (ADNOC) மற்றும் எக்ஸான்மொபில் ஆகியவை உலகின் மிகப்பெரிய குறைந்த கார்பன் உமிழ்வுத் திறன் கொண்ட ஹைட்ரஜன் உற்பத்தி மையத்தினை உருவாக்குகின்றன.
- நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பணி புரியும் ஒரு இந்திய வம்சாவளிச் சொற்பொழிவாளரான பிரசாந்தி ராம், அவரது சிறுகதையான ‘‘Nine Yard Sarees’ எனப்படும் ஆங்கிலப் புனைக் கதைக்காக சிங்கப்பூர் இலக்கியப் பரிசை வென்று உள்ளார்.
- லாக்ஹீட் மார்ட்டின் மற்றும் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் (TASL) நிறுவனம் ஆகியவை C-130J சூப்பர் ஹெர்குலஸ் போக்குவரத்து விமானங்கள் மற்றும் பிற உலகளாவிய C-130J வகை விமானங்களுக்காகப் பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் (MRO) மையத்தினை இந்தியாவில் நிறுவுவதற்கு ஒரு கூட்டுறவினை மேற் கொண்டுள்ளன.
- இந்தியாவை விட்டு வெளியேறிய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஃபோர்டு மோட்டார் நிறுவனம் ஆனது, ஏற்றுமதி செய்வதற்கான கார்களை உற்பத்தி செய்வதற்காக சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் உள்ள தனது உற்பத்தி ஆலையை மீண்டும் நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.

- எண்ணிம வர்த்தகத்திற்கான தடையற்ற வலையமைப்பு (ONDC) ஆனது வணிகங்கள் தங்கள் சொந்த தனிப்பயனாக்கப்பட்ட வாங்குவோர் தரப்பினருக்கு உகந்த வகையில் செயலிகளை உருவாக்குவதில் உதவுவதற்காக பாஷினியுடன் இணைந்து உருவாக்கப் பட்டு, வடிவமைக்கப்பட்டுள்ள சார்த்தி எனப்படும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியக் கடற்படையானது, 'நம்பகமான மற்றும் நிரூபிக்கப்பட்ட கூட்டாண்மைகள் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு' என்ற கருப்பொருளுடன் நடைபெற்ற 16வது ககாடு பயிற்சியில் (2024) 30க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து பங்கேற்றது.
- சுஸ்லான் எனர்ஜி லிமிடெட் நிறுவனமானது, சுமார் 1,166 மெகாவாட் திறன் ஆற்றலை உற்பத்தி செய்வதற்கான ஒப்பந்தத்தினை பெற்றுள்ளது என்ற நிலையில் இது இந்தியாவிலேயே தேசிய அனல் மின் நிலைய கழகப் பசுமை ஆற்றல் லிமிடெட் நிறுவனத்திலிருந்து பெறப்படும் மிகப்பெரிய காற்றாலை ஆற்றல் உற்பத்தி ஒப்பந்தம் ஆகும்.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்திய நன்னீர்வாழ் மீன் வளர்ப்பு நிறுவனம் (ICAR-CIFA) ஆனது, மீன் வளர்ப்பாளர்கள் மற்றும் மீன் கடை உரிமையாளர்களுக்கு வண்ண மீன்வளத்தைப் பற்றிய முக்கியமான தகவல்களை வழங்குவதற்காக 'ரங்கீன் மச்சிலி' என்ற கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது.
- இந்திய இராணுவப் படைப்பிரிவானது, ஓமனில் நடைபெறும் அல் நஜா எனப்படும் 5வது இந்திய-ஓமன் கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்க உள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொது சபையின் 79வது அமர்வு (UNGA 79) ஆனது 2024 ஆம் ஆண்டு 10 செப்டம்பர் 10 ஆம் தேதியன்று தொடங்கி செப்டம்பர் 30 ஆம் தேதியன்று நிறைவடைய உள்ளது.
- முதலமைச்சரும், தி.மு.க. கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின், 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட தி.மு.க கட்சியின் 75வது ஆண்டு பவள விழாவிற்கான சின்னத்தினை வெளியிட்டார்.
- அகில இந்திய அலுவல் மொழி மாநாடு ஆனது இந்தி தினத்தன்று அன்று புது டெல்லியின் பாரத மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இராஜ்பாஷா கீர்த்தி விருது ஆனது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- நைப் நிறுவனத்தின் துணை நிறுவனமான நைப் ஸ்பேஸ் (NSPL), இந்தியாவின் முதல் பல்லுணர்வு கொண்ட, அனைத்து வானிலையிலும் செயல்படக்கூடிய, அதிகளவிலான மறு ஆய்வு புவிக் கண்காணிப்புச் செயற்கைக்கோள் தொகுதியை நிறுவுவதற்கான தனது தொலைநோக்குத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு BRICS இலக்கிய மன்றம் ஆனது, ரஷ்யாவின் கசான் நகரில் "புதிய நடைமுறையில் உலக இலக்கியம்: மரபுகள், தேசிய விழுமியங்கள் மற்றும் கலாச்சாரங்களின் பேச்சுவாரத்தை" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்றது.
- இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகமானது, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் வரி செலுத்துதல், சுகாதாரம், கல்வி மற்றும் நிதி முதலீடுகள் போன்ற துறைகளுக்கான ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலியின் (UPI) பரிவர்த்தனை வரம்பை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, இளம் பருவத்தினர் மத்தியில் குரங்குக் காய்ச்சல் நோய்க்கான தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கான முதல் அங்கீகாரத்தை வழங்கி உள்ளது.

- தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்த, பாரத ஸ்டேட் வங்கியானது 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' திட்டத்திற்கு ₹1.37 கோடியை வழங்கியுள்ளது.
- 3 நாள் அளவிலான 4வது உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் சந்திப்பு (RE-INVEST) 2024 ஆனது குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்றது.
- தைபூன் பெபின்கா (ஜப்பானால் பெயரிடப் பட்டது) எனும் ஒரு அதி சூறாவளியானது ஷாங்காயில் கரையைக் கடந்தது என்பதோடு இது 1949 ஆம் ஆண்டு முதல் சீனாவின் மிகப்பெரிய நகரத்தைத் தாக்கிய மிகவும் வலிமையான ஒரு புயலாகும்.
- INDUS-X உச்சிமாநாட்டின் மூன்றாவது பதிப்பு அமெரிக்காவில் நடைபெற்றது.
- UNEP அமைப்பின் அறிவியல் ஆய்வு மதிப்பீட்டு அறிக்கையானது, உலகளாவியப் படை அடுக்கு மண்டல ஓசோன் 2040 ஆம் ஆண்டில் 1980 ஆண்டில் இருந்த நிலைகளுக்குத் திரும்பும் என்று கணித்துள்ளது.
- பிரேசிலில் நடைபெற்ற G20 விவசாய அமைச்சர்கள் கூட்டத்தின் போது அமெரிக்கா, பிரேசில், ஜெர்மனி, இங்கிலாந்து, ஜப்பான், ஸ்பெயின், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் இந்தியா இருதரப்புச் சந்திப்புகளை மேற்கொண்டது.
- இந்திய அரசு ஆனது இந்திய ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்து தேசிய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கியை (NaBFID) “பொது நிதி நிறுவனம்” ஆக அறிவித்துள்ளது.
- இந்திய நோய்த் தடுப்பியல் (IIL) மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) ஆகியவை நாட்டின் முதல் முக்குறிய படியெடுத்து வலுவிழக்கச் செய்யப்பட்ட ஜிகா வைரஸ் கொண்ட தடுப்பூசியினை உருவாக்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் (MoA) கையெழுத்திட்டுள்ளன.
- புனேவில் உள்ள தேசிய நச்சுயிரியியல் கல்வி நிறுவனம் ஆனது, மலப்புரம் மாவட்டத்தில் ஒருவரின் மரணத்திற்கு நிபா நோய்த் தொற்றுதான் காரணம் என்று உறுதிப்படுத்தியுள்ளது என்ற நிலையில் இது கொடிய விலங்குவழித் தொற்று நோயின் மறுதொடக்கத்தினைக் குறிக்கிறது.
- OpenAI நிறுவனமானது சமீபத்தில் மேம்பட்ட பகுத்தறிவு திறன் கொண்ட o1 மற்றும் o1-குறு மாதிரிகள் எனப்படுகின்ற இரண்டு புதிய ChatGPT மாதிரிகளை அறிமுகப்படுத்தி உள்ளது.
- உயிரி தொழில்நுட்பத் துறையானது 4வது உலகளாவிய உயிரி-இந்தியா 2024 என்ற ஒரு மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- இராஷ்ட்ரிய இஸ்பாட் நிகாம் லிமிடெட் (RINL) நிறுவனத்திற்குத் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக இந்தியத் தொழில் துறை கூட்டமைப்பு - பசுமை வணிக மையத்தின் (CII-GBC) தேசிய ஆற்றல் தலைமைத்துவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- 30வது உலக ஓசோன் தினத்தையொட்டி, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்றத் துறை அமைச்சகம் ஆனது, “மாண்ட்ரீல் நெறிமுறை: பருவநிலை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்” என்ற தலைப்பிலான ஒரு பேச்சுவார்த்தையினை ஏற்பாடு செய்தது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, ஜோராவர் எனப்படும் இந்திய இலகு ரக பீரங்கியின் முதல் கட்ட மேம்பாட்டுக் களம் சார்ந்த பீரங்கி வேட்டு சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.

- இந்திய அரசானது, 9வது பங்குதாரர்கள் மாநாட்டு வாரியத்தின் 2வது அதிகாரப்பூர்வ கூட்டத்தையும், ஊக்கமருந்துக்கு எதிரான யுனெஸ்கோ அமைப்பின் சர்வதேச உடன்படிக்கையின் கீழான நிதி ஒப்புதல் குழுவின் 3வது அதிகாரப்பூர்வக் கூட்டத்தையும் புது டெல்லியில் நடத்தியது.
- இந்திய விமானப்படையானது, ஓமனில் உள்ள விமானப்படைத் தளமான மசிராவில் நடைபெறும் ஈஸ்டர்ன் பிரிட்ஜ் VII பயிற்சியில் பங்கேற்கிறது.
- இந்திய மற்றும் ஓமன் நாட்டு இராணுவப் படைகள் ஆனது ஓமனில் நடைபெறும் அல் நஜா-V எனப்படும் இருதரப்புப் பயிற்சியில் பங்கேற்கின்றன.
- மகாராஷ்டிராவில் உள்ள 434 தொழில்பயிற்சி நிறுவனங்களில் (ITI) உள்ள தொழிற் முறைப் பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள 'அரசியலமைப்புக் கோயிலை' இந்திய துணைக் குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் அன்மோல் கர்ப் (17), பெல்ஜிய சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் டென்மார்க்கின் அமாலி ஷுல்ஸை வீழ்த்தி தனது முதல் சர்வதேசப் பட்டத்தை வென்றுள்ளார்.
- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களுக்கான அமைச்சகம் ஆனது லடாக்கின் லே என்ற பகுதியில் தொழில்நுட்பம் மூலமான கிராமப்புற நிறுவன ஊக்குவிப்பு (CREATE) அமைப்பிற்கான மையத்தைத் திறந்து வைத்துள்ளது.
- இந்திய ஹாக்கி அணியானது, சீன அணியினை வீழ்த்தி ஐந்தாவது முறையாக 2024 ஆம் ஆண்டிற்கான (சீனாவில் நடைபெற்ற) ஆசிய சாம்பியன்ஸ் கோப்பையை வென்றுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான இடமாக ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்திய நாடானது சுமார் 30 நாடுகளின் பங்கேற்புடன் கூடிய 'தரங் சக்தி 2024' எனப் படும் தனது முதல் பன்னாட்டு விமானப் பயிற்சியினை தமிழ்நாட்டில் சூலூர் என்னும் இடத்தில் நடத்தியது.
- கோபால்பூர் துறைமுகத்தின் 95 சதவீதப் பங்குகளை அதானி துறைமுகங்கள் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு (APSEZ) மாற்றுவதற்கான முன்மொழிதலுக்கு ஒடிசா அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் இராணுவத்தின் தெற்குப் படைப் பிரிவு ஆகியவை இரண்டு நாட்கள் அளவிலான தேசியக் கருத்தரங்கமான AIKYA பயிற்சியினை சென்னையில் ஏற்பாடு செய்துள்ளன.
- கடற்பாசிச் சாகுபடிக்கான சிறந்த மையமாக இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தினை மீன்வளத் துறை நியமித்துள்ளது.
- ஒரு நாளைக்கு 1.4 டன் உற்பத்தித் திறனுடன் கூடிய $CO_2$ வாயுவிலிருந்தது மெத்தனால் உற்பத்தி செய்யும் இந்தியாவின் முதல் ஆலையானது மகாராஷ்டிராவின் புனேவில் திறக்கப் பட்டுள்ளது.
  - இந்த மாற்று முறை உற்பத்தியானது மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற தொழில் துறை மூலங்களிலிருந்து அல்லது நேரடியாக காற்றில் இருந்து கார்பன் வெளியேற்றத்தைப் பற்றுகிறது.
- ஸ்வச் பாரத் திட்டத்தின் 10வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஸ்வச்சதா ஹி சேவா 2024 பிரச்சாரம் ஆனது செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 02 ஆம் தேதி வரை நடைபெறுகிது.

 - இந்த ஆண்டிற்கான இந்தப் பிரச்சாரத்தின் கருத்துரு, "ஸ்வபாவ் ஸ்வச்சதா - சன்ஸ்கார் ஸ்வச்சதா" என்பதாகும்.

- இந்தியாவின் கடல்சார் துறையில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளுடன் 20வது கடல்சார் அரசு மேம்பாட்டுச் சபை (MSDC) ஆனது கோவாவில் நடைபெற்றது.
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றினை போன்றே மிகவும் முழு ஈடுபாட்டுடன் கூடிய ஊடாடும் உருவ படைப்பாளர்களுக்கான புதியதொரு இந்தியக் கல்வி நிறுவனத்தினை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியக் கடற்படையின் லெப்டினன்ட் கொமடோர் A.ரூபா மற்றும் லெப்டினன்ட் கொமடோர் K.தில்னா ஆகியோர் விரைவில் இரண்டாவது நாவிகா சாகர் பரிக்கிரமா பயணத்தின் ஒரு பகுதியாக INSV தாரிணி என்ற கப்பலில் 'சிறப்புப் பயணத்தினை' தொடங்க உள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டு ஷார்ஜா முதலீட்டு மன்றத்தில் (SIF) செயற்கை நுண்ணறிவு மூலம் செயல்படும் உலகின் முதல் வர்த்தக உரிமச் சேவையானது அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை (DDWS) ஆனது 2024 ஆம் ஆண்டு சர்வதேச WASH (தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) மாநாட்டினை புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- சீனா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் இணைந்து 'மௌண்ட் எவரெஸ்ட் பிரண்ட்சிப் 2024' எனப்படும் 10 நாட்கள் அளவிலான கூட்டுப் பயிற்சியினை சீனாவின் சோங்கிங் நகரில் நடத்துகின்றன.
- மூன்றாவது உலக உணவு இந்தியா (2024) மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.
- அமெரிக்காவைச் சேர்ந்த கணினித் தகவல் தொடர்பு அமைப்பு மாணவி துருவி படேல், 2024 ஆம் ஆண்டிற்கான மிஸ் இந்தியா உலக அழகி பட்டத்தினை வென்று உள்ளார்.
- அமெரிக்க சர்வதேச மேம்பாட்டு நிதிக் கழகம் (DFC) ஆனது இரு அரசாங்கங்களின் முக்கிய முன்னுரிமைகளை வலுப்படுத்துவதற்காக என்று இந்தியாவின் தனியார் துறையில் 70 மில்லியன் டாலர் முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.
- இரண்டு முறை உலகக் குத்துச்சண்டை சாம்பியன் பட்டம் வென்ற நிகத் ஜரீன் தெலுங்கானா காவல்துறையில் ஒரு துணை ஆய்வாளராக (சிறப்புக் காவல்பிரிவு) இணைந்துள்ளார்.
- அமெரிக்க பெடரல் ரிசர்வ் அமைப்பானது, ஒப்பீட்டு வட்டி விகிதத்தை – கூட்டு நிதி விகிதம் - 50 அடிப்படைப் புள்ளிகள் அல்லது அரை சதவீதப் புள்ளிகளாக குறைத்து உள்ளது.
- டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (IGIA), உலகளாவிய "மாபெரும் மையங்கள்" என்ற சமீபத்திய விமான நிலையங்கள் தர வரிசையில் முன்னதாக இருந்த 25வது இடத்தில் இருந்து 24வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- இந்திய கிரிக்கெட் வீரர் ஜஸ்பிரித் பும்ரா, சர்வதேச அளவில் 400 விக்கெட்டுகளை வீழ்த்தியவர் என்ற மைல்கல்லை எட்டிய 10வது இந்தியப் பந்துவீச்சாளர் என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.
- சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) 68வது பொது மாநாட்டின் தலைவராக ஆஸ்திரியாவுக்கான தென் கொரிய நாட்டின் தூதரான ஹாம் சாங்-வூக் என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- தைவான்-சீன நாட்டு குடிமக்களுக்கு இடையேயான தன்பாலின திருமணங்களை தைவான் அரசு அங்கீகரித்து, தம்பதிகள் தங்கள் இணைவினை அரசிடம் பதிவு செய்வதற்கான ஒரு உரிமையை வழங்க உள்ளது.
  - தன்பாலினத் திருமணம் ஆனது 2019 ஆம் ஆண்டு முதல் தைவானில் சட்டப் பூர்வமாக உள்ளது என்ற நிலையில் அது தன்பாலினத் திருமணத்தைச் சட்டப் பூர்வமாக்கிய ஆசியாவின் முதல் நாடாகும்.
- தமிழ்நாடு மாநிலமானது தஞ்சாவூரிலும் (டெல்டா பகுதியில் அமைக்கப்படும் முதல் பூங்கா) சேலத்திலும் டைடல் எனப்படும் இரண்டு தொழில்நுட்பப் பூங்காக்களைத் திறக்க உள்ளது.
- மகாராஷ்டிராவின் அமராவதியில் அமைக்கப்பட உள்ள பிரதம மந்திரி மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி உற்பத்திப் பகுதிகள் மற்றும் ஆடை உற்பத்திப் பூங்காவிற்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார் .
- இரண்டாவது உலகளாவிய உணவுக் கட்டுப்பாட்டாளர்கள் உச்சி மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- 14வது ஹாக்கி இந்தியா சப் ஜூனியர் ஆடவர் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியானது சண்டிகரில் நடைபெற்று வருகிறது.
- டாடா எஃகு உற்பத்தி நிறுவனமானது ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள கலிங்க நகரில் இந்தியாவின் மிகப்பெரிய ஊதுலையை நிறுவி மிக வெற்றிகரமாக இயக்கத் தொடங்கியுள்ளது.
- இராஜஸ்தானில் உள்ள மஹி பன்ஸ்வாராவில் நான்கு 700 மெகாவாட் அணு மின் உலைகளை உருவாக்குவதற்காக NPCIL மற்றும் NTPC நிறுவனங்கள் மேற்கொள்ள உள்ள ஒரு கூட்டு முயற்சிக்கு (ASHVINI) மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியாவின் மூன்றாவது உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட 700 மெகாவாட் திறன் கொண்ட அணுசக்தி உலையானது செயல்பாட்டு நிலைக்கு வந்துள்ளது என்பதோடு மேலும் அந்த உலையில் வணிகரீதியான மின் உற்பத்திச் செயல்பாடுகள் விரைவில் தொடங்க உள்ளன.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிச் சபையானது, தொற்றா நோய்கள் மற்றும் மனநலம் ஆகியவற்றின் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றில் பல்துறை நடவடிக்கைகளை மேற்கொண்ட சாதனைகளுக்காக 2024 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பல் முகமை இடையீட்டு நடவடிக்கை அமைப்பு விருதைப் பெற்றுள்ளது.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது இயங்கலை ஒளிபரப்புச் சேவை (OTT) இயங்கு தளங்களில் "தவிர்க்க முடியாத வகையிலான" புகையிலை எதிர்ப்பு சுகாதார குறியீடுகளை குறைந்தபட்சம் 30 வினாடிகளுக்கும், புகையிலைப் பயன்பாட்டின் தீய விளைவுகள் குறித்த ஒலி-ஒளி சார்ந்த பொறுப்புத் துறப்புகளை 20 வினாடிகளுக்கும் கட்டாயமாக காட்சிப்படுத்த வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது.
- இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளை உள்ளடக்கிய நாற்கர பாதுகாப்பு பேச்சுவார்த்தை அல்லது குவாட் உச்சி மாநாட்டினை அமெரிக்கா சமீபத்தில் நடத்தியது.
- இந்திய அரசானது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் உலக ஒலி-ஒளி & பொழுது போக்கு உச்சி மாநாட்டை (WAVES) நடத்த உள்ளது.
- 19வது திவ்ய கலா மேளா ஆனது சமீபத்தில் விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.

- இஸ்ரோ, இன்-ஸ்பேஸ் மற்றும் NSIL ஆகியவை அரசு சாரா நிறுவனங்களுடன் (NGO) 75 தொழில்நுட்ப பரிமாற்ற ஒப்பந்தங்களில் (TTA) கையெழுத்திட்டுள்ளன.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, கிராஃபீன் அரோரா திட்டத்தின் (GAP) கீழ் இந்தியா கிராஃபீன் பொறியியல் மற்றும் புத்தாக்க மையத்தினை (IGEIC) தொடங்கியுள்ளது.
- காசிரங்கா மற்றும் அசாமில் உள்ள ஒற்றைக் கொம்பு காண்டாமிருகத்தின் பிற பாதுகாக்கப்பட்ட வாழ்விடங்களில் 2016 ஆம் ஆண்டு முதல் இந்த தாவரஉண்ணி இனங்களின் வேட்டையாடல் நிகழ்வில் 86% வீழ்ச்சிப் பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் குறைகடத்தி உற்பத்தி ஆலையை அமைக்கச் செய்வதில் இணைந்து பணியாற்றுவதற்காக அமெரிக்காவும் இந்தியாவும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி, 46 ஆண்டுகாலத் தொழில்முறை வாழ்க்கை, 537 பாடல்கள் மற்றும் 24,000 நடன அசைவுகளுடன் கின்னஸ் உலக சாதனையைப் படைத்து, மிகவும் தொழில்சார் ஆக்கப்பூர்வமான  இந்திய திரைப்பட நட்சத்திரமாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளார்.
- இந்திய மல்யுத்த வீரர் சங்ராம் சிங் ஜார்ஜியாவின் திபிலிசி நகரில் நடைபெற்ற காமா சர்வதேச மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியின் தனது முதல் போட்டியில் MMA (கலப்பு தற்காப்புக் கலை) போட்டிப் பிரிவில் வென்று வரலாறு படைத்துள்ளார்.
- இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்களான ஒலெக் கோனோனென்கோ மற்றும் நிகோலாய் சப் ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 374 நாட்கள் தங்கி இருந்து முந்தைய சாதனையை முறியடித்துள்ளனர்.
    - கோனோனென்கோ விண்வெளியில் 1,111 நாட்கள் சுற்றுப்பாதையில் அதிக நேரம் செலவழித்த நபர் என்ற சாதனையையும் படைத்துள்ளார்.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதி D.கிருஷ்ணகுமார், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு உயர் நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாகப் பணியாற்ற உள்ள R.பூர்ணிமா, M.ஜோதிராமன் மற்றும் அகஸ்டின் தேவதாஸ் மரியா கிளீட் ஆகிய மூன்று நீதித்துறை அதிகாரிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2023 ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது ஆனது பின்னணிப் பாடகி P.சுசீலாவிற்கும் கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.
- லண்டனின் ஹைட் பூங்கா போன்ற குறைந்த பராமரிப்பு தேவை கொண்ட நகர்ப்புறப் பூங்காவை கிண்டியில் உருவாக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்திய அறிவியலாளர்கள் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வெளியீட்டு விகிதத்துடன் கூடிய சீரான பெரோமோன் மருந்து தெளிப்பானை உருவாக்கியுள்ள நிலையில் இது பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை செலவினங்களைக் கணிசமாகக் குறைப்பதற்காக ஒரு புதுமையான தீர்வாக விளங்கும்.
- சர்வதேச செயற்கை நுண்ணறிவுக்கான ஆராய்ச்சி மற்றும் நெறிமுறை மையமானது (ICAIRE) யுனெஸ்கோ அமைப்பின் கீழான இரண்டாம் வகை (C2) மையமாக வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- கிரண் ராவ் இயக்கிய லாபட்டா லேடீஸ் ("Missing Women") 97வது அகாடமி விருதுகள் அல்லது ஆஸ்கார் விருதுகளில் மிகவும் சிறந்த சர்வதேசத் திரைப்படப் பிரிவிற்கான இந்தியாவின் அதிகாரப்பூர்வ பரிந்துரையாக முன் வைக்கப்பட்டுள்ளது.

- இலங்கையின் 16வது பிரதமராக ஹரிணி அமரசூரியா (54) பதவியேற்றுள்ளார்.
  - இவர் இலங்கையின் பிரதமர் பதவியை வகிக்க உள்ள இலங்கையைச் சேர்ந்த மூன்றாவது பெண் அரசியல்வாதி ஆவார்.
- உலக வனவிலங்கு நிதியம் (WWF)-இந்தியா அமைப்பின் நிதியுதவியின் கீழ், யானைகளின் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக வேண்டி வால்பாறை அருகே சரக்குப் பெட்டகங்களால் செய்யப்பட்ட இரண்டு ரேஷன் கடைகள் மிகவும் விரைவில் திறக்கப்பட உள்ளன.
- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டை யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் மராத்திய ராஜ்ய இராணுவ நிலப் பரப்பிற்கான மிகவும் முக்கியமான ஒரு முன்மொழிதலாக பரிந்துரைக்கப் பட்டுள்ளது என்பதோடு இதில் இதர மற்ற 11 கோட்டைகளும் அடங்கும்.
- இந்தியக் கடற்படையானது ஐந்தாவது கோவா கடல்சார் கருத்தரங்கத்தினை (GMS-2024) கோவாவில் நடத்தியது.
- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG), ஆசியாவிற்கான பிரதான தணிக்கை நிறுவனங்கள் அமைப்பின் (ASOSAI) 2024-2027 ஆம் ஆண்டிற்கான தலைமை பொறுப்பினை ஏற்றுள்ளார்.
- பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மாநாட்டு அமைப்பானது, இழப்பு மற்றும் சேதங்களுக்கான பல நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியத்தின் முதல் இயக்குநராக செனகல் நாட்டின் இப்ராஹிமா சேக் தியோங் நியமிக்கப் பட்டு உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்திய விமானப்படை மற்றும் ஓமன் நாட்டின் விமானப் படை ஆகியவை ஓமனில் நடைபெற்ற 'ஈஸ்டர்ன் பிரிட்ஜ் VII' எனப்படும் கூட்டு இராணுவப் பயிற்சியில் பங்கேற்றன.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு மற்றும் டெல்லியின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை ABHED (Advanced Ballistics for High Energy Defeat) எனப் படும் குறைந்த எடை கொண்ட குண்டு துளைக்காத மேலாடைகளை உருவாக்கி உள்ளன.
- பிரதான் மந்திரி ஜன்ஜாதியா உன்னத் கிராம் அபியான் என்ற திட்டத்தின் சிறப்பான அமலாக்கத்திற்காக சமோலி மாவட்டத்தின் ஜோஷிமத் தொகுதியில் உள்ள மானா கிராமம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - பழங்குடியின மாணவர்களுக்கு தரமான கல்வி மற்றும் வசதிகளை வழங்குவதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்காக வாகன ஓட்டிகளை ஒரு நாள் மகிழுந்து பயன்படுத்துவதை தவிர்க்க ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 22 ஆம் தேதி அன்று உலக மகிழுந்து இல்லா தினம் கொண்டாடப் படுகிறது.
- உலகப் பாலிவுட் தினம் ஆனது, இந்திய திரைத்துறையின் செழுமையான பாரம்பரியத்தையும் அதன் உலகளாவியச் செல்வாக்கையும் கொண்டாடச் செய்வதற்காக ஆண்டுதோறும் செப்டம்பர் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- செப்டம்பர் 27, 2024 அன்று, கூகுள் நிறுவனம் தனது 26வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாட்டின் புதிய நகராட்சிகள் 2024

- தமிழக அரசு ஸ்ரீபெரும்புதூர் மற்றும் மாமல்லபுரம் பேரூராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தியுள்ளது.
- இதனுடன் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறும் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்த மாநிலத்தில் தற்போது 25 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள், நகராட்சி நிர்வாகத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.




## MRMBS திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகள்

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் (எம்ஆர்எம்பிஎஸ்) கீழ் தனியார் மருத்துவமனைகளையும் இணைக்கும் செயல்முறையை சுகாதாரத் துறை தொடங்கியுள்ளது.
- இத்திட்டம் 2017 வரை அரசு நிறுவனங்களில் மட்டும் பிரசவிக்கும் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கியது.
- அதன்பிறகு, தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இலவச மருத்துவச் சேவைகளைப் பெறுபவர்களுக்கும் இந்தத் திட்டத்தை நீட்டிக்க அரசு தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், இது இந்திய அரசாங்கத்தின் பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) உடன் இணையாக மேற்கொள்ளப்பட்டது.
- தற்போதைய வடிவத்தில், இந்தத் திட்டம் ₹18,000 வரை நிதியுதவி அளிக்கிறது, இதில் தலா ₹2,000 மதிப்புள்ள இரண்டு தாய்வழி ஊட்டச்சத்து தொகுப்பு பைகள் அடங்கும்.




## சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி - TANGEDCO

- TANGEDCO நிறுவனமானது 43.2 மில்லியன் யூனிட் (Mu) சூரிய ஒளி மின்சக்தியை வலை அமைப்பில் பெற்றுள்ளது என்பது இது இதுவரையில் இல்லாத அளவுக்கு அதிகமான அளவாகும்.
- சூரிய ஒளி மின் உற்பத்தி 5,648 மெகாவாட்டாக (MW) உச்சத்தை எட்டியது.
- ஆகஸ்டு 9 ஆம் தேதி பெறப்பட்ட 5,979 மெகாவாட் உச்சநிலை உற்பத்தியாக இருந்தது.
- 2023-24 ஆம் ஆண்டில் 1,462 மெகாவாட் மின்சாரம் வலையமைப்பில் இணைக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு மொத்தமாக 8,574 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி அலகை நிறுவியுள்ளது.
- இதில் 200 மெகாவாட் மேற்கூரை மின் உற்பத்தி அமைப்புகளும் அடங்கும்.



## 19 ஆம் நூற்றாண்டின் முத்திரைத் தாள்

- ❖ பழனியில் கிடைத்த இந்த முத்திரைத்தாள் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
- ❖ இது பழனி - பாலசமுத்திரத்தின் கடைசி ஜமீன்தார் வேலாயுதம் சின்ன நாயக்கனின் மனைவி சின்னோப்பாலம்மாவால் எழுதப்பட்டது.
- ❖ அந்த ஜமீன்தார் சென்னையில் உள்ள சிறைச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மர்மமான முறையில் இறந்ததாக கூறப்படுகிறது.
- ❖ அந்த ஜமீன்தாரின் பெரிய விவசாய நிலங்களைப் பராமரிக்க, அவரின் மனைவி 23 மேலாளர்களை நியமித்துள்ளார்.
- ❖ அதில் கிழக்கிந்திய நிறுவனத்தின் இரண்டு முத்திரைகள் உள்ளன என்ற நிலையில் அதில் ஒரு முத்திரையில் இரண்டு அணாக்கள் என முத்திரைத் தாளின் விலை உள்ளது (இரண்டு அணா' என்ற வார்த்தை தமிழ், ஆங்கிலம், உருது மற்றும் தெலுங்கு என நான்கு மொழிகளில் எழுதப்பட்டுள்ளது).
- ❖ இன்னொரு முத்திரையில் காகிதத்தை விற்ற கருவூலத்தின் முத்திரை உள்ளது.
- ❖ இந்த அனைத்துப் பரிவர்த்தனைகளும் கிழக்கிந்திய நிறுவனத்தின் கருவூலத்தால் மட்டுமே மேற்கொள்ளப் பட்டன.
- ❖ கடிதம் முழுவதும் தமிழில் எழுதப்பட்டு, முத்திரைத் தாளின் தேதி பிப்ரவரி 21, 1818 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## 2024 ஆம் ஆண்டிற்கான காவிரி நீரின் பங்கு

- ❖ இம்மாதத்தில் காவிரி ஆற்றின் தண்ணீர் வரவு 76 ஆயிரம் மில்லியன் கன அடியை (டிஎம்சி அடி) எட்டியுள்ளதால், தமிழ் நாடு இந்த ஆண்டிற்கான பங்கான 177.25 டிஎம்சி அளவு நீரைப் பெறும் நிலையில் உள்ளது.
- ❖ ஆகஸ்ட் 28, 2024 நிலவரப்படி, ஜூன் 1, 2024 முதல் தமிழ்நாடு தோராயமாக 174.7733 டிஎம்சி அடி நீரினைப் பெற்றுள்ளது.
- ❖ ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், பெறப்பட்ட நீரின் அளவுகள் முறையே 2.25 டிஎம்சி அடி மற்றும் 96.54 டிஎம்சி அடி ஆகும்.
- ❖ 1974 ஆம் ஆண்டு முதல் ஆகஸ்ட் மாதத்தில் பெறப்பட்ட நீரின் தரவுகளை ஆய்வு செய்தால், 50 ஆண்டு காலத்தின் (1974-2023) சராசரி அளவு சுமார் 62 டிஎம்சி அடி அளவாக இருந்தது.




## 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் பெற்ற கடன்கள்

- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்-ஜூன்) தமிழ்நாடு அரசு பெற்ற மொத்தச் சந்தைக் கடன்கள் 21,000 கோடி ரூபாயாக இருந்தது.
- 2023-2024 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில், மாநில அரசு பெற்ற மொத்தச் சந்தைக் கடன் 25,000 கோடி ரூபாய் ஆகும்.
- மாநில மேம்பாட்டுக் கடன்கள் (SDLs) எனப்படும் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் மாநில அரசு சந்தையில் இருந்து கடன் பெறுகிறது.
- 2024 ஆம் ஆண்டின் ஏப்ரல்-ஜூன் மாதக் காலக் கட்டத்தில், 27,000 கோடி ரூபாய் கடன் பெற்று ஆந்திரப் பிரதேச மாநில அரசு ஆனது முதலிடத்தில் உள்ளது, அதற்கு அடுத்த படியாக தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.
- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் (SOTR) ஆனது அதன் மொத்த வருவாய் வரவுகளில் 70 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 36,461.89 கோடி ரூபாயாக இருந்த SOTR ஆனது 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 3.13% அதிகரித்து 37,605.43 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் தமிழகத்தின் ஒட்டு மொத்த வருவாய் வரவுகள் ஆனது 55,467.63 கோடி ரூபாயாக இருந்தது.

**Gross market borrowings**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| Fiscal 2023-24* | 53,000 |
| Fiscal 2022-23 | 87,000 |
| Fiscal 2021-22 | 87,000 |

**Repayment of market borrowings**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| Fiscal 2023-24* | 21,320 |
| Fiscal 2022-23 | 21,278.30 |
| Fiscal 2021-22 | 14,500 |

**Outstanding liabilities from SDLs**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| At end of Mar. 2024 | 6,00,992.9 |
| At end of Mar. 2023 | 5,18,367 |
| At end of Mar. 2022 | 4,50,364.5 |

**Total outstanding liabilities**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| At end of Mar. 2024 | 8,34,543.5 |
| At end of Mar. 2023 | 7,41,497.7 |
| At the end of Mar. 2022 | 6,67,974.9 |

## தைஞ்சா பசுந்தாள் உரம்




- புதிதாக தொடங்கப்பட்ட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் (MKMK) திட்டத்தின் கீழான பசுந்தாள் உர விநியோகம் ஆனது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- வேளாண்மைத் துறையானது, 50% மானியத்தில் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 கிலோ பசுந்தாள் உரத்தினை விநியோகிக்கிறது.
- தைஞ்சா (தக்கை பூண்டு) எனப்படும் இந்த உரமானது பொதுவாக வெளிச்சந்தையில் 100 ரூபாய் மதிப்பில் விற்கப்படுகிறது.
- இது தொகுதி அளவிலான வேளாண்மை விரிவாக்க அலுவலகங்களில் 50 ரூபாய் மதிப்பில் கிடைக்கப் பெறுகிறது.
- தைஞ்சா ஒரு ஏக்கருக்கு சுமார் எட்டு டன் வரை உயிர்ப் பொருளை வழங்கும் திறன் கொண்டது.
- தைஞ்சா சிதைவடையும் போது, அது நெல் வளர்ப்புச் சூழலுக்கு மிகவும் நன்மை பயக்கும் பலவீனமான கரிம அமிலங்களை வெளியிடுகிறது.
- இது வழங்கும் உயிர்ப் பொருளைத் தவிர, அதன் மூலம் உருவாகும் வேர் முடிச்சுகள் ஆனது வளிமண்டல நைட்ரஜனை நிலைக்கச் செய்கிறது.


## சென்னை ஃபார்முலா 4 கார் பந்தயம்

- சென்னையின் சாலைகளில் நடைபெற்ற ஃபார்முலா 4 கார் பந்தயத்தில் ஆஸ்திரேலிய வீரர் ஹக் பார்ட்டர் வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளார்.
- சென்னையில் நடைபெற்ற இப்போட்டி நாட்டின் முதலாவது இரவு நேரப் பந்தயமாகும்.
- தெற்காசியாவில் பார்முலா 4 சாலைப் பந்தயத்தை இரவு நேரத்தில் நடத்திய முதல் நகரம் சென்னையாகும்.
- தெற்காசியாவிலேயே மிக நீளமான சாலைச் சுற்றுவட்டத்தில் இந்தக் கார் பந்தயம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

- உலகின் முதல் பாலின-நடுநிலை பேணப்பட்ட கார் பந்தய சாம்பியன்ஷிப் போட்டியான இது மோட்டார் ஸ்போர்ட் (வாகனப் பந்தயம்) உள்ளடக்கம் மற்றும் போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கிறது.




## 2024 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பதிவான உறுப்பு தானம்




- 2024 ஆம் ஆண்டில் எட்டு மாதங்களுக்குள், 2016 ஆம் ஆண்டில் இறந்த பின்பு உறுப்பு தானம் செய்த 185 பேர் என்ற அதிகபட்ச அளவினைத் தொட்டுள்ளது.
- ஆகஸ்ட் 28 ஆம் தேதி வரை 185 பேர் சடல உறுப்பு தானம் செய்துள்ளதாக மாநில அரசு பதிவு செய்துள்ளது.

- கடந்த ஆண்டு, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், 26 பேர் சடல உறுப்பு தானம் செய்துள்ளனர்.
- இந்த ஆண்டு இதுவரையில் 24 பேர் சடல உறுப்பு தானம் செய்துள்ளதாக பதிவாகி உள்ளது.

## நான் முதல்வன் - உயர்வுக்குப் படி திட்டம்

- தமிழக மாநில அரசானது, பன்னிரண்டாம் வகுப்பு மாணாக்கர்கள் மாநில வாரியத் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வியைத் தொடர்வதை உறுதி செய்வதற்காக மாநிலம் முழுவதும் சிறப்பு முகாம்களை நடத்தி வருகிறது.
- நான் முதல்வன் திட்டத்தின் (உயர்வுக்குப் படி) கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி மாநிலத் திட்ட இயக்குநரகத்தினால் இந்தச் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.
- மாநிலத்தில் உள்ள பொறியியல், பலதொழில் நுணுக்கப் பயிற்சி, கலை, அறிவியல் மற்றும் தொழிற்கல்வி கல்லூரிகளில் உயர்கல்வி பயிலப் பதிவு செய்யத் தவறிய மாணவர்களுக்காக இந்தச் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.
- கல்லூரிகளில் உள்ள காலியிடங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட கல்லூரிகளில் நேரடியாக மாணாக்கர் சேர்க்கையும் மேற்கொள்ளப்படும்.
- 2022-23 ஆம் ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் 3,97,809 மாணாக்கர்களில், 2,39,270 மாணாக்கர்கள் உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர் மற்றும் 45,440 மாணாக்கர்கள் உயர்கல்வியினைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.
- சுமார் 1,13,099 மாணாக்கர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கவில்லை அல்லது பதிவு செய்ததற்கான போதுமான விவரங்களை வழங்கவில்லை.
- 2023-2024 ஆம் ஆண்டில், பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் 3,31,540 மாணாக்கர்களில், 1,97,510 மாணாக்கர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பித்துள்ளனர்.
- சுமார் 1,34,030 மாணாக்கர்கள் விண்ணப்பிக்கவில்லை அல்லது விண்ணப்பம் குறித்த போதுமான விவரங்களை வழங்கவில்லை.



## பல்நோக்கு ஒருங்கிணைந்தப் போக்குவரத்து பேருந்து வளாகம்

- தமிழ்நாடு அரசு ஆனது சென்னை பிராட்வேயில் குறளகத்தினை உள்ளடக்கிய பல்நோக்கு ஒருங்கிணைந்தப் போக்குவரத்து பேருந்து வளாகத்தின் (MMFC) ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான திருத்தப்பட்ட நிர்வாக அனுமதியை வழங்கியுள்ளது.
- 10 மாடிகளைக் கொண்ட இந்த வளாகமானது ஒரே நேரத்தில் சுமார் 1,100 பேருந்துகள் இயக்கப் படும் வகையில் அமைய உள்ளது.
- 400க்கும் மேற்பட்ட கார்கள் மற்றும் 800 இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளையும் கொண்டிருக்கும்.


**Bus depots, terminus to be modernised**

· **MTC and TNIDB collaboration:** Saidapet, Adyar, Tiruvanmiyur, T Nagar, Tambaram, Poonamallee, Central, Villivakkam, Vallalar Nagar, Vyasarpadi, Toll Gate and Tiruvottiyur

· **CMRL:** Anna Nagar West depot, Broadway terminus, and the depot-cum-terminus each in Vadapalani, Mandaveli and KK Nagar

· **CMDA:** Tondiarpet, Kannadasan Nagar, Mullainagar, Thiru Vi Ka Nagar, Periyar Nagar and Ambattur

## பரம்பிக்குளம் ஆழியார் திட்ட ஒப்பந்தம்



- இந்தத் திட்டம் ஆனது தமிழ்நாட்டின் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களிலும், கேரளாவின் பாலக்காடு மாவட்டத்திலும் உள்ள வறட்சியால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள பகுதிகளின் நிலையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலம் மேற்கு நோக்கி பாயும் எட்டு ஆறுகள்: ஆனைமலை மலையில் பாயும் ஆறு நதிகள் (ஆனைமலையாறு, சோலையாறு, தூணக்கடவு, நீரார், பெருவாரிபள்ளம், மற்றும் பரம்பிக்குளம்) மற்றும் சமவெளியில் பாயும் இரண்டு நதிகள் (ஆழியார் மற்றும் பாலாறு) ஆகியவற்றின் நீர்வழித் தடத்தினை மாற்றி ஒருங்கிணைக்கப் படுகிறது.
- 1970 ஆம் ஆண்டு மே 29 ஆம் தேதியன்று, இரு மாநிலங்களும் 1958 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அதற்கு பின்னோக்கியத் தேதிகளிலும் செல்லுபடியாகும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- பரம்பிக்குளம் தவிர, மற்ற எட்டு அணைகளும் இந்த வலையமைப்பின் ஒரு பகுதி ஆகும் என்பதோடு இவற்றின் மொத்த கொள்ளளவு சுமார் 31.5 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) ஆகும்.
- நீர் மின் நிலையங்களின் மொத்த ஆற்றல் உற்பத்தித் திறன் 210 மெகாவாட் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில், மாநிலங்களுக்கு இடையேயான நீர் ஒப்பந்தங்கள் குறித்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில் இந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க ஒப்புக் கொள்ளப் பட்டது.
- நீராறு-நள்ளாறு பல்நோக்குத் திட்டத்துடன் ஆனைமலையாற்றில் இருந்து 2.5 TMC தண்ணீரைத் தமிழகத்திற்கு திருப்பி விடுவதற்கு கேரள அரசு ஒப்புக் கொண்டால், மேற்கு மாவட்டங்களில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறையைக் குறைக்க முடியும்.

## காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களுக்கான புதிய கொள்கை 2024

National Institute of Wind Energy has estimated repowering potential of the country to be 25,406 MW.
In this Tami Nadu's share is 7,386.5 MW.

| | |
|---|---|
| Below 0.5 MW | 1,181 MW |
| 0.5 to 1 MW | 2,919 MW |
| 1 to 1.5 MW | 1,813 MW |
| 1.5 to 2 MW | 1,473.5 MW |
| Total | 7,386.5 MW |


- காற்றாலை மின் திட்டங்களுக்கான 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் கால நீட்டிப்புக் கொள்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களை பழைய காற்றாலை விசையாழிகளை மாற்ற ஊக்குவிப்பது மற்றும் காற்றாலை ஆற்றல் வளங்களின் உகந்த முறையிலான பயன்பாட்டை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாடு மாநிலமானது 22,754 மெகாவாட் திறன் அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனைக் கொண்டுள்ளது.
- 1986 ஆம் ஆண்டில், சுமார் 55 கிலோவாட் முதல் 600 கிலோவாட் வரையிலான இயந்திர உற்பத்தித் திறன்களுடன் தமிழ்நாட்டில் காற்றாலை மின்னாற்றல் உற்பத்தியானது தொடங்கப் பட்டது.

## செயலில் உள்ள நிறுவனங்களில் பெண் இயக்குநர்கள் – தமிழ்நாடு




- இந்திய நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் செயலில் உள்ள நிறுவனங்களில் பெண் இயக்குநர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.
- ஆனால் தமிழகத்தில் இது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டில், 2014 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 15,550 ஆக இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் செயலில் உள்ள நிறுவனங்களில் சுமார் 68,000 பெண் இயக்குநர்கள் உள்ளனர்.
- இந்தியாவில், 2014 ஆம் ஆண்டில் 2.58 லட்சமாக இருந்த இந்த எண்ணிக்கையானது, 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் செயலில் உள்ள நிறுவனங்களில் 8.83 லட்சம் பெண் இயக்குநர்கள் உள்ளனர்.
- மேலும் உச்ச நீதிமன்ற அமர்வில் இரண்டு பெண் நீதிபதிகள் உள்ளனர்.
- பல்வேறு உயர் நீதிமன்றங்களில் 106 பெண் நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர்.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் 11 பெண் நீதிபதிகள் உள்ளனர்.


## இணைய வெளிப் பாதுகாப்பு கொள்கை 2.0




- தமிழக அரசானது சமீபத்தில் இணையவெளிப் பாதுகாப்புக் கொள்கை 2.0யினை வெளியிட்டுள்ளது.

- இது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு இணைய வெளிப் பாதுகாப்புக் கொள்கை 2020யினை மாற்றியமைத்துள்ளது.
- இணையவெளி அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களின் ஆய்வு, இணக்கம் மற்றும் கண்காணிப்புக்கான வழிகாட்டுதல்கள், சீர்தர இயக்கச் செயல்முறைகள் (SOP) மூலம் அரசாங்கச் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை இது பட்டியலிடுகிறது.
- இக்கொள்கையானது அரசாங்கத்தின் தகவல் சார் சொத்துக்களை (உள்கட்டமைப்பு, மென்பொருள், குடிமக்கள் சேவைகள்) பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அரசாங்கத்திற்கும் குடிமக்களுக்கும் அவற்றின் கிடைக்கும் தன்மையை அதிகப் படுத்துவதோடு, நிறுவப்பட்ட உள்கட்டமைப்பைக் கண்காணிப்பதற்கான ஒரு ஒரு நிறுவனம் சார்ந்த நெறிமுறையை உருவாக்கும்.


## தமிழ்நாடு சிறு நீர்மின்னாற்றல் உற்பத்திக் கொள்கை – 2024




- முதன்முறையாக சிறிய நீர் மின் திட்டங்கள் குறித்த புதிய கொள்கைக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் லிமிடெட் (TNGECL) நிறுவனமானது இந்தப் புதிய கொள்கையினை வரைவு செய்துள்ளது.
- இது சுயப் பயன்பாடு அல்லது மூன்றாம் தரப்பு விற்பனைக்காக மின்சாரம் தயாரிக்க தனியார் துறை சார்ந்த உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிக்கிறது.
- 100 கிலோவாட் முதல் 10 மெகாவாட் வரையிலான சிறிய நீர் மின்னாற்றல் திட்டங்கள் (ஒவ்வொன்றும் 5 மெகாவாட் அலகு அளவு கொண்டவை) உள்ளூர் எரிசக்தி உற்பத்தி அளவை மேம்படுத்தச் செய்வதற்கும் கிராமப்புற மின்மயமாக்கலுக்கு பெரும் ஆதரவு அளிப்பதற்கும் குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகின்றன.

## நீரேற்றுப் புனல் மின்னாற்றல் சேமிப்பு திட்டக் கொள்கை 2024

- சமீபத்தில் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரேற்றுப் புனல் மின்னாற்றல் சேமிப்பு திட்டக் கொள்கையினை (PSP) மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- நிலையான எரிசக்தி மேம்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளை அடைவதற்கும், முதலீடுகளை ஈர்ப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஒருங்கிணைப்பதற்கும் வேண்டி நீரேற்றுப் புனல் மின்னாற்றல் சேமிப்பு நிலையங்களின் திறனைப் பயன்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது 9,000 மெகாவாட்டிற்கு மேலான காற்றாலை மின்னாற்றல் உற்பத்தித் திறன் மற்றும் 7,800 மெகாவாட் அளவிலான நிறுவப்பட்ட சூரிய சக்தி மின்னாற்றல் உற்பத்தி திறனைக் கொண்டுள்ளது.
- மாநிலத்தின் மொத்த நிறுவப்பட்ட பசுமை ஆற்றல் திறன் 22,628 மெகாவாட் ஆகும்.
- தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் லிமிடெட் (TNGECL) ஆனது இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட தலைமை முகமையாக இருக்கும்.





## நீலாங்கரையில் கோனோகார்பஸ் மரம் (சென்னை)




- மனித சுவாச அமைப்பிற்கு ஆபத்தினை விளைவிக்கும் மகரந்தங்களைக் கொண்ட கோனோகார்பஸ் மரத்தின் தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்ய மாநில வனத்துறை முடிவு செய்துள்ளது.

- நீலாங்கரை கடற்கரையில் பசுமைச் சூழலை உருவாக்குவதற்காக கோனோகார்பஸ் மரங்கள் நடப்பட்டுள்ளன.
- குஜராத், தெலுங்கானா மற்றும் ஆந்திரா ஆகிய சில மாநிலங்கள் ஏற்கனவே ஆப்பிரிக்கக் கடற்கரையைப் பூர்வீகமாகக் கொண்ட கோனோகார்பஸ் மரங்களை நடுவதற்குத் தடை விதித்துள்ளன.
- கோனோகார்பஸ் மரத்தில் இருந்து வரும் மகரந்தத் துகள்கள் இருமல், சளி, ஆஸ்துமா மற்றும் பிற சுவாசக் கோளாறுகளின் பாதிப்பினை அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது.

## தமிழகத்தில் கண் தானம் 2024




- நாடு முழுவதும் பதிவாகும் கண் தானத்தில் தமிழகம் சுமார் 25 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 5,422, 2022-23 ஆம் ஆண்டில் 8,274 மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் 9,400 கண் தானம் பதிவாகியுள்ளன.
- தானம் செய்யப்பட்ட 92.85% கருவிழிகள் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு என்று பயன்படுத்தப் பட்டுள்ளன.
- கடந்த மூன்று ஆண்டுகளில், இராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் மூலம் 4,87,469 பள்ளி மாணவர்களுக்கு கண் பார்வைத் திறன் ஆய்விற்குப் பின்னர் கண்ணாடிகள் வழங்கப் பட்டன.

## 900 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டுத் திட்டங்கள்

- தமிழக மாநில அரசானது ஆறு நிறுவனங்களுடன் 900 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீட்டுத் திட்டங்களுக்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டு உள்ளது.
- இது சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் சுமார் 4,100 பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கும்.
- இந்த நிறுவனங்களில் Nokia, PayPal, Microchip, Infinx மற்றும் பல அடங்கும்.




## பள்ளிக் கல்வித் துறையின் சாதனைகள்




- ❖ மத்தியக் கல்வி அமைச்சகமானது, சமீபத்தில் தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை கட்டமைப்பு (NIRF) அறிக்கையினை வெளியிட்டது.
- ❖ நாடு முழுவதும் உள்ள 926 கல்லூரிகளில் 165 கல்லூரிகள் தமிழ்நாடு மாறிலத்தில் அமைந்துள்ளன.
- ❖ பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 614 அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வதற்கான முயற்சிகள் ஆனது 2022 ஆம் ஆண்டு முதல் மொத்தம் 1,086 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டன.

- அரசுப் பள்ளிகளில் மொத்தம் 394 கோடி ரூபாய் செலவில் 8,200 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
- 2021-22 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு முழுவதும் 28,700 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் திறன் மிகு வசதிகள் கொண்ட வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினால் சுமார் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

## இறப்பு பணிக்கொடை அதிகரிப்பு

- தமிழ்நாடு அரசு ஆனது சமீபத்தில் இறப்பு மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான அதிகபட்ச வரம்பை (DCRG என அறியப்படுவது) 20 லட்சம் ரூபாயில் இருந்து 25 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- இந்தத் திருத்தம் ஆனது இந்த ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது.
- இது ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப உள்ளது.
- இந்திய அரசானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் அதற்குப் பின்னோக்கியத் தேதிகளிலும் செல்லுபடியாகும் வகையில் 25% என்ற ஒரு அளவினை நடைமுறைக்கு கொண்டு வந்தது.
- எவ்வாறாயினும், ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் 84,000 ரூபாய் அடிப்படை ஊதியம் பெறுபவர்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் அல்லது இறப்பு பணிக் கொடை கிடைக்கும்.
- பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் பெரும்பாலான ஊழியர்கள் இந்த உயர்வைப் பெறத் தகுதி பெற மாட்டார்கள்.
- ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை ஆகியவை தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 மற்றும் பணிக்கொடைச் சட்டம், 1972 எனப்படுகின்ற இரண்டு வெவ்வேறுச் சட்டங்கள் மற்றும் விதிகள் மூலம் கையாளப்படுகிறது.

**GRATUITY CALCULATION FOR VARIOUS CATEGORIES**

**For employees covered under the Gratuity Act:**

- Formula for calculation: Gratuity = (n x b x 15) / 26
  - n = Tenure of service completed in the company
  - b = Last drawn basic salary + dearness allowance
- Example:
  - If you have worked for XYZ company for 15 years
  - Last drawn basic salary with dearness allowance: ₹30,000
  - Gratuity amount = (15 x 30,000 x 15) / 26 = ₹259,615

**For employees not covered under the Gratuity Act**


- Formula for calculation: Gratuity = (15 x your last drawn salary x the working tenure) / 30
- Example:
  - Basic salary: ₹30,000
  - Continuous service: 7 years
  - Gratuity amount = (15 x 30,000 x 7) / 30 = ₹105,000

## நீலகிரி வரையாடுகளுக்கு ரேடியோ கழுத்துப் பட்டை



- தமிழ்நாடு வனத்துறையானது ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் ஒரு ஆய்வு நோக்கத்திற்காக நீலகிரி வரையாட்டிற்கு ஒரு கண்காணிப்புக் கருவியைப் பொருத்தி உள்ளது.
- முன்னதாக, முகூர்த்தி தேசியப் பூங்காவில் நீலகிரி வரையாட்டிற்கு ரேடியோ கழுத்துப் பட்டை பொருத்தப்பட்டது.
- புவியிடங்காட்டி அமைப்புடன் கூடிய (GPS) அந்தக் கண்காணிப்புச் சாதனம் ஆனது சமிஞ்ஞைகளை வெளியிட்டு, ஒவ்வொரு 12 மணி நேரத்திற்கும் ரேடியோ கழுத்துப் பட்டை பொருத்தப்பட்ட அந்த விலங்கு இருக்கும் இடத்தைக் காட்டுகிறது.
- இந்தச் சாதனத்தினால் இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்த அதிர்வெண்ணில் சமிஞ்ஞைகளை உருவாக்க முடியும்.
- நீலகிரி வரையாடு வளங்காப்புத் திட்டத்தின் ஒன்பது கூறுகளில் ரேடியோ கழுத்துப் பட்டை பொருத்துதல் மற்றும் கண்காணிப்பும் ஒன்றாகும்.
- இந்தக் கண்காணிப்பு சாதனம் மூலம் இனங்களைக் கண்காணிக்கும் செயல் முறை ஆனது திட்டக் குழுவிற்கு அவற்றின் வாழ்விட வரம்பு மற்றும் இன்ன பிற நடத்தை முறைகளைப் புரிந்து கொள்ள உதவும்.

## 2035 ஆம் ஆண்டில் 1 GT $CO_2$ குறைப்பு




- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, 2035 ஆம் ஆண்டில் 1 ஜிகா டன் அளவிற்கும் மேலான ஒட்டுமொத்த $CO_2$ உமிழ்வை நன்கு குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ள ஒரு ஆராய்ச்சிக் குழுவை நிறுவியுள்ளது.

- குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட ஆற்றல் மாற்றப் பாதைகளில் இந்தியத் தொழில் துறைகளுக்கு மதிப்புமிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உதவிகளை வழங்குவதன் மூலம் இந்தியாவின் நிகரப் பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு மீதான இலக்கினை நோக்கியப் பயணத்திற்கு ஒரு முக்கியப் பெரும் பங்களிப்பை வழங்குவதை இந்தக் கூட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசின் 'சிறந்த நிறுவனங்கள்' என்ற முன்னெடுப்பின் ஒரு நிதியுதவியுடன், சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் இந்த ஆராய்ச்சிக் குழு நிறுவப் பட்டது.

## சூரிய ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வு

- தமிழ்நாட்டின் சூரிய ஆற்றல் உற்பத்தி மற்றும் நுகர்வு ஆனது சமீபத்தில் ஒரு புதிய உச்சத்தை எட்டியது.
- சூரிய ஆற்றல் உற்பத்தியானது, 6,090 மெகாவாட்டைத் தொட்டது என்ற நிலையில். செப்டம்பர் 07 ஆம் தேதியன்று பதிவான 5,985 மெகாவாட் அளவினை இது விஞ்சியது.
- சூரிய ஆற்றல் நுகர்வு ஆனது 45.47 மில்லியன் அலகுகளை எட்டியது என்ற நிலையில் இது செப்டம்பர் 02 ஆம் தேதியன்று பதிவான சுமார் 43.70 மில்லியன் அலகுகள் என்ற முந்தைய அதிகபட்ச பதிவினை விஞ்சியுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது 7,800 மெகாவாட்டிற்கு மேலான நிறுவப்பட்ட சூரிய ஆற்றல் உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இதுவரையில், மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சூரிய மின்னாற்றல் உற்பத்தி 521.73 மில்லியன் அலகாக இருந்தது.
- மாநிலத்தின் தற்போதைய உச்ச கட்ட மின் தேவை சுமார் 18,115 மெகாவாட் மற்றும் தினசரி நுகர்வு சுமார் 400 மில்லியன் அலகுகள் ஆகும்.
- 2024-25 ஆம் ஆண்டில் இதுவரையில் பதிவான அதிகபட்ச மின் தேவை 20,830 மெகா வாட் ஆகும்.
- அதிகபட்ச தினசரி நுகர்வு 454.320 மில்லியன் அலகுகள் ஆகும்.



## LEZ பற்றிய மாநில திட்டக்குழு அறிக்கை

- தமிழ்நாடு மாநில அரசின் திட்டக்குழுவானது 'குறைந்த உமிழ்வு மண்டலம் (LEZ) – சென்னைக்கான ஒரு செயற்கருவித் தொகுப்பு' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இது மிகவும் விரைவுபடுத்தப்பட்ட பருவநிலை மாற்றங்களுக்கான ஐக்கியப் பேரரசு கூட்டாண்மை (UK PACT) திட்டத்தின் மூலம் சென்னையில் உள்ள பிரித்தானிய துணை உயர் ஆணையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- LEZ என்பது வாகன உமிழ்வுத் தரநிலைகள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்காத வாகனங்களுக்கு அபராதக் கட்டணம் விதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அதிக மாசுபடுத்தும் வாகனங்களின் பயன்பாடு கட்டுப்படுத்தப்படும் ஒரு பகுதியாகும்.
- பொது சுகாதாரத்தை நன்கு மேம்படுத்துவதற்கும் சட்ட வரம்பு மதிப்புகளுக்கு அவை இணங்குவதற்கும் சுற்றுப்புற மாசுச் செறிவுகளைக் குறைப்பதே இந்த மண்டலத்தின் முதன்மை நோக்கமாகும்.
- சென்னை மாநகரானது சுமார் 9 மில்லியன் மக்கள் தொகையுடன் இந்திய நாட்டின் நான்காவது பெரிய நகரமாக உள்ளது.
- இந்த நகரம் ஆனது சில புறநகரப் பகுதிகளில் வருடாந்திர மக்கள் தொகை சுமார் 50% அதிகரிப்புடன் வேகமாக விரிவடைந்து வருகிறது.



Green goals


Some of the key highlights of the T.N. State Planning Commission's report, 'Low Emission Zoning – A Toolkit for Chennai'

- Low-Emission Zone (LEZ) is an area where use of more polluting vehicles is restricted by way of having in place vehicle emission standards and levying charges for non-compliance
- Implementing an LEZ is usually the most cost-effective and efficient way to reduce emissions from the most polluting vehicles in areas having a high population density
- Chennai is a rapidly growing city, and action needs to be taken to mitigate air pollution
- In the short-term, in Chennai, promotion and development of alternatives to personal transport should be explored
- A long-term victory would be to introduce LEZs once alternative transport modes become efficient and reliable

## சென்னையின் காற்று மாசுபாடு

- 'ஸ்பேர் தி ஏர் 2.0' என்ற தலைப்பிலான அறிக்கை, காற்றின் தரத்தை உலக சுகாதார அமைப்பின் (WHO) வழிகாட்டுதல்களுடன் ஒப்பிட்டுள்ளது.
- ஆண்டுச் சராசரியான PM 2.5 அளவு சென்னை உட்பட ஆறு நகரங்களில் ஆறு முதல் ஏழு மடங்கு அதிகமாக உள்ளது.
- சென்னையில், மாதாந்திரச்' சராசரிப் போக்கானது, PM2.5 அளவுகள் நான்கு முதல் ஏழு மடங்கு அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடுகிறது.
- PM10 அளவுகள் WHO அமைப்பின் ஆண்டு வழிகாட்டுதல்களை விட ஆறு மடங்கு மிக அதிகமாக உள்ளது.

- PM10க்கான வருடாந்திரச் சராசரி NAAQS தரநிலை 60 μg/m³ ஆகும், அதே சமயம் WHO அமைப்பின் தரநிலை 15 μg/m³ ஆகும்.
- PM2.5 அளவின் WHO தரநிலையான 5 μg/m³ உடன் ஒப்பிடும்போது, NAAQS தரநிலை 40 μg/m³ ஆகும்.




## சமூக நீதி தினம் 2024

- தமிழகத்தில், சமூக சீர்திருத்தவாதி பெரியார் அவர்களின் பிறந்தநாளானது ஒவ்வோர் ஆண்டும் 'சமூக நீதி நாளாக' அனுசரிக்கப்படுகிறது.
- திராவிடர் கழக நிறுவனர் 'பெரியார்' ஈ.வெ. இராமசாமி அவர்களின் 146வது பிறந்த நாளானது சமீபத்தில் அனுசரிக்கப்பட்டது.
- சமூகச் சமத்துவமின்மையை நிலை நிறுத்தும் வகையில் அடக்குமுறை மிக்க பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் தகர்க்க முயன்ற திராவிட இயக்கத்திற்கு பெரியார் தலைமை தாங்கினார்.
- இவர் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிடர் கழகம் என்ற சமூகப் பண்பாட்டு அமைப்பினையும் நிறுவியவர் ஆவார்.
- குடியரசு என்ற வார இதழ் மூலம் பெரியார் அவர்கள் அரசியல் மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராக குரல் எழுப்பினார்.

## முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம் 2024

- முதல்வரின் புத்தாய்வு மாணவர் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் 50 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்க மாநில அரசு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.
- இந்தத் திட்டம் அவர்களின் பிஎச்.டி.க்கான ஆராய்ச்சிக்கு துணைபுரியும்.
- Ph.D (முனைவர்) பட்டம் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மட்டுமே இந்தப் பயனைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

- இதற்கு எவ்வித வருமான வரம்பும் இல்லை என்பதோடு மேலும் விண்ணப்பதாரர்கள் நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ Ph.D பயில்பவர்களாக இருக்க வேண்டும்.

## தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஜான் மார்ஷலின் சிலை

- சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், பிரிட்டிஷ் தொல்பொருள் ஆய்வாளர் ஜான் மார்ஷலின் உருவச் சிலையை தமிழக அரசு நிறுவவுள்ளது.
- 1902 முதல் 1928 ஆம் ஆண்டு வரை இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) தலைமை இயக்குநராக மார்ஷல் பணியாற்றினார்.
- இந்தக் காலத்தில் சிந்து சமவெளி நாகரிகத்தை உள்ளடக்கிய இரண்டு முக்கிய நகரங்களான ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ ஆகியவை கண்டுபிடிக்கப் பட்டன.
- 100 ஆண்டுகளுக்கு முன்பு, 1924 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று, சர் ஜான் மார்ஷல் சிந்து சமவெளி நாகரிகத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்தார்.

## தமிழகத்தில் உடல் உறுப்பு தான தினம் - செப்டம்பர் 23

- 2008 ஆம் ஆண்டில், 15 வயதான A.P.ஹிதேந்திரனின் மரணத்திற்குப் பிறகு தமிழகத்தில் செப்டம்பர் 23 ஆம் தேதியை உறுப்பு தான தினமாக அனுசரிக்கும் ஒரு வழக்கமானது தொடங்கியது.
- 2008 ஆம் ஆண்டில் உயிரிழந்த பின்பான உடல் உறுப்பு தான திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து, மாநிலத்தில் 1,998 கொடையாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- சுமார் 892 இதயங்கள், 912 நுரையீரல்கள், 1,794 கல்லீரல், 3,544 சிறுநீரகங்கள், 42 கணையங்கள், 15 சிறுகுடல்கள் மற்றும் ஏழு கைகள் உட்பட மொத்தம் 7,207 முக்கிய உறுப்புகள் இதுவரையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப் பட்டு உள்ளன.
- மொத்தம் 4,204 திசுக்கள் பெறப்பட்டு (மீட்டெடுக்கப்பட்டு) பயன்படுத்தப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று உயிரிழந்த பின்பு உறுப்பு தானம் செய்தவர்களின் உடல்களுக்கு அரசு மரியாதை அளிக்கப்படும் என்று முதல்வர் அறிவித்தார்.
- அப்போதிலிருந்து, 1,461 உறுப்புகளைத் தானம் செய்த 272 நபர்களின் உடல்களுக்கு அரசு மரியாதை அளிக்கப்பட்டது.
- கடந்த 16 ஆண்டுகளில் 1,988 நபர்களிடமிருந்து 7,200 உறுப்புகள் பெறப்பட்டுள்ளது.

## காவிரி நீர்ப் பகிர்வு 2024


- ஜூன் 01 ஆம் தேதி தொடங்கிய நடப்பு நீர் ஆண்டில் தமிழகத்தின் காவிரி நீர்ப் பகிர்வு 200 TMC (ஆயிரம் மில்லியன் கன அடி) அளவைத் தாண்டியுள்ளது.
- செப்டம்பர் 23 ஆம் தேதியின்படி, 115 TMC ஆக நிர்ணயிக்கப்பட்ட அளவோடு ஒப்பிடச் செய்கையில், ஒட்டு மொத்த நீர்ப் பகிர்வு சுமார் 201 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) ஆகும்.

- ❖ கடந்த நீர் ஆண்டில் தமிழக மாநிலம் சுமார் 86 TMC தண்ணீரை அதிகமாகப் பெற்று உள்ளது.




## மலேரியா ஒழிப்பு இலக்கு

- ❖ 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு பாதிப்புகள் கூட பதிவாகாத நிலையில், இந்த மாநிலத்தில் உள்ள 33 மாவட்டங்களில் மலேரியாவை ஒழிப்பதில் தமிழ்நாடு ஒரு படி முன்னிலையில் உள்ளது.
- ❖ 2014 ஆம் ஆண்டில் இருந்து தேசியக் கட்டமைப்பை படிப்படியாக ஏற்று, 2030 ஆம் ஆண்டிற்குள் மலேரியாவை ஒழிக்க மாநில அரசு செயல்பட்டு வருகிறது.
- ❖ 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை இந்த நோயினால் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.
- ❖ 2020 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 891 ஆக இருந்த பாதிப்பு எண்ணிக்கையானது ஓராண்டில் படிப்படியாகக் குறைந்து வருகிறது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் (ஆகஸ்ட் வரை) பாதிப்பு எண்ணிக்கை 233 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் 80% ஆக இருந்த மாநிலத்தின் மொத்த மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கையில் சென்னை மாநகராட்சியின் பங்கு ஆனது 2023 ஆம் ஆண்டில் 45% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு மேலும் 2024 ஆம் ஆண்டில் இதுவரையில் 40% ஆக பதிவாகியுள்ளது.
- ❖ 1990 முதல் 1998 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் சுமார் 50,000 பாதிப்புகள் பதிவாகின.



# தேசியச் செய்திகள்

## விக்யான் தாரா திட்டம்

- விக்யான் தாரா என்ற புதிய முன்னெடுப்பின் கீழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) நடத்தும் பல அறிவியல் மேம்பாட்டுத் திட்டங்களை ஒன்றிணைக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- இளம் திறமையாளர்களை அறிவியல் ஆராய்ச்சியினை நோக்கி ஈர்க்கும் வகையில் செயல்படும் INSPIRE திட்டம் உள்ளிட்ட திட்டங்களை இது ஒருங்கிணைக்கிறது.
- விக்யான் தாரா மூன்று பரந்த கூறுகளைக் கொண்டுள்ளது.
    - அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவன மற்றும் மனித திறன் மேம்பாடு
    - ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு; மற்றும்
    - புத்தாக்கம், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் செயலாக்குதல்.
- உயர் செயல்திறன் கொண்ட உயிரி உற்பத்தியை மிக நன்கு ஊக்குவிக்கும் வகையில் பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைக்கான உயிரி தொழில்நுட்பக் கொள்கைக்கு (Bio E3) அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- Bio E3 கொள்கையானது, மிகவும் நிலையான, புதுமையான மற்றும் உலகளாவியச் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையிலான எதிர்காலத்தினை ஊக்குவிக்கும்.





## இந்தியாவின் கிராமப்புறங்களில் சுகாதார நிலை குறித்த அறிக்கை 2024

- இந்தியாவின் கிராமப்புறங்களை மாற்றியமைத்தல் எனப்படும் அரசு சாரா அமைப்பு (NGO) மற்றும் மேம்பாட்டுத் தகவலளிப்புப் பிரிவு ஆகியவை இணைந்து இந்த கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளன.
- நாட்டில் உள்ள கிராமப்புறக் குடும்பங்களில் சுமார் பாதி குடும்பங்கள் மட்டுமே அரசு மருத்துவக் காப்பீட்டினைக் கொண்டுள்ளன.

- 34% பேர் எந்தவிதமான சுகாதாரக் காப்பீட்டினைக் கொண்டிருக்கவில்லை. மேலும் கணக்கெடுக்கப் பட்டவர்களில் சுமார் 61% பேர் ஆயுள் காப்பீட்டினைக் கொண்டிருக்க வில்லை.
- இந்தக் கணக்கெடுப்பில் 12.2% குடும்பங்கள் மட்டுமே பிரதான் மந்திரி ஜன் ஔஷதி கேந்திராக்களில் இருந்து மானிய விலையில் மருந்துகளைப் பெறுகின்ற அதே நேரம் 21% பேருக்கு எளிதில் அணுகக் கூடிய தொலைவில் மருந்துக் கடைகள் இல்லை.
- ஐந்தில் ஒருவர் தங்கள் கிராமங்களில் வடிகால் அமைப்பு இல்லை என தெரிவித்து உள்ளனர்.
- 23% பேர் மட்டுமே தங்கள் கிராமங்களில் மூடப்பட்ட வடிகால் வலையமைப்பைக் கொண்டிருந்தனர்.
- 43% வீடுகளில் கழிவுகளை அகற்றுவதற்கான எந்த அறிவியல்பூர்வச் செயல்முறையும் இல்லை என்பதால் அவர்கள் தங்கள் கழிவுகளைக் கிடைக்கும் எல்லா இடங்களிலும் கொட்டுகின்ற நிலையில் உள்ளனர்.
- 11% குடும்பங்கள் மட்டுமே உலர் கழிவுகளை எரித்து, தங்கள் ஈரக் கழிவுகளை உரமாக மாற்றுகின்றன.
- 28% குடும்பங்கள் உள்ளாட்சிப் பஞ்சாயத்து அமைப்புகள் ஆனது வீட்டுக் கழிவுகளை சேகரிக்கத் திட்டங்களை வகுத்துள்ளதாக தெரிவித்துள்ளன.
- குடும்ப உறுப்பினர் சார்ந்த பராமரிப்பாளர்கள் இல்லாத நிலையில் 10% குடும்பங்கள் மட்டுமே அண்டை வீடுகளின் ஆதரவைச் சார்ந்துள்ளன.
- கர்ப்பிணிப் பெண்களுக்கான முக்கியப் பராமரிப்பாளர்களில் கணவர்கள் (62.7%), மாமியார் (50%) மற்றும் தாய்மார்கள் (36.4%) ஆகியோர் அடங்குவர்.

Figure 8: Type of healthcare facility located within village or panchayat




## போலந்திலிருந்து அவுரிநெல்லி இறக்குமதி

- போலந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எதிர் ஆக்ஸிகரணிகள் நிறைந்த பழங்கள் அந்நாட்டின் தேசியத் தாவரப் பாதுகாப்பு அமைப்பில் (NPPO) பதிவு செய்யப் பட்ட பழத்தோட்டங்களில் இருந்து பெறப்பட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்தி உள்ளது.


- சான்றிதழில் அகாலிடஸ் தடுப்பூசி (அவுரிநெல்லி மொட்டுப் பூச்சிகள்) மற்றும் சூடோமோனாஸ் விரிடிஃப்லாவா (மலர் கருகல் நோய்) ஆகியவற்றில் இருந்து விடுபட்டுள்ளதை உறுதிப்படுத்துகின்ற அறிவிப்பு அதில் இடம் பெற்றிக்க வேண்டும்.
- NPPO என்பது பூச்சிகளின் பெரும் பரவலைத் தடுப்பதற்காகவும் வேளாண்மையினைப் பாதுகாப்பதற்காகவும் செயல்படும் ஒரு தேசிய அளவிலான நிறுவனமாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் கீழ் உள்ள சர்வதேச தாவரப் பாதுகாப்பு உடன்படிக்கையில் (IPPC) இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- இந்தியாவில் அவுரிநெல்லி சந்தை தற்போது சுமார் 60 மில்லியன் டாலர் மதிப்பினைக் கொண்டுள்ளது.




## எழுத்தறிவு மற்றும் முழு அளவிலான எழுத்தறிவு வரையறை

- 2022-23 ஆம் நிதியாண்டு முதல் 2026-27 ஆம் நிதியாண்டு வரையிலான ஐந்து ஆண்டு கால கட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் (NILP) செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டம் ஆனது 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 5.00 கோடி எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு கல்வி அளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இதற்காக, கல்வி அமைச்சகம் (MoE) ஆனது 'எழுத்தறிவு' மற்றும் 'முழு அளவிலான எழுத்தறிவு' அடைவதன் அர்த்தம் யாது என்பதை வரையறுத்துள்ளது.
- கல்வியறிவு (எழுத்தறிவு) என்பது படிக்க, எழுத மற்றும் புரிந்து கொண்டு கணக்கிடும் திறன் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
- இதில் எண்ணிம கல்வியறிவு, நிதியியல் கல்வியறிவு போன்ற முக்கியமான வாழ்க்கைத் திறன்களை அடையாளம் கண்டு, புரிந்து கொள்வது, விளக்குவது மற்றும் உருவாக்குவது ஆகியவை அடங்கும்.
- முழு அளவிலான கல்வியறிவு என்பது 100% கல்வியறிவிற்குச் சமமானதாக கருதப்பட வேண்டும்.
- மாநிலம்/ஒன்றியப் பிரதேசத்தில் 95% கல்வியறிவு நிலையினை அடைவது, முழு கல்வி அறிவிற்குச் சமமாக கருதப்படலாம்.

- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 25.76 கோடி பேர் எழுத்தறிவு இல்லாத நபர்களாக உள்ளதை அடுத்து, இந்தியா குறிப்பிடத்தக்க எழுத்தறிவு சவாலை எதிர்கொள்கிறது.
- இதில் 9.08 கோடி ஆண்களும் 16.68 கோடி பெண்களும் அடங்குவர்.
- சாக்சார் பாரத் திட்டம் ஆனது 2009-10 மற்றும் 2017-18 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 7.64 கோடி நபர்களைக் கல்வியறிவு பெற்றவர்கள் என சான்றளித்துள்ளது.
- இந்தியாவில் மேலும் ஏறத்தாழ சுமார் 18.12 கோடி இளம் பருவத்தினர் கல்வியறிவு இல்லாதவர்களாகவே உள்ளனர்.




## பயன் மிகு பொதுக் குறை தீர்ப்பிற்கான வழிகாட்டுதல்கள்

- பொது மக்களின் குறைகளை மிகச் சரியான நேரத்தில் கையாள்வதற்கான விரிவான வழிகாட்டுதல்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
- ஒருங்கிணைக்கப்பட்ட பயனர்களின் பயன்பாட்டிற்கு என்று உகந்த CPGRAMS www.pgportal.gov.in என்ற இணைய தளத்தில் குடிமக்கள் தங்கள் குறைகளை தாக்கல் செய்யலாம்.
- பயன் மிகு முறையில் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான காலக்கெடு சுமார் 30 நாட்களில் இருந்து 21 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.
- குறைகளைத் தீர்ப்பதற்கு அதிக நேரம் எடுக்கும் சூழ்நிலைகளில், குடிமக்களுக்கு இடைக்கால (தற்காலிக) தீர்வு அளிக்கப்படும்.

## GREAT திட்டம்

- 8வது அதிகாரமளிக்கப்பட்ட திட்டக் குழு (EPC) ஆனது, ஒவ்வொன்றிற்கும் தோராயமாக 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான மானியத்துடன் 4 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 'தொழில்நுட்ப ஜவுளித் துறையில் ஈடுபாடு மிக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கான மானியம்' (GREAT) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இது தொழில்நுட்ப ஜவுளித் துறைப் படிப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக 5 கல்வி நிறுவனங்களுக்கு தோராயமாக 20 கோடி ரூபாய் மானியத்திற்கும் ஒப்புதல் அளித்து உள்ளது.
- இது 'தொழில்நுட்ப ஜவுளித்துறையில் கல்வி நிறுவனங்களை இயக்குவதற்கான பொது வழிகாட்டுதல்களின்' கீழ் உருவாக்கப்பட்டது.
- அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில் நிறுவனத் திட்டங்கள் தொகுப்புகளானது, நிலையான ஜவுளி மற்றும் திறன் மிகு (மின்னணு சார்ந்த அம்சங்கள் கொண்ட) ஜவுளி அமைப்புகள் ஆகியவற்றின் முக்கிய மூலோபாயப் பகுதிகளில் மிகப் பெரும் கவனம் செலுத்துகின்றன.




## UDAN திட்டம் 5.4

- பொது விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) ஆனது உதே தேஷ் கா ஆம் நாக்ரிக் (UDAN) திட்டத்தின் 5.4 என்ற பதிப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- முன்னதாக ரத்து செய்யப்பட்ட வழித்தடங்களுக்கான ஏலங்கள் புதிய ஏலங்களாக UDAN 5.4 திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
- இது மேலும் நாட்டில் உள்ள விமான சேவை வழங்கப்படாத மற்றும் குறைவான அளவில் சேவை வழங்கப்படும் வழித்தடங்களில் விமான சேவை இணைப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- UDAN திட்டம் தொலைதூர அல்லது விமான சேவை வழங்கப்படாதப் பகுதிகளுக்கு விமான சேவை இணைப்பை மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- கூடுதலாக, MoCA அமைச்சகம் இந்தியாவில் கடல் சார் விமான நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களையும் அறிமுகப் படுத்தியுள்ளது.




## 10 மாநிலங்களில் 12 தொழில்துறை திறன்மிகு நகரங்கள்

- தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்தின் (NICDP) கீழ் 12 தொழில்துறை திறன்மிகு நகரங்களை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டம் 10 மாநிலங்களில் பரவியுள்ள இது ஆறு முக்கிய வழித்தடங்களில் மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டுள்ளது.
- NICDPஆனது குறிப்பிடத்தக்க அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு, மேலும் இந்த திட்டமிடப்பட்ட தொழில்மயமாக்கல் மூலம் 1 மில்லியன் நேரடி வேலைகள் மற்றும் 3 மில்லியன் வரையிலான மறைமுக வேலைகள் உருவாக்கப்படும்.


**THE PROJECTS**

**5 along Amritsar-Kolkata industrial corridor**
- Rajpura-Patiala (Punjab)
- Khurpia (Uttarakhand)
- Agra (Uttar Pradesh)
- Prayagraj (Uttar Pradesh)
- Gaya (Bihar)


**2 along Delhi-Mumbai industrial corridor**
- Jodhpur-Pali (Rajasthan)
- Dighi (Maharashtra)

**1 each along industrial corridors of Vizag-Chennai; Hyderabad-Bengaluru; Hyderabad-Nagpur; and Chennai-Bengaluru**
- Kopparthy (Andhra Pradesh)
- Orvakal (Andhra Pradesh)
- Zaheerabad (Telangana)
- Palakkad (Kerala)


**The name of one city was not revealed as the 'Model Code of Conduct' is in force in poll-bound states**

## தேசிய மருத்துவப் பதிவேடு தளம் 2024

- சுகாதாரத் துறை அமைச்சகம் சமீபத்தில் தேசிய மருத்துவப் பதிவேடு (NMR) தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏற்கனவே இந்திய மருத்துவப் பதிவேட்டில் (IMR) பதிவு செய்துள்ள அனைத்து வித இள நிலை மருத்துவர்களும் மீண்டும் NMR தளத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- இந்தியாவில் உள்ள அனைத்துப் பதிவு செய்த அலோபதி மருத்துவர்களுக்கும் NMR ஒரு விரிவான சிறந்த தரவுத் தளமாக இருக்கும்.
- NMR தளத்தின் தனித்தன்மை என்னவென்றால், இது மருத்துவர்களின் ஆதார் ஐடியுடன் இணைக்கப் பட்டுள்ளதால் இது தனி நபரின் நம்பகத்தன்மையை உறுதி செய்கிறது.
- தேசிய மருத்துவக் குழுமத்தின் ஒரு சரிபார்ப்புக்குப் பிறகு, ஒரு தனிப்பட்ட NMR ஐடி வழங்கப் படும்.




## PMJDY திட்டத்தின் 10 ஆண்டுகள்





- 2024 ஆம் ஆண்டு பிரதான் மந்திரி ஜன்-தன் யோஜனாவின் (PMJDY) பத்தாவது நிறைவு ஆண்டைக் குறிக்கிறது.

- இத்திட்டத்தின் கீழ், எவரும் அடிப்படை சேமிப்பு வங்கி வைப்பு (BSBD) கணக்கை எந்த வங்கிக் கிளையிலும் அல்லது வணிக நிருபர் (வங்கி மித்ரா) கடையிலும் திறக்கலாம்.
- 2024 ஆகஸ்ட் 14 நிலவரப்படி, சுமார் 53.14 கோடி வங்கி கணக்கு பயனாளிகள் உள்ளனர்.
- இந்தக் கணக்குகளில் 66.6% கிராமப்புற மற்றும் வளரும் நகர்ப்புறங்களில் உள்ளன என்பதோடு அனைத்துக் கணக்குகளிலும் 55.6% அளவைப் பெண்கள் கொண்டுள்ளனர்.
- இந்தக் கணக்குகள் இப்போது மொத்தம் ரூ.2.31 லட்சம் கோடி வைப்புத்தொகைகளை கொண்டுள்ள நிலையில் இது கடந்த எட்டு ஆண்டுகளில் 15 மடங்கு உயர்வைப் பிரதிபலிக்கிறது.
- சுமார் 8.4% கணக்குகள் சுழிய இருப்புகளையும் மற்றும் தோராயமாக 20% கணக்குகள் செயலற்ற நிலையிலும் உள்ளன.

## SPICED திட்டம்

- இந்திய மசாலா வாரியம் இந்த மாற்றத்திற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது மசாலா மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட மசாலா பொருட்களின் ஏற்றுமதியை மிக கணிசமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஏலக்காயின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான மசாலாப் பொருட்களின் அறுவடைக்குப் பிந்தையத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் இது கவனம் செலுத்துகிறது.
- SPICED என்பது "ஏற்றுமதி மேம்பாட்டுக்கான முற்போக்கான, புதுமையான மற்றும் ஓர் கூட்டுத் தலையீடுகள் மூலம் மசாலா துறையில் மிக நிலைத்தன்மை" என்பதைக் குறிக்கிறது.



The Spices Board of India under the Ministry of Commerce and Industry (MoCI) has launched the SPICED (Sustainability in Spice Sector through Progressive, Innovative, and Collaborative Interventions for Export Development) scheme to improve the spices sector. The scheme is launched with an outlay of ₹422.3 crore.

National

SPICED Scheme by Spices Board

## பாரத சுழிய உமிழ்வு சரக்குகள் இடமாற்றக் கொள்கை 2024

- இந்திய அரசானது "பாரத சுழிய உமிழ்வு சரக்குந்து பொருள் இடமாற்றக் கொள்கை ஆலோசனை" ஆவணத்தை அறிமுகப்படுத்தியது.
- இதன் நோக்கம் எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் கார்பன் நடு நிலைத்தன்மை ஆகியவற்றைத் தேசிய இலக்குகளுக்கு மிக ஒத்த அளவில், சுழிய உமிழ்வு சரக்கு இடம்

பெயர்வை ஊக்குவிப்பதன் மூலம் இந்தியாவை நிலையான எதிர்காலத்தை நோக்கி வழி நடத்துவதாகும்.

- ❖ இந்த மின்சாரம் அல்லது ஹைட்ரஜன் போன்ற தூய்மையான ஆற்றல் மூலங்களால் இயக்கப்படும் வாகனங்களானது எவ்வித உமிழ்வையும் உருவாக்காது.
- ❖ டீசல் சரக்குந்துகளுடன் ஒப்பிடும் போது இவை கார்பன் வெளியேற்றத்தை 44% முதல் 79% வரை குறைக்கிறது.

## SHe-Box இணைய தளம்




- ❖ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆனது SHe-Box இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இது பணியிடங்களில் நிகழும் பாலியல் துன்புறுத்தலைச் சமாளிப்பது மற்றும் இந்தியா முழுவதும் பெண்களுக்குப் பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது அரசு மற்றும் தனியார் துறைகளில் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்கள் குறித்து அறிக்கையளித்தல் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்தும்.
- ❖ பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்களைக் கையாளும் உள்புறக் குழுக்கள் (IC) மற்றும் உள்ளூர் குழுக்கள் (LC) பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான ஒரு முக்கிய மையமாக இந்த இணைய தளம் செயல்படுகிறது.

## வாகன உடைப்புக் கொள்கை 2024

- ❖ வணிக மற்றும் பயணியர் வாகன உற்பத்தி நிறுவனங்கள் ஆனது, பழைய வாகனங்களை அகற்றுவதற்குப் பதிலாக புதிய வாகனங்களை வாங்குவதற்கு செல்லுபடியாகும் வைப்புச் சான்றிதழுடன் கூடிய தள்ளுபடியை வழங்க உள்ளன.
- ❖ இந்தத் திட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் செல்லுபடி ஆகும் என்பதோடு இது மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை செயல்பாட்டில் இருக்கும்.

- நாட்டில் 1,000 வாகன உடைப்பு மையங்கள் மற்றும் 400 தானியங்கி தர நிர்ணயச் சோதனை மையங்கள் நிறுவப்பட வேண்டும்.
- உத்தரப் பிரதேசமானது தற்போது அதிக எண்ணிக்கையிலான செயல்பாட்டில் உள்ள பதிவு மற்றும் வாகன உடைப்பு (RVSF) மையங்களைக் கொண்ட மாநிலமாக நாட்டில் முன்னணியில் உள்ளது.
- மத்திய அரசானது, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேசிய வாகன உடைப்புக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.
- இது தரமிழந்த மற்றும் மாசுபாடுகளை உண்டாக்கும் வாகனங்களைப் படிப்படியாக அகற்றுவதையும், சுழற்சி முறை பயன்பாடு சார்ந்த பொருளாதாரத்தினை நன்கு மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய கொள்கையின் கீழ், பழைய வாகனங்களை அகற்றிய பிறகு வாங்கப் படும் வாகனங்களுக்கு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேச (UTs) அரசுகள் ஆனது சாலை வரியில் 25 சதவீதம் வரையிலான வரி விலக்கு அளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.
- வாகன உடைப்புக் கொள்கை ஆனது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

## வேளாண் உள்கட்டமைப்பு நிதி 2024

- மத்திய அமைச்சரவையானது, வேளாண் உள்கட்டமைப்பு நிதியின் (AIF) செயற்பரப்பு எல்லையினை விரிவுபடுத்தியுள்ளது.
- 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டம் ஆனது, வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு (FPOs) நிதியுதவி அளித்து அவற்றின் நிதிப் பாதுகாப்பு மற்றும் கடன் வழங்கீட்டுத் தகுதியை (நாணைய நிலைமை) நன்கு மேம்படுத்தும் வகையில் மறு வடிவமைப்பு செய்யப்படும்.
- AIF ஆனது தற்போது மிகவும் அதிக முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இருக்கும் என்றும் நாட்டில் வேளாண் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் என்றும் மத்திய அரசானது கூறியுள்ளது.
- இன்று வரை AIF நிதியின் கீழ் 74,508 திட்டங்களுக்கு 47,575 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## சமையல் எண்ணெய் குறித்த நிதி ஆயோக் அமைப்பின் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, 'ஆத்மநிர்பாரதா' (தன்னிறைவு மிக்க இந்தியா) என்ற இலக்கை நோக்கி சமையல் எண்ணெய் உற்பத்தி வளர்ச்சியை துரிதப்படுத்தச் செய்வதற்கான செயல்பாடுகள் மற்றும் உத்திகள்' என்ற தலைப்பில் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 10 மாநிலங்களில் உள்ள மொத்த நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படும் தரிசு நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியை எண்ணெய் வித்துச் சாகுபடிக்குப் பயன்படுத்துவதன் மூலம் சமையல் எண்ணெய்களின் உற்பத்தியை 1.03 மில்லியன் டன்கள் (MT) அதிகரிக்கலாம் மற்றும் இந்தியா இறக்குமதியினைச் சார்ந்திருக்கும் நிலையினை சுமார் 7.1% வரை குறைக்கலாம்.
- எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் 3.12 மெட்ரிக் டன்கள் வரை அதிகரிக்கலாம் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

- சமையல் எண்ணெய்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க வேண்டி பாமாயில் (செம்பனை எண்ணெய்) எடுப்பதற்காக நாட்டில் செம்பனை சாகுபடியை அதிகரிக்கவும் இந்த அறிக்கை இந்தப் பரிந்துரை செய்துள்ளது.
- மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் ஆளி விதை, எள் மற்றும் கடுகு பயிரிடுவதன் மூலம் சமையல் எண்ணெய் உற்பத்தியை 0.85 மெட்ரிக் டன்னாக அதிகரிக்க முடியும்.
- இதே போல், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை ஆளி விதை, சூரியகாந்தி, குசம்பப்பூ மற்றும் கடுகு ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் 0.62 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் உற்பத்தியினை எட்டும் திறனைக் கொண்டுள்ளன.
- நாட்டில் தனிநபர் சமையல் எண்ணெய் நுகர்வு ஆண்டுக்கு 19.7 கிலோவை எட்டி உள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில், இந்தியா சுமார் 16.5 மெட்ரிக் டன் என்ற அளவில் சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்தது என்ற நிலையில் உள்நாட்டு உற்பத்தியானது நாட்டின் தேவைகளில் 40-45% அளவினை மட்டுமே பூர்த்தி செய்துள்ளது.




## மருந்து சட்டத்தின் 170வது விதி

- 1945 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகளின் 170வது விதி நீக்கப்பட்ட மத்திய அரசின் அறிவிப்பை உச்ச நீதிமன்றம் சமீபத்தில் இடை நிறுத்தியுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விதியானது, AYUSH தயாரிப்புகளின் தவறான விளம்பரங்களைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- 170வது விதியானது நாட்டில் மருந்துகளின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் விற்பனையை மேலாண்மை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது "குறிப்பாக ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி மருந்துகளின் பொருத்தமற்ற விளம்பரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக" உருவாக்கப்பட்டது.
- AYUSH மருந்து உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை அங்கீகாரமின்றியும், மாநில உரிம ஆணையத்தின் தனிப்பட்ட அடையாள எண் இல்லாமலும் விளம்பரப் படுத்துவதை இந்த விதி தடை செய்கிறது.
- அலோபதி மருந்துகளைப் போலவே, AYUSH மருந்து உற்பத்தியாளர்களும் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பிடம் உரிமம் பெற வேண்டும்.

- மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் சட்டத்தின்படி, புதிய அலோபதி மருந்துகளின் ஒப்புதலுக்கான I, II, மற்றும் III கட்ட சோதனைகள், ஒரு மருந்து சந்தைப் படுத்தப் படுவதற்கு முன் நடத்தப்பட வேண்டும்.
- இருப்பினும், AYUSH மருந்துகளுக்கு இத்தகையச் சோதனைகள் அவசியமில்லை.




## NAMAN திட்டம்

- இந்திய இராணுவம் ஆனது NAMAN திட்டத்தின் முதல் கட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது பாதுகாப்புத் துறை சார்ந்த ஓய்வூதியம் பெறுவோர், படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கானப் பிரத்தியேக ஆதரவு மற்றும் சேவைகளை வழங்கச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- NAMAN திட்டத்தின் முதல் கட்டத்தில், இந்தியா முழுவதும் உள்ள முக்கிய இடங்களில் 14 பொதுச் சேவை மையங்கள் நிறுவப் பட்டுள்ளன.
- இதில் புது டெல்லி, ஜலந்தர், லே, டேராடூன், அகமதாபாத், பெங்களூர் மற்றும் பல இடங்கள் அடங்கும்.
- இந்தத் திட்டமானது குறிப்பிட்ட பகுதிகளில் விரிவுபடுத்தப்பட உள்ளது மற்றும் அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் சுமார் 200 மையங்களை நிறுவுவதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.


## இந்திய அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கி (IPPB)

- இந்திய அஞ்சலகப் பண வழங்கீட்டு வங்கியானது செப்டம்பர் 01 ஆம் தேதியன்று அதன் 7வது துவக்க தினத்தைக் கொண்டாடியது.
- இது முதன்முதலில் 2017 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதியன்று ராஞ்சி (ஜார்க்கண்ட்) மற்றும் ராய்ப்பூர் (சத்தீஸ்கர்) ஆகிய இடங்களில் ஒரு சோதனைத் திட்டமாகத் தொடங்கப் பட்டது.
- IPPB ஆனது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- IPPB ஆனது பல்வேறு அரசாங்கத் திட்டங்களின் கீழான பயனாளிகளுக்கு நேரடிப் பலன் பரிமாற்றங்களில் (DBT) 45,000 கோடி ரூபாய்க்கு மேலான பண வழங்கீட்டினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

- இந்திய அஞ்சல் துறையானது கடந்த ஏழு ஆண்டுகளில் 161,000 அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் 1,90,000 அஞ்சல் ஊழியர்களின் விரிவான வலையமைப்பைக் கொண்டுள்ளது.

## விவசாயிகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

- விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகவும் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் மொத்தம் 14,235.30 கோடி ரூபாய் செலவில் ஏழு திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அந்த ஏழு திட்டங்கள் ஆவன:
    - எண்ணிம வேளாண்மை திட்டம்: எண்ணிமப் பொது உள்கட்டமைப்பின் கட்டமைப்பின் அடிப்படையிலானது.
    - உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கான பயிர் அறிவியல்
    - வேளாண் கல்வி, மேலாண்மை மற்றும் சமூக அறிவியலை வலுப்படுத்துதல்
    - நிலையான கால்நடை ஆரோக்கியம் மற்றும் உற்பத்தி
    - தோட்டக்கலையின் நிலையான மேம்பாடு
    - கிருஷி விக்யான் கேந்திராவை வலுப்படுத்துதல்
    - இயற்கை வள மேலாண்மை




## இந்தியாவின் 23வது சட்ட ஆணையம்

- 23வது சட்ட ஆணையத்தின் அமைக்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த ஆணையத்தின் பதவிக் காலம் 2027 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரையில் மூன்று ஆண்டுகள் ஆகும்.
- இந்த ஆணையத்தில் ஒரு முழு நேரத் தலைவர் மற்றும் ஒரு உறுப்பினர்-செயலாளர் உட்பட நான்கு முழுநேர உறுப்பினர்களும் இருப்பர்.

- ❖ இது வழக்கற்றுப் போன மற்றும் ரத்து செய்யக் கூடிய சட்டங்களை அடையாளம் கண்டு, ஏழைகளைப் பாதிக்கும் சட்டங்களை மதிப்பீடு செய்து, எந்தவொரு சட்டத்தின் மீதுமான தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்.
- ❖ 23வது ஆணையம் ஆனது உணவுப் பாதுகாப்பு, வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றில் உலகமயமாக்கலின் தாக்கத்தை ஆராய்ந்து, விளிம்புநிலை மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டு உள்ளது.
- ❖ இந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாக அல்லது "பிற நிலையில் பணியாற்றும் நபர்களாக" இருக்கலாம்.
- ❖ பொதுவாக இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதியே நியமிக்கப் படுவார்.
- ❖ 22வது சட்ட ஆணையத்தின் தலைவராக கர்நாடக உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி இருந்தார்.
- ❖ 22வது சட்ட ஆணையத்தின் பதவிக்காலம் ஆனது ஆகஸ்ட் 31 ஆம் தேதியுடன் நிறைவு அடைந்தது.




## eShram இணைய தளப் பதிவு

- ❖ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் (MoLE) ஆனது, 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று eShram இணைய தளத்தினைத் தொடங்கியது.
- ❖ தொடங்கப்பட்ட மூன்று ஆண்டுகளில், 30 கோடிக்கும் அதிகமான அமைப்புசாராத் தொழிலாளர்கள் இத்தளத்தில் பதிவு செய்துள்ளனர்.
- ❖ இந்தத் தளம் ஆனது, நாட்டின் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான "ஒற்றை தீர்வு அமைப்பாக" தொடங்கப்பட்டது.
- ❖ அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக பல்வேறு அமைச்சகங்கள் / துறைகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அவர்கள் அணுகச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு அரசின் பல்வேறு திட்டங்கள் எந்த தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கான ஒரு வசதியாக இது செயல்படுகிறது.




## எண்ணிம வேளாண் திட்டம்




- வேளாண் துறையில் எண்ணிமப் பொது உள்கட்டமைப்பை (DPI) உருவாக்குவதற்காக 2,817 கோடி ரூபாய் செலவிலான எண்ணிம வேளாண் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- வேளாண் துறையில் எண்ணிமப் பொது உள்கட்டமைப்பை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு இது மற்ற துறைகளில் அரசாங்கத்தின் முதன்மையான மின்-ஆளுகை முன்னெடுப்புகளைப் போன்றது.
- DPI உட்கட்டமைப்பின் மூன்று முக்கியக் கூறுகள் எண்ணிம வேளாண் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளன:
    - அக்ரிஸ்டாக்,
    - கிரிஷி முடிவு எடுக்கும் செயல்முறைக்கான ஆதரவு அமைப்பு (DSS) மற்றும்
    - மண் வளம் பற்றிய விவரங்கள் உள்ளடக்கிய வரைபடங்கள்.

## LGBTQI+ சமூகத்திற்கான முன்னெடுப்புகள்

- LGBTQI+ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கூட்டு வங்கிக் கணக்கைத் தொடங்க எந்தத் தடையும் இல்லை.
- வங்கிக் கணக்கு வைத்திருப்பவர் மரணம் அடைந்தால், கணக்கில் உள்ள இருப்புத் தொகையைப் பெறுவதற்கு, அத்தகைய உறவில் உள்ள ஒருவரை வாரிசுதாரராக நியமிக்கலாம்.
- இந்திய ரிசர்வ் வங்கி அனைத்துப் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கும் இந்த விவகாரம் தொடர்பான ஒரு விளக்கத்தை வழங்கியுள்ளது.
- சில வங்கிகளில் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் ஓரினச் சேர்க்கை உறவில் உள்ளவர்கள் தங்களில் ஒருவரையொருவர் வாரிசுதாரராக நியமித்தும் கூட்டு வங்கிக் கணக்குகளைத் தொடங்கியும் வருகின்றனர்.




## இந்தியாவின் முதல் துளிமக் கணினி




- இந்தியாவில் துளிமத் (குவாண்டம்) தொழில்நுட்பத்தின் மேம்பாட்டினை மிக விரைவு படுத்தச் செய்வதற்காக தேசிய துளிமத் திட்டத்திற்கு இறுதியாக ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

- இந்தத் துறையில் உள்ள பல்வேறு புத்தொழில் நிறுவனங்கள் 10 முதல் 50 கோடி ரூபாய் வரை மானியம் பெறலாம்.
- அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 6 கியூபிட்ஸ் திறன் கொண்ட இந்தியாவின் முதல் குவாண்டம் கணினியை அறிமுகப்படுத்தவும் இந்த முன்னெடுப்புத் திட்டமிட்டுள்ளது.
- தேசிய துளிமத் திட்டம் ஆனது, இந்தியாவில் துளிமக் கணினியியல் மேம்பாட்டிற்காக சுமார் 6,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.
- அடுத்த மூன்று ஆண்டுகளில் சுமார் 20-50 கியூபிட்ஸ் கணக்கீடு கொண்ட துளிமக் கணினியை நிறுவுவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.
- மேலும், இது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 50-100 கியூபிட்ஸ்களையும் அடுத்த 10 ஆண்டுகளில் 50-1000 கியூபிட்ஸ்களையும் நிறுவ உள்ளது.

## இந்திய நதிகளில் அதிகபட்ச நீர் வளப் பாதுகாப்பு சார்ந்த இடர்கள்

- கங்கை, சிந்து மற்றும் பிரம்மபுத்திரா ஆற்றுப் படுகைகளில் மிகக் குறைந்த அளவிலான நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் செயல்திறன் பதிவாகியுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, இந்தியா அதன் நிர்வாகத்தில் நடுத்தர நிலையைப் பெற்றுள்ளது. என்ற நிலையில் இது நீர் வளங்களின் பாதுகாப்பு சார்ந்த அபாயங்களை அதிகரிக்கும்.
- இந்தியா சுற்றுச்சூழல் செயல்திறன் அடிப்படையில் "மிகக் குறைந்த" தரவரிசையிலும் மற்றும் அபாய வகைகளில் "மிக உயர்ந்த" தரவரிசையிலும் உள்ளது.
- கிருஷ்ணா, கங்கை மற்றும் சிந்து போன்ற சில இந்திய ஆற்றுப்படுகைகள், மிக அதிக அளவிலான அபாயத்தைக் கொண்டுள்ளன.
- ஒரு ஆண்டிற்குச் சுமார் 32,900 கன சதுர கிலோமீட்டர் அளவாக உள்ள தண்ணீர் தேவையானது மிகவும் அதிக ஆபத்தை எதிர்கொள்கிறது.



## VisioNxt முன்னெடுப்பு

- மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் ஆனது தேசிய ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பக் கல்லூரியின் (NIFT) 'VisioNxt ஆடை வடிவமைப்பு முன்கணிப்பு முன்னெடுப்பு' என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது ஓர் இருமொழியிலான இணைய தளம் மற்றும் இந்தியா சார்ந்த ஆடை வடிவமைப்புப் போக்குகள் அடங்கிய புத்தகம் 'பரிதி 24x25' ஆகும்.
- NIFT VisioNxt என்பது ஆடை வடிவமைப்புப் போக்கு சார்ந்தத் தகவல்கள் மற்றும் முன்னறிவிப்புகளை உருவாக்குவதற்காக வேண்டி செயற்கை நுண்ணறிவு மற்றும் உணர்வியல் நுண்ணறிவு ஆகியவற்றினை இணைக்கச் செய்யும் இந்தியாவின் முதல் முன்னெடுப்பாகும்.
- இந்தியாவின் நேர்மறையான பன்முகத் தன்மை, கலாச்சார பன்முகத் தன்மை மற்றும் சமூக-பொருளாதார நுணுக்கங்களை பிரதிபலிக்கும் குறிப்பிட்ட இடங்களில் நிலவும் போக்குகளை நன்கு அடையாளம் கண்டு, பதிவு செய்து, பகுப்பாய்வு செய்வதே இதன் நோக்கமாகும்.

## இந்தியப் பெருங்கடல் பல்லுயிர்ப் பெருக்க பெருங்கடல் தகவல் அமைப்பு





- கடல் வாழ் வளங்கள் மற்றும் சூழலியல் மையம் (CMLRE) ஆனது, கொச்சியில் இந்தியப் பெருங்கடல் பல்லுயிர்ப் பெருக்க தகவல் வழங்கீட்டு அமைப்பு (IndOBIS) குறித்த தேசிய அளவிலானப் பயிலரங்கத்தினை நடத்தியது.
- IndOBIS என்பது உலகளாவியப் பெருங்கடல் பல்லுயிர்ப் பெருக்கத் தகவல் வழங்கீட்டு அமைப்பின் (OBIS) இந்தியப் பிராந்தியத்திற்கான முனையமாகும்.
- உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களால் பங்காற்றப்பட்ட ஆயிரக்கணக்கான தரவுத் தொகுப்புகளிலிருந்து பெறப்பட்ட சுமார் மில்லியன் கணக்கான பதிவுகளைக் கொண்ட கடல் இனங்கள் பற்றிய தகவல்களின் மிகப்பெரிய உலகளாவிய களஞ்சியங்களில் OBIS ஒன்றாகும்.

- இது உலகப் பெருங்கடல்கள் முழுவதும் காணப்படும் இனங்களின் பரவல், அவற்றின் உருவாக்கம், வாழ்விடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அளவுருக்கள் பற்றிய பல தரவுகள் உள்ளிட்ட விரிவான தகவல்களை வழங்குகிறது.

## 2023 ஆம் ஆண்டில் அதிகபட்ச ஊழல் புகார்கள்


- கடந்த ஆண்டு மத்திய ஊழல் தடுப்பு ஆணையத்திடம் (CVC) பதிவான மொத்த ஊழல் புகார்களில், இரயில்வே ஊழியர்களுக்கு எதிரான புகார்கள் தான் அதிகமாகும்.
- அதனைத் தொடர்ந்து டெல்லியின் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை வங்கிகளின் ஊழியர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில் அனைத்து வகை அதிகாரிகள் /ஊழியர்களுக்கு எதிராக 74,203 ஊழல் புகார்கள் பெறப் பட்டுள்ளன.
- 66,373 புகார்கள் தீர்க்கப் பட்டு 7,830 புகார்கள் நிலுவையில் உள்ளன.
- இரயில்வே ஊழியர்களுக்கு எதிராக அதிகபட்சமாக 10,447 புகார்களும், அதைத் தொடர்ந்து "GNCTD தவிர" பிற உள்ளாட்சி அமைப்புகளின் ஊழியர்களுக்கு எதிராக 7,665 புகர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் பொதுத் துறை வங்கிகளின் ஊழியர்களுக்கு எதிராக 7,004 ஊழல் புகார்கள் பெறப்பட்டுள்ளன.
- இவற்றில் 6,667 புகார்கள் தீர்க்கப் பட்டு 337 புகார்கள் நிலுவையில் உள்ளன.




## உலகளாவிய நெகிழி மாசுபாட்டில் முன்னணியில் உள்ள நாடு

- ஆண்டிற்கு சுமார் 9.3 மில்லியன் மெட்ரிக் டன்கள் (Mt) அளவு உமிழ்வுடன் உலகளாவிய நெகிழி உமிழ்வுகளில் இந்தியா ஐந்தில் ஒரு பங்கினைக் கொண்டுள்ளது.
- உலகளாவிய நெகிழி உமிழ்வில் இந்தியாவிற்கு அடுத்தபடியாக, நைஜீரியா மற்றும் இந்தோனேஷியா ஆகியவை முறையே 3.5 மெட்ரிக் மற்றும் 3.4 மெட்ரிக் டன்களுடன் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன.

- இந்தியாவின் அதிகாரப்பூர்வ நெகிழிக் கழிவு உற்பத்தி விகிதம் ஆனது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 0.12 கிலோகிராம் ஆகும்.
- இதற்கு முன், உலக அளவில் அதிக மாசு உண்டாக்கும் நாடுகளில் சீனா முதலிடத்தில் இருந்தது, ஆனால் தற்போது அந்தத் தரவரிசையில் சீனா நான்காவது இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய நெகிழிக் கழிவு உமிழ்வு ஆனது 52.1 மெட்ரிக் டன்னை எட்டியது.
- குறிப்பிடத்தக்க வகையில், உலகளாவிய நெகிழிக் கழிவு உமிழ்வுகளில் 69% அல்லது ஆண்டிற்கு 35.7 மெட்ரிக் டன் உமிழ்வானது 20 நாடுகளில் இருந்து உருவாகிறது.





## நீதிபதிகளின் பதவி உயர்வு குறித்து உச்ச நீதிமன்றம் 2024

- நீதிபதிகளின் பதவி உயர்வுக்கான பரிந்துரையை உயர் நீதிமன்ற (HC) தலைமை நீதிபதி தனியாக மறுபரிசீலனை செய்ய முடியாது என்று உச்ச நீதிமன்றம் (SC) தீர்ப்பு அளித்துள்ளது.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேர்வுக் குழுவானது கூட்டாகச் செயல்படுவதன் மூலம் மட்டுமே இந்தப் பரிசீலனையினை மேற்கொள்ள முடியும்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேர்வுக் குழுவில் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் இரண்டு மூத்த நீதிபதிகள் உள்ளனர்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேர்வுக் குழுவானது, நீதிபதிகள் நியமனங்கள் குறித்த பரிந்துரையை மட்டுமே உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தேர்வுக் குழுவிற்கு அனுப்புகிறது.
- இறுதி முடிவுகள் இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் உச்ச நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகளின், நீதிபதிகள் தேர்வுக் குழுவினால் மேற்கொள்ளப் படுகின்றன.
- நாட்டில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்வது குறித்தும் மூன்று மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட இந்த நீதிபதிகள் தேர்வுக் குழு முடிவு செய்கிறது.

- **What is Collegium System?**
  It is a system of transfer and appointment of judges that has evolved through judgments of the Apex court.
- **When was it Introduced?**
  Introduced in 1993 – The Second Judges Case.
  Formed in the consultation with the 2 senior-most judges in the SC.
- **How many Judges are comprised?**
  In 1998 – Supreme Court expanded the Collegium into 5 member body.
  - Supreme Court Collegium headed by CJI & 4 other senior most judges of Apex Court
  - High Court Collegium Chief Justice & 4 other Senior most judges of that court
- **Appointment of CJI**
  **Step 1 :** The senior most just of SC is considered to hold the office.
  **Step 2 :** Recommendation of Outgoing CJI is considered
  **Step 3 :** The Union Minister of Law sends the recommendation to the PM who advices President to matter of appointment.
- **Transfer of Judges**
  - In the matter of Transfer – the opinion of the CJI is deemed "determinative".
  - The consent of other is judges is not required
  - There can be acting CJ in High court for not more than a month

## ஒருங்கிணைந்த ஓய்வூதிய வழங்கீட்டு முறை




- மத்திய தொழிலாளர் துறை அமைச்சகமானது ஒருங்கிணைந்த ஓய்வூதியக் வழங்கீட்டு முறைக்கான (CPPS) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 1995 ஆம் ஆண்டு ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்ள சுமார் 78 லட்சம் ஓய்வூதியதாரர்களுக்கு இந்தக் கட்டமைப்பு பொருந்தும்.
- இந்தப் புதிய முறையானது நாடு முழுவதும் உள்ள எந்த வங்கியிலும் மற்றும் எந்தக் கிளையிலும் ஓய்வூதியம் வழங்கு வசதியினை செயல்படுத்துகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் பணியாளர் வருங்கால வாய்ப்பு நிதி அமைப்பின் (EPFO) தற்போதைய தகவல் தொழில்நுட்ப நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த வசதி தொடங்கப்படும்.

## தேசிய சிறு சேமிப்புத் திட்டங்களில் மாற்றங்கள்




- ❖ தேசிய சிறு சேமிப்புத் திட்டங்களின் (NSS) கீழ், அஞ்சல் அலுவலகங்கள் மூலம் ஒழுங்கற்ற முறையில் திறக்கப்பட்ட சேமிப்பு கணக்குகளை ஒழுங்குமுறைப் படுத்தச் செய்வதற்கான புதிய வழிகாட்டுதல்களை பொருளாதார விவகாரங்கள் துறையானது அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் 02ஆம் தேதிக்கு முன்னதாக தொடங்கப்பட்ட NSS-87 கணக்குகளில், முதல் கணக்கு நடப்புத் திட்ட விகிதத்தையும், இரண்டாவது கணக்கு தற்போதைய தபால் அலுவலக சேமிப்புக் கணக்கு (POSA) திட்ட விகிதத்தையும் சேர்த்து நிலுவைத் தொகையில் 2 சதவீதத்தையும் பெறும்.
- ❖ 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல், இரண்டு கணக்குகளுக்கும் 0 % வட்டி வழங்கப்படும்.
- ❖ ஒருவருக்கு இரண்டு கணக்குகளுக்கு மேல் இருந்தால், வட்டி எதுவும் வழங்கப்படாது; இருப்பினும், அசல் தொகை திருப்பித் தரப்படும்.
- ❖ 18 வயதிற்குட்பட்டவர்கள் வயது பூர்த்தி அடையும் வரை POSA திட்டத்தின் கீழ் வட்டி வழங்கப் படும், பின்னர், பொருத்தமான வட்டி விகிதம் வழங்கப்படும்.
- ❖ 18 வயது பூர்த்தியான பிறந்தநாளில் இருந்து தொகை முதிர்ச்சி கணக்கிடப்படும்.
- ❖ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட PPF கணக்குகளை வைத்திருந்தால், முதன்மைக் கணக்கில் வைப்புத் தொகையானது வருடாந்திர வரம்பிற்குள் இருந்தால் இத்திட்டத்தின் கீழான வட்டி விகிதத்தைப் பெறும்.
- ❖ ஏதேனும் இரண்டாம் நிலை கணக்குகள் இருந்தால் அதன் இருப்புத் தொகையானது முதன்மைக் கணக்குடன் இணைக்கப்படும்.
- ❖ அதிகப்படியான தொகைகள் 0% வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும்.

- வசிப்பிட விவரங்கள் தேவைப்படாத PPF கணக்குகளைக் கொண்ட செயலில் உள்ள தற்போதைய வெளிநாடு வாழ இந்தியர்கள் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி வரை POSA திட்டத்தின் வட்டியைப் பெறுவார்கள்.
- இந்தத் தேதிக்குப் பிறகு, வட்டி 0% ஆக வழங்கப்படும்.
- தாத்தா பாட்டிகளால் (சட்டப்பூர்வப் பாதுகாவலர்கள் அல்ல) தொடங்கப்பட்ட சுகன்யா சம்ரித்தி கணக்குகள் சட்டப் பூர்வப் பாதுகாவலர் அல்லது அவர்களது பெற்றோரைப் பாதுகாவலராக மாற்ற வேண்டும்.
- இந்தத் திட்ட வழிகாட்டுதல்களை மீறி இரண்டு கணக்குகளுக்கு மேல் திறக்கப் பட்டால், கூடுதல் கணக்குகள் மூடப்படும்.

## உச்ச நீதிமன்றத்தின் புதிய கொடி மற்றும் சின்னம்

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் இந்திய உச்ச நீதிமன்றத்தின் புதிய கொடி மற்றும் சின்னத்தினை வெளியிட்டார்.
- உச்ச நீதிமன்றம் நிறுவப்பட்ட 75வது ஆண்டு நிறைவை இந்த நிகழ்வானது நினைவு கூருகிறது.
- நீல நிறத்திலான இந்தப் புதியக் கொடியானது அசோக சக்கரம், உச்ச நீதிமன்ற கட்டிடம் மற்றும் இந்திய அரசியலமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இந்தச் சின்னமானது தேவநகரி எழுத்து வடிவில் பொறிக்கப்பட்ட "யதோ தர்மஸ்ததோ ஜய" என்ற சொற்றொடரையும் கொண்டுள்ளது.
- இது "எங்கே தர்மம் நிலை நாட்டப் படுகிறதோ, அங்கே வெற்றி இருக்கிறது" என்று பொருள் படுகிறது.
- இந்தப் புதியக் கொடி மற்றும் சின்னம் ஆகியவை டெல்லியின் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்லூரியினால் (NIFT) கருத்துருவாக்கம் செய்யப்பட்டு வடிவமைக்கப் பட்டது.

## சுகாதார நலனில் மாறுதல்கள் குறித்த அறிக்கை 2022-23

- Number of Districts: 757
- Number of Villages: 664235

| Health Facilities | Rural | Urban |
|---|---|---|
| No. of SCs | 165639 | 3976 |
| No. of PHCs | 25354 | 6528 |
| No. of CHCs | 5491 | 868 |
| No. of SDHs | 1340 | |
| No. of DHs | 714 | |
| No. of Medical Colleges | 362 | |



- கிராமப்புற இந்தியா முழுவதும் உள்ள பொது சுகாதார மையங்களில் (CHCs) சிறப்பு மருத்துவர்களுக்கான பற்றாக்குறையானது சுமார் 80 சதவீதமாக உள்ளது.

- நாட்டில் சுமார் 1 லட்சத்து 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துணை சுகாதார மையங்கள், தோராயமாக 32,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 6,359 பொது சுகாதார மையங்கள் உள்ளன.
- கூடுதலாக, 1,340 துணைப் பிரிவு மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், 714 மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 362 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் CHCகளில் இருக்க வேண்டிய 21,964 நிபுணர்களில் 4,413 சிறப்பு மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர், அதாவது 17,551 அல்லது 79.9 சதவீதம் பற்றாக்குறை உள்ளது.
- நாட்டின் 757 மாவட்டங்களில் 5,491 கிராமப்புற CHCகள் உள்ளன.
- நகர்ப்புறங்களில் உள்ள 868 CHC மையங்களில் உள்ள நிபுணர்களின் இருப்பு சுமார் 56 சதவீதத்துடன் சற்று சிறப்பான அளவிலேயே இருந்தது.
- நாட்டில் உள்ள 714 மாவட்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட 33,964 என்ற மொத்த எண்ணிக்கையில் 27,304 மருத்துவர்கள் மற்றும் நிபுணர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.
- இதில் சுமார் 20 சதவீத இடங்கள் காலியாக உள்ளன.
- இந்தியாவின் மருத்துவர்-மக்கள் தொகை விகிதம் ஆனது தற்போது உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட 1000 மக்கள்தொகைக்கு 1 மருத்துவர் என்ற விகிதத்தை விட அதிகமாக 1:836 என்ற அளவில் உள்ளது.


## அனைவருக்குமான சுகாதாரக் காப்பீடு




- தேசியக் காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் சுகாதாரக் காப்பீடு அளிப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB PM-JAY) திட்டம் ஆனது ஆறு கோடி முதியோர்களைக் கொண்ட 4.5 கோடி குடும்பங்களுக்குப் பயன் அளிக்கும்.

- 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான இந்த இலவசக் காப்பீட்டு திட்டம் ஆனது குடும்ப அடிப்படையிலானதாகும்.
- சமூக-பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து முதியோர்களும் ABPM-JAY திட்டத்தின் பலன்களைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- தகுதியுள்ள முதியோர்களுக்கு ABPM-JAY திட்டத்தின் கீழ் புதிய தனித்துவமான அட்டை வழங்கப்படும்.
- ஏற்கனவே AB PM-JAY திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற குடும்பங்களைச் சேர்ந்த 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியோர்கள் ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வரை கூடுதல் காப்பீட்டைப் பெறுவார்கள்.

## PM E- DRIVE திட்டம்




- மத்திய அமைச்சரவையானது, "பிரதான் மந்திரி - மின்சாரப் பேருந்து சேவை கட்டணக் காப்பீட்டு செயல்முறை (PSM) திட்டம்" மற்றும் "புத்தாக்கம் மிக்க வாகன மேம்பாட்டில் பிரதான் மந்திரி மின்சார வாகன இயக்கங்களுக்கான புரட்சி (PM E-DRIVE) திட்டத்திற்கு" ஒப்புதல் அளித்துள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டு முதல் 2028-29 ஆம் நிதியாண்டு வரை 38,000க்கும் மேற்பட்ட மின்சாரப் பேருந்துகளை இயக்கச் செய்வதற்கு தேவையான ஆதரவினை PSM திட்டம் வழங்கும்.
- PM E-Drive திட்டத்தின் கீழ் மின்சார இரு சக்கர வாகனங்கள், மின்சார மூன்று சக்கர வாகனங்கள், மின்சார அவசர மருத்துவச் சேவை ஊர்திகள், மின்சாரச் சரக்குந்துகள் மற்றும் பிற அதிகரித்து வரும் பல்வேறு மின்சார வாகனங்கள் (EVs) ஆகியவற்றினை வாங்குவதற்கு 3,679 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.
- கனரகத் தொழில்துறை அமைச்சகம் ஆனது, இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தி, வாங்குபவர்களுக்கு மானியம் மற்றும் உற்பத்தியாளர் மின்னணுப் பற்றுச் சீட்டுகள் ஆகியவற்றை ஒரு பிரத்தியேக இணைய தளம் மூலம் வழங்கும்.

## நில நீர்வழி நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாடு


- தலைமைப் பணியாளர்கள் குழு (COSC) கூட்டத்தின் போது, பாதுகாப்புப் பணியாளர்களின் தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான், நில நீர் வழி நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாட்டினை வெளியிட்டுள்ளார்.
- இந்தக் கோட்பாடானது, இன்றைய சிக்கலான இராணுவச் சூழலில் நில நீர் வழி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதலைத் தளபதிகளுக்கு வழங்கும் ஒரு முக்கிய வெளியீடாகும்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் போர் மற்றும் சமாதானம் ஆகிய இரு சூழல்களிலும் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதற்கு ஆயுதப் படைகளுக்கு நிலநீர்வழி செயல்பாட்டுத் திறனை அளிக்கிறது.
- முன்னதாக அக்குழு இணைய வெளி நடவடிக்கைகளுக்கான கூட்டுக் கோட்பாட்டை வெளியிட்டது.

## INS மால்பே மற்றும் INS முல்கி

- இந்தியக் கடற்படையானது ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் இயங்கும் வகையிலான மால்பே மற்றும் முல்கி எனப்படும் இரண்டு நீர்மூழ்கி எதிர்ப்பு போர் (ASW) கப்பல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தக் கப்பல்கள், ஆழம் குறைந்த கடல் பகுதிகளில் இயங்கும் வகையிலான எட்டு நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் கப்பல் கட்டமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் இயக்கப்படும் நான்காவது மற்றும் ஐந்தாவது கப்பல்கள் இவையாகும்.
- இந்தக் கப்பல்களில் எதிரி நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் கடலடியில் உள்ள சில அச்சுறுத்தல்களை கண்டறிந்து எதிர்கொள்வதற்காக என்று நன்கு வடிவமைக்கப் பட்டு உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கடலடி உணர்வுக் கருவிகள் பொருத்தப் பட்டு உள்ளன.

## மீன்பிடித் தொழிலாளர்களுக்கு எண்ணிம அடையாள அட்டைகள்

- மத்ஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (PM-MKSSY) திட்டம் ஆனது, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) துணைத் திட்டமாக தொடங்கப்பட்டுள்ளது.
- இந்திய நாடு முழுவதும் உள்ள மீன்பிடித் தொழிலாளர்கள் மற்றும் மீன்பிடி மதிப்புச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பதிவேட்டை உருவாக்குவதன் மூலம் சுமார் மூன்று கோடி பங்குதாரர்களுக்கு எண்ணிம அடையாளங்களை வழங்கும்.
- PMMSY திட்டமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று தொடங்கப் பட்டது.
- 2013-14 ஆம் ஆண்டில் 95.79 லட்சம் டன்னாக இருந்த நாட்டின் மீன் உற்பத்தி 2023-24 ஆம் ஆண்டில் 175.45 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
- கடந்த நிதியாண்டில் சுமார் 60,000 கோடி ரூபாயாக இருந்த கடல் சார் உணவு ஏற்றுமதியை ஆண்டிற்கு 1 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்காக மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.




## மௌசம் திட்டம்




- இரண்டு ஆண்டுகளில் 2,000 கோடி ரூபாய் செலவில் 'மௌசம்' திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- வளிமண்டல அறிவியல், வானிலை கண்காணிப்பு, வானிலை மாதிரி வடிவமைப்பு, முன்னறிவிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- புவி அறிவியல் அமைச்சகத்தின் மூன்று நிறுவனங்களைப் பின்பற்றி முதன்மையாக மௌசம் திட்டம் செயல்படுத்தப்படும்.
    - இந்திய வானிலை ஆய்வு மையம்,
    - இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு கல்வி நிறுவனம், மற்றும்
    - தேசிய நடுத்தரத் தொலைவு வரம்பிலான வானிலை முன்னறிவிப்பு மையம்.

## போர்ட் பிளேர் தீவின் பெயர் மாற்றம்




- அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகரான போர்ட் பிளேர் இனி 'ஸ்ரீ விஜய புரம்' என அழைக்கப்படும்.
- போர்ட் பிளேர் நகரம் ஆனது அந்தமான் நிக்கோபார் தீவுகளின் நுழைவுப் பகுதி ஆகும்.
- இது கிழக்கிந்தியக் கம்பெனியின் பம்பாய் கடற்படையில் (மரைன்) பணியாற்றியக் கடற்படை அளவையாளர் மற்றும் லெப்டினன்ட் ஆர்க்கிபால்ட் பிளேயர் என்பவரின் நினைவாக இதற்கு இப்பெயரிடப்பட்டுள்ளது.
- அந்தமான் தீவுகளை முழுமையான அளவில் நில அளவை ஆய்வு செய்த முதலாவது அதிகாரி பிளேயர் ஆவார்.
- 1771 ஆம் ஆண்டில் பாம்பே மரைனில் தாம் சேர்ந்த பிறகு, பிளேயர் அடுத்த ஆண்டில் இந்தியா, ஈரான் மற்றும் அரேபியாவின் கடற்கரைகளில் நில அளவைப் பணியை மேற் கொண்டார்.
- 1778 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், எலிசபெத் மற்றும் வைப்பர் ஆகிய இரண்டு கப்பல்களுடன் கல்கத்தாவிலிருந்து அந்தமானுக்கு தனது முதல் நில அளவை ஆய்வுப் பயணத்திற்கு பிளேயர் புறப்பட்டார்.
- அந்தமான் தீவுகள் 11 ஆம் நூற்றாண்டின் சோழப் பேரரசர் முதலாம் இராஜேந்திரனால் ஓர் உத்திசார் கடற்படை தளமாக பயன்படுத்தப்பட்டதாக சில வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

- இன்றைய இந்தோனேசியாவில் இருக்கும் ஸ்ரீவிஜயா மீது தாக்குதல் நடத்த இது பயன் படுத்தப்பட்டது.
- தஞ்சாவூரில் கி.பி.1050 தேதியிட்ட கல்வெட்டின் படி, சோழர்கள் இத்தீவை மா-நகவரம் நிலம் என்று குறிப்பிட்டனர் என்பதோடு இது ஆங்கிலேயர்களால் நிக்கோபார் என்ற நவீன பெயரை இட வழிவகுத்தது.

## பொது விமானப் போக்குவரத்து தொடர்பான டெல்லி பிரகடனம்




- புது டெல்லியில் நடைபெற்ற 2வது ஆசிய பசிபிக் அமைச்சர்கள் மாநாட்டிற்குப் பிறகு இந்தப் பிரகடனம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்த விரிவானதொரு கட்டமைப்பானது பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துதல், அதிகரித்து வரும் சவால்களை எதிர்கொள்வது மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பொது விமானப் போக்குவரத்துத் துறையில் மிகவும் நிலையான மேம்பாட்டினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக, உலகின் மூன்றாவது மிகவும் பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது.

## BHASKAR தளம்

- தொழிலகம் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (DPIIT) விரைவில் பாரத் புத்தொழில் நிறுவனத் தகவல் அணுகல் பதிவகத்தினை (BHASKAR) வெளியிட உள்ளது.
- இது இந்தியாவின் புத்தொழில் சுற்றுச்சூழலை நன்கு மேம்படுத்தவும் ஆதரிக்கவும் வடிவமைக்கப் பட்ட ஒரு புதிய டிஜிட்டல் தளமாகும்.
- இது இந்தியாவின் புத்தொழில் சுற்றுச்சூழல் அமைப்பின் திறனைத் வெளிக் கொண்டு வர உதவும் புத்தாக்கம், தொழில்முனைவு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகிய கருத்துக்களை ஊக்குவிக்கும்.

- அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக உலகளவில் மூன்றாவது பெரிய புத்தொழில் மையமாக இந்தியா உள்ளது என்பதோடு மேலும் 1,46,000க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட புத்தொழில்களையும் இந்தியாவானது கொண்டுள்ளது.

## இந்திய இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையம்

- இந்திய இணையவெளி குற்ற ஒருங்கிணைப்பு மையத்தின் (I4C) கீழ் 4 புதிய முன் முயற்சிகளை அதன் நிறுவனத் தினக் கொண்டாட்டத்தின் போது (செப்டம்பர் 10) ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இணையவெளி குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையை மிக வலுவானதாகவும், பயனுள்ளதாகவும், வெற்றிகரமானதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- I4C திட்டம் 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- இந்தப் 4 புதிய முயற்சிகள்:
  - இணையவெளி மோசடி தணிப்பு மையம்.
  - 'இணையவெளி கமாண்டோஸ்' திட்டம்.
  - சமன்வே தளம் (கூட்டு இணையவெளி குற்ற விசாரணை வசதி அமைப்பு).
  - இணையவெளியில் சந்தேகப்படும்படியான நபர்களின் பதிவகம்.

## சத்பவ் நடவடிக்கை

- லாவோஸ், மியான்மர் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் வழங்குவதற்காக, இந்தியா சத்பவ் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- இந்த நாடுகள் யாகி புயலால் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப் பட்டு உள்ளன.
- இந்தியா வியட்நாமுக்கு சுமார் 1 மில்லியன் டாலர் மதிப்புள்ள வெள்ள நிவாரண உதவியையும், லாவோஸுக்கு சுமார் 1,00,000 டாலர் மதிப்பிலான உதவியையும் வழங்கியுள்ளது.
- யாகி புயலானது (ஜப்பானால் பெயரிடப் பட்டது) 2024 ஆம் ஆண்டில் ஆசியாவைத் தாக்கிய அதி வலிமையான வெப்பமண்டலச் சூறாவளி என்று குறிப்பிடப்படுகிறது.

## இந்தியாவினை பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மையமாக மாற்றுவதற்கான தொலை நோக்குத் திட்டம்

- இரண்டாவது சர்வதேசப் பசுமை ஹைட்ரஜன் மாநாடானது (ICGH-2024) டெல்லியில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் போது, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, அதன் பயன்பாடு மற்றும் அதன் ஏற்றுமதிக்கான ஒரு உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்ற செய்வதற்கான ஒரு இலட்சிய மிகு இலக்கு ஆனது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- முன்னதாக, 2023 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டம் என்பது, இந்த இலட்சிய இலக்கினை நடைமுறையாக்குவதற்கான ஒரு முக்கியமானப் படிநிலையாகும்.
- இந்தியாவின் புதைபடிவம் சாரா எரிபொருள் திறன் ஆனது கடந்த பத்தாண்டுகளில் சுமார் 300% அதிகரித்துள்ளது.
- அதே காலக்கட்டத்தில் சூரியசக்தி சார்ந்த ஆற்றல் உற்பத்தி திறன் ஆனது வியக்கத் தக்க வகையில் 3000% வளர்ச்சியைக் கண்டுள்ளது.



## இந்தியக் கடற்படையின் 'வினேத்ரா'

- ❖ விசாகப்பட்டினத்தில் உள்ள ஐஎன்எஸ் சாதவாகனா பயிற்சி மையத்தில் "வினேத்ரா" (பயிற்சியாளர்) என்ற பெயரிலான செயலிழந்த நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து தப்பிக்கும் நடவடிக்கைகளுக்கான ஓர் அதிநவீன வசதிகள் கொண்ட ஒரு பயிற்சி மையமானது தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த மையமானது, செயலிழந்த கல்வாரி வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து அதன் பணிக்குழுவினர் தப்பித்து வெளியேறும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ கல்வாரி வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியக் கடற்படைக்காக கட்டமைக்கப்பட்ட டீசல்-மின்சார சக்தியில் இயங்கும் தாக்குதல் ரக நீர்மூழ்கிக் கப்பல்களில் ஒன்றாகும்.
- ❖ இந்த வகுப்பின் முதல் நீர்மூழ்கிக் கப்பல் ஆன ஐஎன்எஸ் கல்வாரி 2017 ஆம் ஆண்டில் படையில் இணைக்கப்பட்டது.
- ❖ இந்த வகுப்பில் உள்ள மற்ற நீர்மூழ்கிக் கப்பல்களில் ஐஎன்எஸ் காந்தேரி, ஐஎன்எஸ் கரஞ்ச், ஐஎன்எஸ் வேலா, ஐஎன்எஸ் வகிர் மற்றும் ஐஎன்எஸ் வக்சீர் ஆகியவை அடங்கும்.

## கடல்சார் விவகாரங்கள் சார்ந்த சர்ச்சை தீர்வு மையம்

- ❖ 20வது கடல்சார் மாநில மேம்பாட்டு சபை (MSDC) கூட்டத்தில் இந்தியச் சர்வதேச கடல்சார் சர்ச்சை தீர்வு மையம் (IIMDRC) ஆனது தொடங்கப்பட்டது.
- ❖ இந்திய கடல்சார் மையம் (IMC) எனப்படும் கொள்கை சார்ந்த கருத்துக்களை வழங்கும் சிந்தனைக் குழுவும் இந்த நிகழ்வில் தொடங்கப்பட்டது.
- ❖ IIMRDC ஆனது ஒரு சிறப்புத் தளமாகச் செயல்படுவதோடு, கடல்சார் விவகாரங்கள் சார்ந்த சர்ச்சைகளுக்குத் திறம்படத் தீர்ப்பதற்கு, தகுதி அடிப்படையிலான மற்றும் தொழில்துறை சார்ந்த தீர்வுகளை வழங்கும்.
- ❖ கடல் சார் பரிவர்த்தனைகளின் பல் நோக்கு, பல தரப்பு ஒப்பந்தங்கள், பல அதிகார வரம்புகள் சார்ந்த மற்றும் பல தேசிய இயல்புகளை அனுசரிக்கவும் இது உதவும்.

## இந்தியாவின் சொந்த கார்பன் சந்தை

- ❖ 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்ட கார்பன் மதிப்பு வர்த்தகத் திட்டம் (CCTS) அமலுக்கு வந்ததும் இந்த சந்தையானது உருவாக்கப்பட உள்ளது.
- ❖ எரிசக்தி திறன் ஆணையத்தின் (BEE) படி, CCTS ஆனது 2026 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைக்கு வரும்.
- ❖ CCTS என்பது உமிழ்வைக் குறைக்க அல்லது அதனைக் கட்டுப்படுத்துவதற்கானச் சந்தை அடிப்படையிலான நெறிமுறையாகும்.
- ❖ 2016 ஆம் ஆண்டு பாரீஸ் உடன்படிக்கையின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்கான அதன் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் - உமிழ்வு குறைப்பு இலக்கைப் பூர்த்தி செய்வதற்கான இந்தியாவின் பெரும் உறுதிப்பாட்டின் காரணமாக இது தோற்றுவிக்கப் பட்டது.
- ❖ இந்தியாவின் இலக்குகளுள் ஒன்று, "அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வு செறிவினை 2030 ஆம் ஆண்டிற்குள் 2005 ஆம் ஆண்டில் இருந்த அளவில் 45 சதவிகிதம்

வரை" குறைப்பதாகும்.

- 2021 ஆம் ஆண்டில், இந்திய நாடும் 2070 ஆம் ஆண்டிற்குள் நிகர-சுழிய அளவிலான உமிழ்வு பதிவான நாடாக மாற வேண்டும் என்ற இலக்கினை அறிவித்தது.
- கார்பன் எல்லை சீரமைப்புச் செயல்முறை (CBAM) ஆனது 2026 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட உள்ள கட்டணமாகும்.




## மத்திய அரசின் ஆறு முன்னெடுப்புகள்




- பாராளுமன்ற விவகார அமைச்சகத்தின் 100 நாள் சாதனைகளின் ஒரு பகுதியாக பல்வேறு முன்னெடுப்புகள் / இணைய தளங்களின் துவக்க நிகழ்ச்சி ஒன்று சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

- அவை:
  - தேசிய இ-விதான் செயலி -NeVA 2.0
  - NeVA கைபேசி செயலி 2.0
  - NYPS இணைய தளம் 2.0
  - ஏக்லவ்யா கல்வி முறை மாதிரியிலான குடியிருப்புப் பள்ளிகளுக்கான NYPS (EMRSs)
  - சார்புநிலை சட்ட மேலாண்மை அமைப்பு (SLMS)
  - ஆலோசனை வழங்கீட்டு குழு மேலாண்மை அமைப்பு (CCMS)

## வந்தே மெட்ரோ இரயில் சேவை


- புஜ் மற்றும் அகமதாபாத் ஆகியவற்றுக்கு இடையே இயக்கப்படும் இந்தியாவின் முதல் 'வந்தே மெட்ரோ' இரயில் சேவையை பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- இந்த இரயிலுக்கு அதிகாரப்பூர்வமாக "நமோ பாரத் விரைவு இரயில்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இது ஒன்பது நிலையங்களில் நிறுத்தங்களுடன் சுமார் 360 கிலோமீட்டர் தூரம் வரை இயங்கும்.



## சணல் உற்பத்தியில் சரிவு

- இந்த நிதியாண்டில் சணல் உற்பத்தியானது சுமார் 20% குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த ஆண்டு ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களால் மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களில் இந்தப் பருவச் சாகுபடியானது பாதிக்கப்பட்டது.
- வெள்ளத்தினால் சில பகுதிகளில் பயிர்கள் சேதமடைந்து, உற்பத்தி பாதிக்கப்பட்டது.
- ஆண்டிற்கு சுமார் 4,500 கோடி ரூபாய் மதிப்பிலான சணல் ஏற்றுமதி மேற்கொள்ளப் படுவதற்கான சாத்திய உற்பத்தி செயல்திறன் நிலை இருந்தது.
- கடந்த நிதியாண்டில் இது 3,000 கோடி ரூபாயாகவும், நடப்பு நிதியாண்டில் சுமார் 3,500 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

- ஒரு டன் சணல் செடி மூலம் 495 லிட்டர் எத்தனால் உற்பத்தி செய்ய முடியும் என மதிப்பிடப் பட்டது.




## ஆண்டின் 3வது தேசிய லோக் அதாலத்




- தேசிய சட்ட சேவைகள் ஆணையமானது, 27 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களின் தாலுக்காக்கள், மாவட்டங்கள் மற்றும் உயர் நீதிமன்றங்களில் 2024 ஆம் ஆண்டின் 3வது தேசிய லோக் அதாலத் அமைப்பினை ஏற்பாடு செய்துள்ளது.
- இந்த தேசிய லோக் அதாலத்தில் 1,14,56,529 வழக்குகள் (ஒரு கோடியே பதினான்கு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூற்று இருபத்தி ஒன்பது) தீர்க்கப்பட்டுள்ளன.
- இந்த வழக்குகளை நீதிமன்றத்தில் தீர்ப்பதற்கு ஆகும் மொத்த செலவுத் தொகையின் தோராயமான மதிப்பு 8482.08 கோடி ரூபாயாகும்.

## இந்தியாவில் ஒரே நேரத்தில் தேர்தல்





- இந்தியா முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான கோவிந்த் குழுவின் அறிக்கைக்கு மத்திய அமைச்சரவை 'ஒருமனதாக' ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி நிலைகளில் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக சில அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒரு தொடர் பரித்துரையினை அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.
- ஒரே தேசம், ஒரே தேர்தல் என்ற அந்தத் திட்டமானது இரண்டு அரசியலமைப்பு திருத்த மசோதாக்களைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்ற கோருகிறது.
- ஒரே நேரத்தில் அனைத்து தேர்தல்களையும் நடத்தும் முறைக்கு மாறுவதற்கான முதல் அரசியலமைப்பு திருத்த மசோதாவிற்கு மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் 'சிறப்பு பெரும்பான்மை' தேவையாகும்.
- இரண்டாவது அரசியலமைப்பு திருத்த மசோதாவானது அனைத்து உள்ளாட்சித் தேர்தல்களும் (நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளுக்கு) ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப் பட்ட 100 நாட்களுக்குள் நடைபெறுவதை உறுதி செய்யும்.
- இதற்காக, நாட்டில் உள்ள மாநிலங்களில் பாதிக்கும் குறையாத மாநிலங்களின் சட்ட மன்றங்களால் இந்த சட்டத்திருத்தம் அங்கீகரிக்கப்பட வேண்டும் (ஒப்புக் கொள்ளப் பட வேண்டும்).
- "உள்ளாட்சி அரசு" ஆனது ஏழாவது அட்டவணையில் உள்ள மாநிலப் பட்டியலின் கீழ் ஒரு கூறாக இருப்பதால், இந்த விவகாரத்தில் சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு மட்டுமே உள்ளது.
- கோவிந்த் குழுவால் முன்மொழியப்பட்ட இத்திட்டம் ஆனது, ஒரு மாநிலச் சட்டமன்றம் அல்லது மக்களவையானது அதன் 'முழு' ஐந்தாண்டு காலம் முடிவதற்குள் கலைக்கப் பட்டால், 'இடைக்கால' தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிடுகிறது.
- ஆனால், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றம் அல்லது மக்களவை ஆனது அடுத்த ஒரே நேரத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னதாக மீதமுள்ள பதவி காலத்திற்கு மட்டுமே செயல்படும்.
- இடைக்காலத் தேர்தலுக்கும் திட்டமிடப்பட்ட ஒரே நேரத் தேர்தலுக்கும் இடையிலான இந்தக் காலகட்டம் ஆனது "காலாவதியாகாத காலம்" என்று அறியப்படும்.


- இந்தியாவின் முதல் நான்கு பொதுத் தேர்தல்களின் போது (1951-52, 1957, 1962, 1967), வாக்காளர்கள் அந்தந்த மாநிலச் சட்டமன்றங்களுக்கும் வாக்களித்தனர்.
- பின்னர், புதிய மாநிலங்களின் உருவாக்கம் மற்றும் பிற மாநிலங்களை மறு சீரமைப்பு செய்ததன் காரணமாக இந்தச் செயல்முறை முடிவுக்கு வந்தது.
- 1968-89 ஆம் ஆண்டுகளில், சில (மாநில) சட்டமன்றங்கள் கலைக்கப்பட்டதால், ஒரே தேசம் ஒரே நாடு (ONOE) நடைமுறை முற்றிலும் நிறுத்தப்பட வழிவகுத்தது.

## PM-AASHA திட்டத்தின் மறுசீரமைப்பு

- பிரதான் மந்திரி அன்னதாதா ஆய் சன்ரக்சன் அபியான் (PM-AASHA) தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்வதையும், நுகர்வோருக்கான அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நீட்டிப்பு ஆனது 2025-26 ஆம் ஆண்டு வரையிலான 15வது நிதி ஆணையத்தின் மதிப்பாய்வு சுழற்சியின் போது 35,000 கோடி ரூபாய் நிதிச் செலவை ஏற்படுத்தும்.
- விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கு மிகவும் திறம்பட்ட முறையில் சேவை வழங்கச் செய்வதற்காக அரசாங்கம் ஆனது PM-AASHA திட்டத்தின் கீழ் விலை ஆதரவுத் திட்டம் (PSS) மற்றும் விலை நிலைப்படுத்தல் நிதி (PSF) திட்டங்களை ஒருங்கிணைத்துள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பு ஆனது விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு மிகவும் இலாபகரமான விலையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு மேலும், அத்தியாவசியப் பொருட்களின் சந்தை விலையை நன்கு நிலைப்படுத்தி, அவை நுகர்வோருக்கு மலிவு விலையில் கிடைக்கப் பெறுவதை இது உறுதி செய்கிறது.
- புதுப்பிக்கப்பட்ட PM-AASHA ஆனது தற்போது பின்வரும் கூறுகளை உள்ளடக்கியது:
    - விலை ஆதரவு திட்டம் (PSS)
    - விலை நிலைப்படுத்தல் நிதி (PSF)
    - விலை நிர்ணயத்தில் உள்ள இடைவெளியை செலுத்தும் திட்டம் (PDPS)
    - சந்தை இடையீட்டுத் திட்டம் (MIS)




## NPS வாத்சல்யா





- ❖ NPS வாத்சல்யா என்பது சிறார்களை மையமாகக் கொண்ட ஓர் ஓய்வூதியத் திட்டம் ஆகும்.
- ❖ ஒரு குழந்தையின் நிதி சார் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக என்று பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 1,000 ரூபாய் பங்களிக்க இது உதவுகிறது.
- ❖ சிறார்கள் 18 வயதை அடையும் போது, அப்பெற்றோர்கள் கணக்கை வழக்கமான NPS கணக்காக மாற்றுவதற்கான விருப்பத் தேர்வும் இதில் உள்ளது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநில அரசுகளின் பங்களிப்பு



- தென் மாநிலங்கள் ஆனது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பு மற்றும் தனி நபர் வருமானத்தில் பங்களிப்பு ஆகியவற்றில் வட மாநிலங்களை விட மிகச் சிறப்பாக செயலாற்றியுள்ளன.
- கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகியவை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீதப் பங்களிப்பை வழங்குகின்றன.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலம் தொடர்ந்து மிகப் பெரியப் பங்களிப்பாளராகத் தொடர்ந்து திகழ்வதாக இருப்பினும் முன்னதாக 15 சதவீதமாக இருந்த அம்மாநிலத்தின் பங்கானது தற்போது 13.3 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- மகாராஷ்டிராவின் தனிநபர் வருமானம் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப் படி தேசியச் சராசரியில் 150.7 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- 1960-61 ஆம் ஆண்டில் 14 சதவீதமாக இருந்த உத்தரப் பிரதேசத்தின் பங்கு ஆனது சுமார் 9.5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- இந்தியாவில் மூன்றாவது அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலமான பீகார், வெறும் 4.3 சதவீதப் பங்களிப்பினையே வழங்குகிறது.
- 1960-61 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.5 சதவீதப் பங்குடன் முதல் இடத்தில் இருந்த மேற்கு வங்காளமானது தற்போது 5.6 சதவீதத்தை மட்டுமே கொண்டு உள்ளது.


## சிந்து நதி நீர் ஒப்பந்த மறுபரிசீலனை




- இந்த ஒப்பந்தத்தினை மறுபரிசீலனை செய்வதற்கும் அதனை மாற்றியமைப்பதற்கும் இந்தியா மீண்டும் பாகிஸ்தானுக்கு அதிகாரப்பூர்வ அறிக்கையினை அனுப்பியுள்ளது.

- சிந்து மற்றும் அதன் துணை நதிகளின் தண்ணீரைப் பயன்படுத்துவதற்காக வேண்டி, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே 1960 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதியன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அப்போதையப் பிரதமர் ஜவஹர்லால் நேருவும், அப்போதையப் பாகிஸ்தான் அதிபர் முகமது அயூப் கானும் ஒப்பந்தத்தில் கராச்சியில் கையெழுத்திட்டனர்.
- உலக வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்பது ஆண்டு காலப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியா மூன்று "கிழக்கு நதிகளின் (பியஸ், ராவி, சட்லஜ்) "கட்டுப்பாடற்ற பயன்பாடு" மீதான ஒரு கட்டுப்பாட்டையும், பாகிஸ்தான் மூன்று "மேற்கு நதிகள்" [சிந்து, செனாப், ஜீலம்] மீதான கட்டுப்பாட்டையும் பெற்றன.


## விண்வெளித் திட்டங்களுக்கான நிதி




- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள இஸ்ரோவின் பின்வரும் நான்கு மிக முக்கிய விண்வெளித் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது:
    - இந்தியாவின் நிலவு ஆய்வுத் திட்டமான சந்திரயான்-4;
    - வெள்ளிக் கிரகச் சுற்றுக் கல ஆய்வுத் திட்ட (VOM) உருவாக்கம்;
    - பாரதிய அந்த்ரிக்ஸ் நிலையம் (BAS) மற்றும்
    - அடுத்த தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த ஏவு வாகனத்தின் (NGLV) உருவாக்கம்.
- மொத்தத்தில், இந்த நான்கு திட்டங்களின் மேம்பாட்டுச் செலவுகளுக்காக 22,750 கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- வெள்ளிக் கிரகச் சுற்றுக் கல ஆய்வுத் திட்டமானது, வெள்ளிக் கோளின் வளிமண்டலம் மற்றும் புவியியலை அறிவியலாளர்கள் நன்கு புரிந்து கொள்வதை ஒரு நோக்கமாகக் கொண்ட இந்தியாவின் முதல் அறிவியல் ஆய்வுப் பயணமாகும்.

## உயிரி-RIDE திட்டம்

- உயிரித் தொழில்நுட்பத் துறை ஆராய்ச்சிப் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு (உயிரி-RIDE) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்து உள்ளது.
- இது ஆராய்ச்சியை விரைவுபடுத்துதல், தயாரிப்பு உருவாக்கத்தினை மேம்படுத்துதல் மற்றும் கல்விசார் ஆராய்ச்சி மற்றும் தொழில்துறைப் பயன்பாடுகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது செயற்கை உயிரியல், உயிரி மருந்து, உயிரி ஆற்றல் மற்றும் உயிரி நெகிழி போன்ற துறைகளில் அதிநவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மானியங்கள் மற்றும் ஊக்கத் தொகைகளை வழங்கும்.
- உயிரி-RIDE என்பது 'உயிரி-உற்பத்தி மற்றும் உயிரி-அடித்தளம்' எனப்படும் தற்போது உள்ள இரண்டு திட்டங்களை ஒரு புதிய கூறுகளுடன் ஒருங்கிணைக்கிறது.
- அவையாவன:
  - உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும்
  - தொழில்துறை மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு (I&ED).




## பல்வேறு தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி 2023-24

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறையானது பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்திக்கான 2023-24 ஆம் ஆண்டின் மூன்றாவது முன் கூட்டிய மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் நாட்டில் தோட்டக்கலை உற்பத்தி (மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகள்) சுமார் 353.19 மில்லியன் டன்களாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டினை விட இது சுமார் 22.94 லட்சம் டன்கள் (0.65%) குறைந்துள்ளது.
- பழங்கள், தேன், பூக்கள், தோட்டப் பயிர்கள், வாசனைப் பொருட்கள் மற்றும் நறுமணப் பொருட்கள் மற்றும் மருத்துவத் தாவரங்களின் உற்பத்தியானது 2023-24 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

| Total Horticulture | 2022-23 | 2023-24 (2nd Adv. Est.) | 2023-24 (3rd Adv. Est.) |
|---|---|---|---|
| **Area** (in Million Ha) | 28.44 | 28.63 | 28.98 |
| **Production** (in Million Tonne) | 355.48 | 352.23 | 353.19 |

## வெண்மை புரட்சி 2.0

- 1970 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆபரேஷன் ஃப்ளட் என்ற ஒரு நடவடிக்கையானது, வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி, இந்தியாவில் பால் பொருள் உற்பத்தித் துறையை மாற்றியமைத்தது.
- பால் பொருள் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்கள் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 660 லட்சம் கிலோ பால் கொள்முதல் செய்துள்ளன.
- 2028-29 ஆம் ஆண்டிற்குள் இதை ஒரு நாளைக்கு 1,007 லட்சம் கிலோவாக அதிகரிக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- சுமார் 1.7 லட்சம் பால் கூட்டுறவுச் சங்கங்கள் (DCS) உள்ளன என்ற நிலையில் அவை சுமார் 2 லட்சம் கிராமங்களை (நாட்டின் மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கையில் 30%) மற்றும் 22% உற்பத்தியாளர் குடும்பங்களை உள்ளடக்கியது.
- இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆனது நாட்டின் பால் உற்பத்தியில் 10% மற்றும் சந்தைப் படுத்தக் கூடிய உபரியில் 16% ஆகியவற்றைக் கொள்முதல் செய்கின்றன.
- தற்போது குஜராத், கேரளா, சிக்கிம் ஆகிய சில மாநிலங்களிலும், புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்திலும், 70%க்கும் அதிகமான கிராமங்கள் பால் கூட்டுறவு நிறுவனங்களைக் கொண்டுள்ளன.
- இது உத்தரப் பிரதேசம், உத்தரக்காண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய சில மாநிலங்களிலும், ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்திலும் 10-20% மட்டுமே உள்ளது.
- மேற்கு வங்காளம், அசாம், ஒடிசா, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சிறிய மாநிலங்களில் சுமார் 10%க்கும் குறைவான அளவிலே இத்தகைய கிராமங்கள் உள்ளன.
- தேசிய அளவிலான தனிநபர் பால் பொருள் கிடைக்கும் தன்மையானது ஒரு நாளுக்கு 459 கிராம் ஆகும் என்ற நிலையில் இது உலகளாவியச் சராசரியான ஒரு நாளுக்கு 323 கிராமை விட அதிகமாகும்.
- இந்த அளவானது மகாராஷ்டிராவில் 329 கிராம் முதல் பஞ்சாபில் 1,283 கிராம் வரை என மாறுபடுகிறது.
- 2022-23 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி ஆனது 230.58 மில்லியன் டன்களை எட்டியதன் மூலம், உலகின் முன்னணிப் பால் உற்பத்தியாளராக இந்தியா இருந்தது.
- 1951-52 ஆம் ஆண்டில், இந்தியாவில் வெறும் 17 மில்லியன் டன் மட்டுமே பால் உற்பத்தி செய்யப் பட்டது.




## மியான்மர் எல்லையில் வேலி




- மியான்மர் எல்லையில் வேலி அமைக்க மத்திய அரசு 31,000 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- சுமார் 1,643 கிலோ மீட்டர் தொலைவிலான மியான்மர் எல்லையானது அருணாச்சலப் பிரதேசம் (520 கிமீ), நாகாலாந்து (215 கிமீ), மணிப்பூர் (398 கிமீ) மற்றும் மிசோரம் (510 கிமீ) ஆகிய மாநிலங்களின் எல்லை வழி பரவியுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது இந்த ஆண்டின் தொடக்கத்தில் மியான்மர் எல்லையில் உள்ள தடையற்ற நடமாட்டப் பகுதியினை (FMR) ரத்து செய்தது.
- இது எல்லைப் பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் எந்த ஆவணமும் இல்லாமல் ஒவ்வொரு நாட்டவரும் 16 கிமீ தூரம் வரை பயணிக்க அனுமதிக்கிறது.

## பரம் வீர் பயணம்




- அந்தமான் & நிக்கோபார் முப்படைகளின் படைப்பிரிவானது 'பரம் வீர் பயணத்தினை' தொடங்கியுள்ளது.
- இது பரம் வீர் சக்ரா (PVC) விருது பெற்றவர்களின் பெயரிடப்பட்ட அந்தமான் & நிக்கோபார் தீவுக் கூட்டங்களின் 21 தீவுகளுக்கு மேற்கொள்ளப்பட உள்ள முதல்-வகையான திறந்த வெளி நீச்சல் பயணம் ஆகும்.
- 300 கிலோ மீட்டருக்கு மேலான தொலைவு கொண்ட 21 தீவுகளுக்கும், ஐந்து மாத கால இடைவெளியில் இக்குழு நீந்திப் பயணித்தது.
- படைப்பிரிவு தளபதி பரம்வீர் சிங் தலைமையிலான 11 பேர் கொண்ட பயணக் குழு இதனை மேற்கொண்டுள்ளது.

## 6வது உணவுப் பாதுகாப்பு குறியீடு 2024

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது இந்தத் தர வரிசையை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில் (SFSI) கேரள மாநிலமானது மீண்டும் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக கேரளா இந்தக் குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்து உள்ளது.
- கடந்த ஆண்டு மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்ட தமிழகம், இம்முறை இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீர், குஜராத் மற்றும் நாகாலாந்து ஆகியவை முதல் இதில் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், முதலிடத்தில் இருந்த குஜராத்தைப் பின்னுக்குத் தள்ளி தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்தது.




## INSPIRE– MANAK திட்டம்

- INSPIRE– MANAK திட்டத்தின் 11வது தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் திட்டப் போட்டியின் (NLEPC) வெற்றியாளர்களுக்கான பாராட்டு விழாவானது புது டெல்லியில் நடைபெற்றது.
- இதன் முக்கியத்துவம் ஆனது, போட்டியின் பங்கேற்பாளர்களில் 52% பெண்கள் ஆவர் என்பது இந்த முன்னெடுப்பின் பெரும் பாலின உள்ளடக்கத் தன்மையை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இது தேசியக் கண்டுபிடிப்பு அறக்கட்டளை (NIF) – இந்தியா அமைப்புடன் இணைந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் (DST) தொடங்கப்பட்ட ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- இத்திட்டம் ஆனது படைப்பாற்றல் மற்றும் புதுமைகளை ஊக்குவித்து, மாணாக்கர் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்து பொறுப்புள்ள குடிமக்கள் மற்றும் பெரும் தலைவர்களாக மாற உதவுகிறது.



## அம்ரித் கட்லா மீன்

- புவனேஸ்வரில் உள்ள மத்திய நன்னீர் மீன் வளர்ப்பு நிறுவனத்தில் (CIFA) மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட பல்வேறு வகையான கட்லா மீன் (லேபியோ கட்லா) மீன்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.
- இது ஓராண்டில் 1.2 கிலோ எடையினை எட்ட முடிகின்ற உள்ளூர் இன மாதிரிகளை விட கூட்டு மீன் வளர்ப்பு முறைகளில் சராசரியாக 1.8 கிலோ வரையிலான எடையை எட்ட முடியும் என்ற திறனை நிரூபித்துள்ளது.
- இது மீன் முட்டைகளின் தரம் மற்றும் மீன் விவசாயிகளின் வருமானத்தை மிக நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் போது, அலங்கார மீன் வளர்ப்புத் துறைகளுக்கான ஒரு எண்ணிமத் தளமான 'ரங்கீன் மச்லி' என்ற செயலியும் அறிமுகப் படுத்தப் பட்டது.


## முக்கிய IPEF ஒப்பந்தங்கள்




- இந்திய-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் (IPEF) கீழ் இந்தியா மூன்று முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தங்கள், பசுமை ஆற்றல் சார் பொருளாதாரத்தின் உக்கிய கூறுகள், நியாயமான பொருளாதாரம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த IPEF நிர்வாகக் கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் கவனம் செலுத்துகின்றன.
- IPEF அமைப்பின் கட்டமைப்பு ஆனது 2022 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதியன்று டோக்கியோ நகரில் தொடங்கப்பட்டது.
- IPEF என்பது அதன் 14 உறுப்பினர் நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பையும் ஈடுபாட்டையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முயற்சியாகும்.
- இந்தக் கட்டமைப்பு ஆனது வர்த்தகம் (பிரிவு I), விநியோக சங்கிலி மீள்தன்மை (பிரிவு II), தூய்மை பொருளாதாரம் (பிரிவு III), மற்றும் நியாயமான பொருளாதாரம் (பிரிவு IV) ஆகிய நான்கு முக்கியப் பிரிவுகள் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது.

## PM-JUGA திட்டம்

- மத்திய அமைச்சரவையானது, “பிரதான் மந்திரி ஜன்ஜாதிய உன்னத் கிராம் அபியான்” திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திட்ட ஒருங்கிணைப்பு மூலம் பழங்குடியின சமூகங்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது "காடுகளை நன்குப் பராமரிப்பதற்கும் வளங்காப்பதற்கும் வழி வகுப்பதற்காக" அனைத்து வன உரிமைகள் சட்டத்தின் (FRA) கீழும் பட்டா வைத்திருப்பவர்களுக்கும் நிலையான வேளாண் நடைமுறைகளை கொண்டு வருகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப் படி, பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் (ST) மற்றும் பிற ஆதிவாசிக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் சமூகங்களுக்கு 24 லட்சத்திற்கும் அதிகமான FRA பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இது நாடு முழுவதும் 1.9 கோடி ஏக்கர் வன நிலத்தை உள்ளடக்கியது.
- இருப்பினும், FRA சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 50.5 லட்சம் கோரிக்கைகளில் 34.83% நிராகரிக்கப்பட்டது மற்றும் 15.9% நிலுவையில் உள்ளது.
- PMJUGA திட்டத்தின் கீழ் இலக்காகக் கொண்ட 63,000 பழங்குடியினர் பெரும்பான்மை யாக வாழும் கிராமங்கள் இந்தியா முழுவதும் 549 மாவட்டங்களில் 2,740 தொகுதிகளில் அமைந்துள்ளன.




## உணவு இறக்குமதி நிராகரிப்பு எச்சரிக்கைக்கான இணைய தளம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையம் (FSSAI) ஆனது உணவு இறக்குமதி நிராகரிப்பு எச்சரிக்கை (FIRA) என்ற இயங்கலை இயங்கு தளத்தினை உருவாக்கி உள்ளது.

- இந்திய எல்லைகளில் உணவு இறக்குமதி நிராகரிப்புகள் குறித்து பொதுமக்கள் மற்றும் தொடர்புடைய உணவுப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிப்பதை இது ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மோசமானப் பாதுகாப்புத் தரங்கள் காரணமாக இந்திய அரசினால் நிராகரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்து இது எச்சரிக்கைகளை உருவாக்கும்.
- நிராகரிக்கப்பட்ட உணவினால் ஏற்படும் உணவுப் பாதுகாப்பு மற்றும் உடல்நல அபாயங்கள் குறித்து உலகெங்கிலும் உள்ள அதிகாரிகளிடையே விரைவான தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கு இந்த இணைய தளம் வழிவகுக்கும்.
- சமீபத்தில் FSSAI ஆனது இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 1,500 உணவுப் பொருட்களை நிராகரித்துள்ளது.




## புற்றுநோய் சார்ந்த பல் தொகையியல் தரவு தளம்

- இந்தியப் புற்றுநோய் மரபணு தகவல் தொகுப்பு (ICGA) அமைப்பால் இந்தியாவிற்கான புற்றுநோய் சார்ந்த பல் தொகையியல் தரவு தளமானது தொடங்கப்பட்டுள்ளது.
- இது இந்தியப் புற்றுநோயாளிகளிடமிருந்து மருத்துவ ரீதியாக தொடர்புடைய பல் தகவல்களை தடையற்ற முறையில் அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- இது மருத்துவ விளைவுகளுடன் இணைக்கப்பட்டுள்ள டிஎன்ஏ, ஆர்என்ஏ மற்றும் மார்பகப் புற்றுநோயாளிகளின் புரதங்களின் மீதான பல விவரங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியது.
- இது தனிப்பட்ட சிகிச்சை நெறிமுறைகளை உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 'ஏக் பெட் மா கே நாம்' செயலி


- மத்திய அரசானது, 'ஏக் பெட் மா கே நாம்' செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தாய்மார்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையேயான ஒரு பிணைப்பைக் கொண்டாடும் அதே வேளையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துவதை இந்த செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஒரு தனித்துவமான தளமான இதில் பயனர்கள் தங்கள் தாய்மார்களின் நினைவாக ஒரு மரத்தை நட்டு அர்ப்பணிக்க முடியும்.
- இவ்வாறு அர்ப்பணிக்கப்பட்ட மரம் நடப்பட்ட இடம், அட்சரேகை, தீர்க்கரேகை மற்றும் நேரம் ஆகியவற்றினைத் தானாகவே பதிவு செய்து கொள்ளும்.

## நாய் வடிவ எந்திரம் - இந்திய இராணுவம்

- இந்திய இராணுவம் ஆனது 100 நாய் வடிவ சுமக்கும் சாதனங்களை (கால்களைக் கொண்ட பல்பயன்பாட்டு உபகரணம்) வாங்கியுள்ளது என்ற நிலைமையில் இது முன்னோக்கி நகர்த்துவதற்கு, குறிப்பாக அதிக உயரத்தில் உள்ள பகுதிகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவும்.
- உயரமான பகுதிகளுக்கான புதிய கூடாரம் ஆனது -40 டிகிரி செல்சியஸ் வரையிலான வெப்ப நிலையில் நிலைப்படுத்துவதற்கான மதிப்பாய்வுக் கட்டத்தில் உள்ளது.
- இந்தச் சாதனமானது ஒரு அதி நவீன செயல் திறன் கொண்ட, சுறுசுறுப்பான மற்றும் அனைத்து வானிலைகளிலும் இயங்கக்கூடிய, பரந்த அளவிலான கட்டமைக்கப்படாத நகர்ப்புற மற்றும் கடினமான இயற்கை சூழல்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு ரோபோ ஆகும்.


## ஒருங்கிணைந்த பெருங்கடல் ஆற்றல் குறித்த தகவல் தொகுப்பு வரைபடம்



- ஐதராபாத்தில் உள்ள இந்திய தேசியப் பெருங்கடல் தகவல் சேவை மையத்தின் (INCOIS) ஆராய்ச்சியாளர்கள் ஒருங்கிணைந்தப் பெருங்கடல் ஆற்றல் குறித்த தகவல் தொகுப்பு வரைபடத்தினை உருவாக்கியுள்ளனர்.
- ஓத அலைகள் மற்றும் நீரோட்டங்கள் போன்ற கடல் சார் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து ஆற்றலை உருவாக்கச் செய்யும் திறன் கொண்ட இந்தியாவின் கடற்கரையோரத் தளங்களை இது வரைபடமாக்குகிறது.
- இது கடற்கரையோரத்தில் உள்ள சாத்தியமான ஆற்றல் மூல தளங்களில் தனிப்பட்ட அல்லது ஒருங்கிணைந்த கடல் சார் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் இருந்து உருவாக்கக்கூடிய புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மதிப்பிடப்பட்ட பல்வேறு மதிப்புகளை வழங்குகிறது.

- இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் (EEZ) ஆனது பல கடல் சார் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து சுமார் 9.2 லட்சம் டெராவாட் மணி நேர (TWh) ஆற்றலை உருவாக்கும் வகையிலான திறனைக் கொண்டுள்ளது.
- இந்தியா சுமார் 7,000 கிலோ மீட்டர் நீளமுள்ள பரந்தக் கடற்கரையைக் கொண்டுள்ளது என்பதால் இது ஆற்றல் உற்பத்திக்குப் போதுமான வாய்ப்பை வழங்குகிறது.


## இந்தியாவில் KAVACH 4.0 பாதுகாப்பு அமைப்பு




- மத்திய இரயில்வே அமைச்சகத்தின் கூற்றுப்படி, 10,000 இரயில் என்ஜின்கள் மற்றும் 9,000 கிலோ மீட்டர் இரயில் பாதைகளில் முதல் கட்டமாக KAVACH 4.0 பாதுகாப்பு அமைப்பு பொருத்தப்படும்.
- இது 2030 ஆம் ஆண்டு டிசம்பர மாதத்தில் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- சுமார் 130 கிலோ மீட்டர் வேகத்தில் இயங்கிய ஓர் இரயிலில் பொருத்தப்பட்ட கவாச் அமைப்பானது எச்சரிக்கை மண்டலம் பகுதிகளில் இரயிலின் வேகத்தைத் தானாகவே 120 கிமீ வேகத்திற்கு குறைத்து அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிய பிறகு 130 கிமீ வேகத்தில் மீண்டும் இயக்கத் தொடங்கியது.
- ஓட்டுநரின் இடையீடு இல்லாமல் சிவப்பு நிற ஒளி சமிக்ஞை திரையாகும் பகுதியில் இருந்து 50 மீட்டர் தொலைவிலேயே இரயில் நிற்கும்.
- ஓட்டுநர் ஒலி சமிக்ஞையினைப் பயன்படுத்தவில்லை என்றாலும் இருப்புப் பாதைக் கடப்புப் பகுதியை இரயில் கடக்கும் போது KAVACH தானாகவே அதனை ஒலிக்கச் செய்கிறது.
- ஓட்டுநர் நிறுத்தாமல் கடக்க முயன்றபோதும் சிவப்பு நிற விளக்கு எரிந்ததும் இரயில் தானாகவே நிற்க செய்கிறது.


## குழந்தைகள் சம்பந்தப்பட்ட பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் சார்ந்த நடவடிக்கைகள்

- குழந்தைகள் சம்பந்தப்பட்ட ஆபாசப் படங்களைத் தனிப்பட்ட முறையில் பார்ப்பது, பதிவிறக்கம் செய்தல், சேமித்தல், வைத்திருப்பது, பரவச் செய்தல் அல்லது காட்சிப் படுத்துதல் ஆகியவை POCSO சட்டத்தின் கீழ் குற்றம் சார்ந்த பொறுப்புக் கூறலின் கீழ் வரும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தத் தீர்ப்பு ஆனது இந்த ஆண்டு தொடக்கத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஒரு தீர்ப்பை ரத்து செய்துள்ளது.
- தனிநபர் ஒருவர் "ஒரு குழந்தை அல்லது குழந்தைகளை ஆபாச நோக்கங்களுக்காக நேரடியாகப் பயன்படுத்தாத வரையில்" அத்தகையப் படங்களை "வைத்திருப்பது மட்டும்" சட்டத்தை மீறுவதாகாது என்று சென்னை உயர் நீதிமன்றம் முன்பு கூறியது.
- ஆனால் உச்ச நீதிமன்றம் ஆனது ஒரு நபர் தனது ஈடுபாட்டுடன் தயாரிக்கவில்லை அல்லது பரவச் செய்யவில்லை என்றாலும், நேரடி உடைமை மட்டுமல்லாமல் அதன் "ஆக்கப் பூர்வமான உடைமையும்" POCSO சட்டத்தின் 15வது பிரிவின் கீழ் வரும் என்று முடிவு செய்தது.
- ஆக்கப் பூர்வமான உடைமை என்பது ஒன்றன் கட்டுப்பாடு குறித்த தகவலோடு சேர்த்த ஒன்றின் மீதான முழுக் கட்டுப்பாடு ஆகும்.



# சர்வதேசச் செய்திகள்

## வரலாறு காணாத குளிர்கால வெப்பநிலை – ஆஸ்திரேலியா




- ஆஸ்திரேலியாவின் வடமேற்குக் கடற்கரையின் ஒரு பகுதியில் 41.6 டிகிரி செல்சியஸ் என்ற அளவிலான அதிகபட்ச குளிர்கால வெப்பநிலை பதிவாகியுள்ளது.
- இது முந்தையப் பதிவை விட 0.4 C அதிகமாக உள்ளது.
- 41.2C என்ற முந்தைய அதிகபட்ச அளவானது 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெஸ்ட் ரோபக் அருகிலுள்ள பகுதியில் பதிவானது.
- ஆஸ்திரேலியாவின் சுமார் 18 சதவீதப் பகுதியானது பாலைவனமாகவும், ஆண்டு முழுவதும் அதிக வெப்பம் கொண்டதாக மித வெப்ப மண்டலம் என்ற நிலையில் இருந்து சற்று விலகியதாகக் குறிக்கப்படுகிறது.
- ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை, உலக வெப்பநிலை 1991-2020 ஆம் கால கட்டத்தில் இருந்த சராசரியை விட 0.7C அதிகமாக இருந்தது.

## மிகப்பெரிய சரக்குப் பொருள் ஏற்று ஆளில்லா விமானம் - சீனா

- 3.2 மெட்ரிக் டன் சரக்குகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட பொதுப் பயன்பாட்டு ஆளில்லா விமானத்தை சீன விமானப் போக்குவரத்து துறை சோதனை செய்துள்ளது.
- இந்த விமானம் ஆனது 7,300 மீட்டர் (24,000 அடி) உயரம் வரை இயங்கக் கூடியது மற்றும் 2,200 கிலோ மீட்டர் (1,367 மைல்கள்) வரை பறக்கக் கூடியது.
- சரக்குப் பொருள் ஏற்று ஆளில்லா விமானங்கள் ஆனது, பொருட்களைக் குறைவான நேரத்தில் கொண்டு சேர்க்க வல்லது என்பதோடு அது குறைந்த அளவு போக்குவரத்து செலவினங்களைக் கொண்டது.


## புதிய தற்கொலை தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா விமானங்கள் - வட கொரியா

- வடகொரியாவானது புதிய "தற்கொலைப் பாங்கான தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா விமானத்தினை" வெளியிட்டுள்ளது.
- இந்த ஆளில்லா விமானங்கள் ஆனது எதிரி இலக்குகளை வேண்டுமென்றே மோதச் செய்வதற்காக என்று வடிவமைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களைச் சுமந்து செல்லும் ஆளில்லா விமானங்கள் ஆகும், எனவே அவை வழிகாட்டப்பட்ட ஏவுகணைகளாக திறம்பட செயல்படுகின்றன.
- HAROP போல தோற்றமளிக்கும் தற்கொலைப் பாங்கான தாக்குதலில் ஈடுபடும் ஆளில்லா விமானங்கள் ஆனது 1000 கிலோமீட்டருக்கு (600 மைல்கள்) மேல் பறக்கும் திறன் கொண்டது.



## அஸ்னா புயல்

- குஜராத்தின் கட்ச் கடற்கரை மற்றும் பாகிஸ்தானை ஒட்டியுள்ள பகுதிகளில் அஸ்னா புயல் உருவாகியுள்ளது.
- ஆகஸ்ட் மாதத்தில் நிலத்தில் தோன்றிய இந்த அரிய சூறாவளியான இது அரபிக்கடலை நோக்கிச் செல்கிறது.
- இது 1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு, ஆகஸ்ட் மாதம் அரபிக்கடலில் உருவான முதல் சூறாவளிப் புயலாகும்.
- "அங்கீகரிக்கப்பட வேண்டியவர் அல்லது போற்றப்பட வேண்டியவர்" என்று பொருள் படும், அஸ்னா எனும் இப்பெயரானது பாகிஸ்தானால் வழங்கப்பட்டது.
- 1891 ஆம் ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், ஆகஸ்ட் மாதம் (1976, 1964 மற்றும் 1944 ஆம் ஆண்டில்) மட்டும் அரபிக்கடலில் மூன்று சூறாவளி புயல்கள் மட்டுமே உருவாகின.




## பசிபிக் தீவுகள் மன்றம் 2024

- பசிபிக் தீவுகள் மன்றத்தின் ஆண்டுக் கூட்டமானது டோங்கா நாட்டின் தலைநகரான நுகுஅலோபாவில் நடைபெற்றது.
- 1971 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தப் பசிபிக் தீவுகள் மன்றமானது பசிபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள 18 உறுப்பு நாடுகளைக் கொண்ட வகையில் அரசுகளுக்கு இடையேயான ஒரு அமைப்பாகும்.
- ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பப்புவா நியூ கினியா, பிஜி, டோங்கா மற்றும் குக் தீவுகள் போன்றவை குறிப்பிடத்தக்க சில உறுப்பு நாடுகளாகும்.




## பருவநிலை மற்றும் நிலையான மேம்பாட்டு ஒத்துழைப்பு கட்டமைப்பு

- இரண்டு நாட்கள் அளவிலான நவீன சூழ்நிலைகளில் BRICS பருவநிலைச் செயல்பாட்டு நிரல் மன்றத்தில் கூட்டம் மாஸ்கோ நகரில் நடைபெற்றது.
- பருவநிலை மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான கட்டமைப்பை BRICS நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

- இந்த ஆவணம் ஆனது பருவநிலை நடவடிக்கையின் மிகவும் முக்கிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது என்பதோடு இதில் ஒரு முறையான மாற்றம், தணிப்பு, ஏற்பு, கார்பன் சந்தைகள், நிதி, அறிவியல் மற்றும் வணிக ஈடுபாடு ஆகியவையும் அடங்கும்.
- BRICS நாடுகள் ஆனது உலக மக்கள்தொகையில் சுமார் 41 சதவிகிதம், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 24 சதவிகிதம் மற்றும் உலக வர்த்தகத்தில் சுமார் 16 சதவிகிதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்டுள்ளது.




## பண வழங்கீட்டுக் கடவுக் குறியீட்டுச் சேவை





- மாஸ்டர்கார்டு நிறுவனமானது அதன் புதிய பண வழங்கீட்டுக் கடவுக் குறியீட்டுச் சேவையை உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இயங்கலை வழியிலான பொருள் வாங்கல் நடவடிக்கைகளை முன்பு இருந்ததை விட பாதுகாப்பானதாகவும் எளிதாகவும் மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தச் சேவையானது, நாட்டின் மிகப் பெரிய சில பண வழங்கீட்டு நிறுவனங்களுடன் இணைந்து சோதனை முறையில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பண வழங்கீட்டு (கட்டண) கடவுக் குறியீடுகள் கைரேகைகள் அல்லது முக அடையாள அங்கீகாரம் போன்ற சாதனங்கள் அடிப்படையிலான சில உயிரியளவியல் பதிவு அமைப்புகளைப் பயன்படுத்துகின்றன.
- இவை பாரம்பரியக் கடவுச்சொற்கள் மற்றும் ஒற்றைப் பயன்பாட்டுக் குறியீடுகளுக்கு மாற்றாக அமைகின்றன.
- கடவுக் குறியீட்டுச் சேவையானது பரிவர்த்தனைகளை மிக விரைவாக மட்டுமின்றி, மோசடி மற்றும் முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் மிகப் பாதுகாப்பானதாகவும் ஆக்குகிறது.

## சர்வதேச செயற்கை நுண்ணறிவு உடன்படிக்கையின் சட்டப்பூர்வ பிணைப்பு

- அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான முதன்முதலான சட்டப்பூர்வ பிணைப்பு சார்ந்த சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது செயற்கை நுண்ணறிவு, மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டத்தினை நிலைப்படுத்துதல் பற்றிய ஐரோப்பிய சபை கட்டமைப்பு ஒப்பந்தம் என அழைக்கப் படுகிறது.
- இது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதோடு புதுமைகளைச் சமநிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இந்தச் செயற்கை நுண்ணறிவு உடன்படிக்கையானது, 57 நாடுகளுக்கு இடையே பல ஆண்டுகளாக நடந்தப் பேச்சுவார்த்தைகளின் விளைவாகும்.

## அதிவெப்பமான வடக்கு அரைக்கோள கோடைக்காலம்



- 2024 ஆம் ஆண்டின் கோடைக்காலமானது, வடக்கு அரைக்கோளத்தில் பதிவு ஆன மிக வெப்பமான கோடைக்காலமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் வட திசை சார் கோடை மாதங்கள் ஆனது இதற்கு முந்தையதாக பதிவான அனைத்து அதிக வெப்பநிலைப் பதிவுகளையும் விஞ்சியது.
- 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் வெப்பமான ஆண்டாக 2023 ஆம் ஆண்டினை விஞ்சுவதற்கான பாதையில் உள்ளது.
- மனிதனால் தூண்டப்பட்டப் பருவநிலை மாற்றம் மற்றும் எல் நினோ பருவநிலை நிகழ்வு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிலையே இந்த சாதனை அளவினை விஞ்சும் வெப்பநிலைக்குக் காரணமாகும்.
- எல் நினோ, கிழக்கு பசிபிக் பெருங்கடலில் மேற்பரப்பு நீர் வெப்பமடைவதன் மூலம் வகைப்படுத்தப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது மிக அதிகபட்ச சராசரி கடல் மேற் பரப்பு வெப்பநிலை பதிவு செய்யப்பட்டது என்பதோடு இது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவான அளவை விஞ்சியது.
- இத்தாலி, சிசிலி மற்றும் சர்தினியா போன்ற பகுதிகள் பருவநிலை மாற்றத்துடன் நேரடியாக தொடர்புடைய கடுமையான வறட்சி காரணமாக தொடர்ந்து மோசமான நிலையினை எதிர்கொண்டு வருகின்றன.

## நோய்க் கிருமிகளின் தோற்றம் குறித்த உலகளாவியக் கட்டமைப்பு

- உலக சுகாதார அமைப்பானது (WHO) ஒரு புதிய உலகளாவிய கட்டமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது தொற்றுநோய்கள் அல்லது பெருந்தொற்றுகளை ஏற்படுத்தும் திறன் கொண்ட புதிய மற்றும் மீண்டும் உயிர்த்து வரும் நோய்க்கிருமிகளின் தோற்றம் பற்றிய ஒரு விசாரணையை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- ஆரம்பகால தொற்றுநோயியல் ஆய்வுகள், மனித நோய்ப் பாதிப்பு முறைகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் ஆய்வக பாதுகாப்பு நெறிமுறைகள் உள்ளிட்ட விசாரணைகளுக்கு வழி காட்டும் ஆறு தொழில்நுட்பக் கூறுகளை இது குறிப்பிட்டுக் காட்டுகிறது.




Figure 1: Stages of emergence, spillover and potential spillback through zoonotic spillover

## தாலிபான்களின் புதிய "அறநெறிச் சட்டம்"




- ❖ தாலிபான் அமைப்பின் உயர் நிலை தலைவர் ஆப்கானிஸ்தான் நாட்டின் "அறநெறிச் சட்டத்தை" இயற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
- ❖ இது நாட்டில் பெண்கள் மற்றும் பிற குழுக்கள் மீதான கட்டுப்பாடுகளை முறைப் படுத்திச் சட்டமாக்குகிறது.
- ❖ அவர்கள் 114 பக்கச் சட்டத்தினை வெளியிட்டுள்ளனர், 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தாலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு இது போன்ற சட்டங்கள் முதல் முறையாக இயற்றப்பட்டுள்ளன.
- ❖ பொது இடங்களில் ஒரு பெண் எல்லா நேரங்களிலும் முகம் உட்பட தனது முழு உடலையும் மறைக்க வேண்டும் என்பதை இந்தச் சட்டம் கட்டாயமாக்குகிறது.
- ❖ பெண்கள் தங்கள் வீட்டிற்குள் கூட பாடல் பாடவோ, சத்தமாக புத்தகம் வாசிக்கவோ கூடாது.
- ❖ இரத்த பந்தம் அல்லது திருமண உறவில் இல்லாத பெண்களும் ஆண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வது கூட தடை செய்யப்பட்டுள்ளது.
- ❖ முன்னதாக தலிபான்கள் 6 ஆம் வகுப்புக்கு மேல் பெண்கள் கல்வி கற்க என்று தடை விதித்தனர்.

## சீன-ஆப்பிரிக்க கூட்டுறவு மன்றம் (FOCAC) 2024

- ❖ சீன அரசானது 9வது சீன-ஆப்பிரிக்க கூட்டுறவு (FOCAC) உச்சி மாநாடானது சீனாவின் பெய்ஜிங் நகரில் நடத்தியது.
- ❖ சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆப்பிரிக்க நாடுகளுக்கு 51 பில்லியன் டாலர் நிதியுதவி வழங்கினார்.
- ❖ சீன-ஆப்பிரிக்க கூட்டுறவு மன்றம் ஆனது 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இது சீன மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு இடையிலான உத்தி சார் கூட்டாண்மையை முறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- FOCAC உச்சி மாநாடு ஆனது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது என்ற நிலையில் சீனா மற்றும் ஒரு ஆப்பிரிக்க நாடு ஆகியவை சுழற்சி முறையில் மாறி மாறி இந்த உச்சி மாநாட்டினை நடத்தி வருகின்றன.
- FOCAC அமைப்பில் 53 ஆப்பிரிக்க நாடுகள் - எஸ்வதினியைத் தவிர முழுக் கண்டமும் - அதில் உறுப்பினர்களாக உள்ளன.
- பெய்ஜிங்கின் "ஒரே சீனா" கொள்கைக்கு எதிராக எஸ்வதினி நாடு தைவானுடன் அரசு முறை உறவுகளைக் கொண்டுள்ளது.

## சுவிட்சர்லாந்து - உலகின் சிறந்த நாடு

- இந்தக் கணக்கெடுப்பானது, 10 வெவ்வேறு உள் தரநிலைகளைப் பயன்படுத்தி ஒரு உலகளாவியக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் சுமார் 89 நாடுகளை தரவரிசைப் படுத்துகிறது.
- சுவிட்சர்லாந்து நாடானது வாழ்க்கைத் தரம் மற்றும் சுதந்திரமான வணிகம் ஆகியவற்றின் பல அளவுருக்களில் முன்னணி இடத்தில் உள்ளதோடு பாரம்பரியத் துறையில் அந்நாடு குறைந்தத் தரவரிசையில் இடம் பெற்றுள்ளது.
- மத்திய ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து இக்கணக்கெடுப்பில் ஏழாவது முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஐரோப்பிய நாடுகள் முதல் 25 இடங்களில் பெரும்பான்மை இடங்களைப் பெற்றுள்ளன.
- சுவிட்சர்லாந்தைத் தொடர்ந்து ஜப்பான், அமெரிக்கா, கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- இந்திய நாடானது 2023 ஆம் ஆண்டு பட்டியலில் இருந்த இடத்தினை விட மூன்று இடங்கள் சரிந்து, இந்த ஆண்டின் பட்டியலில் 33 வது இடத்தில் உள்ளது.
- ஜப்பான், சிங்கப்பூர், சீனா மற்றும் தென் கொரியா மட்டுமே ஆசியாவில் முதல் 25 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளன.

## நீதித்துறை சீர்திருத்த மசோதா – மெக்சிகோ

- மெக்சிகோவின் பேரவையாளர்கள் மிகவு சர்ச்சைக்குரிய ஒரு நீதித்துறை சீர்திருத்த மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளனர்.
- இந்தப் புதிய நடவடிக்கைகளின் கீழ், நாட்டின் உச்ச நீதிமன்றம் உட்பட - அனைத்து மட்டங்களிலும் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்காளர்களுக்கு அனுமதி வழங்கும் உலகின் முதல் நாடாக மெக்சிகோ மாற உள்ளது.
- அங்கு உச்ச நீதிமன்றத்திற்கான நீதிபதிகள் பொதுவாக அதிபர் சமர்ப்பித்த இறுதிப் பட்டியலில் இருந்து பேரவையினால் உறுதிப்படுத்தப்படுகின்றனர்.
- இந்த மசோதா 11 ஆக இருந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 9 ஆகக் குறைத்து, அவர்களின் பதவிக் காலத்தை 12 ஆண்டுகளாகக் குறைத்துள்ளது.
- இது 35 வயதிற்குட்பட்ட நபர் என்ற குறைந்தபட்ச வயது என்ற நிபந்தனையினை நீக்கி உள்ளது என்பதோடு மேலும் கட்டாயப் பணி அனுபவத்தைப் பாதியாக குறைத்து ஐந்து ஆண்டுகளாக நியமித்துள்ளது.





## பிரிக்ஸ் அமைப்பில் துருக்கி




- பிரிக்ஸ் கூட்டணியில் சேர துருக்கி சமீபத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.
- BRICS என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் ஒரு பெயர் சுருக்கமாகும்.
- வளர்ந்து வரும் சந்தை நாடுகளின் குழுவான இது, அந்த நாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்த முயல்கிறது.
- இந்த ஆண்டு, இவ்வமைப்பு ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நான்கு புதிய உறுப்பினர்களைப் பெற்றது.
- துருக்கி நாடானது நீண்டகால மேற்கத்திய நட்பு நாடாகவும் 1952 ஆம் ஆண்டு முதல் நேட்டோ உறுப்பினராகவும் இருந்து வருகிறது.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதில் துருக்கி தொடர்ந்து ஒரு நிராகரிப்பை எதிர் கொண்டுள்ளது.

## நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் உற்பத்தி செயல்முறையினால் ஏற்படும் முக்கிய மாசுபாட்டைச் சமாளிப்பதற்கான உலகளாவிய வழிகாட்டுதல்




- ❖ உலக சுகாதார அமைப்பானது, நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பல்வேறு உற்பத்திச் செயல்முறைகளில் இருந்து உருவாகும் மாசுபாடு குறித்த தனது முதல் உலகளாவிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.
- ❖ நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் உற்பத்திக்கான கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மீதான மேலாண்மை குறித்த வழிகாட்டுதல் என்ற தலைப்பில் இந்த ஆவணம் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ கட்டுப்பாட்டு அமைப்புகள், தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் நுண்ணுயிர் எதிர்ப்பு மாசுபாட்டிற்கு எதிரான கட்டுப்பாடுகளை மிகவும் திறம்படச் செயல்படுத்துவதற்கான ஓர் அறிவியல் பூர்வ கட்டமைப்பை இந்த விரிவான ஆவணம் வழங்குகிறது.

## PCAPS திட்டம்

- ❖ உலக வானிலை அமைப்பு ஆனது, "துருவப் பகுதிக்கான ஒருங்கிணைந்த பகுப்பாய்வு மற்றும் கணிப்பு சேவை" (PCAPS) திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பகுதிகளில் வானிலை முன்னறிவிப்பை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் பிராந்தியங்களில் வானிலை, நீர், பனி மற்றும் பருவநிலை பற்றிய பல்வேறு தகவல்களை இது மேம்படுத்தும்.
- ❖ இந்தத் திட்டமானது சிறப்பான கண்காணிப்பு அமைப்புகள், புவி அமைப்பு மாதிரிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட முன்னறிவிப்பு சேவைகளுக்கு உதவும்.
- ❖ PCAPS என்பது உலக வானிலை அமைப்பின் உலக வானிலை ஆராய்ச்சித் திட்டத்தின் (WWRP) ஒரு பகுதியாகும்.

## ஜிம்பாப்வேயில் யானைகளை கொல்லும் திட்டம்




- ஜிம்பாப்வே கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான மோசமான வறட்சிக்குப் பிறகு மிகவும் கடுமையானப் பட்டினி நிலையினை எதிர்கொள்ளும் சமூகங்களுக்கு உணவளிப்பதற்காக 200 யானைகளை கொல்ல திட்டமிட்டுள்ளது.
- எல் நினோ நிகழ்வினால் தூண்டப்பட்ட இந்த வறட்சி ஆனது தென்னாப்பிரிக்காவில் பயிர்களை அழித்து, 68 மில்லியன் மக்களை பாதித்தது மற்றும் பிராந்தியம் முழுவதும் உணவுப் பற்றாக்குறையை ஏற்படுத்தியது.
- இந்த நடவடிக்கையானது 1988 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் முதன்முறையாக, ஹ்வாங்கே, எம்பைர், ஷோலோட்ஷோ மற்றும் சிரெட்ஸி மாவட்டங்களில் நடைபெற உள்ளது.
- அண்டை நாடான நமீபியாவும் கடந்த மாதம் 83 யானைகளை கொன்று, வறட்சியால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இறைச்சியை வழங்க முடிவு செய்தது.
- ஜிம்பாப்வே, ஸாம்பியா, போட்ஸ்வானா, அங்கோலா மற்றும் நமீபியா ஆகிய ஐந்து தென்னாப்பிரிக்க நாடுகளில் பரவியுள்ள வளங்காப்பு பகுதியில் சுமார் 200,000க்கும் மேற்பட்ட யானைகள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஜிம்பாப்வே நாட்டில் 84,000 யானைகள் உள்ளன.
- ஜிம்பாப்வே நாடு சுமார் 600 மில்லியன் டாலர் மதிப்பிலான விற்பனை செய்ய முடியாத தந்த இருப்பினைக் கொண்டுள்ளது.

## தொழுநோய் ஒழிப்பு – ஜோர்டான்


- உலக சுகாதார அமைப்பின் (WHO) அதிகாரப்பூர்வச் சரிபார்ப்பு சான்றிதழைப் பெற்று, தொழுநோயை ஒழித்த உலகின் முதல் நாடாக ஜோர்டான் திகழ்கிறது.
- இந்தச் சான்றிதழைப் பெறுவதற்கு, ஒரு நாட்டில் பதிவான தொழுநோயின் பாதிப்பு எண்ணிக்கையானது 10,000 மக்கள்தொகைக்கு 1 பேருக்கும் கீழே குறைந்துள்ளது என்பது நிரூபிக்கப்பட வேண்டும்.
- அந்த நோயைக் கண்டறிவதற்கும், சிகிச்சையளிப்பதற்கும், பரவாமல் தடுப்பதற்கும் பயனுள்ள அமைப்புகளும் இருக்க வேண்டும்.

- தொழுநோய் என்பது ஹேன்சன் நோய் என்றும் அழைக்கப்படுவதோடு இது மைக்கோ பாக்டீரியம் லெப்ரேயினால் ஏற்படும் ஒரு நாள்பட்ட தொற்று நோயாகும்.
- இந்த நோயானது தோல், புற நரம்பு மண்டலம், மேல் சுவாசக் குழாயின் சீதமென்சவ்வு (மியூகோசல்) மேற்பரப்புகள் மற்றும் கண்களைப் பாதிக்கிறது.




## இலங்கையின் புதிய அதிபர் 2024

- இலங்கையின் புதிய அதிபராக அனுரகுமாரா திஸாநாயக்கே தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- அந்த நாட்டின் வரலாற்றில் மார்க்சிஸ்ட் தலைவர் அதிபராகப் பதவி ஏற்றது இதுவே முதன்முறையாகும்.
- அவரது கட்சி முன்னதாக, இலங்கையின் அப்போதைய அதிபர் J.R.ஜெயவர்த்தனே மற்றும் இந்தியாவின் இராஜீவ் காந்தி ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினைக் கடுமையாக எதிர்த்தது.




## கேன்சர் மூன்ஷாட் முன்னெடுப்பு




- குவாட் நாடுகளின் குழுவானது குவாட் கேன்சர் மூன்ஷாட் முன்னெடுப்பு எனப்படும் புற்றுநோய் முன்னெடுப்பினை உலகளவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பின்வருவனவற்றில் கவனம் செலுத்தும்
    - கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனையை விரிவுபடுத்துதல்;
    - கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான ஒரு முதன்மைக் காரணமாக இருக்கும் பொதுவான பாலியல் ரீதியாகப் பரவும் தொற்றான மனித பாப்பிலோமா வைரஸ் அல்லது HPV வைரசிற்கு எதிரான தடுப்பூசிகளை அதிகரித்தல்; மற்றும்
    - நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தல்.
- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் புற்றுநோய் பரிசோதனை, மதிப்பாய்வு மற்றும் நோய் அறிதலுக்காக 7.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை மானியமாக இந்தியா வழங்கி உள்ளது.

## புதிய கோவிட் வைரஸ் மாற்றுரு - XEC


- கோவிட்-19 XEC மாற்றுரு என அடையாளம் காணப்பட்ட சமீபத்திய மாற்றுருவானது, சுகாதார நிபுணர்களின் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, பொதுமக்களை கவலை அடையச் செய்துள்ளது.
- JN.1 திரிபின் வழித் தோன்றல்களான KS.1.1 மற்றும் KP.3.3 எனப்படுகின்ற இரண்டு நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட மாற்றுருக்களின் மீளிணைவு மாற்றுருக்கள் ஆனது கூட்டாக XEC என அழைக்கப்படுகிறது.
- புதிய கோவிட்-19 XEC மாற்றுரு ஆனது கூடுதல் பிறழ்வுகளைக் கொண்டுள்ளது, எனவே மற்ற திரிபுகளை விட இது மிகவும் தொற்றுத்தன்மை மிக்கது.
- மொத்தத்தில் இந்த மாற்றுரு 27 நாடுகளில் கண்டறியப் பட்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## ஒருங்கிணைந்த கடன் வழங்கீட்டு இடைமுகம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது ஒருங்கிணைந்த கடன் வழங்கீட்டு இடைமுகத்தினை (ULI) தொடங்குவதில் பணியாற்றி வருகிறது.
- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) போன்றே, இந்த ULI ஆனது கடன் வழங்கீட்டு கட்டமைப்பில் ஒரு புரட்சியினை ஏற்படுத்தும்.
- இந்த ULI இயங்குதளமானது பல்தரவு சேவை வழங்குநர்கள் முதல் கடன் வழங்கும் நிறுவனங்கள் வரை பல்வேறு மாநிலங்களின் நிலப் பதிவுகள் உள்ளிட்ட எண்ணிமத் தகவல்களின் தடையற்ற மற்றும் ஒப்புதல் அடிப்படையிலான வழங்கீட்டினை எளிது ஆக்கும்.
- இது குறிப்பாக மிகவும் சிறிய மற்றும் கிராமப்புற கடன் வாங்குபவர்களுக்கான கடன் மதிப்பீட்டு ஒப்புதலுக்கான நேரத்தைக் குறைக்கும்.


'NEW TRINITY: JAM-UPI-ULI'


"The new trinity of **JAM** (Jan Dhan-Aadhaar-Mobile)-**UPI-ULI** will be a revolutionary step forward in India's digital infrastructure journey

**—Shaktikanta Das** | RBI GUV

**What's Unified Lending Interface?**
➤ A standardised, plug-and-play system that aims to reduce the need for extensive **documentation** from borrowers
➤ It is designed to address unmet credit demand, particularly for agriculture and MSMEs, by digitising access to data like **land records**

## 2023-24 ஆம் ஆண்டிற்கான சிறந்த முதலீட்டு இடங்கள்

- 2023-24 ஆம் ஆண்டில் தனது மாநிலத்தில் செயல்படும் திட்டங்களுக்கு வங்கி நிதியை ஈர்ப்பதில் குஜராத் உத்தரப் பிரதேசத்தைப் பின்னுக்கு தள்ளியது.
- குஜராத் மாநிலம் அதன் 154 திட்டங்களுக்கு பெற்ற நிதியானது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப் பட்ட ரூ. 3.9 லட்சம் கோடியில் 14.7 சதவீதம் ஆகும்
- இது முந்தைய ஆண்டின் 14% பங்கை விட அதிகரித்துள்ளது.
- உத்தரப் பிரதேசமானது 69 திட்டங்களுக்கு நிதியைப் பெற்றுள்ளது, மேலும் அதன் பங்கு முந்தைய ஆண்டில் இருந்த 16.2% இல் இருந்து 7.6% ஆகக் குறைந்துள்ளது.
- மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியன முதலிடத்தில் உள்ள மற்ற சிறந்த முதலீட்டிற்கான மாநிலங்களாக உள்ளன.




## இந்தியாவின் தங்க நுகர்வு குறித்த கணிப்பு



- உலக தங்கச் சபையானது (WGC) 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் தங்க நுகர்வு ஆனது 750 டன்னிலிருந்து 850 டன்னாக உயரும் என்று கணித்துள்ளது.
- ஜூலை-செப்டம்பர் மாத காலாண்டில், இந்தியாவில் தங்கத்தின் தேவை ஆண்டுக்கு 10% அதிகரித்து 230 டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அதிக இறக்குமதி வரி காரணமாக ஏப்ரல்-ஜூன் மாத காலாண்டில் தங்கத்தின் தேவை ஆண்டிற்கு 5% குறைந்து 158.1 டன்னாக இருந்தது.
- ஜூலை 23 ஆம் தேதியன்று மத்திய நிதிநிலை அறிக்கையில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை 15 சதவீதத்திலிருந்து 6% ஆக அரசாங்கம் குறைத்ததன் மூலம், தங்கத்தின் தேவை விரைவாக உயர்ந்தது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் ஐந்து உத்தி சார் முன்னுரிமைகள்

- 5வது உலக நிதி சார் தொழில்நுட்பத் திருவிழாவானது (2024) மும்பை நகரத்தில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Blueprint for the Next Decade of Finance: Responsible AI | Inclusive | Resilient" என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, இந்தியாவின் நிதியக் கட்டமைப்பின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு அவசியமான பின்வரும் ஐந்து உத்தி சார் முன்னுரிமைகளை இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் குறிப்பிட்டுக் காட்டினார். அவை
    - நிதி உள்ளடக்கம்
    - எண்ணிமப் பொது உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் (DPI)
    - இணைய வெளிப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்
    - நிலையான நிதி வழங்கீட்டினை மேம்படுத்துதல்
    - நிதி உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல்.




## அதிகளவிலான அந்நியச் செலாவணிப் பதிவு 2024

- ஆகஸ்ட் 30 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு ஆனது 2.3 பில்லியன் டாலர்கள் உயர்ந்து 683.99 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

- இது அதிகபட்சமான டாலர் வரவினால் ஏற்பட்ட தொடர்ச்சியான மூன்றாவது வாராந்திர அந்நியச் செலாவணி கையிருப்பு உயர்வு ஆகும்.
- கடந்த மூன்று வாரங்களில் கையிருப்பு ஆனது 13.9 பில்லியன் உயர்ந்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தமாக 60 பில்லியன் டாலர் அந்நியச் செலாவணி கையிருப்பு உயர்ந்துள்ளது.
- இந்த வாரத்தில் தங்க கையிருப்பு 862 மில்லியன் டாலர் அளவுக்கு அதிகரித்து, மொத்தமாக 61.859 பில்லியன் டாலராக உள்ளது.





## UPI - உலகின் முன்னணி எண்ணிமப் பண வழங்கீட்டுத் தளம்

- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் செயலி அல்லது UPI ஆனது, இந்த ஆண்டின் ஏப்ரல்-ஜூலை மாத காலக் கட்டத்தில் சுமார் 81 லட்சம் கோடி ரூபாய் அளவிலான பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தியுள்ளது.
- இது உலகின் முன்னணி எண்ணிமப் பண வழங்கீட்டுத் தளங்களை மிஞ்சியுள்ளது.
- இந்த பரிவர்த்தனை பதிவானது வருடாந்திர வீதம் (YoY) அடிப்படையில் 37% அதிகரிப்பு என்று குறிப்பிடப்படுகிறது.
- Paysecure எனப்படும் உலகளாவியப் பண வழங்கீட்டு மையத்தின் படி, UPI ஆனது வினாடிக்கு 3,729.1 பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தியது.
- 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட, ஒவ்வொரு வினாடிக்கும் 2,348 என்ற அளவு பரிவர்த்தனைகளை விட இது 58% உயர்வாகும்.
- இந்தத் தரவின் மூலம், செயலாக்கப்பட்டப் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கையில் சீனாவின் அலிபே, பேபால் மற்றும் பிரேசிலின் PIX ஆகியவற்றினை UPI விஞ்சியுள்ளது.

- UPI ஆனது 2023 ஆம் ஆண்டில் 117.6 பில்லியன் பரிவர்த்தனைகளை செயல்படுத்தியது என்ற அளவில் இது உலகிலேயே மிக அதிகமாகும்.
- 2023-24 ஆம் ஆண்டில் 131 பில்லியனாக இருந்த UPI பரிவர்த்தனைகள் 2028-29 ஆம் ஆண்டிற்குள் 439 பில்லியனாக மூன்று மடங்கு அதிகரிக்கும் என்று சில அறிக்கைகள் கணித்துள்ளன.
- இது அனைத்து சில்லறை எண்ணிமப் பரிவர்த்தனைகளில் 91% ஆகும்.




## MSCI EM குறியீடு




- MSCI வளர்ந்து வரும் சந்தைகள் (EM) குறியீட்டின் முதலீட்டு சந்தைக் குறியீட்டில் (IMI) முதல் முறையாக இந்தியா சீனாவை விஞ்சியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியப் பங்குச் சந்தைகள் ஒன்றாக 22.27 சதவீதத்தைக் கொண்டு, சீனப் பங்குகளை விட முன்னணியில் உள்ளன.
- அவற்றின் கூட்டு மதிப்பு தற்போது 21.58 சதவீதமாக குறைந்துள்ளது.
- சீனாவின் 8.14 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சந்தை மூலதனம் ஆனது இந்தியாவின் 5.03 டிரில்லியன் டாலரை விட 60 சதவீதம் அதிகமாகும்.
- MSCI வளர்ந்து வரும் சந்தைகளின் முதலீட்டுச் சந்தைக் குறியீடு (EM IMI) என்பது 24 வளர்ந்து வரும் சந்தை நாடுகளில் உள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பங்குகளை உள்ளடக்கிய ஒரு விரிவான குறியீடாகும்.

## பாசுமதி அரிசியின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை

- சமீபத்தில் பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கான ஒரு குறைந்தபட்ச விலையை முற்றிலுமாக நீக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ஆகஸ்ட் 27, 2023 அன்று டன்னுக்கு 1,200 அமெரிக்க டாலருக்கும் குறைவாக பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதில்லை என அரசாங்கம் முடிவு செய்தது.
- கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், பாசுமதி அரிசி ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை ஒரு டன்னுக்கு 1,200 அமெரிக்க டாலரில் இருந்து 950 அமெரிக்க டாலராக அரசாங்கம் குறைத்தது.
- இந்தியாவின் மொத்தப் பாசுமதி அரிசி ஏற்றுமதியானது 2022-23 ஆம் ஆண்டில் விலை அடிப்படையில் 4.8 பில்லியன் அமெரிக்க டாலராகவும் அளவு அடிப்படையில் அது 45.6 லட்சம் டன்னாகவும் இருந்தது.

| Price Ceiling | Price Floor |
|---|---|
| Upper price limit imposed by the government | Lower price limit imposed by the government |
| Imposed on necessary items like wheat, rice, kerosene, etc. | Imposed on agricultural goods like Paddy, coconut, etc., and minimum wages for workers |
| It will always be less than equilibrium price | It will be more than equilibrium price |
| Creation of excess demand | Creation of excess supply |
| Fair price shops are opened | Excessively demanded quantity may be purchased by the government |

## காப்பீடுகள் மீதான வரி விகிதங்களின் மறுபரிசீலனை




- ❖ சரக்கு மற்றும் சேவை வரி சபையானது, பல்வேறு சுகாதார மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் தவணைகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக 13 பேர் கொண்ட ஒரு அமைச்சர்கள் குழுவை அமைத்துள்ளது.
- ❖ தற்போது, காப்பீட்டுத் தவணைகளுக்கு 18 சதவீதச் சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிக்கப் படுகிறது.
- ❖ கூடுதலாக, காலக் காப்பீடு, முதலீட்டுத் திட்டங்களுடன் கூடிய ஆயுள் காப்பீடு மற்றும் மறு காப்பீடு உள்ளிட்ட ஆயுள் காப்பீடுகளுக்கான வரி விகிதங்களை பரிந்துரைக்கும் பணியை இந்தக் குழு மேற்கொள்கிறது.
- ❖ 2023-24 ஆம் நிதியாண்டில், சுகாதார காப்பீட்டுத் தவணைகள் மீதான GST வரி மூலம் மத்திய மற்றும் மாநில அரசுகள் மொத்தம் 8,262.94 கோடி ரூபாய் வசூலித்துள்ளன.
- ❖ கூடுதலாக, சுகாதார மறுகாப்பீட்டுத் தவணைகள் மீதான GST வரி மூலம் 1,484.36 கோடி ரூபாய் ஆனது வசூலிக்கப்பட்டது.

## வர்த்தக இணைப்பு இணையதளம்




- ❖ மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆனது சமீபத்தில் வர்த்தக இணைப்பு இணைய தளத்தினைத் தொடங்கி வைத்துள்ளது.

- இந்த இயங்குதளமானது விரைவான, அணுகக்கூடிய வகையிலான மற்றும் மாற்றத் தக்க மற்றும் புதிய சந்தைகளைச் சேர்க்க ஏற்றுமதியாளர்களுக்கு உதவுகின்ற ஒற்றைச் சாளர முன்னெடுப்பாகும்.
- இது உலகளாவியச் சந்தையில் இந்தியாவின் பெரும் பங்கை அதிகரிக்கவும், சிறு வணிகங்களுக்கு ஆதரவளிக்கவும் உதவும்.

## திடீர் இலாப வரி ரத்து




- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெய் மீதான திடீர் இலாப வரியை அரசாங்கம் ரத்து செய்துள்ளது.
- சிறப்பு கூடுதல் கலால் வரியாக (SAED) விதிக்கப்பட்ட இந்த வரியானது டன்னுக்கு 1850 ரூபாய் முதல் சுழியமாக குறைக்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து சுழி அளவாகக் குறைக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- கடைசியாக SAED ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் தேதியன்று சுழி அளவில் குறைக்கப்பட்டது.
- எதிர்பாராத நிகழ்வின் காரணமாக, ஒரு தொழில் எதிர்பாராதவிதமாக மிகப் பெரிய லாபத்தை ஈட்டும்போது அந்த இலாபத்தின் மீது அரசினால் திடீர் இலாப வரி விதிக்கப் படுகிறது.

## முறைசார் தங்கக் கடன்கள்


- ஒட்டு மொத்தமாக, வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களால் (NBFCs) வழங்கப் பட்ட முறைசார் தங்கக் கடன்கள் மதிப்பானது நடப்பு நிதியாண்டில் (FY25) 10 டிரில்லியன் ரூபாய்க்கு மேலான மதிப்பினை எட்ட உள்ளது.
- இது 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் 15 டிரில்லியன் ரூபாயினை எட்டும்.
- 2020 மற்றும் 2024 ஆம் நிதியாண்டுகளுக்கு இடையில் 25 சதவீதம் என்ற அளவில் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) தங்கக் கடன் பிரிவு விரிவடைந்துள்ளது.
- NBFC நிறுவனங்களுள், தங்கக் கடன் பதிவு ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 83 சதவீதமாக இருக்கும் முதல் நான்கு நிறுவனங்களில் அதிகமாகப் பதிவாகியுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவில் உள்ள மண்ணின் தனிம மிகுதி அளவீடுகள்

- சந்திரயான்-3 விண்கலமானது, நிலவின் தென் துருவப் பகுதியில் உள்ள மண்ணின் முதல் இடம் சார்ந்த தனிம மிகுதி அளவீடுகளை வழங்கியுள்ளது.
- இதற்காக பிரக்யான் உலாவிக் கலத்தில் உள்ள ஆல்பா துகள்கள் ஊடுகதிர் நிறமாலை அளவிகளின் (APXS) தரவுப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த அளவீடுகள் ஆனது நிலவின் பாறைக் குழம்பு பெருங்கடல் (LMO) குறித்த ஒரு கருதுகோளை ஆதரிக்கின்றன.
- இந்த கருதுகோள் ஆனது இலகுவான தாதுக்கள் மேற்பரப்பை நோக்கி மிதந்து தோன்றியதால் நிலவின் பிரதான கண்ட மேலோடு உருவானதாக குறிப்பிடுகிறது.
- 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பாறைக் குழம்புகளானது நிலவின் மேற்பரப்பை உருவாக்கியது என்ற கோட்பாட்டை இந்தக் கண்டுபிடிப்புகள் ஆமோதித்தன.
- APXS என்பது அதிக அளவிலான மெக்னீசியம் நிறைந்த தாதுக்களையும் கண்டறிந்தது என்பதோடு இது நிலவின் ஆழமான அடுக்குகளின் பங்களிப்புகளையும் குறிக்கிறது.
- சுமார் நான்கு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் ஒரு பெரிய விண்கல் விழுந்ததற்கான ஆதாரங்களையும் அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த மோதல் ஆனது, 2,500 கிலோ மீட்டர் அளவு கொண்ட, சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய பள்ளங்களில் ஒன்றான தென் துருவ-எய்ட்கன் படுகையை உருவாக்கியதாக கருதப்படுகிறது.




## டனேஜர் 1


- நாசா நிறுவனமானது, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 ஏவுகலத்தினைப் பயன்படுத்தி டானேஜர்-1A என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.
- கார்பன் டை ஆக்சைடு மற்றும் மீத்தேன் ஆகியவற்றை மிக அதிகளவில் வெளியிடும் பகுதிகளை இந்த செயற்கைக்கோள் கண்டறியும்.
- இந்த செயற்கைக்கோள் ஆனது, மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடு ஆகிய வாயுக்களின் உமிழ்வினை நன்கு கண்காணிக்க வரைபடமாக்கல் நிறமாலை அளவி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும்.
- மீத்தேன் ஒரு கண்ணுக்குத் தெரியாத ஆனால் தீவிரமான பசுமை இல்ல வாயுவாகும் என்பதோடு கார்பன் டை ஆக்சைடுக்கு அடுத்தபடியாகப் புவி வெப்பமடைதலுக்கு அதிகளவில் பங்காற்றும் இரண்டாவது வாயுவாகும்.
- 2022 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, நிலத்தில் காணப்படும் ஓசோனால் பாதிக்கப் படுவது ஒவ்வோர் ஆண்டும் சுமார் ஒரு மில்லியன் கணக்கிலான மிக முன்கூட்டிய மரணங்களுக்கு வழி வகுக்கும்.



## ஆன்டிஹைப்பர் ஹைட்ரஜன்-4


- ஆன்டிஹைபர்ஹைட்ரஜன்-4 ஆனது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகக் கனமான எதிர் பருப்பொருள் மீநிலை உட்கருவாகும்.

- இதில் 1 ஆன்டிபுரோட்டான், 2 ஆன்டிநியூட்ரான்கள், 1 ஆன்டி-லாம்ப்டா ஹைபரான் உள்ளன.
- இந்த ஆண்டிஹைபர்ஹைட்ரஜன்-4 ஆனது, லாம்ப்டா எதிர்ப்பு ஹைபரான் மூலம் சூழப்படும் நிலையில் சில சென்டிமீட்டர் தொலைவில் இருக்கும் போது மட்டுமே சிதைகிறது.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டிஹைபர்ஹைட்ரஜன்-4 ஆனது, அமெரிக்காவில் உள்ள சார்பு வேக கன அயனி மோதுவிப்பான் (RHIC) மூலம் தயாரிக்கப்பட்டது.
- எதிர் துகள் என்பது மற்றொரு துகளின் அதே நிறை மற்றும் வேறு சில பண்புகளுக்கு இணையான ஆனால் எதிர் மதிப்புகளைக் கொண்டுள்ள ஒரு சார்நிலை அணுத் துகள் ஆகும்.



## மனித மூளையில் நுண்நெகிழிகள்

- முதன்முறையாக, மனித மூளையில் நுண்நெகிழிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.
- 2016 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்த மூளை மாதிரிகளில் உள்ள நெகிழிகளின் எண்ணிக்கை சுமார் 50% அதிகரித்துள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- நுண்நெகிழிகள் மிகவும் பொதுவாக அசுத்தமான உணவு மற்றும் நீர் மூலம் உடலுக்குள் நுழைகிறது.
- இது குடல் நுண்ணுயிரியை (குடலில் உள்ள நுண்ணுயிரிகளின் சமூகம்) சீர்குலைத்து வீக்கத்தை ஏற்படுத்தும்.
- இது நோயெதிர்ப்பு அமைப்பு மற்றும் சிக்கலான, இருவழி தொடர்பு அமைப்பு வழியாக முழு உடலிலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது
- நுண்நெகிழிகள் என்பவை ஐந்து மில்லிமீட்டருக்கும் குறைவான அளவுடையவை.
- இது சிலவற்றை வெறும் நிர்வாணக் கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு சிறியதாக ஆக்குகிறது.
- பல குடிநீர் ஆதாரங்கள் மற்றும் அன்றாட உணவுப் பொருட்களில் இவற்றின் இருப்பு பதிவாகியுள்ளன.




## SLIM நிலவு ஆய்வு திட்டம் – ஜப்பான்




- ஜப்பானின் விண்வெளி நிறுவனமான JAXA, அதன் ஆளில்லாத விண்கலத்துடனான தொடர்பை இழந்ததையடுத்து சந்திரனுக்கான அதன் தரையிறங்கு ஊர்தித் திட்டச் செயல்பாட்டை முடித்து கொண்டதாக அறிவித்துள்ளது.
- சந்திரனை ஆய்வு செய்வதற்கான திறன்மிகு தரையிறங்கு ஊர்தி (SLIM) அல்லது "மூன் ஸ்னைப்பர்" எனும் இந்த கலன் அதன் தரையிறங்கும் ஒரு துல்லியத்திற்காகப் பெயர் பெற்றது.
- இது எட்டு மாதங்களுக்கு முன்பு நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கியது.
- இதன் மூலம் நிலவில் மெதுவாக தரையிறங்கிய ஐந்தாவது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றுள்ளது.
- ஆனால் இந்த கலன், சந்திரனின் மேற்பரப்பில் தவறான கோணத்தில் தரை இறங்கியது, எனவே அதன் சூரிய ஒளி மின் உற்பத்திப் பலகைகள் தவறான திசையை எதிர்கொண்டன.

- சூரியனின் கோணம் மாறியவுடன், SLIM கலன் இரண்டு நாட்களுக்குச் செயல்பட்டது.
- அந்த நேரத்தில், அது உயர்-ரகப் புகைப்படக்கருவி மூலம் சந்திரனின் பள்ளம் பற்றிய அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டது.

## J0529-4351




- வானியலாளர்கள் J0529-4351 என்ற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ஒளிரும் விண்மீனைக் (குவாசர்) கண்டுபிடித்துள்ளனர்.
- இது சூரியனை விட 500 டிரில்லியன் மடங்கு ஒளிரும் தன்மை உடையது.
- ஒளிரும் விண்மீனில் இருந்து வரும் ஒளி, பூமிக்குப் பயணிக்க 12 பில்லியன் ஆண்டுகள் தேவைப்படுகிறது.
- ஒளிரும் விண்மீன்கள் என்பது தொலைதூர விண்மீன் திரள்களின் வியக்கத்தக்க ஒளிரும் மையங்களாகும் என்பதோடு இவை அவற்றின் மையங்களில் உள்ள மிகப் பெரிய கருந்துளைகளால் தூண்டப்படுகிறது.


## 2025 ஆம் ஆண்டில் மனித உருவம் கொண்ட எந்திரம் வயோமித்ரா

- அடுத்த ஆண்டு ககன்யான் விண் பயணத்தில் விண்வெளி வீரர்கள் செல்வதற்கு முன், இஸ்ரோ ஒரு மனித உருவம் கொண்ட இயந்திரமான வயோமித்ராவை விண்கலத்தின் பாதுகாப்பைச் சோதிக்க விண்வெளிக்கு அனுப்ப உள்ளது.
- இந்த வயோமித்ராவின் மனித உருவத்தின் மண்டை ஓடு, இஸ்ரோவின் திருவனந்தபுரம் பிரிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் முதல் முயற்சி, அடுத்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆனால் அதற்கு முன், ககன்யான்-1 (ஜி1) மற்றும் ககன்யான்-2 (ஜி2) ஆகிய இரண்டு ஆளில்லா ஆயத்தப் பயணங்கள் இந்த ஆண்டின் பிற்பகுதியில் அனுப்பப்படவுள்ளது.
- G2 பயணமானது, வயோமித்ராவை மனிதர்கள் பயணத்திற்கு இணையான அழுத்தம் கொண்ட வீரர்கள் பெட்டகத்தில் இட்டு கொண்டு செல்ல உள்ளது.




## ஜெஸெரோ பள்ளத்தின் விளிம்பெல்லை

- ❖ நாசாவின் பெர்சீவெரன்ஸ் என்ற செவ்வாய்க் கிரக உலாவிக் கலமானது அதன் உயர் இலக்கான ஜெஸெரோ பள்ளத்தின் விளிம்பில் ஏறத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்த உலாவிக் கலமானது ஜெஸெரோ பள்ளத்தின் விளம்பில் 1,000 அடி (305 மீட்டர்) மேலே சென்று அங்குள்ள பாறை மாதிரிகளைத் தோண்டி எடுக்க உள்ளது.
- ❖ இந்த பெர்சீவெரன்ஸ் கலமானது ஒரு காலத்தில் தண்ணீரால் நிரம்பியிருந்த இந்தப் பள்ளத்தின் நிலப் பரப்பிலிருந்து 22 பாறை மாதிரிகளைச் சேகரித்துள்ளது.





## ஒரோபூச்சே வைரஸ்

- ❖ தென் அமெரிக்காவில் ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் பூச்சியால் பரவும் வைரஸால் பரவும் ஒரு நோயினால் சுமார் 8,000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் பதிவாகியுள்ளன.
- ❖ டெங்குவைப் போன்ற இந்தத் தொற்று, முதன்மையாக பாதிக்கப்பட்ட கொசுவினப் பூச்சிகள் - ஒரு வகையான ஈக்கள் – கடிப்பதால் பரவுகிறது.
- ❖ முதன்முறையாக 1955 ஆம் ஆண்டில் கண்டறியப் பட்ட இந்தத் தொற்றானது டிரினிடாட் மற்றும் டொபாகோவில் கண்டறியப்பட்டது.




## NEOWISE தொலைநோக்கி




- நாசாவின் புவிக்கு அருகில் உள்ள வான் பொருட்களின் பரந்தகன்ற அகச்சிவப்பு ஆய்வுக் கலமானது (NEOWISE) அதன் பணியை நிறைவு செய்துள்ளது.
- இந்த விண்கலமானது, பேரண்டத்தின் பெரும் தொலைதூரப் பகுதிகளை ஆராயச் செய்வதற்காகவும், தொலைதூர அண்டங்கள், மீப்பெரு கருந்துளைகள் மற்றும் அது தொடர்பாக பலவற்றைக் கண்காணிப்பதற்காகவும் 2009 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப் பட்டது.
- பல தசாப்தங்களாக, இது முதன் முதலில் அறியப்பட்ட புவி சார் ட்ரோஜன் சிறுகோள் உள்ளிட்ட 44,000க்கும் மேற்பட்ட சூரிய மண்டலப் பொருட்களைக் கண்டறிந்தது.
- முன்னதாக பூமியிலிருந்து 310 மைல் உயரத்தில் சுற்றிக் கொண்டிருந்த இது தற்போது வெறும் 217 மைல் தொலைவில் உள்ளது.

## அல்சைமர் நோய்க்கான புதிய இரத்தப் பரிசோதனை

- அல்சைமர் நோயைக் கண்டறிய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் புதிய இரத்தப் பரிசோதனையை உருவாக்கியுள்ளனர்.

- இது அறிவாற்றல் சார்ந்த மிதமான குறைபாடு எழும் ஆரம்பக் கட்டத்தில் கூட இந்த நோயைக் கண்டறிய உதவுகிறது.
- இந்தப் புதிய இரத்தப் பரிசோதனைக்கு PrecivityAD2 எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- அறிவாற்றல் சார்ந்த குறைபாட்டு அறிகுறிகளை எதிர்கொள்ளும் பல்வேறு நபர்களில் அல்சைமர் நோயை அடையாளம் காண்பதில் இது 90% துல்லியத் தன்மையினை வழங்கியுள்ளது.
- ஐந்தில் ஒரு பெண் மற்றும் 10 ஆண்களில் ஒருவருக்கு அல்சைமர் நோயால் மறதி நோய் (டிமென்ஷியா) ஏற்படுகிறது.





## 1,700 பழமையான மற்றும் அறியப்படாத வைரஸ் இனங்கள்





- மேற்கு சீனாவில் உள்ள ஒரு பனிப்பாறைக்குள் சுமார் 1,700க்கும் மேற்பட்ட வைரஸ் எச்சங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இவற்றில் பல வைரஸ்கள் இதற்கு முன்னதாக அறிவியலுக்கே அறியப்படாதவை ஆகும்.
- இவற்றில் பழமையானது 40,000 ஆண்டுகளுக்கு முந்தையதாகும்.
- அவை திபெத்திய பீடபூமியில் பரந்து விரிந்து காணப்படும் குலியா பனிப்பாறைப் பகுதியில் உள்ள 1,000 அடி பனிக்கட்டியிலிருந்து கண்டறியப் பட்டுள்ளன.

## GNSS - ரிஃப்ளெக்டோமெட்ரி

- இஸ்ரோ நிறுவனமானது, மண்ணின் ஈரப்பதம், மேற்பரப்பு வெள்ளப் பெருக்கு மற்றும் கடல் மேற்பரப்பு காற்று மற்றும் அலை சார் அளவீடுகள் பற்றிய தரவுகளைச் சேகரிப்பதற்கான செயற்கைக்கோள் நுட்பத்தின் செயல்விளக்க செயல்முறையினை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- இது பூமியிலிருந்து சுமார் 475 கிலோ மீட்டர் உயரத்தில் உள்ள செயற்கைக்கோள் அடிப்படையிலான உணர்வியினைப் பயன்படுத்தியது.
- இந்தப் புதிய கருவியானது GNSS- ரிஃப்ளெக்டோமெட்ரி – பிரதிபலிப்பு மானி- (GNSS-R) என அழைக்கப்படுகிறது.
- சமீபத்தில் விண்ணில் ஏவப்பட்ட இஸ்ரோவின் EOS-08 செயற்கைக்கோளில் இந்தச் செயலை மேற்கொள்ளக்கூடிய ஒரு கருவியும் பொருத்தப் பட்டது.




## புதிய சீரொளிக் கற்றை சார் ஆயுதம் – சீனா




- சீனா தனது நீர் நிலம் ஆகிய இருவழி பயன்பாடு சார்ந்த தாக்குதல் கப்பல்களில் ஒன்றை சீரொளிக் கற்றையினால் இயங்கும் ஒரு ஆற்றல் ஆயுதத்தினைப் பொருத்தி உள்ளது.
- சீன மக்கள் விடுதலை இராணுவக் கடற்படையின் (PLAN) 071 ரக நீர் நிலம் ஆகிய இருவழிப் பயன்பாடு சார்ந்த தளவாடப் பரிமாற்றுக் கப்பலில் சீரொளிக் கற்றை சார் ஆயுதத்தை நிறுவியுள்ளது.

- அமெரிக்கக் கப்பலில் நிறுவப்பட்ட சீரொளிக் கற்றை சார் ஆயுதம், அதிகாரப் பூர்வமாக சீரொளிக் கற்றை சார் ஆயுத அமைப்பு செயல்முறை கட்டமைப்பு (LWSD) Mk 2 Mod 0 என்று அழைக்கப்படுகிறது.
- எதிரி நாடுகளின் ஆயுத அமைப்புகள் அல்லது ஆயுதங்களில் ஒளியிழை உணர்விகள் மற்றும் தேடு கருவிகளிலிருந்து மறையச் செய்யும் ஒளிமிகு கருவியாக இதனைப் பயன்படுத்தலாம்.

## உலோக-கரிமக் கூறுகள்




- ஆராய்ச்சியாளர்கள் நுண்ணிய பலபடிச் சேர்மப் பல் பயன்பாட்டு உலோக கரிமக் கூறுகள் (MOF) மற்றும் இரு பரிமாண (2D) பொருட்களை அடிப்படையாகக் கொண்ட மின்வேதியியல் மற்றும் ஒளியிழை உயிரி உணர்விகளை உருவாக்கியுள்ளனர்.
- இவை திடப் பொருள் பிரித்தெடுப்பிற்கு ஏற்ற சீரான முறையில் கட்டமைக்கப்பட்ட நுண்துளை பொருட்கள் ஆகும்.
- இரு பரிமாணப் பொருட்கள் என்பது ஒன்று அல்லது இரண்டு அணுக்கள் அளவில் தடிமனாக இருக்கின்ற அவற்றின் வழக்கமான மற்றும் தனித்துவமானப் பண்புகளால் வரையறுக்கப்பட்ட நுண் பொருட்களின் ஒரு வகுப்பாகும்.
- அவை இரண்டும் மற்ற நுண் பொருள்களைக் காட்டிலும் உணர்விகள் போன்ற சிறந்த மாற்றாகப் பயன்படுத்துவதற்கு உகந்ததாக காட்டும் வகையில் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளன.
- MOF கூறுகள் மற்றும் இரு பரிமாணப் பொருட்கள் ஆகிய இரண்டும் அவற்றின் பெரிய பரப்பளவு, செயல்பாட்டுத் திறன் மற்றும் ஒளி மின்னணுவியல் பண்புகளுக்காக என்று அறியப் படுகின்றன.


## பேடியா நடவடிக்கை – உத்தரப் பிரதேசம்

- பஹ்ரைச்சில் மனிதர்களை உண்ணும் ஓநாய்/ஓநாய்களை கண்ணில் பட்டதும் சுட உத்தரப் பிரதேச அரசு அனுமதி அளித்துள்ளது.
- மாநில அரசும் அந்தப் பகுதியினை 'வனவிலங்கு தாக்குதல் சார்ந்த பேரிடர்' பாதித்த பகுதியாக அறிவித்துள்ளது.

- ❖ இந்தப் பிரச்சினையை விரிவான முறையில் கையாள அரசாங்கம் ஆனது 'பேடியா நடவடிக்கையினைத்' தொடங்கியுள்ளது.
- ❖ இந்த நடவடிக்கையின் கீழ், வனத்துறையானது ஓநாய்களைப் பிடிப்பதற்கு ஆளில்லா விமானத்தில் பொருத்தப்பட்ட ஒளிப்படக் கருவிகள் மற்றும் வெப்பநிலையினைக் கொண்டு இடம் காணும் வசதி கொண்ட துல்லிய ஆளில்லா விமான நுட்பங்கள் ஆகியவற்றினைப் பயன்படுத்துகின்றது.
- ❖ தலைமை வனவிலங்குக் காப்பாளர், முதலாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள காட்டு விலங்குகள் மனிதர்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தினால், அதற்கானக் காரணங்களை விளக்கி எழுத்துப் பூர்வ உத்தரவை பிறப்பித்து அவற்றை வேட்டையாட அனுமதிக்கலாம்.




## சனிக்கோளின் வளையங்கள்



- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், புவியின் அச்சினுடைய சாய்வின் காரணமாக சனிக் கோளின் வளையங்களைப் பூமியிலிருந்து பார்க்க முடியாது என்ற நிலையில் இது பூமியிலிருந்து சனிக் கோளின் வளையங்களின் புலனாகும் தன்மையினை நன்கு சீரமைக்கும்.
- இந்த அரிய நிகழ்வு ஆனது நமது புவியில் இருந்து சனிக்கோள் எவ்வாறு புலனாகிறது என்பதைக் கணிசமாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சனிக் கோளானது பூமியைப் போலவே சாய்ந்த அச்சைக் கொண்டுள்ளது என்பதோடு அதன் ஆண்டின் ஒரு பாதியில் (1 சனி ஆண்டு என்பது 29.4 பூமி ஆண்டுகளுக்குச் சமம்) அக்கோள் சூரியனின் திசையில் சாய்கிறது.
- அதனால்தான் அதன் வளையத்தின் மேல் பகுதி பளபளப்பாக காட்சியளிக்கிறது.
- இந்தக் கிரகம் ஆனது சூரியனைச் சுற்றி வரும் போது ஒவ்வொரு 29.5 ஆண்டுகளுக்கும் அவை தற்காலிகமாக மறைந்துவிடும்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு, சனிக் கோளின் அச்சுச் சாய்வின் காரணமாக அவை மீண்டும் புலப்படும்.
- ஆனால் அதே ஆண்டு நவம்பரில் மீண்டும் அவை மறைந்துவிடும்.
- அதன் வளையங்கள் 2032 ஆம் ஆண்டில் மீண்டும் பார்வைக்கு முழுமையாகப் புலப் படும்.
- சனிக் கோளின் வளைய அமைப்பு ஆனது ஒரு ஒற்றைத் திடமான கட்டமைப்பு அல்ல, மாறாக அது பல்வேறு பிரிவுகளின் தொகுப்பாகும்.
- இது மங்கலான D, E, F மற்றும் G வளையங்களுடன் கூடிய பிரதான A, B மற்றும் C வளையங்களை உள்ளடக்கியது.
- இந்த பிரிவுகள் ஆனது குறிப்பிடத்தக்க காசினிப் பிரிவு போன்ற இடைவெளிகளால் பிரிக்கப் படுகின்றன என்பதோடு இது தோராயமாக 4,800 கிமீ அகலம் கொண்டது.

## FWD 200B

- ஃப்ளையிங் வெட்ஜ் டிஃபென்ஸ் மற்றும் ஏரோஸ்பேஸ் நிறுவனம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட FWD 200B எனப்படும் ஒரு போர்ப் பயன்பாட்டு ஆளில்லா வான்வழி வாகனத்தினை (UAV) அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேம்பட்ட நுட்பத்திலான போர்ப் பயன்பாட்டு ஆளில்லா விமானங்களைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைவதால், இது ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கிறது.
- FWD 200B என்ற குண்டுவீச்சு விமானமானது ஒரு நடுத்தர உயரத்தில் நீண்ட நேரம் இயங்கக் கூடிய (MALE) போர்ப் பயன்பாட்டு ஆளில்லா விமானம் (UCAV) என வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- இது அதிகபட்சமாக 102 கிலோ வரையிலான எடையும் (MTOW) 30 கிலோ வரையிலான எடையினைச் சுமந்து செல்லும் திறனும் கொண்டது.
- இந்த UAV ஆனது சுமார் 12,000 அடி உயரத்தில் இயங்குகிறது என்பதோடு இது 15,000 அடி உயரம் வரை அடையலாம்.





## ஜோம்பி பூஞ்சை

- பெருஞ்சிலந்தி வகை (டரான்டுலா) சேர்ந்தப் பூச்சி ஒன்று ஜோம்பி பூஞ்சையால் பாதிக்கப் பட்டுள்ளதை ஆராய்ச்சியாளர் கண்டறிந்துள்ளனர்.
- பொதுவாக எறும்புகளை நன்கு குறி வைக்கும் இந்தப் பூஞ்சை ஆனது டரான்டுலா இனங்களைப் பாதித்ததற்கான முதல் பதிவினைக் குறிக்கிறது.
- ஒபியோகார்டிசெப்ஸ் யுனிலேடெரலிஸ் ஆனது பொதுவாக "கார்டிசெப்ஸ்" என்று குறிப்பிடப் படுகிறது.
- இந்த ஒட்டுண்ணியானது பூஞ்சை பூச்சிகளை, குறிப்பாக எறும்புகளைப் பாதிக்கிறது.
- ஜோம்பி பூஞ்சையானது, அதனைக் கொண்டுள்ள உயிரினத்தின் நடத்தையை நன்கு கட்டுப்படுத்தும் திறனுக்காக குறிப்பிடத் தக்கதாக உள்ளது.
- இது குறிப்பாக பூஞ்சையின் உயிர்வாழ்வையும் பரவலையும் மேம்படுத்தும் சூழலை நாடுவதற்கு எறும்புகளை தூண்டுகிறது.
- அதன் பெயர் இவ்வாறு இருந்தாலும், இது மனிதர்களைப் பாதிக்காது.
- இந்தப் பூஞ்சையானது மிக முக்கியமாக வெப்பமண்டலக் காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்புகளில் காணப்படுகிறது.




## சூரியசக்தி சார் பரவளைய ஆடி ஒளிகுவிப்பு தொழில்நுட்பம்





- சூரியசக்தி சார் பரவளைய ஆடி ஒளிகுவிப்புத் தொழில்நுட்பம் என்பது சூரிய சக்தியைப் பயன்படுத்துவதற்கான மேம்பட்ட அணுகுமுறையாகும்.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது ஒரு சிறிய வாங்கியில் சூரிய ஒளியைக் குவிப்பதற்காக பரவளைய வட்டு வடிவ பிரதிபலிப்பான்களைப் பயன்படுத்துவதோடு இது ஆற்றல் செயல்திறனைக் கணிசமாக மேம்படுத்துகிறது.
- சூரியசக்தி சார் பரவளைய ஆடி ஒளிகுவிப்பு தொழில்நுட்பத்தின் மிகவும் முக்கிய அம்சமானது அதிக அளவு சூரிய சக்தியை ஒரு புள்ளியில் குவிக்கும் திறனில் உள்ளது.
- இந்தச் செறிவூட்டப்பட்ட சூரிய சக்தி (CSP) முறையானது ஒரு வழக்கமான சூரிய சக்தி தகடுகளுடன் ஒப்பிடும் போது மிக அதிக வெப்பநிலை மற்றும் திறம் மிக்க மின்சார உற்பத்திக்கு வழி வகுக்கிறது.
- இந்தத் தொழில்நுட்பம் ஆனது, குறைந்த ஒளி வீசும் நிலைகளிலும் ஆற்றலை உற்பத்தி செய்யக் கூடியது என்பதால், இது பல்வேறு வகைச் சூழல்களுக்கு பல்துறை தீர்வாக அமைகிறது.

## IISER நிறுவனத்தின் CsPbBr3

- புனேயில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, சிறப்பு படிகங்களை உருவாக்குவதற்காக புதிய வழியைக் கண்டறிந்துள்ளது.
- கூட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து, அதன் குழுவானது CsPbBr3 நுண் தட்டுகள் எனப் படும் சில சிறப்புப் படிகங்களை உருவாக்குவதற்கான புதிய வழியைப் பதிவு செய்து உள்ளன.
- இந்தப் படிகங்களின் மிக உயரியப் பண்புகள் ஆனது, ஒளியுணர் கருவிகள் மற்றும் மின்னணுச் சாதனங்களில் பயன்படுத்துவதற்கு என்று நம்பிக்கைக்குரிய அம்சமாக விளங்குகின்றன.
- CsPbBr3 என்பது திறம் மிக்க ஒளி மின்னணுவியல் பண்புகளைக் கொண்ட ஒரு வகை பொருளாகும்.
- சூரிய சக்தி மின்கலங்கள், LED மற்றும் உணர்விகள் போன்ற சாதனங்களுக்கு மிகவும் பயனுள்ள வழிகளில் இது ஒளியுடன் தொடர்பு கொள்ள முடியும்.




## ஈர்ப்பு மற்றும் குவைய ஈர்ப்பு விசையின் ஒருங்கிணைப்பு





- ஈர்ப்பு விசையிலிருந்து ஓர் உறுதியற்ற தொடர்பினைப் பெறுவதன் மூலம் குவைய இயக்கவியலுடன் ஈர்ப்பு விசையை மிக நன்கு ஒருங்கிணைப்பதில் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர்.
- கிராவிடான்கள் என்பது ஈர்ப்பு விசையை இயக்குகின்ற குவைய (Quantum) துகள்கள் ஆகும்.
- அவர்களின் கணக்கீடுகள் ஆனது கிராவிடான்களின் இரைச்சலில் இருந்து தூண்டப் பட்ட நிலை மற்றும் உந்த மாறிகளுக்கு இடையே ஒரு நிச்சயமற்ற தொடர்பைப் பெற்று உள்ளன.
- குவைய ஈர்ப்பு (QG) என்பது கோட்பாட்டு இயற்பியலின் ஒரு துறையாகும் என்ற நிலையில் இது குவைய இயக்கவியலின் கொள்கைகளின் படி ஈர்ப்பு விசையை விவரிக்க முயல்கிறது.

## அக்னி-4 உந்துவிசை எறிகணை சோதனை 2024




- அக்னி-4 உந்துவிசை எறிகணை சோதனையை இந்தியா மிக வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- சுமார் 4,000 கிலோமீட்டர்கள் வரையிலான இலக்குகளையும் தாக்கக் கூடிய வகையில் அக்னி-4 எறிகணையின் வரம்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 20 மீட்டர் நீளமுள்ள எறிகணை ஆனது 1,000 கிலோ எடையைச் சுமந்து செல்லும் மற்றும் சாலையில் இயக்கக்கூடிய வகையிலான நடமாடும் ஏவு வாகனத்தில் இருந்து ஏவக் கூடிய திறன் கொண்டது.
- அக்னி-4 எறிகணை ஆனது முன்னதாக அக்னி-2 பிரைம் என்று அழைக்கப்பட்டது.

## உலகின் முதல் அணுக் கடிகாரம்





- அறிவியலாளர்கள் நாம் தற்போது சார்ந்துள்ள அணுக் கடிகாரங்களை விட மிகவும் மேம்பட்ட அணுக் கடிகாரத்தின் முதல் முன்மாதிரியை உருவாககி வருகின்றனர்.
- தற்போதைய அணுக் கடிகாரங்கள், பில்லியன் கணக்கான ஆண்டுகளில் வினாடிகளை மட்டுமே இழக்கச் செய்யும் வகையில் அதீத துல்லியத்துடன் நேரத்தை அளவிடுகின்றன.

- அணுக் கடிகாரங்கள், அணுக்களில் உள்ள ஆற்றல் மட்டங்களுக்கு இடையே தாவும் எலக்ட்ரான்களின் அடிப்படையில் நேரத்தை அளவிடுகின்றன.
- ஆனால் அணுக் கடிகாரம் அணுக்கருவை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது.
- அணு அதன் கருவை விட 100,000 மடங்கு பெரியது.
- அணுக் கடிகாரத்தின் ஆற்றல் நிலையானது அணுக்கருவில் உள்ள மிகவும் வலுவான சக்திகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.
- அணுக் கடிகாரங்கள் முக்கியமாக மின்காந்த சக்திகளைச் சார்ந்தது


## பூமியின் மூன்றாவது ஆற்றல் புலம் – துருவக் காற்று

- 'துருவக் காற்று' எனப்படும் பூமியின் மூன்றாவது ஆற்றல் புலமான எதிரெதிர் துருவ நிகழ்வு – ஆம்பிபோலார் - ஆனது இதுவரை கோட்பாட்டளவில் மட்டுமே இருந்தது.
- 60 ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பிறகு தற்போது இது நாசாவால் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளது.
- வட மற்றும் தென் துருவங்களுக்கு மேல் உள்ள பகுதிகளில் பூமியின் வளிமண்டலம் எவ்வாறு வேகமாக ஆவியாகிறது என்பதற்கான முக்கியமானப் பதில்களை துருவக் காற்று கொண்டுள்ளது.
- ஆம்பிபோலார் புலம் இது வளிமண்டல துகள்களை விண்வெளிக்கு உயர்த்துகின்ற ஒரு கொணர்வுப் பட்டை போன்று செயல்படுகிறது.
- நமது வளிமண்டலத்தினைப் பேணுவதற்கு ஈர்ப்பு புலம் காரணமாக உள்ளது என்ற ஒரு நிலையில் போதுமான ஈர்ப்பு விசை இல்லை என்றால் அது விண்வெளியைச் சென்று அடைந்து விடும்.
- காந்தப்புலம் என்பது பூமியை சூரியக் காற்றில் இருந்து பாதுகாக்கும் ஒரு கவசமாகும் என்பதோடு இது சூரியனால் வெளியிடப்படும் மின்னூட்டம் பெற்ற துகள்களின் பாய்வு ஆகும்.
- ஆம்பிபோலார் புலம் என்பது ஈர்ப்பு விசையை எதிர்த்து, துகள்களை விண்வெளியில் வெளியேற்றுகிறது.




## புதன் கோளின் தென் துருவம்

- சமீபத்தில் பெபிகொலம்போ விண்கலம் ஆனது புதன் கிரகத்திற்கு மிக அருகில் 4வது முறையாக பறந்து சென்றுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் ஆனது 165 கிலோமீட்டர் என்ற மிகக் குறைந்த தொலைவில் கிரகத்தின் மேற்பரப்பை நெருங்கிச் சென்றது.
- அப்போது, புதன் கோளின் தென் துருவத்தின் முதல் படங்களை ஆய்வுக் கலம் எடுத்து உள்ளது.
- புதன் கோளின் மேற்பரப்பில் இருந்து சுமார் 3,500 கிமீ தொலைவில் ஆய்வு செய்யப் பட்ட போது இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புகைப்படம் எடுக்கப்பட்டது.
- பெபிகொலம்போ விண்கலமானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட்டது.
- இந்த ஆய்வுக் கலமானது 2 விண்கலங்களைக் கொண்டுள்ளது:
    - ஐரோப்பிய விண்வெளி முகமையின் புதன் கோள் சுற்றுக் கலம் மற்றும்
    - ஜப்பான் வானியல் ஆய்வு முகமையின் புதன் கோள் காந்த மண்டலச் சுற்றுக் கலம்





## யூரோபா கிளிப்பர் ஆய்வுக் கலம்



- நாசா நிறுவனம் ஆனது, வியாழன் கோளின் துணைக் கோளான யூரோபாவை ஆய்வு செய்வதற்காக அடுத்த மாதம் யூரோபா கிளிப்பர் ஆய்வுக் கலத்தினை விண்ணில் ஏவ உள்ளது.
- யூரோபா கிளிப்பர் ஆய்வுக் கலம் ஏவல் திட்டத்திற்கு 5 பில்லியன் டாலர் செலவாகும்.
- இது யூரோபாவின் பனிக்கட்டி நிறைந்த மேற்பரப்புக்கு அடியில் இருப்பதாக நம்பப் படும் பெருங்கடல், உயிரினங்கள் உயிர் வாழ உதவுமா என்பதை கண்டறிவதை ஒரு நோக்கமாகக் கொண்டது.

## மனிதர்களால் உருவாக்கப்பட்ட விண்கல் மழை

- நாசா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆண்டுகள் பழமையான ஆய்வுத் திட்டத்தின் குப்பைகள் ஆனது மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் விண்கல் பொழிவிற்குக் காரணமாக அமையலாம்.
- நாசாவின் இரட்டை குறுங்கோள் திசை மாற்று சோதனை (DART) கலம் ஆனது, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் டிமார்போஸ் எனப்படும் ஒரு சிறிய குறுங்கோளுடன் மோதச் செய்யப்பட்டது.
- இது இந்த தனித்துவமான நிகழ்வை ஏற்படுத்தலாம்.
- இத்திட்டம் ஆனது குறுங்கோள் திசைமாற்று தொழில்நுட்பத்தை சோதிக்கும் நோக்கம் கொண்டது.
- இந்த நிகழ்வானது தற்போது 10 முதல் 30 ஆண்டுகளுக்குள் பூமி மற்றும் செவ்வாய் கிரகத்தைச் சுற்றி விண்கல் பொழிவினை உருவாக்கக் கூடிய சுமார் 2 மில்லியன் பவுண்டுகளுக்கு மேலான குப்பைகளை உருவாக்கியதாக அறிவியல் ஆய்வாளர்கள் நம்புகிறார்கள்.
- மோதலின் காரணமாக, டிமார்போஸ் குறுங்கோளிலிருந்து வரும் உடைந்த துண்டுகள் குறைந்தது 100 ஆண்டுகளுக்கு பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையிடையே மற்றும் அவ்வப்போது வந்து சேரும்.
- மணிக்கு சுமார் 1,118 மைல் வேகத்தில் செல்லும் குப்பைகள் செவ்வாய்க் கிரகத்தை அடையலாம்.
- மணிக்கு சுமார் 3,579 மைல் வேகத்தில் நகரும் சிறிய மற்றும் வேகமான துகள்கள் 10 ஆண்டுகளுக்குள் பூமியை அடையலாம்.



## புதிய வெட்லேண்ட் வைரஸ்

- வெட்லேண்ட் வைரஸ் (WELV) என அழைக்கப்படுகின்ற ஒரு புதிய வைரஸ் சீனாவில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது உண்ணி எனப்படும் பூச்சிக் கடிப்பதால் மனிதர்களுக்கு பரவி, சில சமயங்களில் நரம்பியல் பாதிப்பு நோயை உண்டாக்கும்.
- இது 2019 ஆம் ஆண்டில் மங்கோலியாவில் உள்ள ஒரு பெரிய ஈரநிலத்தில் உள்ள பூங்காவிற்குச் சென்ற சென்று வந்த ஒரு மனிதனில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ஹீமாபிசலிஸ் கன்சின்னா இனத்தில் உள்ள உண்ணிகள் இந்த வைரஸை சுமக்கும் திறனை அதிகம் கொண்டுள்ளன.
- உண்ணி மூலம் பரவும் நோய்கள் பரவலாக அதிகளவில் உள்ளன என்ற நிலையில் ஆல்பா-கேல் சிண்ட்ரோம் (AGS), லைம் நோய், அனபிளாஸ்மோசிஸ், எர்லிச்சியோசிஸ், உண்ணிக்காய்ச்சல், போவாசான் (POW), ராக்கி மௌண்டெய்ன் புள்ளிக் காய்ச்சல், மற்றும் டூலரீமியா போன்ற பொதுவான நோய்கள் உண்ணி மூலம் பரவுகின்றன.
- அமெரிக்காவில் பரவலாக உண்ணிகள் மூலம் பரவும் நோய் லைம் நோயாகும்.



Scientists are warning of a new tick-borne disease, which they call the Wetland virus, that was recently discovered in China.


## நிலவில் மர்ம அதிர்வுகள்

- சந்திரயான்-3 கலமானது நிலவின் தென் துருவத்தில் இருந்து 250க்கும் மேற்பட்ட நில அதிர்வு சமிக்ஞைகளைக் கண்டறிந்த முதல் நிலவு ஆய்வுக் கலமாகும்.
- இந்த 250 நில அதிர்வு சமிக்ஞைகள் நிலவின் நடுக்கங்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய 50 தனித்துவமான சமிக்ஞைகளை உள்ளடக்கியது.
- நிலவில் அதிர்வு என்பது நிலவில் ஏற்படும் நிலநடுக்கத்தைக் குறிக்கிறது.
- 250 நில அதிர்வு நிகழ்வுகளில், சுமார் 200 பிரக்யானின் அசைவுகள் அல்லது பிற கருவி செயல்பாடுகளுடன் தொடர்புடையவையாகும்.

- ❖ நிலவு மேற்பரப்பின் தென் துருவத்திலிருந்து இந்த நில அதிர்வுத் தரவுகள் சேகரிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- ❖ அப்பல்லோ ஆய்வுத் திட்டத்திற்குப் பிறகு இது போன்றச் செயல்பாடு பதிவு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.



## VL-SRSAM எறிகணை 2024




- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆகிய இரண்டும் இணைந்து செங்குத்தாக ஏவக்கூடிய ஒரு குறுகிய தூர வரம்பிலான எறிகணையின் (VL-SRSAM) சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளன.
- ❖ VL-SRSAM என்பது ஒரு விரைவு எதிர்வினையாற்றும் எறிகணையாகும். இது எல்லா திசைகளிலிருந்தும் வரும் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து தாக்கக்கூடியது.
- ❖ இந்தியக் கடற்படைக்காக இது முதலில் 40 கி.மீ தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது என்ற நிலைமையில் தற்போது 80 கி.மீ வரையிலான இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ மாக் 4.5 என்ற அதிகபட்ச வேகத்துடன், இந்த ஆயுத அமைப்பால் 16 கிமீ உயரத்தை அடைய முடியும்.

## விலங்குகளின் மிகப்பெரிய மரபணு

- தென் அமெரிக்கக் கண்ட நுரையீரல் மீன் என்பது ஒரு அசாதாரண உயிரினம் மற்றும் உயிருடன் வாழும் ஒரு புதைபடிவமாகும்.
- இது பிரேசில், அர்ஜென்டினா, பெரு, கொலம்பியா, வெனிசுலா, பிரெஞ்சு கயானா மற்றும் பராகுவே ஆகிய நாடுகளில் உள்ள மெதுவாக நகரும் மற்றும் தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் வாழ்கிறது.
- இது முதல் முறையாக தோன்றிய நில வாழ் முதுகெலும்பு உயிரிகளை ஒத்த உயிர் வாழும் உயிரினம் ஆகும் என்பதோடு இது சுமார் 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அதன் ஆதி மூதாதை இனங்களை ஒத்திருக்கிறது.
- இந்த நன்னீர் வாழ் இனம் ஆனது (லெப்பிடோசிரேன் பாராடாக்சா) பூமியில் உள்ள மற்ற எந்த விலங்கினையும் விட மிகப்பெரிய மரபணுவினைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இது ஒரு உயிரினத்தின் அனைத்து மரபணுத் தகவல்களையும் கொண்டு உள்ளது.
- இதன் மரபணு ஆனது மனித மரபணு வரைபடத்தை விட சுமார் 30 மடங்கு அதிகமாக இருக்கும்.
- இந்த நுரையீரல் மீனின் ஒவ்வொரு செல்லிலும் உள்ள டிஎன்ஏவின் நீளம் சுமார் 60 மீட்டர் வரை நீட்டிக்கும்.
- மனித மரபணு வெறும் 2 மீட்டர் வரையே காணப்படும்.



## போலரிஸ் டான் பயணம்



- தனியார் விண்வெளி ஆய்வில் ஒரு முக்கிய பயணமான போலரிஸ் டான் திட்டமானது, புளோரிடாவின் கடலில் இறங்கிய நிகழ்வுடன் வெற்றிகரமாக முடிவடைந்தது.
- இந்தப் பயணமானது 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு மனிதர்கள் கொண்ட விண்கலம் அடைந்த மிகவும் உயர்ந்த உயரத்தையும், முதல் வணிகரீதியிலான விண்வெளிப் பயணத்தையும் குறித்தது.
- இந்த விண்கலம் சுமார் 870 மைல் உயரத்திற்குப் பயணித்தது.
- இது சர்வதேச விண்வெளி நிலையம் பயணிக்கும் உயரத்தை விட மூன்று மடங்கு அதிகம் ஆகும்.
- சந்திரனுக்குச் சென்ற அப்பல்லோ விண் திட்ட பயணத்திற்குப் பிறகு பூமியிலிருந்து மனிதர்கள் பயணித்த அதிகபட்ச தூரம் இதுவாகும்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க விண்வெளி நடைப் பயணத்தின் போது, ஐசக்மேன் மற்றும் கில்லிஸ் ஆகியோர் ஸ்பேஸ்எக்ஸின் சில புதிய விண்வெளி உடைகளைச் சோதித்து, அவற்றின் செயல்பாடு மற்றும் இயக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்தனர்.


## செந்நிற வலைப்பின்னல் நெபுலாவின் படம்

- திகைப்பூட்டும் செந்நிற வலைப்பின்னல் நெபுலாவின் சில புகைப்படங்களை ஹப்பிள் தொலைநோக்கி எடுத்துள்ளது.
- இது சாகிட்டாரியஸ் என்ற ஒரு விண்மீன் திரளில் தோராயமாக 3,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்தப் கோளினை ஒத்த நெபுலாவானது பேரண்டத்தில் உள்ள மிகுந்த வெப்பமிகு நட்சத்திரங்களில் ஒன்றாகும்.
- அதன் மேற்பரப்பு வெப்பநிலையானது 250,000°C (450,000°F) வரை எட்டும்.
- ஹப்பிள் என்பது நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும்.
- இந்தத் தொலைநோக்கியானது 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் தேதியன்று விண்ணில் செலுத்தப்பட்டு நிலைநிறுத்தப்பட்டது.
- இது சுமார் 47,000 வான் பொருட்களின் 1.4 மில்லியனுக்கும் அதிகமான கண்காணிப்புத் தகவல்களை வழங்கியுள்ளது.



## தற்காலிக 'சிறு-நிலவு' 2024


- பூமியின் ஈர்ப்பு விசையிலிருந்து தப்பிக்க முடியாத குறுங்கோள் ஆனது சிறு நிலவு எனப் படுகிறது.
- செப்டம்பர் 29 முதல் நவம்பர் 25 ஆம் தேதி வரை குறுகிய காலத்திற்கு பூமி ஒரு புதிய சிறு நிலவைக் கொண்டிருக்கும்.
- 2024 PT5 என்று பெயரிடப்பட்ட அண்டவெளியில் பயணிக்கிற அந்த குறுங்கோள் வெறும் 33 அடி நீளம் கொண்டது.
- இது மிக விரைவில் பூமியின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டு ஒரு ஒற்றைச் சுற்றுப் பாதைக்குள் ஈரக்கப்படும்.
- இந்த 2024 PT5 ஆனது பூமியைச் சுற்றி ஒரு முழு சுழற்சியினை நிறைவு செய்யாது என்பதால் அறிவியல் ரீதியாக ஒரு சிறிய நிலவு அல்ல.
- இது 56 நாட்களுக்கு மட்டுமே புவியின் சுற்றுப்பாதையில் இருக்கும்.
- இது பூமி மற்றும் சூரியனைச் சுற்றியுள்ள வடிவத்தின் காரணமாக "குதிரை லாட வடிவமைப்பு கொண்ட சுற்றுப்பாதைகள்" எனப்படும் பாதைகளைப் பின்பற்றும்.
- 2024 PT5 குறுங்கோள் ஆனது, ஆகஸ்ட் மாதத்தில் குறுங்கோள் நிலப்பரப்பு-மோதல் எச்சரிக்கை அமைப்பு மூலம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.
- முன்னதாக 2006 ஆம் ஆண்டில், ஒரு குறுங்கோள் பூமியைச் சுற்றி சுமார் ஓராண்டு காலத்திற்குச் சுற்றி வந்தது என்ற நிலையில் மற்றொன்று 2020 ஆம் ஆண்டில் புவியின் சுற்றுப் பாதையினை விட்டு வெளியேறுவதற்கு முன்பு பல ஆண்டுகள் பூமியைச் சுற்றி வந்தது.





## பகுதியளவு சந்திர கிரகணம்

- ஹார்வெஸ்ட் மூன் எனப்படும் செப்டம்பர் மாத முழு நிலவுடன் பகுதியளவு சந்திர கிரகணம் ஒன்றி நிகழ்ந்தது.
- இந்தப் பௌர்ணமி நிலவு ஆனது பூமிக்கு மிக அருகில் இருந்ததால் வழக்கத்தை விட சற்று பெரியதாகவும் பிரகாசமாகவும் காட்சியளித்தது.

- மேற்கு ஆசியா, வடக்கு மற்றும் தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் அண்டார்டிகாவின் சில பகுதிகளில் மட்டும் இந்த கிரகணம் தென்பட்டது.
- இந்தியாவில் இருந்து காணக் கூடிய வகையிலான அடுத்த ஒரு முழு சந்திர கிரகணம் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 ஆம் தேதியன்று நிகழும், அதைத் தொடர்ந்து 2026 ஆம் ஆண்டு மார்ச் 03 ஆம் தேதியன்று ஒரு பகுதியளவு சந்திர கிரகணம் ஏற்படும்.




## சில்லுகளில் மனித உறுப்பு செயல்பாட்டு தொழில்நுட்பம்





- உயிரித் தொழில்நுட்பத் துறையில் புதுமைகளை உருவாக்குவதற்காக என்று இந்திய அரசானது 'BioE3' கொள்கையை அறிவித்துள்ளது.
- இதற்காக அது உயிரி உற்பத்தி மையங்கள், உயிரி செயற்கை நுண்ணறிவு மையங்கள் மற்றும் உயிரி சார் நிறுவனங்களை நிறுவியுள்ளது.
- மரபணு சார்ந்த சிகிச்சை மற்றும் உயிரணு சார்ந்த சிகிச்சை போன்ற உயிரியல் சார் நுட்பத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதையும் இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளாவிய சில்லுகளின் மூலம் மனித உறுப்பு செயல்பாட்டு சந்தையானது 2032 ஆம் ஆண்டில் சுமார் 1.4 பில்லியன் டாலர் மதிப்புடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- சில்லுகளின் மூலம் மனித உறுப்பு செயல்பாட்டு நுட்பம் என்பது ஒரு கட்டுப்படுத்தப் பட்ட நுண்ணிய சூழலில் சில மனித உறுப்புகளின் இயக்க செயல்பாடுகளை மீண்டும் உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சிறிய சாதனமாகும்.
- ஒரு மருந்தின் பெரும் தாக்கங்களைச் சோதிப்பதில் ஆராய்ச்சியாளர்கள் தற்போது பயன்படுத்தும் உயிரணு வளர்ப்பு மாதிரிகள் மற்றும் விலங்கு மாதிரிகளை விட அவை சிறந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்திய அரசானது சில்லுகளின் மூலம் மனித உறுப்புச் செயல்பாட்டு நுட்பத்தினைப் பயன்படுத்த அனுமதிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டு புதிய மருந்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் விதிகளைத் திருத்தியமைத்துள்ளது.

## பாரதிய அந்தரிக்ஸ் நிலையம்

- ககன்யான் திட்டத்தின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதன் மூலம் பாரதிய அந்தரிக்ஸ் நிலையத்தின் முதல் பிரிவைக் கட்டமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா 2035 ஆம் ஆண்டிற்குள் செயல்பாட்டு நிலையில் உள்ள பாரதிய அந்தரிக்ஸ் நிலையத்தையும், 2040 ஆம் ஆண்டிற்குள் இந்திய விண்வெளி வீரர்கள் அடங்கிய நிலவுப் பயணத் திட்டத்தினையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் விண்வெளி நிலையத்தின் முதல் தொகுதியானது, பாரதிய அந்தரிக்ஸ் நிலையம் (BAS-1) என்று அழைக்கப்படுகிறது.
- இது 2028 ஆம் ஆண்டில் அதன் முதல் தொகுதியுடன் தொடங்கப்பட உள்ளது.
- 2000 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் ISS ஆனது NASA, Roscosmos, ESA, JAXA மற்றும் CSA ஆகியவற்றின் கூட்டு முன்னெடுப்பாகும்.
- "விண்ணுலக அரண்மனை" என்று பொருள்படும் சீனாவின் டியாங்காங், 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதன் செயல்பாடுகளைத் தொடங்கியது.
- ரஷ்யா தனது சொந்த நிலையமான ரஷ்ய சுற்றுப்பாதை விண் நிலையத்தை (ROS) உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.




## அடுத்தத் தலைமுறை நுட்பம் சார்ந்த ஏவு வாகனம்




- தற்போதைய LVM3 ஏவு வாகனத்துடன் உடன் ஒப்பிடும் போது NGLV மூன்று மடங்கு அதிக அளவிலான கருவிகளை கொண்டு செல்லும் திறனை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இதன் விலை 1.5 மடங்கு மட்டுமே அதிகமாக இருக்கும்.
- மறுபயன்பாட்டு அம்சங்களை மிகவும் அதிகம் கொண்டுள்ள இந்த ஏவு வாகனமானது, விண்வெளியினை மிகவும் மலிவான செலவில் அணுகுவதை உறுதி செய்து, பசுமை நுட்பம் சார்ந்த மாதிரி உந்துவிசை மீதான அமைப்புகளின் ஒருங்கிணைப்பை உறுதி செய்யும்.
- NGLV ஆனது, புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதைக்கு (LEO) அதிகபட்சமாக சுமார் 30 டன்கள் எடையுள்ள கருவிகளை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையிலான முதல் கட்டப் பாகத்தினைக் கொண்டு உள்ளது.
- தற்போது செயல்பாட்டில் உள்ள PSLV, GSLV, LVM3 மற்றும் SSLV போன்ற ஏவு வாகனங்கள் மூலம் 10 டன் எடையுள்ள செயற்கைக் கோள்களை LEO சுற்றுப்பாதைக்கும், 4 டன் புவி-ஒத்திசைவு சுற்றுப்பாதைக்கும் (GTO) கொண்டு செல்லும் நுட்பத்தில் இந்தியாவானது தன்னிறைவு அடைந்துள்ளது.

## கருந்துளை கண்டறியும் செயலி




- டச் (Dutch) கருந்துளை கூட்டமைப்பானது, சமீபத்தில் கருந்துளை கண்டறியும் செயலி என்ற புதியதொரு செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வானியலாளர்கள் புதிய கருந்துளைகளை அடையாளம் காண இது உதவும்.
- எளிமையான பயன்பாடு கொண்ட இது ஆண்ட்ராய்டு மற்றும் iOS ஆகியவற்றின் செயலி தளங்களில் கிடைக்கிறது என்பதோடு மேலும் இதனை இணைய உலாவியில் இருந்தும் அணுகலாம்.
- 1000 இடைநிலை அமைப்புகளை அடையாளம் காணும் பயனர்களுக்கு "சூப்பர் யூசர்" அந்தஸ்து வழங்கப்படும் என்று செயலி விளக்கம் கூறுகிறது.

## புதிய இரத்த வகைக் குழு அமைப்பு – MAL




- AnWj ஆன்டிஜென் பற்றிய 50 ஆண்டு காலத்திய தெளிவின்மையினைத் தீர்த்து, MAL எனப்படும் புதிய இரத்தக் குழு அமைப்பை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது மிகவும் அரிதான நோயாளிகளுக்கான ஒரு சிகிச்சையை மேம்படுத்துவதோடு, ஒவ்வொருவரின் இரத்தக் குழுவிற்கு மிக இணக்கமான இரத்த தானம் செய்பவர்களை கண்டறிய உதவும்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது 1972 ஆம் ஆண்டில் முதன்முதலில் கண்டறியப்பட்ட AnWj இரத்தக் குழுவானது ஆன்டிஜெனைப் பற்றி சுமார் 50 ஆண்டுகளாகத் தொடரும் ஒரு தெளிவின்மையினை நிவர்த்தி செய்தது.
- MAL தற்போது AnWj ஆன்டிஜெனை உள்ளடக்கிய 47வது இரத்தக் குழு அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## ஸாங்'இ-6 கலத்தின் நிலவு மண் மாதிரிகள்

- இந்த ஆண்டு, நிலவின் புலப்படாத பகுதியில் இருந்து மண் மாதிரிகளைச் சேகரித்த முதல் மற்றும் ஒரே நாடு சீனாவாகும்.
- இது மோதலால் உருவான நிலவின் மிகப்பெரிய, ஆழமான மற்றும் பழமையான படுகையான தென் துருவ-எய்ட்கன் படுகையில் இருந்து 1.9 கிலோ (4.26 பவுண்டுகள்) நிலவு மாதிரிகளைச் சேகரித்தது.
- நிலவின் புலப்படாத இந்தப் பகுதியானது பசால்ட் மற்றும் அயல் பகுதியிலிருந்து வெளியேறியப் பொருள்கள் ஆகியவற்றால் ஆனது என்றும் முன்னர் சேகரிக்கப்பட்ட நிலவு மாதிரிகளிலிருந்து வேறுபட்டு உள்ளது என்றும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஸாங்'இ-5 கலமானது நிலவின் அருகாமைப் பகுதியில் சேகரித்த சில மாதிரிகளுடன் ஒப்பிடச் செய்கையில், இந்த மண் மாதிரிகளில் ஃபெல்ட்ஸ்பர் மற்றும் கண்ணாடி போன்ற அதிக வெளிர் நிறத் துகள்கள் உள்ளன.
- நிலவின் தொலைதூரப் பகுதியானது பலவிதமான எரிமலை மற்றும் பல்வேறு மோதல் நிகழ்வுகளை எதிர்கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது என்பதோடு இது அந்தப் பகுதியின் வரலாற்றை நிலவின் மற்றப் பகுதிகளிலிருந்து வேறுபடுத்துகிறது.

## ஊசி வழி அல்லாத கோவிட்-19 தடுப்பு மருந்து

- இந்தியா-ஆஸ்திரேலியா இணைந்து SARS-CoV-2 வைரசிற்கு எதிராக நாசி வழி கூடுதல் தடுப்பு மருந்தினை உருவாக்கியுள்ளது.
- ஒரு முக்குறிய படியெடுத்து வலுவிழக்கச் செய்தல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கூடுதல் தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- முக்குறிய படியெடுத்து வலுவிழக்கச் செய்தல் என்பது அமினோ அமில வரிசைகளை மாற்றாமல், குறைவான எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவ கோடான் ஜோடிகளின் (அமினோ அமிலங்களுக்கான மரபணு தீர்மானிப்பான்கள்) ஒரு எண்ணிக்கையினைக் குறைப்பதை உள்ளடக்கியதாகும்.




## பாலோமர் 5


- பாலோமர் 5 எனப்படும் நட்சத்திரத் திரள் ஆனது பூமியிலிருந்து 80,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது 100க்கும் மேற்பட்ட நட்சத்திர நிறை கொண்ட கருந்துளைகளின் மறைக்கப்பட்ட திரளாக இருக்கலாம்.
- இந்த நட்சத்திரத் திரள் ஆனது, 30,000 ஒளியாண்டுகள் தொலைவு வரை நீண்டுள்ளது.
- இது பொதுவாக சுமார் 100,000 முதல் 1 மில்லியன் வரையிலான மிகவும் பழமையான நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது.



## IISc நிறுவனத்தின் சல்பைடு அயனியேற்றம்

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள் தண்ணீரில் உள்ள கன உலோக மாசுபாட்டை நிவர்த்தி செய்வதற்காக நுண் பொருள் அடிப்படையிலான தீர்வை உருவாக்கியுள்ளனர்.
- குரோமியம் கலந்த நிலத்தடி நீரைச் சுத்தம் செய்ய உதவும் ஒரு புதுமையான நுண் பொருளை இக்குழு உருவாக்கியுள்ளது.
- இது நிலைப்படுத்தப்பட்ட நுண்ணிய அளவிலான சுழிய பிணைப்பு கொண்ட இரும்பு 'சல்பைடு அயனியேற்றப்பட்ட' கார்பாக்சிமெத்தில் செல்லுலோஸ் (S-CMC-nZVI) எனப் படுகிறது.

- நீரிலிருந்து நச்சுத் தன்மை கொண்ட ஒரு உலோக வடிவமான அறுபிணைப்பு கொண்ட குரோமியத்தினை அகற்றுவதில் இது குறிப்பிடத்தக்க செயல்திறனை வழங்கியுள்ளது.




## பூமியில் சனிக்கோளில் உள்ளது போன்ற வளையம்


- பூமியில் ஒரு காலத்தில் சனிக்கோளில் உள்ளது போன்ற வளையங்கள் இருந்ததாக சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது என்பதோடு இது அந்தக் கிரகத்தின் பருவநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- அத்தகைய வளையத்தின் இருப்பு என்பது, சுமார் 466 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி, சில கோடிக்கணக்கான ஆண்டுகள் நீடித்து காணப்பட்டது.
- சுமார் 488 மில்லியன் மற்றும் 443 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆர்டோவிசியன் காலத்தினைச் சேர்ந்த 21 பள்ளங்களின் பகுப்பாய்வு ஆனது, இந்தத் தாக்கங்கள் அனைத்தும் பூமத்திய ரேகைக்கு மிக அருகாமையில் நிகழ்ந்தன என்பதைக் கண்டு அறிந்தது.



## மாபெரும் கருந்துளை

- தொலைதூர அண்டத்தில் உள்ள ஒரு மிகப்பெரிய கருந்துளையில் இருந்து வெளிப் படுகின்ற இரண்டு பிரமாண்ட ஆற்றல் கற்றைகளை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.


- இந்த ஒளிக்கற்றைகள் ஆனது இதுவரை பதிவு செய்யப்பட்டவற்றில் மிகப் பெரியவை ஆகும்.
- அவை சுமார் 23 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவு வரை நீண்டுள்ளன என்ற ஒரு நிலையில் இது பால் வெளி அண்டத்தின் விட்டத்தை விட தோராயமாக 140 மடங்கு நீளம் கொண்டவையாகும்.
- இந்தக் கருந்துளையானது பூமியிலிருந்து 7.5 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ஓர் அண்டத்தின் மையக் கருவில் அமைந்துள்ளது.
- ஓர் ஒளி ஆண்டு என்பது ஒளியானது ஓராண்டில் பயணிக்கும் தூரம் ஆகும் என்பதோடு இது 5.9 டிரில்லியன் மைல்கள் (9.5 டிரில்லியன் கிமீ) ஆகும்.
- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பண்டைய கிரேக்கப் புராணங்களைச் சேர்ந்த ஒரு மாபெரும் அமைப்பின் ஒரு பெயரைக் கொண்டு போர்பிரியன் (Porphyrion) என்று இந்த இரண்டு ஒளிக்கற்றைகளுக்கும் பெயர் சூட்டியுள்ளனர்.
- போர்பிரியன் ஆனது முன்னதாக மிகவும் நீளமானதாகப் பதிவு செய்யப்பட்ட ஒளிக் கற்றைகளை விட சுமார் 30% நீளமானது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆர்க்டிக் பகுதியின் நிரந்தர உறைபனியில் நச்சுத்தன்மை மிக்க பாதரசம்

- ❖ ஆர்க்டிக் பகுதியில் உருகி வரும் நிரந்தர உறைபனி நச்சுத்தன்மை மிக்க பாதரசத்தை நீர் வளங்களில் வெளியிடுகிறது என்று அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இது உணவுச் சங்கிலி மற்றும் அதை நம்பியிருக்கும் சமூகங்களுக்கு மிக கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம்.
- ❖ ஆராய்ச்சியாளர்கள் யூகோன் ஆற்றின் மேல் காணப்படும் மூன்று மீட்டர் அளவிலான நிரந்தர உறைபனியில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்தனர்.
- ❖ ஆற்றங்கரைகளின் மண்ணரிப்பு நிகழ்வின் போது "குறிப்பிடத்தக்க" அளவு பாதரசம் வெளியாகிறது என்று அவர்கள் கண்டறிந்தனர்.
- ❖ பாதரசம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிரந்தர உறைபனியில் சிக்கியிருக்கக் கூடும் என்று அவர்கள் கருதுகின்றனர்.




## அல்ப்காரகுஷ் கிர்கிசிகஸ்

- ❖ கிர்கிஸ்தான் நாட்டில் ஒரு புதிய பேரினம் மற்றும் ஒரு பெரிய தெரோபோட் இனம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த டைனோசர் இனத்திற்கு அல்ப்காரகுஷ் கிர்கிசிகஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ அவை சுமார் 165 முதல் 161 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஜுராசிக் காலத்தின் காலோவியன் காலத்தின் போது நமது புவியில் வாழ்ந்தன.
- ❖ இது சீனாவிற்கு மேற்கே மத்திய ஆசியாவின் ஜுராசிக் பகுதியில் இருந்து கண்டறியப் பட்ட முதல் தெரோபாட் இனமாகும்.

## திபெத்தின் செடாங்பு கல்லி பகுதியில் நிலச்சரிவு

- ❖ 2017 ஆம் ஆண்டு முதல் திபெத்தியப் பீடபூமியின் செடாங்பு ஓடைக்கால் (நீரினால் ஏற்பட்ட பள்ளத்தாக்கு) பகுதியில் நிலச்சரிவு ஏற்படும் நிகழ்வுகள் ஏற்படும் தகவு நிலை மற்றும் அப்பகுதியின் விரைவான வெப்பமயமாதல் இந்தியாவைப் பாதிக்கக் கூடும்.

- 2012 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இந்தப் பகுதியில் அரிதாக 0° C செல்சியசிற்கு மேல் வெப்பநிலை பதிவானது.
- ஆனால், 1981-2018 ஆம் காலகட்டத்தில் இந்தப் பகுதியில் வருடாந்திர வெப்ப நிலை ஆனது 0.34° முதல் 0.36° C என்ற விகிதத்தில் அதிகரித்ததாக போமி மற்றும் லின்ஸி ஆகிய இடங்களில் உள்ள வானிலை நிலையங்கள் வெளிப்படுத்தின.
- செடாங்பு பனிப்பாறை மற்றும் அதன் பள்ளத்தாக்கின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் உள்ள செடாங்பு நீர் அரிப்பு பள்ளம் ஆனது 11 கிலோ மீட்டர் நீளமும் 66.8 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் அமைந்துள்ளது.
- இது யார்லுங் சாங்போ அல்லது சாங்போ நதியில் இணைவதோடு இது இணையும் இடத்திற்கு அருகே அது மிகப்பெரிய வளைவினைக் கொண்டுள்ளதால் பெருவளைவு என்று அழைக்கப்படுகிறது.
- 505 கிலோ மீட்டர் நீளமும் 6,009 மீட்டர் ஆழமும் கொண்ட பள்ளத்தாக்கை உருவாக்கும் முன்பு நம்சா பர்வா மலை (உயரம் 7,782 மீட்டர்) மற்றும் கியாலா பெரி மலை (7,294 மீட்டர்) ஆகியவற்றினைச் சுற்றி பாய்கிறது.
- பூமியின் ஆழமானப் பள்ளத்தாக்குகளில் இதுவும் ஒன்றாகும்.
- நிலச் சரிவு என்பது பாறை மற்றும் மண்ணின் புவியீர்ப்பு தாக்கத்தினால் ஒரு சாய்வு நிலப்பரப்பில் பாயும் இயக்கம் ஆகும்.
- ஒரு நீர் அரிப்பு பள்ளம் என்பது பாயும் நீர், பெருமளவிலான நிலச் சரிவு அல்லது இரண்டின் அரிப்பினால் உருவாக்கப்பட்ட நிலப்பரப்பாகும்.






Figure 4.5 Mass movement

## உலகளாவிய மீன் வளங்களின் அவல நிலை 2024

- முந்தைய மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் போது பெரும்பாலான மீன் வளங்களின் மீது அதிகம் மீன்பிடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அல்லது அவற்றின் வளங்கள் ஏற்கனவே மிகவும் குறைந்து விட்டன என்று அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- இந்த அதிகப்படியான மீன்பிடித்தல் நடவடிக்கையானது மீன்களின் எண்ணிக்கையை இயற்கையாகவே மீளுருவாக்கும் செய்யும் மீன் வளங்களின் திறனை விஞ்சியுள்ளது.

- ❖ மீன்பிடி நடவடிக்கையானது அங்கு இயற்கையாக காணப்படும் எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்குக் கீழே குறையும் போது மீன் வளங்களின் அளவு சரிந்ததாகக் கருதப் படுகிறது.
- ❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பானது (FAO), "அதிகபட்சமாக நிலையான முறையில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவை" என வகைப்படுத்தப்பட்ட மீன் வளங்களுள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு வளங்களில் உண்மையில் அதிகமாக மீன் பிடிக்கப்படுகிறது.
- ❖ அதிக அளவில் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகள் என்ற பிரிவில் முன்னர் மதிப்பிடப் பட்டதை விட மேலும் 85 சதவீத வளங்கள் ஆனது (இயற்கையாக காணப் படும் எண்ணிக்கையில் 10 சதவீதத்திற்குக் கீழே) குறைந்திருக்கலாம்.




## வடக்கு வழுக்கைத் தலை அரிவாள் மூக்கன்




- ❖ வால்ட்ராப் என்றும் அழைக்கப்படும் வழுக்கைத் தலை அரிவாள் மூக்கன் பறவை ஆனது, வட ஆப்பிரிக்கா, அரேபிய தீபகற்பம் மற்றும் ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகிறது.

- இருப்பினும், வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட அழிவு காரணமாக சுமார் 300 ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய ஐரோப்பாவில் இந்த இனம் பதிவாகவில்லை.
- 2011 ஆம் ஆண்டில், முதல் இவ்வகை பறவையானது மனித உதவியின்றி இத்தாலியின் டஸ்கனியிலிருந்து மீண்டும் ஜெர்மனியின் பவேரியாவுக்கு இடம்பெயர்ந்தது.
- தற்போது அறிவியல் ஆய்வாளர்கள் ஒரு இலகுரக விமானத்தைப் பயன்படுத்தி ஆஸ்திரியாவிலிருந்து ஸ்பெயின் நாட்டினை நோக்கி அவற்றின் பண்டைய வலசை போதல் பாதையில் செல்வதற்கு இந்தப் பறவைகளில் 36 பறவைகளுக்கு வழி காட்ட முனைந்துள்ளனர்.
- இந்த வலசை போகும் இனத்தை மீண்டும் அறிமுகப்படுத்த ஒரு இலகுரக விமானம் பயன்படுத்தப் படுவது இது முதல் முறையாகும்.
- இது 1996 ஆம் ஆண்டு வெளியான ஃப்ளை அவே ஹோம் திரைப்படம் மற்றும் 1988 ஆம் ஆண்டில் இயற்கை ஆர்வலர் பில் லிஷ்மேன் அளித்த கனடா வாத்துகள் குறித்த ஆய்வறிக்கை ஆகியவற்றின் மூலம் ஈர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.


## பூமியின் அதிகபட்ச வெப்பநிலை பதிவு

- தெற்கு ஈரானில் உள்ள ஒரு கிராமத்தில், 97°F (36.1°C) உறை வெப்பநிலையுடன் 82.2°C (180°F) வெப்பநிலை என்ற பூமியின் மிக உயர்ந்த வெப்ப நிலை பதிவாகியது.
- 102°F (38.9°C) என்ற காற்றின் வெப்பநிலை மற்றும் 85% ஈரப்பதம் ஆகியவற்றின் கலப்பு மூலம் இந்த அதிகபட்ச புள்ளிவிவரங்கள் உருவாக்கப்பட்டன.
- சவுதி அரேபியாவின் தஹ்ரானில் உள்ள வானிலை நிலையம் சமீபத்திய நாட்களில் 93°F (33.9 ° C) வரையிலான உறை வெப்ப நிலையினைப் பதிவு செய்துள்ளது.
- இது தற்போது உலகளவில் அதிகபட்சமாக 95°F (35°C) என்ற உறை வெப்பநிலையினைக் கொண்டுள்ளது.



## அட்லாண்டிக் பெருங்கடலில் வெப்பநிலை வீழ்ச்சி

- ❖ பூமத்திய ரேகைக்கு அருகில், மத்திய அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் சுமார் 86°F வரையிலான வெப்பநிலை வீழ்ச்சியானது பதிவாகியுள்ளது.
- ❖ பின்னர், ஏறத்தாழ ஒரே இரவில், வெப்பநிலை 72°F ஆக சரிந்தது.
- ❖ 1982 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான அதிக வெப்பநிலை இதுவேயாகும்.
- ❖ இந்தக் குளிரூட்டும் நிகழ்வு ஆனது, பசிபிக் பெருங்கடலின் லா நினாவைப் போன்ற பருவநிலை வடிவமான "அட்லாண்டிக் நினா" பற்றிய கணிப்புகளைத் தூண்டியது.
- ❖ அட்லாண்டிக் நினா நிகழ்வானது, மேற்கு ஆப்பிரிக்காவில் அதிக மழைப் பொழிவைக் கொண்டு வரச் செய்யும் அதே வேளையில் வடகிழக்குப் பிரேசில் மற்றும் கினியா வளைகுடாவில் குறைந்த மழைப்பொழிவை ஏற்படுத்தும்.
- ❖ இந்தப் பருவநிலை நிகழ்வானது கடைசியாக 2013 ஆம் ஆண்டில் பதிவானது.




## அர்னோக்ஸின் மூக்கு திமிங்கலம்




- ❖ அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அண்டார்டிகாவின் கடற்கரையில் பல அரிதான அர்னோக்ஸின் மூக்கு திமிங்கலங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இந்த திமிங்கலங்கள் பல தசாப்தங்களாக தென்படவில்லை.

- அவை அவற்றின் திறமிக்க நீச்சல் திறன்களுக்குப் பெயர் பெற்றவை மற்றும் சுமார் 30 அடி நீளம் கொண்டவையாகும்.
- 1988 மற்றும் 2018 காலக் கட்டத்திற்கு இடையில் இந்தப் பகுதியில் நடத்தப்பட்ட 11 கண்காணிப்பு பயணங்களில், அறிவியல் ஆய்வாளர்கள் ஒருபோதும் இந்தத் திமிங்கலங்களைக் காணவில்லை.
- 1851 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்ட இவை மிகப் பெரும்பாலும் தென் அரைக் கோளத்தில் காணப்படுகின்ற காண்பதற்கு அரிய கடல் வாழ் விலங்குகள் ஆகும்.

## போபா காப்புக் காடு


- அசாம் மாநில அரசானது, போபா காப்புக் காடுகளை வனவிலங்குச் சரணாலயமாக அறிவிக்க உள்ளது.
- போபா காப்புக் காடு, அசாமின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மழைக்காடுகள் ஆகும்.
- முன்மொழியப்பட்டுள்ள வனவிலங்குச் சரணாலயம் ஆனது போபா காப்புக் காடு, கபு சாப்ரி முன்மொழியப்பட்ட காப்புக் காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆற்றங்கரை பகுதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இந்த காட்டில் சுமார் 45 வகையான பறவைகள் மற்றும் ஊர்வன இனங்கள் காணப் படுகின்றன என்பதோடு மேலும் சியாங் மற்றும் லோஹித் போன்ற நதிகள் இங்கு சங்கமிப்பதால் இங்கு பல்வேறு வகையான மீன் இனங்கள் காணப்படுகின்றன.

## குதிக்கும் சிலந்திகளின் புதிய இனங்கள் – தமிழ்நாடு




- காரோட்டடஸ் பைபரஸ் எனப்படுகின்ற குதிக்கும் சிலந்திகளின் ஒரு புதிய இனமானது, தமிழகத்தின் பழனி மலைப்பகுதி அடிவாரங்களில் கண்டறியப் பட்டுள்ளது.
- திண்டுக்கல் தடியன்குடிசையில் மேற்கொள்ளப்பட்ட 2016 ஆம் ஆண்டு ஆய்வின் போது இது கண்டுபிடிக்கப் பட்டது.
- இந்த கண்டுபிடிப்பானது இந்தியாவில் நன்கு அறியப்பட்ட காரோட்டடஸ் இனங்களின் எண்ணிக்கையை 10 ஆகவும், உலகளவில் அதன் எண்ணிக்கையினை 37 ஆகவும் உயர்த்துகிறது.

## அரிய மதராஸ் முள்ளம்பன்றி




- இரவு நேரங்களில் மட்டும் உலவக் கூடியதும் காண்பதற்கு அரியதுமான மதராஸ் முள்ளம்பன்றியானது (பாராசினாஸ் நுடிவெண்ட்ரீஸ்) தமிழ்நாடு, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய தடைசெய்யப்பட்ட புவியியல் வரம்பில் மட்டுமே இருப்பதாக கருதப்படுகிறது.
- இந்த இனங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் வாழ்விடங்களின் நிலை பற்றி இன்னும் சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை.
- IUCN அமைப்பானது இதனை "தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்" ஆக வகைப் படுத்தி உள்ளது.
- மேற்கு மற்றும் தென் தமிழ்நாட்டின் தட்பவெப்பநிலையானது இந்த இனங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- கூடுதலாக, கொரங்காடு புல்வெளிகள், பகுதியளவு வறண்ட சூழல் சார்ந்த மேய்ச்சல் நிலங்கள் மற்றும் வறண்ட நிலங்கள் ஆனது தமிழ்நாட்டில் இந்த இனத்திற்கானப் பொருத்தமான வாழ்விடங்களாகக் கணிக்கப்பட்டுள்ளன.

## அண்டார்டிக் டிராகன்ஃபிஷ்

- அண்டார்டிக் தீபகற்பத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் அண்டார்டிக் டிராகன்ஃபிஷ் மீன் இனத்தின் புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இது பேண்டட் டிராகன்ஃபிஷ் அல்லது அகரோடாக்சிஸ் கோல்டே என்று அழைக்கப் படுகிறது.

- சமீபத்தில் அதன் பயன்பாட்டில் இருந்து விலகிய அண்டார்டிக் ஆராய்ச்சி மற்றும் விநியோகக் கப்பலான லாரன்ஸ் M. கோல்ட் மற்றும் அதன் குழுவினரின் நினைவாக இந்த மீனிற்கு அப் பெயரிடப்பட்டுள்ளது.



## அட்லஸ் அந்துப்பூச்சி



- அட்லஸ் அந்துப்பூச்சி (அட்டகஸ் அட்லஸ்) தென்கிழக்கு ஆசியாவைச் சார்ந்ததாகவும், உலகின் மிகப்பெரிய அந்துப் பூச்சிகளில் ஒன்றாகவும் கருதப் படுகிறது.
- சமீபத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள கல்வராயன் மலையில் ஒரு பறவைக் கண்காணிப்பு ஆர்வலரால் இது பதிவு செய்யப்பட்டது.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையில் இந்த இனம் தென்பட்டு உள்ளது இது முதல் முறையாகும்.
- இந்தியாவில் காணப்படும் பெரிய அந்துப்பூச்சிகளில் இதுவும் ஒன்றாகும்.
- இந்த அந்துப்பூச்சிகள் பொதுவாக வெப்பமண்டல வறண்ட நிலக் காடுகளில் கடல் மட்டத்திலிருந்து 500-3,000 அடி உயரத்தில் காணப்படும்.
- அவை பகலில் ஓய்வெடுத்து இரவில் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

## புதிய 'டான்சிங் கேர்ள்ஸ்' இஞ்சி இனங்கள்

- கிழக்கு இமயமலை மற்றும் இரண்டு வடகிழக்கு மாநிலங்களில் இருந்து இஞ்சி (ஜிங்ஜிபெரேசி) குடும்பத்தைச் சேர்ந்த குளோபா பேரினத்தில் ஆறு புதிய இனங்களை அறிவியலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- இந்த இனத்தின் பொதுவான பெயர் டான்சிங் கேர்ள் அல்லது டான்சிங் லேடி ஜிஞ்சர் ஆகும்.

- இந்த இனங்கள் குளோபா கோர்நிகுலாட்டா, குளோபா பாஸ்சிம்பெங்காலன்சிஸ், குளோபா பாலிமோர்ஃபா, குளோபா டைரெனென்சிஸ், குளோபா ஜானகியே மற்றும் குளோபா யடவியானா ஆகியவனவாகும்.
- முதல் மூன்று இனங்கள் மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் மாவட்டத்திலிருந்தும், அடுத்த இரண்டு இனங்கள் மேகாலயாவிலிருந்தும், கடைசி இனம் மிசோரமிலிருந்தும் பதிவு செய்யப்பட்டன.
- ஜிங்ஜிபெரேசியே ஆனது ஜிங்கிபெரேல்ஸ் வரிசையில் உள்ள மிகப்பெரிய குடும்பம் ஆகும், இதில் குறைந்தது 114 பேரினங்கள் மற்றும் 4,022 இனங்கள் உள்ளன.



## புதிய மஞ்சள் இனங்கள்

- நாகாலாந்து மாநிலத்தில் குர்குமா யுங்மென்சிஸ் எனப்படும் மஞ்சளின் புதிய 'சார்பு இனத்தினை' ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இது குர்குமா (இஞ்சி குடும்பம் ஜிங்ஜிபெரேசி) இனத்தைச் சேர்ந்தது.
- இந்தியாவில் ஜிங்ஜிபெரேசி குடும்பமானது சுமார் 21 வகைகளையும் சுமார் 200 வகைப்பாட்டியலையும் கொண்டுள்ளது.
- குர்குமா இந்த தாவரக் குடும்பத்தின் மிக முக்கியமான மற்றும் பெரிய வகைகளில் ஒன்றாகும்.



- குர்குமா லாங்கா, கருப்பு மஞ்சள் (குர்குமா சீசியா) மற்றும் மா இஞ்சி (குர்குமா அமடா) ஆகியவை நன்கு அறியப்பட்ட மஞ்சள் இனங்களாகும்.

- இந்தியாவில், குர்குமா இனமானது சுமார் 40 இனங்களால் குறிப்பிடப்படுகிறது.
- அவை மிகவும் முக்கியமாக வடகிழக்கு மற்றும் தென் மாநிலங்களிலும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் காணப்படுகின்றன.

## காற்று தர மேலாண்மைப் பரிமாற்றத் தளம்

- பருவநிலை மற்றும் தூய்மையானக் காற்று கூட்டணி (CCAC) ஆனது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 6வது (UNEA-6) தீர்மானத்தை தொடர்ந்து காற்று தர மேலாண்மைப் பரிமாற்றத் தளத்தை (AQMx) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பிராந்தியக் கூட்டுறவினை அதிகரிப்பதையும், உலகளவில் காற்றின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் காற்றுத் தர வழிகாட்டுதல்கள் மற்றும் இடைக்கால இலக்குகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது குறித்து நகர மற்றும் தேசிய காற்றுத் தர மேலாள அமைப்புகளுக்கு இந்த தளம் வழிகாட்டுதல்களை வழங்கும்.
- காற்று மாசுபாடு ஆனது ஆண்டுதோறும் 8 மில்லியனுக்கும் அதிகமான முன்கூட்டிய மரணங்களை ஏற்படுத்துகிறது குறிப்பாக ஏழ்மை நிறைந்த பகுதிகள் மற்றும் எளிதில் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள மக்களைப் பாதிக்கிறது.




## மிரிஸ்டிகா சதுப்பு நிலக் காடு

- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், உள்ளூர்ச் சமூகத்தினரால் பாதுகாக்கப்படுகின்ற கும்ப்ரலில் உள்ள மிரிஸ்டிகா சதுப்பு நிலக் காடு எனப்படுகின்ற ஒரு புனித தோப்பை (சோலைகளைக்) கண்டறிந்துள்ளனர்.
- மிரிஸ்டிகா மாக்னிஃபிகா என்பது கர்நாடகா மற்றும் கேரளாவை பூர்வீகமாகக் கொண்ட தாவர இனமாகும் என்பதோடு மேலும் இது அருகி வரும் நிலையில் உள்ள இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- முந்தைய அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சிந்துதுர்க் மாவட்டத்தில் உள்ள ஹெவாலே-பாம்பார்டே பகுதியில் இவற்றைக் கண்டறிந்தனர்.

- இந்தப் புதியக் கண்டுபிடிப்பு மூலம், மகாராஷ்டிராவில் இத்தகைய தனித்துவமான வனப் பகுதியைக் கொண்ட இரண்டாவது கிராமமாக கும்ப்ரல் மாறியுள்ளது.




## நீள்வட்ட வடிவ ஆமை


- மிகவும் அருகி வரும் உயிரினமான நீள்வட்ட வடிவ ஆமை இனமானது (இன்டோடெஸ்டுடோ எலான்காட்டா) ஹரியானாவில் தென்பட்டுள்ளது.
- இந்த ஆமை இனமானது சால் இலையுதிர் மற்றும் மலைப்பாங்கான பசுமைமாறாக் காடுகளில் காணப்படுகிறது.
- இது வட இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் வங்காளதேசம், மியான்மர், தாய்லாந்து ஆகிய தென்கிழக்கு ஆசியா முழுவதும் மற்றும் இந்திய சீன பகுதி முழுவதும் பரவிக் காணப் படுகின்றன.
- இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,000 மீட்டர் உயரத்தில் உள்ள தாழ்நிலங்கள் மற்றும் அடிவாரப் பகுதிகளிலும் காணப்படுகிறது.



## மீன்களில் ஃபிலுவோக்செடைன் தாக்கங்கள்

- ஃபிலுவோக்செடைன் (ப்ரோசாக்) மருந்திற்கு நீண்ட காலம் வெளிப்படுவதால் ஆண் கப்பி மீனின் நடத்தை மற்றும் அதன் இனப்பெருக்கப் பண்புகள் கணிசமான அளவில் சீர்குலையும்.

- ❖ ஆண் கப்பி மீன்கள் ஆனது சுற்றுச்சூழல் மாற்றங்களால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவை.
- ❖ குறைந்த அளவிலான ஃபிலுவோக்செடைன், செயல்பாடு நிலைகளைக் குறைத்து, ஆண் கப்பி மீன்களில் அடைக்கலம் தேடும் நடத்தையினை அதிகரித்தது.
- ❖ இது விந்தணு எண்ணிக்கையிலும் மாறுபாட்டை அதிகரித்தது.
- ❖ அடைக்கலம் தேடும் நடத்தை என்பது, மீன்கள் மறைந்திருக்கும் அல்லது பாதுகாக்கப் பட்ட பகுதிகளில் எவ்வளவு நேரம் செலவிடுகின்றன என்பதைக் குறிக்கிறது.
- ❖ அதிக ஃபிலுவோக்செடைன் செறிவு ஆனது மீன்களின் உடல் நிலையில் மாறுபாட்டை அதிகரித்தது.
- ❖ ஃபிலுவோக்செடைன் அல்லது ப்ரோசாக் பரவலாகப் பயன்படுத்தப்படும் மன அழுத்த தடுப்பு மருந்தாகும்.
- ❖ கப்பி மீன்கள் சிறிய, வண்ணமயமான மீன் இனங்கள் ஆகும் என்பனால் இவை நீர் வாழினக் காட்சியகங்களில் அலங்கார நோக்கங்களுக்காக வேண்டி மிக அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றன.




## அண்டார்டிகாவின் பனிச் சரிவு ஆபத்து

- ❖ மேற்கு அண்டார்டிகாவின் பனிப் பாறைகள் இடிந்து விழத் தொடங்கினால் என்ன நடக்கும் என்பதை உருவகப் படுத்தச் செய்வதற்காக என்று அறிவியல் ஆய்வாளர்கள் கணினி மாதிரிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.
- ❖ உருகும் பனிக்கட்டிகள் மிகவும் விரைவாக கடலில் வீழும் என்பதால் பாறைகள் பெரிய இடரை ஏற்படுத்தும் அளவுக்கு உயரமாக இருப்பதைத் தடுக்கும் வகையில் அமையும் என்று அவர்கள் கண்டறிந்தனர்.
- ❖ ஆனால், நாம் நினைத்ததை விட பேரழிவு நிகழ்விற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கலாம்.
- ❖ சில சமயங்களில் மிகவும் பெரிய பனிக்கட்டிகள் கண்டத்தில் இருந்து பிரிந்து கடலில் மிதக்கின்றன.
- ❖ இந்த மிதக்கும் பனிக்கட்டிகள் உருகும் போது, அவை மிகவும் உயரமான மற்றும் நிலையற்ற பனிப்பாறைகளை விட்டுச் செல்லும்.

- இந்தப் பாறைகள் இடிந்து விழுந்தால், பெரிய பனிக்கட்டிகள் கடலில் விழும், இதனால் உலகளவில் கடல் மட்டம் மிக வியத்தகு அளவில் உயரும் என்று அறிவியலாளர்கள் கவலையுறுகின்றனர்.



## ‘நன்னீர் சதுப்பு நிலங்களில் சேமிக்கப்படும் கார்பன்’ பற்றிய இந்தியாவின் முதல் ஆய்வு

- ‘நன்னீர் நிறைந்த சதுப்பு நிலங்களில் சேமிக்கப்படும் கார்பன்’ (டீல் கார்பன்) பற்றிய இந்தியாவின் முதல் ஆய்வு ஆனது ராஜஸ்தானின் பரத்பூர் என்ற மாவட்டத்தில் உள்ள கியோலாடியோ தேசிய பூங்காவில் (KNP) மேற்கொள்ளப்பட்டது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள முழுமையான இயற்கை அடிப்படையிலான தீர்வுகளை உருவாக்க இந்த சோதனைத் திட்டம் முயல்கிறது.
- டீல் கார்பன் என்பது ஓதங்கள் அல்லாத நன்னீர் ஈரநிலங்களில் சேமிக்கப்படுகின்ற கார்பனைக் குறிக்கிறது என்பதோடு தாவரங்கள், நுண்ணுயிர் உயிரி மற்றும் கரைந்த மற்றும் துகள்மக் கரிமப் பொருட்களில் உள்ளடங்கியுள்ள கார்பனை இது குறிக்கிறது.
- 'டீல் கார்பன்' என்பது ஒரு வண்ணம் அடிப்படையிலான சொற்கூறாக இருப்பதால், கரிம கார்பனின் இயற்பியல் பண்புகளை விட அதன் செயல்பாடுகள் மற்றும் அதன் இருப்பிடத்தின் அடிப்படையில் அதன் வகைப்பாட்டை அது பிரதிபலிக்கிறது.
- டீல் கார்பனுக்கு மாறாக, கருப்பு மற்றும் பழுப்பு கார்பன் ஆகியவை முதன்மையாக காட்டுத் தீ, புதைபடிவ எரிபொருள் எரிப்பு மற்றும் தொழில்துறை நடவடிக்கைகள் போன்ற மூலங்களிலிருந்து கரிமப் பொருட்களின் ஒரு முழுமையற்ற எரிப்பு மூலம் உற்பத்தி செய்யப் படுகிறது.



## இந்தியாவின் இரண்டாவது பெரிய வண்ணத்துப்பூச்சி இனம்



- இந்தியாவின் இரண்டாவது பெரிய வண்ணத்துப்பூச்சி இனமான தென்னழகி என்ற வண்ணத்துப் பூச்சியானது மதுரை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மிகப் பெரிய வண்ணத்துப்பூச்சி இனமான பொன்னழகன் இமயமலைப் பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது.
- மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தென்னழகி இனம் காணப் படுகிறது.
- இந்த இனங்கள் திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலை மலையில் அதிகளவில் காணப் படுகின்றன.


## வேலி-அக்குளம் ஏரி




- வேலி-அக்குளம் ஏரியில் குறிப்பிடத்தக்க முதன்மையாக அயல் உயிரின ஊடுருவல் காரணமாக ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு நிகழ்வதை ஒரு புதிய ஆய்வானது வெளிப் படுத்தியுள்ளது.
- சுற்றுச்சூழல் செயல் திறன் மற்றும் உணவு வலை அமைப்பை மதிப்பிடுவதற்கு சுற்றுச் சூழல் மாதிரியாக்க (Ecopath) முறையினை இந்த ஆய்வுப் பயன்படுத்தியது.
- வேலி-அக்குளம் ஏரியில் உள்ள உள்நாட்டு நீர்வாழ் உயிரினங்கள் குறைந்துள்ளன என்பதோடு அயல் உயிரினங்களின் ஊடுருவல் அதிகரித்துள்ளதையும் இது நன்கு வெளிப்படுத்தி உள்ளது.
- 2000 ஆம் ஆண்டுகளில், இந்தப் பூர்வீக இனங்கள் ஆனது மொசாம்பிக் திலாபியா (ஓரியோக்ரோமிஸ் மொசாம்பிகஸ்) எனப்படுகின்ற அயல்நாட்டு மற்றும் ஊடுருவல் இனத்தினால் இந்தப் பகுதியில் அழிந்தது என்பதோடு இது தற்போது நைல் திலாபியா (ஓரியோக்ரோமிஸ் நிலோட்டிகஸ்) இனத்தினால் மாற்றப்பட்டுள்ளது.


## ஓசோன் மாசுபாடு மற்றும் வெப்பமண்டல வன வளர்ச்சி

- ❖ தரைமட்ட ஓசோன் ஆனது வெப்பமண்டலக் காடுகளின் வளர்ச்சியைக் கணிசமாகப் பாதிக்கிறது.
- ❖ இதன் விளைவாக ஆண்டுதோறும் 290 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு ஈர்க்கப் படாமல் உள்ளது.
- ❖ இந்த தாழ்மட்ட ஓசோன், கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சும் தாவரங்களின் திறனில் இடையிட்டு, மனிதர்களுக்கும் உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகிறது.
- ❖ தரை மட்டங்களில் காணப்படும் ஓசோன், வெப்பமண்டலக் காடுகளின் புதியதொரு வருடாந்திர வளர்ச்சியைச் சராசரியாக 5.1% குறைக்கிறது என்று ஆராய்ச்சி ஒன்று சுட்டிக் காட்டுகிறது.
- ❖ ஆசிய வெப்பமண்டலக் காடுகளின் புதிய வளர்ச்சியில் 10.9% இழப்பு ஏற்பட்டுள்ளதால், சில பகுதிகளில் இதன் விளைவு மேலும் அதிகமாகக் காணப்படுகிறது.




## 175 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான மிக வெப்பமான ஆகஸ்ட் மாதம்

- ❖ கடந்த 175 ஆண்டுகளில் இல்லாத அளவில், 2024 ஆம் ஆண்டின் ஆகஸ்டு மாதமானது அதிவெப்பமான ஆகஸ்ட் மாதமாக பதிவாகியுள்ளது.
- ❖ ஆகஸ்ட் மாதத்தில் பதிவான சராசரி உலகளாவிய நிலப்பரப்பு மற்றும் கடல் மேற் பரப்பு வெப்பநிலையானது 20 ஆம் நூற்றாண்டின் சராசரி வெப்பநிலையான 60.1 டிகிரி பாரன்ஹீட் (15.6 டிகிரி C) என்ற அளவை விட சுமார் 2.29 டிகிரி பாரன்ஹீட் (1.27 டிகிரி C) அதிகமாக இருந்தது.
- ❖ தென் அரைக்கோளமானது சராசரியை விட சுமார் 0.96 டிகிரி சென்டிகிரேட் என்ற மிக அதிக வெப்ப நிலையில் பதிவான ஒரு வெப்பமான குளிர்காலமாகும்.
- ❖ 2024 ஆம் ஆண்டு கோடைக்காலம் ஆனது வட அரைக்கோளத்தில் பதிவான மிகவும் வெப்பமான ஒரு பருவமாகும்.
- ❖ தற்போது, 46 ஆண்டு காலத்தியப் பதிவில் உலகளாவிய கடல் பனி பரவல் ஆனது 8.32 மில்லியன் சதுர மைல்கள் என்ற அளவில் இரண்டாவது குறைவான அளவாக பதிவாகி உள்ளது.
- ❖ இது 1991-2020 ஆம் ஆண்டு சராசரியை விட 1.05 மில்லியன் சதுர மைல்கள் குறைவாக இருந்தது.




## ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு



- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தின் (ATR) பொள்ளாச்சிக் கோட்டத்தில் உள்ள கிராஸ் ஹில்ஸ் தேசியப் பூங்கா மற்றும் கரியன் சோலை தேசியப் பூங்காவில் முதன் முறையாக ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இந்தக் கணக்கெடுப்பில் 20 வகையான ஊர்வன மற்றும் 34 வகையான நீர்நில வாழ்வி இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்த கணக்கெடுப்புக் குழுவானது கிராஸ் ஹில்ஸ் தேசியப் பூங்காவில் 11 ஊர்வன இனங்களையும் 12 நீர்நில வாழ் இனங்களையும் பதிவு செய்துள்ளது.
- இந்தப் பூங்காவானது வால்பாறை வனப்பகுதியில் சுமார் 3,122 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- உலாந்தி வனச் சரகத்தில் உள்ள டாப் ஸ்லிப் பகுதியில் அமைந்துள்ள கரியன் சோலை தேசியப் பூங்காவில் மொத்தம் ஒன்பது ஊர்வன மற்றும் சுமார் 22 நீர்நில வாழ் இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள ஆனைமலை பறக்கும் தவளை (ராகோபோரஸ் சூடோமலாபாரிகஸ்) மற்றும் டெக்கான் இரவு வாழ் தவளை (நைக்டிபாட்ரசுஸ் டெக்காநென்சிஸ்) ஆகிய இனங்களையும் இந்த ஆய்வுக் குழு பதிவு செய்துள்ளது.

## அரிய சாண வண்டு இனங்கள்

- பூச்சியியல் வல்லுநர்கள் ஓனிடிஸ் விஸ்தாரா என்ற புதிய வகை சாண வண்டுகளைக் கண்டறிந்துள்ளனர்.
- ஓனிடிஸ் என்பது ஆப்ரோட்ரோபிகல், ஓரியண்டல் மற்றும் பாலேர்க்டிக் பகுதிகளில் காணப் படும் சாண வண்டுகளின் அரிதான இனமாகும்.
- மூன்று புதிய இனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, உலகளவில் 176 வகையான ஓனிடிஸ் மட்டுமே பதிவாகியிருந்தன.
- இந்த இனத்தின் அனைத்து இனங்களும் குழி பறிக்கும் இனங்களாகும் என்ற வகையில் அதாவது அவை அவற்றின் லார்வாக்களுக்கு உணவை வழங்குவதற்காக அதிக அளவு கால்நடைகளின் சாணத்தை மண்ணின் அடியில் புதைக்கின்றன.




## வெள்ளை காண்டாமிருகங்களின் பாதுகாப்பு நிலை 2024

- வெள்ளை காண்டாமிருகம் ஆனது அதன் ஆப்பிரிக்க சார்பு இனமான கருப்பு காண்டா மிருகத்துடன் ஒப்பிடும்போது அதன் வாயின் வடிவத்தின் காரணமாக சதுர உதடு காண்டாமிருகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- வெள்ளை காண்டாமிருகத்தில் இரண்டு கிளையினங்கள் உள்ளன. அவை
    - தெற்கு வெள்ளை காண்டாமிருகங்கள்: செரடோதெரியம் சிமம் சிமம்
    - வடக்கு வெள்ளை காண்டாமிருகங்கள்: செரடோதெரியம் சிமம் காட்டனி
- தெற்கு வெள்ளை காண்டாமிருகம் என்பது மிகவும் பரவலாக காணப் படுகின்ற இனங்களில் ஒன்றாகும். இதில் சுமார் 17,000 உள்ளன.
- கென்யாவில் உள்ள பெஜெட்டா வளங்காப்பகத்தில் வசிக்கும் கடைசி இரண்டு வடக்கு வெள்ளை காண்டாமிருகம் மிக அருகி வரும் இனம் என்ற நிலையில் உள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## மத்திய வங்கியாளர் அறிக்கை 2024

- குளோபல் ஃபைனான்ஸ் இதழ் ஆனது 2024 ஆம் ஆண்டு மத்திய வங்கியாளர் அறிக்கை என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது 100 நாடுகளைச் சேர்ந்த மத்திய வங்கி ஆளுநர்களின் பெயர்களை அறிவித்து ள்ளது.
- பணவீக்கக் கட்டுப்பாடு, பொருளாதார மேம்பாட்டு இலக்குகள், நாணய மதிப்பு நிலைத்தன்மை மற்றும் வட்டி விகித மேலாண்மை போன்ற துறைகளில் பெற்ற பல வெற்றிகளுக்கு ஏற்ப அவர்கள் இந்தப் பட்டியலில் "A+" முதல் "F" அளவில் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளனர்.

| Grade | Central Banker | Country |
|---|---|---|
| A+ | Christian Kettel Thomsen | Denmark |
| A+ | Shaktikanta Das | India |
| A+ | Thomas Jordan | Switzerland |
| A | Roberto Campos Neto | Brazil |
| A | Rosanna Costa | Chile |
| A | Harvesh Kumar Seegolam | Mauritius |
| A | Abdellatif Jouahri | Morocco |
| A | Lesetja Kganyago | South Africa |
| A | Nandalal Weerasinghe | Sri Lanka |
| A | Nguyen Thi Hong | Vietnam |

## ஹுருன் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் 2024


- ❖ மும்பை நகரம் இப்போது சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கைப் பின்னுக்குத் தள்ளி ஆசியாவின் பில்லியனர் தலைநகராக உருவெடுத்துள்ளது.
- ❖ இந்தியாவின் பணக்காரர்களின் முதன்மை நகரமாகவும் மும்பை உள்ளது, அதைத் தொடர்ந்து புது டெல்லி மற்றும் ஹைதராபாத் உள்ளது.
- ❖ ஒரு மாநிலப் பங்கீட்டைப் பொறுத்தவரை, மகாராஷ்டிரா 470 பேர்களுடன் முன்னிலை வகிக்கிறது, அதே நேரத்தில் டெல்லி 213 பேர் உள்ளனர்.
- ❖ சுமார் 129 புதிய பணக்காரர்களுடன் குஜராத் மூன்றாவது இடத்தில் உள்ள நிலையில், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகியவை அடுத்த மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.





## 2024 ஆம் ஆண்டு உலகளாவிய காற்று அறிக்கை

- ❖ அமெரிக்காவில் உள்ள ஹெல்த் எஃபெக்ட்ஸ் இன்ஸ்டிடியூட் (HEI) நிறுவனமானது 2024 ஆம் ஆண்டு உலகளாவிய காற்று அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் காற்று மாசுபாடு ஆனது உலகளவில் சுமார் 8.1 மில்லியன் உயிர் இழப்புகளுக்குக் காரணமாக இருந்தது.
- ❖ ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு உட்பட, உயிரிழப்பிற்கான இரண்டாவது முக்கிய இடர் காரணியாக இது திகழ்கிறது.
- ❖ 2021 ஆம் ஆண்டில் காற்று மாசுபாட்டால் ஏற்படும் உலக உயிரிழப்புகளில் சீனா (2.3 மில்லியன் இறப்புகள்) மற்றும் இந்தியா (2.1 மில்லியன் இறப்புகள்) ஆகியவை 55% பங்கினை கொண்டுள்ளன.
- ❖ இந்தியாவில் காற்று மாசுபாட்டால் ஒவ்வொரு நாளும் ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 464 குழந்தைகள் உயிரிழக்கின்றனர்.
- ❖ உலக மக்கள் தொகையில் 99% பேர் ஆரோக்கியமற்ற அளவில் PM2.5 மாசு உள்ள இடங்களில் வாழ்கின்றனர்.
- ❖ PM2.5 துகள்கள் காற்றில் காணப்படும் சிறிய மாசுகள் ஆகும்.

- காற்று மாசுபாடு காரணமாக ஏற்படும் உயிரிழப்புகளில் 90%க்கும் அதிகமானவை இந்த PM2.5 துகள்களின் மாசுபாட்டின் காரணமாக ஏற்படுகின்றன.




## காற்றின் தரம் மற்றும் பருவநிலை அறிக்கை 2024




- ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பு (WMO) ஆனது, சமீபத்தில் அதன் 4வது வருடாந்திர காற்றுத் தரம் மற்றும் பருவநிலை அறிக்கையினை வெளியிட்டது.
- ஐரோப்பா மற்றும் சீனாவில் PM2.5 மாசு குறைவாக உள்ளது.
- வட அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் மானுடவியல் நடவடிக்கைகளால் உமிழ்வுகள் அதிகரித்துள்ளன.
- மத்திய ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், இந்தியா, சீனா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள வேளாண் பகுதிகள் உலகளாவிய துகள்மப் பொருட்களின் மாசுபாடு நிறைந்த பகுதிகளாகும்.
- துகள்மப் பொருட்கள் (PM) ஆனது, இலைப் பரப்புகளை அடையும் சூரிய ஒளியைக் குறைப்பதால் பயிர் விளைச்சலை 15% குறைக்கிறது.

## TIME இதழின் உலகின் சிறந்த நிறுவனங்கள் பட்டியல் 2024

| Rank | Company name | Headquarters | Overall score | Sustainability transparency rank | Employee satisfaction rank | Revenue growth | Industry |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Apple | United States | 97.75 | 1 | 4 | Very High | IT, Electronics, Hardware & Equipment |
| 2 | Accenture | Ireland | 97.7 | 4 | 21 | Very High | Professional Services |
| 3 | Microsoft | United States | 97.65 | 112 | 2 | Outstanding | IT, Electronics, Hardware & Equipment |
| 4 | BMW Group | Germany | 97.41 | 172 | 7 | Outstanding | Automotive Industry & Suppliers |
| 5 | Amazon | United States | 96.47 | 301 | 3 | Outstanding | Technology, Media & Services |
| 6 | Electricite de France | France | 96.22 | 181 | 27 | Outstanding | Utilities |
| 7 | American Express | United States | 96.0 | 78 | 26 | Outstanding | Banking & Financial Services |
| 8 | Meta Platforms | United States | 96.0 | 65 | 8 | Very High | Technology, Media & Services |
| 9 | Siemens | Germany | 95.96 | 41 | 10 | Very High | Conglomerate |
| 10 | JPMorganChase | United States | 95.93 | 148 | 18 | Outstanding | Banking & Financial Services |

- TIME இதழின் 2024 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த நிறுவனங்கள் பட்டியலில் இந்தியாவைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு முன்னணி நிறுவனமாக HCL டெக் பட்டியலிடப்பட்டுள்ளது.
- HCL டெக் நிறுவனம் 112வது இடத்திலும், இன்ஃபோசிஸ் 119வது இடத்திலும், விப்ரோ 134 இடத்திலும் உள்ளன.
- மஹிந்திரா குழுமம், ஆக்சிஸ் வங்கி, SBI, ICICI வங்கி, L&D, கோட்டக் மஹிந்திரா வங்கி, ITC லிமிடெட், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் அதானி குழுமம் ஆகியவை இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இதர முன்னணி இந்திய நிறுவனங்களாகும்.
- அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு தொழில்நுட்ப நிறுவனமான ஆப்பிள் உலக அளவில் முதலிடம் பிடித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து அயர்லாந்தில் உள்ள தொழில்நுட்ப நிறுவனமான அக்சென்ச்சர் இடம் பெற்றுள்ளது.
- மைக்ரோசாப்ட், BMW குழுமம், மற்றும் அமேசான் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் இடம் பெற்றுள்ளன.

## உலகளாவிய இணையவெளிப் பாதுகாப்புக் குறியீடு 2024



- சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியமானது (ITU) வெளியிட்ட 2024 ஆம் ஆண்டு உலகளாவிய இணையவெளிப் பாதுகாப்புக் குறியீட்டில் (GCI) இந்தியா முதல் அடுக்கு நிலைக்கு முன்னேறியுள்ளது.
- இந்த அறிக்கையானது 46 நாடுகளை மொத்தம் ஐந்து அடுக்குகளில் மிக உயரிய நிலையான முதல் அடுக்கு நிலையில் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- இது ஐந்து இணையப் பாதுகாப்பு அம்சங்களிலும் வலுவான உறுதிப்பாட்டினை வெளிப்படுத்தும் "முன்மாதிரியாக விளங்கும்" நாடுகளுக்காக என்று இந்த தரவரிசை ஒதுக்கப்பட்டுள்ளது.
- இணைய வெளிப் பாதுகாப்பின் அடிப்படையில் பெரும்பாலான நாடுகள் "நிலைப் படுத்திக் கொண்டு வரும் நிலை" (அடுக்கு 3) அல்லது "பரிணமித்து வரும் நிலையில்" (அடுக்கு 4) உள்ளன.
- இந்தியாவில் தகவல் தொழில்நுட்பச் சட்டம் (2000) மற்றும் தனிநபர் டிஜிட்டல் தரவுப் பாதுகாப்பு மசோதா (2022) போன்ற வலுவான சட்ட நடவடிக்கைகள் உள்ளன.

## ஆரோக்கியமான நீண்ட ஆயுளின் ஆற்றலை வெளிக்கொணர்தல்




- உலக வங்கியானது, "மிகவும் ஆரோக்கியமான நீண்ட ஆயுளின் ஆற்றலை வெளிக் கொணர்தல்: மக்கள்தொகை மாற்றம், தொற்றா நோய்கள் மற்றும் மனித மூலதனம்" என்ற தலைப்பிலான ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- சுமார் 150 மில்லியன் உயிர்களைக் காப்பாற்றவும், 2050 ஆம் ஆண்டிற்குள் மில்லியன் கணக்கான உயிர்களை நீட்டிக்கச் செய்யவும் ஆரோக்கியமான ஒரு நீண்ட ஆயுளை ஊக்குவிப்பதில் மிக துணிச்சலான நடவடிக்கைக்கான சாத்தியத்தை இது எடுத்துக் காட்டுகிறது.
- நூற்றாண்டின் நடுப்பகுதியில் மூன்றில் ஒருவர் 60 வயதுக்கு மேல் உயிருடன் இருப்பார் என்பதால், மிகக் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் கவனம் செலுத்துவதன் மூலம் விரைவான மக்கள்தொகை மாற்றங்களின் மீது இது கவனம் செலுத்துகிறது.
- தொற்றா நோய்கள் (NCDs) ஆனது ஏற்கனவே இந்தப் பிராந்தியங்களில் சுமார் 70% உயிரிழப்புகளுக்கு காரணமாகின்றன.

- உலக வங்கி ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் 1.5 பில்லியன் மக்களுக்கு சிறந்த சுகாதாரச் சேவைகளை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

## காண்டாமிருகத்தின் நிலை குறித்த அறிக்கை 2024


- சர்வதேச காண்டாமிருக அறக்கட்டளை அமைப்பானது, 2024 அம் ஆண்டு காண்டா மிருக இனங்களின் நிலை குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தற்போது, உலகளவில் ஐந்து வகையான இனங்களிலும் ஒட்டு மொத்தமாக 28,000க்கும் குறைவான காண்டாமிருகங்களே உள்ளன.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சுமார் 100க்கும் குறைவாக இருந்த பெரிய ஒற்றை கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கையானது இன்று சுமார் 4,014 ஆகப் படிப்படியாக அதிகரித்துள்ளது.
- கடந்த பத்தாண்டுகளில் இது 20% அதிகரித்துள்ளது.
- இந்தோ-நேபாள தெராய் பகுதி, வடக்கு மேற்கு வங்காளம், அசாம் ஆகிய பகுதிகளில் இவை காணப்படுகின்றன.
- இந்தியாவில், 2021 ஆம் ஆண்டின் இறுதியில், ஒற்றை கொம்பு காண்டாமிருகத்தின் எண்ணிக்கை 3,262 ஆக இருந்தது.
- அவற்றில் 90%க்கும் அதிகமானவை காசிரங்கா தேசியப் பூங்காவில் உள்ளன.
- ஆப்பிரிக்காவில் காண்டாமிருக வேட்டையாடுதல் 2022 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 4% அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் குறைந்தது 586 ஆப்பிரிக்கக் காண்டாமிருகங்கள் வேட்டையாடப் பட்டன (ஒவ்வொரு 15 மணி நேரத்திற்கும் ஒன்று).




## ஆசியாவின் அதிகாரம் மிக்க நாடுகள் குறியீடு

- ஆஸ்திரேலிய ஆலோசனை வழங்கீட்டு குழுவினால் வெளியிடப்பட்ட வருடாந்திர ஆசியாவின் அதிகாரம் மிக்க நாடுகள் குறியீட்டில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

- ❖ கோவிட் 19 பெருந்தொற்றிற்குப் பிந்தைய ஒரு வலுவான பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில் இந்தியா ஜப்பானை விஞ்சியுள்ளது.
- ❖ சீனாவின் அதிகாரம் ஆனது அமெரிக்காவை விட குறைவாகவே உள்ளது.
- ❖ இக்குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து சீனா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் ரஷ்யா ஆகியவை உள்ளன.





# மாநிலச் செய்திகள்

## நிலத்தடி நீரில் ஃப்ளூரின் மாசுபாடு 2024

- ❖ ராஜஸ்தான், தெலுங்கானா, மேற்கு ஆந்திரப் பிரதேசம் மற்றும் கிழக்கு கர்நாடகா ஆகிய மாநிலங்களில் நிலத்தடி நீரில் ஃப்ளூரைடு மாசுபாடு அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக உள்ளது.
- ❖ ஹரியானா, குஜராத், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், ஜார்கண்ட், பீகார் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளிலும் இந்த ஃப்ளூரைடு மாசுபாடு நிலவியது.
- ❖ அதிகப்படியான ஃப்ளூரைடு அளவானது எலும்புப் புளூரின்மிகைமை (ஃப்ளோரோசிஸ்) போன்ற நோய் நிலைகளின் அபாயத்தை அதிகரிப்பதோடு பல் சிதைவு விகிதத்தைத் துரிதப்படுத்துகிறது.
- ❖ தேசிய அளவில் அனுமதிக்கப்பட்ட ஃப்ளூரைடின் வரம்பு 1.50 மில்லிகிராம் / லிட்டர் ஆகும்.
- ❖ ஒரு லிட்டருக்கு 1.50 மில்லிகிராம் அளவுக்கு மேல் மாசுபட்டால், அந்த நீர் குடிப்பதற்குத் தகுதியற்றதாகக் கருதப்படுகிறது.
- ❖ வறண்ட, மேற்கு இந்தியப் பகுதிகளில் நிலத்தடி நீரில் ஃப்ளூரைடின் சராசரி செறிவு அதிகமாக இருந்தது.

- இந்தத் தரவரிசையில் ராஜஸ்தான் மாநிலம் முதலிடத்தில் உள்ள நிலையில் கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய சில மாநிலங்களில் பருவமழைக்குப் பிந்தைய ஃப்ளூரின் செறிவு இயல்பை விட அதிகமாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.




## புதிய முஸ்லிம் திருமண மசோதா – அசாம்




- அசாமின் மாநிலச் சட்டமன்றம் முஸ்லீம் திருமணங்கள் மற்றும் விவாகரத்துகளைப் பதிவு செய்வதற்கான 1935 சட்டத்தை ரத்து செய்து, அதற்குப் பதிலாக புதிய சட்டத்தை நிறைவேற்றி உள்ளது.

- இந்த 1935 சட்டத்தில் சிறார்களுக்கிடையேயான திருமணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.
- முஸ்லீம் திருமணங்கள் மற்றும் விவாகரத்துகளுக்கான அசாம் மாநில கட்டாயப் பதிவு மசோதா, 2024 என இதற்கு பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தப் புதிய மசோதாவின் கீழ் பதிவு செய்யும் செயல்பாடுகள் அந்தப் பகுதியின் திருமணம் மற்றும் விவாகரத்துப் பதிவாளராக உள்ள துணைநிலை பதிவாளரால் மேற் கொள்ளப் பட வேண்டும்.
- பலதார மணத்தைத் தடை செய்வதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தவும் அசாம் அரசு திட்டமிட்டுள்ளது.

## குதுப் ஷாஹி கல்லறை வளாகம் - ஹைதராபாத்




- இந்த வளாகத்தின் மறுசீரமைப்புத் திட்டம் 2013 ஆம் ஆண்டில் தொடங்கி, ஜூலை 2024 இல் நிறைவடைந்தது.
- குதுப் ஷாஹி கல்லறை வளாகம் 500 ஆண்டுகள் பழமையான பெரியக் கல்லறைகள், இத்காக்கள், கல்லறைகள், இறுதி சடங்குகள் மேற்கொள்ளும் மசூதிகள், ஒரு ஹம்மாம் (குளிக்கும் இடம்) மற்றும் பாவோலிஸ் (படிக்கட்டுகளுடன் கூடிய கிணறு) ஆகியவற்றின் தொகுப்பாகும்.
- ஏழு மன்னர்களில், ஆறு பேரின் கல்லறைகள் இக்கல்லறை வளாகத்தில் உள்ளன.
- இது 1518 ஆம் ஆண்டு மற்றும் 1687 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில், 169 ஆண்டுகள் கோல்கொண்டா மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட பிராந்தியத்தின் கலை மற்றும் கட்டிடக்கலையின் உச்சத்தைச் சித்தரிக்கிறது.
- கோல்கொண்டா கோட்டை உள்ளிட்ட குதுப் ஷாஹி நினைவுச் சின்னங்களும், கர்நாடக மாநிலத்தில் உள்ள குல்பர்கா, பிடார் மற்றும் பீஜப்பூரில் உள்ள இதே போன்ற நினைவுச் சின்னங்களும் 2014 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் ஏற்கனவே இடம் பிடித்துள்ளன.

## ஓவிட்ராப் பொறிகள் - கர்நாடகா


- கொசுக்களைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளும் ஓவிட்ராப் (கொசுக்கள் முட்டையிடும் அமைப்புகளை ஒத்தப் பொறிகள்) பொறிகளைக் கர்நாடக அரசு நிறுவத் தொடங்கி உள்ளது.
- வீடுகளில் இருந்து 20 அடி தூரத்தில் நிறுவப்பட்டுள்ள, இந்தப் பொறிகளின் உள்ளே தெளிக்கப் படும் இரசாயனமானது கொசுக்களைப் பொறிக்குள் கவர்ந்து இழுக்கிறது.

- ஓவிட்ராப் பொறிகள் ஆனது கொசுக்களை, குறிப்பாக சில கொள்கலன்களில் இனப் பெருக்கம் செய்யும் ஏடிஸ் இஜிப்தி மற்றும் ஏடிஸ் அல்போபிக்டஸ் போன்ற சில இனங்களைக் கவர்ந்து இழுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புச் சாதனங்களாகும்.
- இந்தியா உட்பட பல நாடுகள் கொசுக்களின் எண்ணிக்கையைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் இந்தக் பொறிகளைப் பயன்படுத்துகின்றன.





## அபராஜிதா மசோதா - மேற்கு வங்காளம்

- மேற்கு வங்காள சட்டசபையானது, '2024 ஆம் ஆண்டு அபராஜிதா பெண் மற்றும் குழந்தை மசோதாவினை (மேற்கு வங்காள குற்றவியல் சட்டங்கள் மற்றும் திருத்தம்)' நிறைவேற்றியுள்ளது.
- கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கான விதிகள் இதில் அடங்கும்.
- இந்த மசோதாவானது கீழ்க்காணும் விதிகளின் கீழ் இந்தக் குற்றங்கள் தொடர்புடைய விதிகளில் திருத்தங்களை மேற்கொள்ள உள்ளது.
  - பாரதிய நியாய சன்ஹிதா 2023,
  - பாரதிய நாக்ரிக் சுரக்சா சன்ஹிதா 2023, மற்றும்
  - பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (POCSO)
- இப்புதிய சட்டத்தின் கீழ், பாலியல் வன்கொடுமைக்கான தண்டனை 7 ஆண்டுகளுக்கு மேலானதாக இருக்கும் என்பதோடு அது அபராதத்துடன் 10 ஆண்டுகள் வரையிலும் நீட்டிக்கப் படலாம்.
- பாதிக்கப்பட்டக் குழந்தையிடம் இருந்து 7 நாட்களுக்குள் ஆதாரம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இந்தப் புதிய மசோதா கட்டாயமாக்குகிறது.
- இதற்கானச் சிறப்பு நீதிமன்றம் ஆனது இந்த விசாரணையை 30 நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.
- கடுமையான பலவந்தமான பாலியல் வன்கொடுமைக்கான தண்டனை என்பது கடுங் காவல் ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் அல்லது மரண தண்டனையாகும்.




## உண்மையான GSDP வளர்ச்சி 2024

- தெலுங்கானா, தமிழ்நாடு மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 2024 ஆம் நிதியாண்டில் உண்மையான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) அதிக வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- ஒன்பதாவது பெரிய மாநிலமான தெலுங்கானாவின் பொருளாதார வளர்ச்சி ஆனது, 9.2 சதவீதமாக வளர்ந்து அதன் உண்மையான GSDPயாக 7.9 லட்சம் கோடி ரூபாயை எட்டியது.
- இது தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியான 8.2 சதவீதத்தை விட மிகவும் விரைவானதாக உள்ளது.
- மூன்றாவது பெரிய மாநிலமான தமிழ்நாடு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி ஆனது 8.2 சதவீதம் வளர்ச்சியடைந்து 15.7 லட்சம் கோடி ரூபாயை எட்டியது.
- தமிழ்நாட்டின் மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) 52 சதவிகிதத்தைக் கொண்டிருக்கும் சேவைத் துறையானது 9 சதவிகிதத்தில் வளர்ந்தது.
- ஏழாவது இடத்தில் உள்ள இராஜஸ்தான் 8 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.
- 24.1 லட்சம் கோடி என்ற உண்மையான GSDP உடன் மகாராஷ்டிரா மாநில அரசானது இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரமாகத் தொடர்ந்து திகழ்கிறது.
- 2023 நிதியாண்டில் குஜராத் இரண்டாம் இடத்தில் இருந்தது.




## சௌராஸ் பழங்குடி - வாழ்விட உரிமைகள்




- கஜபதி மாவட்டத்தின் சௌரா பழங்குடியினர் ஒடிசாவில் தங்கள் பூர்வீக நிலங்களின் மீதான வாழ்விட உரிமையைப் பெற்றுள்ளனர்.
- எனவே, அதிக எண்ணிக்கையிலான எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியின குழுக்களுக்கு (PVTGs) இத்தகைய உரிமைகளை வழங்கும் நாட்டின் ஒரே மாநிலமாக ஒடிசா மாறியுள்ளது.
- சௌராஸ் பழங்குடியினர் குழுவானது, தங்களின் வாழ்விடத்திற்குள் அமைந்துள்ள இயற்கை கட்டமைப்புகள், புனித தளங்கள் மற்றும் மத மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கவும் வளங்காக்கவும் அனுமதிக்கும் உரிமைகளைப் பெறுகின்ற மாநிலத்தின் ஐந்தாவது பழங்குடியினக் குழுவாக மாறி உள்ளது.
- கஜபதி மாவட்டத்தில் உள்ள சுமார் 128 கிராமங்களில் சௌரா பழங்குடியினர் வசிக்கின்றனர்.
- 2006 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வன வாசிகள் (வன உரிமைகள் அங்கீகாரம்) சட்டத்தின் 3(1) (e) என்ற பிரிவின் கீழ் PVTG குழுக்களுக்கு வாழ்விட உரிமைகள் வழங்கப்படுகின்றன.
- மத்தியப் பிரதேச அரசானது, பரியா PVTG குழுவிற்கும், சத்தீஸ்கர் அரசானது கமர் மற்றும் பைகா ஆகிய PVTG குழுக்களுக்கும் வாழ்விட உரிமைகளை வழங்கியுள்ளது.

## பூஜ்ஜிய நேரம் – இமாச்சலப் பிரதேசம்

- சீர்தர இயக்க செய்முறைகளை (SOPs) வடிவமைத்த பிறகு இமாச்சலப் பிரதேச மாநில சட்டசபையில் பூஜ்ஜிய நேரம் (முக்கிய விவகாரங்கள் குறித்த கேள்வி எழுப்பும்) முதல் முறையாக அறிமுகப் படுத்தப்படும்.
- அவையில் பட்டியலிட முடியாத அல்லது விதிகளின் கீழ் பட்டியலிடப்படாத பொது நலன் சார்ந்த அவசரப் பிரச்சனைகள் மட்டுமே கேள்வி நேரத்தின் போது எழுப்பப்படும்.
- ஆனால் சபாநாயகருக்கு எந்த ஒரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க அனுமதிக்கும் விருப்புரிமை உள்ளது என்பதோடு அதற்கு உடனடியாகப் பதில் அளிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.
- சபாநாயகர் மிக நடுநிலை நிலையினை வகிக்கிறார் என்பதையும், அரசாங்கத்தின் நெருக்கடிக்கு உட்பட்டுச் செயல்படவில்லை என்பதையும் இந்தப் பூஜ்ஜிய நேரமானது நிரூபிக்கிறது.
- பாரம்பரியமாக அரை மணி நேரம் நீடிக்கும் இந்தப் பூஜ்ஜிய நேரமானது, மிக அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த சில விவகாரங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.




## ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி



- ஜல் சக்தி அமைச்சகத்தின் தலைமையிலான மழைநீர்ச் சேகரிப்புத் திட்டமான 'ஜல் சஞ்சய் ஜன் பகிதாரி முன்னெடுப்பினை' பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.
- சமூகப் பங்கேற்பு மூலம் சுமார் 24,800 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை அமைப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாநிலம் முழுவதும் நீர் வளங்களின் நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்யும்.

## கிளர்ச்சிக் குழுக்களுடன் அமைதி ஒப்பந்தம் – திரிபுரா

- In a significant move, the **Central Government, Tripura State,** and insurgent groups **National Liberation Front of Tripura (NLFT) and the All Tripura Tiger Force (ATTF)** have signed a peace agreement, aimed at ending over 35 years of insurgency in the State
- This peace pact is part of 12 significant agreements signed across the Northeast between 2014 and 2024, with three being directly relevant to Tripura.
- A total of **328 members of NLFT and ATTF** will surrender and peacefully reintegrate into society, signalling the end of armed conflict.
- The Central Government has sanctioned a **₹250 crore special package** to improve the socio-economic conditions of Tripura's tribal population, addressing long-standing issues of unrest.

- மத்திய அரசு மற்றும் திரிபுரா அரசு ஆகியவை இணைந்து வடகிழக்கு மாநிலத்தின் இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுடனான 12வது அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தங்களால் சுமார் 10,000 பேர் ஆயுதங்களைத் துறந்து பிரதான நடைமுறையில் இணைந்துள்ளனர்.
- திரிபுரா தேசிய விடுதலை முன்னணி (NLFT) மற்றும் அனைத்து திரிபுரா புலிகள் படை (ATTF) ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.
- NLFT மற்றும் ATTF உடனான ஒப்பந்தத்தின் கீழ், 328க்கும் மேற்பட்ட ஆயுதமேந்தியப் பணியாளர்கள் வன்முறையைக் கை விட்டு பொதுச் சமூகத்தின் மக்களுடன் இணைய உள்ளனர்.

## பசுமை ஹரியானா கொள்கை விளக்க அறிக்கை – 2024

- ஹரியானாவில் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்காக முதல் முறையாக 'பசுமை அறிக்கை 2024' எனப்படும் ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளனர்.
- காற்று மாசுபாடு, கழிவு மேலாண்மை, நிலத்தடி நீர்மட்டம் குறைதல், ஆரவல்லி மலைத் தொடரைப் பாதுகாப்பதன் அவசியம் போன்ற பல்வேறு நெருக்கடி மிக்கப் பிரச்சினைகளை இது முன் வைக்கிறது.

- தேசியச் சராசரியான 21 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, 3.6% பங்குடன் இந்தியாவில் மிகக் குறைந்த அளவிலான வனப் பரவலைக் கொண்ட மாநிலமாக இது திகழ்கிறது.
- மேலும், இந்த மாநிலம் உலகில் மிகவும் மாசுபட்ட 50 இடங்களில் எட்டு இடங்களைக் கொண்டுள்ளது.
- 'பசுமை அறிக்கை 2024' என்ற அறிக்கையில் உள்ள முக்கிய கோரிக்கை: பூட் பகுதிகள் மற்றும் சிவாலிக் போன்றவை உள்ளிட்ட ஆரவல்லி மலைத் தொடரை 'முக்கியச் சுற்றுச்சூழல் மண்டலங்களாக' சட்டப் பூர்வமாக நியமிக்க வேண்டும்.
- கடுமையான 1994 ஆம் ஆண்டு டெல்லி மரங்கள் பாதுகாப்புச் சட்டத்தினை போலவே ஹரியானாவிற்கு ஒரு 'மரப் பாதுகாப்புச் சட்டத்தை' இயற்ற வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப் பட்டுள்ளது.




## சூட்டியா தினம் - அசாம்

- ஆகஸ்ட் 20 ஆம் தேதியானது சூட்டியா என்ற தினமாக அனுசரிக்கப்படும் என்று அசாம் முதல்வர் அறிவித்துள்ளார்.
- இது சுதந்திரப் போராட்டத்தில் இந்தப் பிராந்தியத்தின் பெரும் முக்கியத்துவத்தைக் குறிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- மறைந்த பிமன் சந்திர போரா தலைமையில், 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் தேதி அன்று சூட்டியா காவல் நிலையத்தில் மக்கள் தேசியக் கொடியை ஏற்றினர்.




## ஆசிய அரசுக் கழுகு வளங்காப்பு மையம்




- கோரக்பூர் வனப் பிரிவில் இந்தியாவின் முதல் ஆசிய அரசக் கழுகுகளுக்கான வளங் காப்பு மற்றும் இனப்பெருக்க மையம் திறக்கப்பட்டுள்ளது.
- இதற்கு ஜடாயு வளங்காப்பு மற்றும் இனப்பெருக்க மையம் என பெயரிடப்பட்டுள்ளது.
- 2007 ஆம் ஆண்டு முதல் IUCN செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் இனமாக பட்டியலிடப் பட்டுள்ள இந்த இனங்களின் எண்ணிக்கையினை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆறு கழுகுகள் (ஆண் மற்றும் பெண்) இந்த மையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- இச்செயல் திட்டத்தின்படி, அடுத்த 8 முதல் 10 ஆண்டுகளில் 40 இணைக் கழுகுகளை இந்த மையத்திலிருந்து விடுவிப்பதே இதன் இலக்காகும்.

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் AYUSH மருத்துவர்கள்

- நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து 328 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் AYUSH மையங்களைக் கொண்ட மாநிலங்களில் மத்தியப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- பழங்குடியினர் பகுதியில், 228 ஆரம்ப மற்றும் சமுதாய சுகாதார நிலையங்களில் AYUSH மருத்துவர்கள் உள்ளனர் என்பதனால் இம்மாநிலம் தேசிய அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இதில் 296 AYUSH மருத்துவர்களுடன் ஒடிசா மாநிலம் முதலிடத்திலும், 279 AYUSH மருத்துவர்களுடன் சத்தீஸ்கர் இரண்டாவது இடத்திலும் உள்ளது.
- 2005 ஆம் ஆண்டு முதல் கிராமப்புறங்களில் இருக்கும் துணை சுகாதார மையங்களின் எண்ணிக்கையைக் கணிசமாக அதிகரித்த இந்தியாவின் முதல் ஆறு மாநிலங்களில் மத்தியப் பிரதேசமும் ஒன்றாக உள்ளது.
- உட்பிரிவு மற்றும் மாவட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கையில் முதல் மூன்று இடங்களில் உள்ள மாநிலங்களில் மத்தியப் பிரதேசம் இடம் பெற்றுள்ளது.
- அம்மாநிலத்தில் 144 உட்பிரிவு மருத்துவமனைகள் உள்ளன என்ற நிலையில் இதில் 281 எண்ணிக்கையுடன் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது மற்றும் 147 எண்ணிக்கையுடன் கர்நாடகா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மத்தியப் பிரதேசமானது 52 மாவட்ட மருத்துவமனைகளுடன் உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாகவும் (125) மற்றும் டெல்லிக்கு முன்னதாகவும் (40) இரண்டாவது இடம் பெற்றுள்ளது.


## 9வது லடாக் ஜன்ஸ்கார் திருவிழா 2024

- 9வது லடாக் ஜன்ஸ்கார் திருவிழாவானது 2024 லடாக்கின் ஜான்ஸ்கர் மாவட்டத்தில் கொண்டாடப் பட்டது.
- ஜான்ஸ்கார் பகுதி ஒரு தனி மாவட்டமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் கொண்டாட்டம் இதுவாகும்.
- மேற்கு இமயமலைப் பகுதியின் அறியப்பட்ட பௌத்த ராஜ்ஜியங்களில் ஜான்ஸ்கரும் ஒன்றாகும்.
- கார்கிலில் இருந்து பர்கி பழங்குடியினர், திராஸ் பகுதியின் ஷினா சமூகம், ஆரியப் பள்ளத் தாக்கிலிருந்து டார்ட்-ஆரியர்கள் மற்றும் சாங்தாங் பகுதியிலிருந்து சாங்பா நாடோடிகள் ஆகியோரின் சிறப்பு நிகழ்ச்சிகள் இதன் ஒரு பகுதியாகும்.

## நாகா கிங் மிளகாய் திருவிழா

- நாகாலாந்தில் உள்ள செய்ஹாமா என்ற கிராமத்தில் மூன்றாவது நாகா கிங் மிளகாய் திருவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது.
- இந்தத் திருவிழா செய்ஹாமாவின் கலாச்சார மற்றும் வேளாண் அடையாளத்தின் ஒரு சின்னமாகும்.
- இது உலகின் மிகவும் காரமான மிளகாய்களில் ஒன்றான நாகா கிங் மிளகாயின் ஒரு முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது.
- கிங் மிர்ச்சா என்றும் அழைக்கப்படுகின்ற இது சுமார் 1 மில்லியன் ஸ்கோவில்லே கார அலகுகளை (SHU) தாண்டிய அதன் அதிக காரத்தன்மைக்காக உலகளவில் புகழ்பெற்ற ஒரு மசாலா பொருளாகும்.

## அஷ்டலட்சுமி மஹோத்ஸவம்





- மத்திய அரசானது, வடகிழக்கு இந்தியாவின் மிகவும் வளமான கலாச்சார மற்றும் பொருளாதாரப் பாரம்பரியத்தை கொண்டாடுவதற்காக, மிகவும் எதிர்பார்க்கப்படும் அஷ்டலட்சுமி மஹோத்ஸவிற்கான ஒரு அதிகாரப்பூர்வ வலைத் தளத்தை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- அஷ்டலட்சுமி மஹோத்சவம் ஆனது டிசம்பர் மாதத்தில் புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- ஒன்றாக "அஷ்டலட்சுமி" என்று அழைக்கப்படுகின்ற எட்டு வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு அம்சங்கள் இந்த திருவிழாவில் இடம் பெறும்.

## டெல்லியின் புதிய முதல்வர்



- அரவிந்த் கெஜ்ரிவால் இராஜினாமா செய்ததையடுத்து அதிஷி மர்லேனா டெல்லியின் புதிய முதல்வராக அறிவிக்கப்பட்டார்.
- சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் ஷீலா தீட்சித் ஆகியோருக்குப் பிறகு, தேசிய தலைநகரின் 3வது பெண் முதல்வர் ஆக இவர் பொறுப்பேற்றுள்ளார்.
- அவர் அமைச்சரவைக் குழுவின் அமைச்சராக பணியாற்றினார் என்பதோடு மேலும் கல்வி, பொதுப் பணித் துறை (PWD), சுற்றுலா, கலாச்சாரம் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட 14 முக்கிய இலாகாக்களையும் அவர் கொண்டிருந்தார்.

## இந்திய மாநிலங்களின் சார்புநிலை பொருளாதாரச் செயல்திறன்





| STATE | 1960-61 | 2023-24 |
|---|---|---|
| DELHI | 218.30% | 250.80% |
| TELANGANA | - | 193.60% |
| KARNATAKA | 96.70% | 180.70% |
| HARYANA | 106.90% | 176.80% |
| TAMIL NADU | 109.20% | 171.10% |

- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனை வழங்கீட்டுக் குழுவின் (EAC-PM) உறுப்பினரான சஞ்சீவ் சன்யால் 'இந்திய மாநிலங்களின் சார்புநிலை பொருளாதாரச் செயல்திறன்: 1960-61 முதல் 2023-24 வரை' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையினை உருவாக்கியுள்ளார்.
- இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட அனைத்துத் தரவுகளும் நடப்பு நிர்ணய விலை மதிப்பில் உள்ளன மற்றும் இந்த பகுப்பாய்விற்கான கால கட்டம் 1960-61 முதல் 2023-24 வரையாகும்.
- 1960-61 ஆம் ஆணடில் 10.5% என்ற அளவில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்றாவது பெரிய பங்கைக் கொண்டிருந்த மேற்கு வங்காளம் ஆனது தற்போது 2023-24 ஆம் ஆண்டில் 5.6% பங்கினை மட்டுமே கொண்டுள்ளது.
- மேற்கு வங்காளத்தின் தனிநபர் வருமானம் ஆனது 1960-61 ஆம் ஆண்டில் தேசிய சராசரியை விட 127.5% அதிகமாக இருந்தது, ஆனால் அதன் வளர்ச்சியானது தேசியப் போக்குகளுக்கு ஏற்ற வேகத்துடன் ஒருங்கி அமைய தவறிவிட்டது.
- இதன் விளைவாக, 2023-24 ஆம் ஆண்டில் அதன் தனிநபர் வருமானம் ஆனது 83.7% ஆகக் குறைந்துள்ளது.
- 1991 ஆம் ஆண்டில் பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பிறகு தென் மாநிலங்கள் கணிசமாக மற்ற மாநிலங்களை முந்தியுள்ளன.
- கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களின் பங்கானது, 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 30% ஆகும்.
- அனைத்து தென் மாநிலங்களின் தனிநபர் வருமானம் ஆனது 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு தேசிய சராசரியை விட அதிகமாகியுள்ளது.
- மதிப்பீட்டுக் காலம் முழுவதும் தனிநபர் வருமானம் அதிகம் கொண்ட நகரங்களில் டெல்லியும் ஒன்றாகும்.
- மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை 1960 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் 3 பெரிய தொழில்துறைக் குழுக்களின் ஒரு தாயகமாக இருந்தன.

- மகாராஷ்டிரா மாநிலத்தில் பரந்த அளவில் நிலையான செயல்திறன் பதிவாகி உள்ள நிலையில் மேற்கு வங்காளத்தின் பங்கு தொடர்ந்து சரிவைச் சந்தித்து வருகிறது.
- ஒரு சிறிய சரிவுக்குப் பிறகு, 1991 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலத்தில் தமிழ்நாடு இந்த நிலையில் முன்னேறியுள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஹரியானாவின் பங்கு தற்போது பஞ்சாபை விட அதிகமாக உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் பஞ்சாபின் 106.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், ஹரியானாவின் தனிநபர் வருமானம் ஆனது 176.8 சதவீதத்தை எட்டியுள்ளது.

## தற்கொலை தொடர்பான பொருளாதாரச் சுமை




- ஒவ்வோர் ஆண்டும் தற்கொலைகளால் இந்தியா சுமார் 13.4 லட்சம் கோடி ரூபாய் (16 பில்லியன் டாலர்) பொருளாதார இழப்பினை எதிர்கொள்கிறது.
- நாட்டின் மக்கள்தொகையில் 5 சதவீதம் மட்டுமே உள்ள கர்நாடகா, தற்கொலைகளால் அதிகப் பொருளாதார இழப்பினை எதிர்கொண்டுள்ளது என்பதோடு இதன் பங்கு 2.33 லட்சம் கோடி ரூபாயாகும்.
- கர்நாடகா, தமிழ்நாடு (2.13 லட்சம் கோடி ரூபாய்) மற்றும் மகாராஷ்டிரா (1.81 லட்சம் கோடி ரூபாய்) ஆகிய மாநிலங்களின் ஒருங்கிணைந்த நிதித் தாக்கம் ஆனது, நாட்டின் மொத்தத் தற்கொலை தொடர்பான பொருளாதார இழப்புகளில் சுமார் 45 சதவீதம் ஆகும்.
- உலகளவில், ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு 100,000 பேரிலும் சுமார் ஒன்பது பேர் தற் கொலையால் உயிரிழக்கின்றனர்.
- இந்தியாவில், 100,000 பேருக்கு 14 நபர் என்ற விகிதமானது மிக அபாயகரமான அளவில் அதிகமாக உள்ளது.
- "உலகின் தற்கொலை தலைநகரம்" என்று அறியப்படும் துரதிர்ஷ்டவசமான சிறப்புப் பெயரினை இந்தியா பெற்றுள்ளது.

## கர்மா விழா அல்லது கர்மா நாச்

- ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், பீகார், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், அசாம் மற்றும் ஒடிசாவில் உள்ள பழங்குடியினர் கர்மா அல்லது கரம் பர்வ் என்ற அறுவடைத் திருவிழாவைக் கொண்டாடினர்.
- கரம் மரம் ஆனது பாரம்பரியமாக கரம் தேவ்தா அல்லது கரம்சனி, வலிமை, இளமை மற்றும் உயிர்ச் சக்தியின் கடவுளாகக் கருதப்படுகிறது.
- முண்டா, ஹோ, ஓரான், பைகா, காரியா மற்றும் சந்தால் மக்களிடையே இவ்விழா மிகவும் பிரபலமானதாகும்.


## 2022 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட சாதியினருக்கு எதிரான கொடுமைகள்




- உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2022 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்டச் சாதியினருக்கு (SC) எதிராக மிகவும் அதிகமான எண்ணிக்கையிலான கொடுமைகள் பதிவாகியுள்ளன என்று சமீபத்திய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.
- பட்டியலினச் சாதியினருக்கு எதிரான கொடுமை வழக்குகளில் 97.7 சதவீதம் ஆனது 13 மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேசத்தில் 12,287 வழக்குகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இது மொத்த வழக்குகளில் 23.78 சதவீதமாகும்.
- அதைத் தொடர்ந்து 8,651 வழக்குகளுடன் (16.75 சதவீதம்) இராஜஸ்தான் மற்றும் 7,732 வழக்குகளுடன் (14.97 சதவீதம்) மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடம் பெற்று உள்ளன.
- மிக கணிசமான எண்ணிக்கையில் வழக்குகள் பதிவாகியுள்ள பிற மாநிலங்களாக பீகாரில் 6,799 வழக்குகள் (13.16 சதவீதம்), ஒடிசாவில் 3,576 வழக்குகள் (6.93 சதவீதம்), மற்றும் மகாராஷ்டிராவில் 2,706 வழக்குகள் (5.24 சதவீதம்) உள்ளன.

- 2022 ஆம் ஆண்டில் பட்டியலின சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவான மொத்த வழக்குகளில் சுமார் 81 சதவிகிதம் ஆனது இந்த ஆறு மாநிலங்களில் மட்டுமே பதிவாகியுள்ளது.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு எதிரான கொடுமை குறித்த பல வழக்குகளில் பெரும்பாலானவை 13 மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன என்பதை இந்த அறிக்கை மேலும் எடுத்துரைக்கிறது.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் சம்பந்தப்பட்ட சுமார் 9,735 வழக்குகளில், மத்தியப் பிரதேசத்தில் 2,979 வழக்குகள் (30.61 சதவீதம்) பதிவாகியுள்ளன.
- அதைத் தொடர்ந்து இராஜஸ்தானில் 2,498 வழக்குகள் (25.66 சதவீதம்), ஒடிசாவில் 773 வழக்குகள் (7.94 சதவீதம்) பதிவாகியுள்ளன.

## அமுர் ஃபால்கன் - தமெங்லாங் மாவட்டம் (மணிப்பூர்)




- அமுர் ஃபால்கன் (பால்கோ அமுரென்சிஸ்) பறவைகளை வரவேற்க என்று தமெங்லாங் மாவட்டம் தயாராகி வருகிறது.
- அங்கு 'கஹுவாய்புய்னா' என்று பெருமளவில் அழைக்கப்படும் இந்தப் பறவையை வேட்டையாடவும், பிடிக்கவும், கொல்லவும், விற்கவும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்து உள்ளது.
- இந்த வலசை போகும் பறவைகள் வடக்கு சீனா, கிழக்கு மங்கோலியா மற்றும் தொலைதூர கிழக்கு ரஷ்யாவில் உள்ள தங்கள் இனப்பெருக்கப் பகுதிகளிலிருந்து தமெங்லாங்கின் சில பகுதிகள் மற்றும் எல்லைப் பகுதிகளுக்கு வருகின்றன.
- மாவட்ட நிர்வாகம் ஆனது ஆண்டுதோறும் 'அமுர் பால்கன்' திருவிழாவை நடத்துகிறது.

## இந்தியாவின் முதல் காகிதம் இல்லா தேர்தல் – மத்தியப் பிரதேசம்

- முதன்முறையாக, மத்தியப் பிரதேச மாநில தேர்தல் ஆணையம் ஆனது போபாலில் உள்ள பஞ்சாயத்து இடைத்தேர்தலில் உள்ள ஒரு வாக்குச் சாவடியில் காகிதமில்லா வாக்களிப்பை வெற்றிகரமாக நடத்தியது.
- பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் எளிமையான, சுமூகமான மற்றும் வெளிப்படையான வாக்குப்பதிவை நடத்தும் ஒரு நோக்கத்திற்காக காகிதம் இல்லா வாக்குச் சாவடிகள் நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளன.
- இந்த காகிதமில்லா வாக்குப் பதிவு செயல்பாட்டில், துல்லியமான அடையாள சரி பார்ப்பு மற்றும் வாக்குப் பதிவுகளை உறுதி செய்வதற்காக வேண்டி வாக்காளர்களின் கையொப்பங்கள் மற்றும் கட்டைவிரல் பதிவுகள் மின்னணு முறையில் பதிவு செய்யப் படுகின்றன.
- வாக்குப்பதிவு சதவீதம் மற்றும் வாக்குப்பதிவு கணக்கீடு ஆகியவையும் இயங்கலை வழியாகவே மேற்கொள்ளப்பட்டது.
- வாக்குப்பதிவு முடிந்ததும், வேட்பாளர்களுக்கும் வாக்குச் சாவடி முகவர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் வாக்குச் சீட்டுக் கணக்குகள் அனுப்பப் படும்.



For the first time in India, the Madhya Pradesh State Election Commission successfully conducted a paperless voting process in a Gram Panchayat election. Implemented as a pilot project at Booth-295 in Ratua Ratanpur Gram Panchayat (Bhopal district), this historic event marked a significant step toward making elections more efficient, transparent, and smooth



The paperless booth replaced the 26 traditional forms used in the election process, significantly reducing errors and disputes. Voter identification and records were digitized through electronic signatures and thumbprints. The initiative saw a remarkable 84% voter turnout, proving its success. The aim of this pilot is to eliminate paperwork while enhancing the accuracy of election reporting, with plans to expand the system in future elections across the state.

## நிலகைமான் மற்றும் காட்டுப்பன்றிகளைக் கொல்லுதல்

- நிலகை மான் (மரையான்) மற்றும் காட்டுப்பன்றிகளைக் கொல்வதற்கு பீகார் அரசு அனுமதி அளித்து அவற்றைக் குறைக்க முடிவு செய்துள்ளது.
- நிலகை மான் மற்றும் காட்டுப்பன்றிகள் பயிர்களை மிகப் பெரிய அளவில் சேதப் படுத்துவதால் அம்மாநில விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.
- கிழக்கு சம்பாரன், வைஷாலி, பக்சார், சிவான், சமஸ்திபூர் ஆகிய ஐந்து முக்கிய மாவட்டங்களில் அவற்றைக் கொல்லும் நடவடிக்கை தொடங்கப்பட உள்ளது.
- இந்த மாவட்டங்களில் சுமார் மூன்று லட்சம் நிலகைமான் மற்றும் 67,000 காட்டுப் பன்றிகள் உள்ளன.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 24வது சர்வதேச அன்னை தெரசா விருதுகள்

- இந்த மதிப்புமிக்க நிகழ்வு ஆனது, துபாயில் உள்ள அனைத்திந்திய சிறுபான்மை மற்றும் நலிவடைந்த பிரிவினர் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த விருது பெற்றவர்களில் கினியா-பிசாவ்வைச் சேர்ந்த மறைந்த ஜோனோ பெர்னார்டோ வியேரா II, தொழில் துறையைச் சேர்ந்த சித்தார்த் ஸ்ரீவஸ்தவா மற்றும் நமித் பஜோரியா மற்றும் NRB வங்கி லிமிடெட் தலைவர் முகமது மஹ்தபுர் ரஹ்மான் ஆகியோர் அடங்குவர்.
- கலைத்துறையில் இர்கா போச்சென்கோவும், கல்வித் துறையில் MP ரொஜாரியோவும் விருதுகளைப் பெற்றனர்.
- ஐக்கிய அரபு அமீரகத்தினைச் சேர்ந்த முரளி பஞ்சாபி மற்றும் சுரேந்தர் சிங் கந்தாரி ஆகியோருக்கு சமூக சேவை விருதுகள் வழங்கப்பட்டன.

## தேசிய நல்லாசிரியர் விருது 2024


- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 50 கல்வியாளர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்கி கௌரவிக்க உள்ளார்.
- இந்த விருது மாணவர்களின் வாழ்க்கை மற்றும் இந்தியாவின் பரந்த கல்வி பிரிவில் மிகவும் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்திய கல்வியாளர்களின் குறிப்பிடத் தக்கப் பங்களிப்புகளை அங்கீகரித்து கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டு தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர்களில் ஒருவராக மதுரையைச் சேர்ந்த தனியார் பள்ளி ஆசிரியர் ஆர்.எஸ். முரளிதரன் தேர்வு செய்யப்பட்டார்.
- குடியாத்தத்தைச் சேர்ந்த ஆர்.கோபிநாதன் என்பவர் தமிழகத்தைச் சேர்ந்த மற்றொரு நபர் ஆவார்.

## நியூசிலாந்தின் மாவ்ரி மன்னர்



- சமீபத்தில் நியூசிலாந்தின் மாவ்ரி கியிங்கி துஹெய்தியா பூடடௌ தே வீரோஹீரோ VII காலமானார்.
- நியூசிலாந்தின் பூர்வீக மாவ்ரியை ஒரே இறையாண்மையின் கீழ் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் 1858 ஆம் ஆண்டில் கிங்கிடாங்கா – மாவ்ரி கிங் இயக்கம் நிறுவப்பட்டது.
- இந்தப் பதவிக்கு குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் பெயரளவு வலிமை உள்ளது, ஆனால் சட்டப்பூர்வ அந்தஸ்து எதுவும் இல்லை.
- துஹெய்தியா 2006 ஆம் ஆண்டில் தனது தாயாருக்குப் பிறகு ஏழாவது கிங்கிடாங்கா மன்னராக ஆனார்.
- இந்தப் பதவி பரம்பரையாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## 7வது அனுபவ் விருதுகள் 2024




- ஓய்வு பெறும் அரசு அதிகாரிகளின் அயராத மிகப் பெரும் பங்களிப்பை முன்னிலைப் படுத்துவதற்கும் அதனை அங்கீகரிப்பதற்குமான ஒரு தளமாக 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'அனுபவ்' இணைய தளம் தொடங்கப்பட்டது.

- இந்த புதுமையான திட்டம் ஆனது, ஓய்வுபெறும் அரசு ஊழியர்களை அவர்களின் பணி ஆண்டுகளில் அவர்கள் பெற்ற அனுபவங்கள் மற்றும் நுண்ணறிவுகளை ஆவணப் படுத்த ஊக்குவிக்கிறது.
- 7வது விருது வழங்கும் விழாவில், இதுவரையில் இல்லாத அளவுக்கு பெண்களின் பிரதிநிதித்துவம் 33% ஆக உள்ளது என்பது நிர்வாகத்தில் பெண்களின் வளர்ந்து வரும் பங்கைப் பிரதிபலிக்கிறது.
- 5 அனுபவ் விருதுகள் மற்றும் 10 தேர்வாளர்கள் சான்றிதழ்களை உள்ளடக்கிய இந்த விருதுகளானது பல்வேறு பிரிவுகளில் சிறந்தப் பங்களிப்புகளை வழங்கியவர்களுக்கு வழங்கப்பட்டன.

## M.A.ஈஸ்வரன் - சுதந்திரப் போராட்ட வீரர்



- கீழ் பவானி திட்டத்தைக் கொண்டு வருவதில் அப்போதைய ஈரோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்த M.A.ஈஸ்வரன் முக்கியப் பங்காற்றினார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு தமிழகத்தில் செயல்படுத்தப்பட்ட முதல் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் இதுவாகும்.
- இது நெல் மற்றும் பிற பயிர்கள் சாகுபடிக்காக 2,47,247 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பாசனம் வழங்கி ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை வளமான நிலப்பரப்பாக மாற்றியது.
- மேலும், இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் 18 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- ஈஸ்வரன் M.K.காந்தி அவர்களின் நெருங்கிய கூட்டாளி ஆவார்.
- மதராஸ் மாகாணத்தின் பிரதமர் பதவிக்கு தங்குதூரி பிரகாசம் அளித்த வேட்பு மனுவிற்கு ஆதரவளித்தார்.
- எனவே, உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவரை முன்னிறுத்தவில்லை.
- ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சரானார், அதைத் தொடர்ந்து C.இராஜ கோபாலாச்சாரி மற்றும் K.காமராஜ் ஆகியோர் 1955 ஆம் ஆண்டில் இந்தப் பாசனக் கால்வாயைத் திறந்து வைத்தனர்.

## TIME100 இதழின் செயற்கை நுண்ணறிவில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்கள் - 2024

- டைம் இதழ் ஆனது, 'TIME100 இதழின் 2024 ஆம் ஆண்டு செயற்கை நுண்ணறிவில் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்கள்' பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் கூகுள் மற்றும் ஆல்பாபெட் நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சத்யா நாதெல்லா போன்ற பல இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- அஷ்வினி வைஷ்ணவ், நந்தன் நீலகேனி மற்றும் நடிகர் அனில் கபூர் உள்ளிட்ட முக்கிய இந்தியப் பிரமுகர்களும் இதில் இடம் பெற்றுள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டில், புது டெல்லி நீதிமன்றம் அனில் கபூரின் புகைப்படத்தை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் அவருக்கு சாதகமாகத் தீர்ப்பளித்துள்ளது.
- பல்வேறு வணிக நோக்கங்களுக்காக என்று செயற்கை நுண்ணறிவினைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக ஆளுகை உரிமைகளை நன்கு பாதுகாப்பதை கபூர் வலியுறுத்தினார்.

## லான்ஸ் நாயக் சரண் சிங் - 100வது பிறந்தநாள்



- இந்திய இராணுவம் ஆனது இரண்டாம் உலகப் போரில் பங்கேற்ற வீரர் லான்ஸ் நாயக் (ஓய்வு பெற்ற) சரண் சிங் அவர்களின் 100வது பிறந்தநாளைக் கொண்டாடியது.
- அவர் 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் தேதியன்று ஃபிரோஸ்பூர் இராணுவப் பகுதியில் இராணுவத்தில் சேர்க்கப்பட்டார்.
- இரண்டாம் உலகப் போரின் போது இராணுவ சேவைப் படையில் பணியாற்றினார்.
- அவரது சேவையானது அவரை சிங்கப்பூரிலிருந்து லாகூரிலும், இறுதியாக இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள யோல் இராணுவப் பிரிவிலும் பணியாற்ற வாய்ப்பளித்தது.
- சிங் இராணுவத்தில் பணியாற்றிய காலத்தில் பர்மா நட்சத்திர விருதையும் இந்தியச் சுதந்திரப் பதக்கத்தையும் பெற்றார்.

## ஸ்வச் வாயு சர்வேக்சன் விருது 2024

- மக்கள் தொகை அடிப்படையிலான மூன்று பிரிவுகளில் சிறப்பாக செயல்படும் தேசிய தூய்மையானக் காற்று பிரச்சார (NCAP) நகரங்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

- விருது பெற்ற நகரங்கள்:
  - வகை-1 (10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்): சூரத், ஜபல்பூர் மற்றும் ஆக்ரா.
  - வகை-2 (சுமார் 3 முதல் 10 லட்சம் வரை மக்கள் தொகை கொண்ட நகரங்கள்): ஃபிரோசாபாத், அமராவதி மற்றும் ஜான்சி.
  - வகை-3 (சுமார் 3 லட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்கள்): ரேபரேலி, நல்கொண்டா மற்றும் நலகர்.

## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் 2024

- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை 15 செவிலிய நிபுணர்களுக்கு வழங்கினார்.
- இந்த விருதானது இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- செவிலியர்கள் மற்றும் செவிலிய தொழில்முறை வல்லுநர்கள் சமுதாயத்திற்குச் செய்யும் மகத்தான சேவைகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவதே இதன் நோக்கம் ஆகும்.
- மத்திய, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணி புரிகின்றச் சிறப்பானப் பணியாற்றும் செவிலியர்களுக்கு இந்த விருது வழங்கப் படுகிறது.

## 76வது பிரதான ஒளிப்பரப்பு நிகழ்ச்சிகளுக்கான எம்மி விருதுகள் 2024

- பிரதான ஒளிபரப்பு நிகழ்ச்சிகளுக்கான எம்மி விருது விழாவின் 76வது பதிப்பானது கலிபோர்னியாவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.
- ஜெர்மி ஆலன் ஒயிட், தி பியர் என்ற தொடர் நிகழ்ச்சியில் ஒரு முன்னணி பாத்திரத்தில் (நகைச்சுவை) நடித்ததற்காக சிறந்த நடிகர் என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- அவருடைய சக நடிகையான லிசா கோலனும் அதே நிகழ்ச்சியில் ஆற்றிய துணைப் கதாபாத்திரத்திற்காக (நகைச்சுவை) சிறந்த நடிகைக்கான விருதை வென்றுள்ளார்.
- "ஷோகன்" 18 விருதுகளை வென்ற ஒரே தொடர் என்ற சாதனையைப் படைத்தது.
- ”பேபி ரெய்ண்டீர்” மற்றும் ”தி பியர்” ஆகியவை தலா நான்கு விருதுகளைப் பெற்று உள்ளன.
- விருது பெற்ற மற்ற நிகழ்ச்சிகள்:
  - சிறந்த பொழுதுப் போக்கு போட்டி நிகழ்ச்சி: தி டிரெய்ட்டர்ஸ் (பீக்காக்)
  - சிறந்த உரையாடல் தொடர் நிகழ்ச்சி: தி டெய்லி ஷோ (காமெடி சென்ட்ரல்)
  - சிறந்த நாடகத் தொடர்: ஷோகன்
  - சிறந்த நகைச்சுவைத் தொடர்: ஹேக்ஸ்

## RE-INVEST சந்திப்பு

- 4வது உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர் சந்திப்பு மற்றும் சந்திப்பு (RE-INVEST) ஆனது குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்றது.

- இந்த சந்திப்பு ஆனது டெல்லிக்குப் பதிலாக வேறொரு பகுதியில் ஏற்பாடு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- வங்கிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் உருவாக்காத்திற்காக 386 பில்லியன் டாலர் அல்லது சுமார் 32.45 டிரில்லியன் டாலர் அளவிற்கு நிதி உதவியினை வழங்குவதாக உறுதியளித்து உள்ளன.
- இந்த நிகழ்வின் போது குஜராத் அதிகபட்ச விருதுகளை வென்றது.
- ஒட்டு மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறன் பிரிவிலும், ஒட்டு மொத்தக் காற்றாலை ஆற்றல் உற்பத்தி திறன் பிரிவிலும் குஜராத் முதலிடத்தில் உள்ளது.
- ஒட்டு மொத்த சூரிய சக்தித் திறனில் குஜராத் மாநிலத்தினைப் பின்னுக்குத் தள்ளி இராஜஸ்தான் மாநிலமானது முதலிடத்தினை அடைந்ததால், குஜராத் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- இந்தப் பிரிவுகளின் கீழ் முதலிடம் பெற்ற மற்ற மாநிலங்கள் இராஜஸ்தான் (இரண்டு விருதுகளைப் பெற்றது), தமிழ்நாடு (இரண்டு) மற்றும் கர்நாடகா (இரண்டு) ஆகும்.
- இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய இரண்டும் ஒட்டு மொத்த நீர் மின்னாற்றல் உற்பத்தித் திறனில் முன்னணித்துவத்தினைப் பெற்ற மாநிலங்கள் என்ற பிரிவில் தலா ஒரு விருதினை வென்றன.

## 2024 ஆம் ஆண்டு உலகத் திறன்கள் போட்டி

- 47வது உலகத் திறன்கள் போட்டி ஆனது செப்டம்பர் 10 முதல் 15 ஆம் தேதி வரை பிரான்சின் லியோன் நகரில் நடைபெற்றது.
- இந்தியா தங்கும் விடுதி வரவேற்பில் வெண்கலப் பதக்கம் பெற்றது; அடுமனை மற்றும் இனிப்புப் பொருட்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம்; மற்றும் சமையல் துறையில் சிறந்து விளங்குவதற்கான பதக்கம் ஆகியவற்றினையும் வென்றது.
- ஒட்டு மொத்தமாக, இந்தியா நான்கு வெண்கலப் பதக்கங்களையும், திறன் சார் போட்டிகளில் 12 பதக்கங்களையும் வென்றது.
- இந்தப் போட்டியானது உலகின் மிகப்பெரிய தொழிற்கல்வி மற்றும் மிகவும் சிறந்த திறன்களுக்கான போட்டியாகும்.
- இந்தப் போட்டியில் பல்வேறு வர்த்தகங்கள் மற்றும் தொழில்களில் ஏறக்குறைய 70 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர்.

## துபாயில் இந்தியப் பெண்கள் விருதுகள் 2024

- ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் இந்தியப் பெண்களின் சாதனைகளை இந்த விருது கௌரவிக்கிறது.
- தொழில்நுட்பம், தொழில்முனைவு, சுகாதாரம் மற்றும் கலை போன்ற துறைகளில் சாதனை படைத்தப் பெண்களை அங்கீகரித்து, 30க்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப் பட்டன.
- Indian Women in Dubai (துபாயில் இந்தியப் பெண்கள்) என்பது ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியப் பெண்களை இணைக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கவும் ரீமா மகாஜனால் உருவாக்கப்பட்ட ஒரு துடிப்பு மிக்க சமூகத் தளமாகும்.

## ISSக்குப் பயணிக்கும் முதல் இந்திய விண்வெளி வீரர்

- இந்திய விண்வெளி வீரர் குழுவின் கேப்டன் சுபான்ஷு சுக்லா ஆக்ஸியம்-4 (ஆக்ஸ்-4) விண்வெளிப் பயணத்திற்கான விண்கல இயக்க வீரராக வரலாறு படைக்க உள்ளார்.
- இது சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) இந்தியாவின் முதன்முதலான மனித பயணத்தினைக் குறிக்க உள்ளது.
- விங் கமாண்டர் ராகேஷ் சர்மா 1984 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்துடன் மேற் கொண்ட பயணத்திற்குப் பிறகு இது 2வது பயணமாகும்.
- ஆக்ஸியம்-4 ஆய்வுப் பயணமானது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே மேற்கொள்ளப் படும் இருதரப்பு முயற்சியின் ஒரு விளைவாகும்.



## ஜாக்சன் ஹோல் சிம்போசியம் 2024




- உலகப் பொருளாதாரத்திற்கான முக்கிய நிகழ்வான ஜாக்சன் ஹோல் பொருளாதாரக் கொள்கை கருத்தரங்கமானது அமெரிக்காவின் வயோமிங்கில் உள்ள ஜாக்சன் ஹோல் எனுமிடத்தில் நடைபெற்றது.
- இந்த வருடாந்திரக் கூட்டம் ஆனது, உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இணைந்து உலகப் பொருளாதாரத்தில் உள்ள மிக நெருக்கடி மிக்கப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க ஒரு முக்கியத் தளமாக மாறியுள்ளது.
- இந்த கருத்தரங்கமானது ஃபெடரல் ரிசர்வ் அதிகாரிகள் உட்பட சுமார் 120 பேர் மட்டுமே பங்கேற்கும் அதன் பிரத்தியேக இயல்புக்காகப் பிரபலமாக அறியப்படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## பாரீஸ் பாராலிம்பிக்ஸ் 2024

- ❖ இந்தியாவின் பதக்கப் பட்டியலை அவனி லெகாரா (ராஜஸ்தான்) மற்றும் மோனா அகர்வால் (ராஜஸ்தான்) ஆகியோர் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் SH1ல் முறையே தங்கம் மற்றும் வெண்கலம் வென்றதன் மூலம் தொடங்கி வைத்தனர்.
- ❖ பெண்களுக்கான 100 மீட்டர் டி35 போட்டியில் ப்ரீத்தி பால் (உத்தரப் பிரதேசம்) வெண்கலப் பதக்கம் வென்றார்.
- ❖ இது பாரா விளையாட்டுப் போட்டிகளில் ஓடுதளப் போட்டிகளில் இந்தியா பெற்ற முதல் பதக்கம் ஆகும்.
- ❖ ஆண்களுக்கான 10 மீ காற்று கைத்துப்பாக்கி SH1 என்ற போட்டியில் மணீஷ் நர்வால் (அரியானா) வெள்ளிப் பதக்கம் வென்றார்.



## மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகள் 2024 (திருத்தப் பட்டது)

- ❖ மகளிர் ஒற்றையருக்கான SU5 என்ற பிரிவில் இந்தியப் பூப்பந்தாட்ட (பேட்மிண்டன்) வீராங்கனைகளான தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசிமதி முருகேசன் மற்றும் மணிஷா இராமதாஸ் ஆகியோர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்று உள்ளனர்.
- ❖ பூப்பந்தாட்டப் போட்டியில் ஒரு பதக்கத்தை வென்ற முதல் இந்தியப் பெண்ணாக துளசி உருவெடுத்துள்ளார்.
- ❖ இந்தியப் பூப்பந்தாட்ட வீரரான உத்தரப் பிரதேசத்தின் சுஹாஸ் யதிராஜ் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் தனது இரண்டாவது வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- ❖ 2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் கலப்பு பிரிவு வில்வித்தைப் போட்டியில் ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த ஷீத்தல் தேவி மற்றும் ராகேஷ் குமார் வெண்கலம் வென்றனர்.
- ❖ ஆடவர் ஒற்றையர் SL3 பேட்மிண்டன் போட்டியில் அரியானாவின் நிதேஷ் குமார் தங்கப் பதக்கம் வென்றார்.
- ❖ ஆடவர் வட்டு எறிதல் F56 போட்டியில் இந்தியாவின் அரியானாவின் யோகேஷ் கதுனியா தொடர்ந்து இரண்டாவது முறையாக வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

- ஆடவருக்கான உயரம் தாண்டுதல் T47 இறுதிப் போட்டியில் இமாச்சலப் பிரதேசத்தின் நிஷாத் குமார் வெள்ளிப் பதக்கம் வென்றார்.



## 2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டி (இறுதிப் பதிப்பு)

- மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் இந்திய வில்வித்தை வீரர் என்ற வரலாற்றை ஹர்விந்தர் சிங் (அரியானா) படைத்துள்ளார்.
- உலகச் சாம்பியனான குண்டெறி வீரரான சச்சின் சர்ஜேராவ் கிலாரி (மாகாராஷ்டிரா) மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்று உள்ளார்.
- சுமித் ஆன்டில் (அரியானா) தங்கம் வென்றதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் பட்டத்தை வென்ற முதல் இந்திய ஆண் மற்றும் இந்தியாவில் இரண்டாவது நபர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மகளிருக்கான 400 மீட்டர் T20 இறுதிப் போட்டியில் தீப்தி ஜீவன்ஜி (தெலங்கானா) வெண்கலம் வென்றதன் மூலம் இந்தியாவிற்கான 16வது பதக்கத்தை வென்றார்.




## மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டி 2024 – பதக்கப் பட்டியல்

- ஜூடோ வீரரான கபில் பர்மார் (மத்தியப் பிரதேசம்), மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் ஜூடோ போட்டியில் இந்தியாவிற்கான முதல் பதக்கத்தை வென்று வரலாறு படைத்து உள்ளார்.

- ஆடவருக்கான உயரம் தாண்டுதல் T64 இறுதிப் போட்டியில் பிரவீன் குமார் (உத்தரப் பிரதேசம்) 2.08 மீ உயரம் தாண்டி சாதனை படைத்து தங்கம் வென்றுள்ளார்.
- ஆடவருக்கான குண்டெறிதல் F57 பிரிவில் இந்திய வீராங்கனை ஹொகாடோ ஹோடோஜெ செமா (நாகாலாந்து) வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- சீனா (220), கிரேட் பிரிட்டன் (124), அமெரிக்கா (105), பிரேசில் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகள் இப்பதக்கப் பட்டியலில் மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கையில் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.
- மாற்றுத் திறனாளிகளுக்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை ஏழு தங்கம், ஒன்பது வெள்ளி மற்றும் 13 வெண்கலம் உட்பட 29 ஆக நிறைவானது.
- இது நாட்டிற்கு அதிக பதக்கங்களை பெற்றுத் தந்த போட்டி பங்கேற்பாக அமைந்தது.
- இதில் தடகளப் போட்டிகளில் 17 பதக்கங்கள் பெறப்பட்டன, அவற்றில் நான்கு தங்கப் பதக்கங்கள் ஆகும்.
- மாரியப்பன் தங்கவேலு (தமிழ்நாடு) மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து மூன்று முறை பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற ஒரு பெருமையினைப் பெற்றுள்ளார்.
- 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கமும், 2020 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கமும் வென்றார்.
- 2024 பதக்கப் பட்டியலில் இந்தியா 18வது இடத்தில் உள்ளது.
- பாகிஸ்தான் ஒரேயொரு வெண்கலப் பதக்கத்துடன் இதில் 78/79வது இடத்தில் தனது பங்கேற்பை நிறைவு செய்தது.

| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 94 | 76 | 50 | 220 |
| 2 | Great Britain | 49 | 44 | 31 | 124 |
| 3 | USA | 36 | 42 | 27 | 105 |
| 4 | Netherlands | 27 | 17 | 12 | 56 |
| 5 | Brazil | 25 | 26 | 38 | 89 |
| 6 | Italy | 24 | 15 | 32 | 71 |
| 7 | Ukraine | 22 | 28 | 32 | 82 |

## அமெரிக்க டென்னிஸ் ஓபன் போட்டி 2024

- இத்தாலி நாட்டின் ஜானிக் சின்னர் அமெரிக்க ஓபன் ஆண்கள் இறுதிப் போட்டியில் ஜெர்மனியின் டெய்லர் ஃபிரிட்ஸைத் தோற்கடித்து 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார்.

- ஓபன் போட்டிகளின் சகாப்தத்தில் அமெரிக்க ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு போட்டியில் பட்டத்தை வென்ற முதல் இத்தாலிய வீரர் என்ற வரலாற்றைச் சின்னர் படைத்துள்ளார்.
- பெலாரஸைச் சேர்ந்த அரினா சபலென்கா தனது முதல் சாம்பியன்ஷிப் மற்றும் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று ஜெசிகா பெகுலாவை (அமெரிக்கா) விஞ்சியுள்ளார்.
- அவர் இதற்கு முன்பு 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பட்டத்தை வென்றார்.
- மற்ற வெற்றியாளர்கள்:

| Event | Winner | Runners-UP |
|---|---|---|
| **Men's Double** | Max Purcell and Jordan Thompson (Australia) | Kevin Krawietz and Tim Puetz (Germany) |
| **Women's Double** | Lyudmyla Kichenok (Ukraine) and Jelena Ostapenko (Latvia) | Kristina Mladenovic (France) and Zhang Shuai (China) |
| **Mixed Doubles** | Sara Errani and Andrea Vavassori (Italy) | Donald Young and Taylor Townsend (USA) |

## 4வது தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2024



- இந்தியா 4வது தெற்காசிய இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியினை (2024) சென்னை ஜவஹர்லால் நேரு அரங்கில் நடத்துகிறது.
- மகளிருக்கான 100 மீ ஓட்டத்தில் அபிநயா இராஜராஜன் தங்கப் பதக்கம் வென்றார்.
- V.சுதீக்சா இதே நிகழ்வில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஆடவருக்கான குண்டு எறிதல் போட்டியில் சித்தார்த் சௌத்ரி தங்கப் பதக்கம் வென்றார்.
- மகளிருக்கான 400 மீ ஓட்டத்தில் நீரு பஹ்தக் இந்திய அணிக்கான ஒன்பதாவது தங்கத்தினை வென்றார்.
- மகளிருக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் பூஜா தங்கப் பதக்கம் வென்றார்.
- மகளிருக்கான வட்டு எறிதல் போட்டியில் அனிஷா தங்கப் பதக்கம் வென்றார்.
- ஆடவருக்கான 800 மீ ஓட்டத்தில் வினோத் குமார் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ஆடவருக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் மிருத்யம் இராஜாராம் வெண்கலப் பதக்கம் வென்றார்.

## சமமான பரிசுத் தொகை




- ❖ உலகக் கோப்பைப் போட்டிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பரிசுத் தொகையை வழங்க உள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
- ❖ இது அடுத்த மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் மகளிர் T20 போட்டியிலிருந்து தொடங்க உள்ளது.
- ❖ மகளிர் T20 உலகக் கோப்பைப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 2.34 மில்லியன் டாலர் பரிசுத் தொகை வழங்கப்படும்.
- ❖ 2023 ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போட்டியில் கோப்பை வென்ற போது ஆஸ்திரேலிய மகளிர் அணிக்கு வழங்கப்பட்ட 1 மில்லியன் டாலரை விட இது 134% அதிகமாகும்.
- ❖ இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆடவர் T20 உலகக் கோப்பைப் போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி, 2.45 மில்லியன் டாலர் ரொக்கப் பரிசைப் பெற்றது.
- ❖ ICC 2024 ஆம் ஆண்டு மகளிர் T20 உலகக் கோப்பை ஆனது, மகளிர் அணியினர் ஆடவர் அணிக்கு இணையான பரிசுத் தொகையைப் பெற உள்ள முதல் போட்டியாகும்.

## செஸ் ஒலிம்பியாட் போட்டி 2024

- ❖ ஹங்கேரியில் நடைபெற்ற 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் (2024) இந்தியா இரட்டை தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.
- ❖ இந்தியக் கிராண்ட் மாஸ்டர்களான குகேஷ் டோமராஜு, அர்ஜுன் எரிகைசி, மற்றும் பிரக்ஞானந்தா ரமேஷ்பாபு ஆகியோர் இந்திய ஆடவர் பிரிவில் தங்கம் வென்றனர்.
- ❖ மகளிர் பிரிவில் இறுதிச் சுற்றில் இந்திய அணியானது அஜர்பைஜான் அணியினை வீழ்த்தி முதல் தங்கப் பதக்கத்தை வென்றது.
- ❖ ஓபன் மற்றும் மகளிர் பிரிவுகளில் ஒட்டு மொத்தமாக சிறந்த செயல்திறன் கொண்ட அணிக்கு வழங்கப்படும் கப்ரின்டாஷ்விலி கோப்பையையும் இந்தியா வென்றது.
- ❖ டி.குகேஷ், அர்ஜுன் எரிகைசி, திவ்யா தேஷ்முக் ஆகியோர் தனிநபர் பிரிவிலும் தங்கப் பதக்கங்களை வென்றனர்.
- ❖ செஸ் ஒலிம்பியாட் போட்டி என்பது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சதுரங்கப் போட்டியாகும் என்ற நிலையில் இதில் உலக நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் அணிகள் போட்டியிடுகின்றன.

# முக்கிய தினங்கள்


## தேசிய ஊட்டச்சத்து வாரம் - செப்டம்பர் 01 முதல்  07 வரை

- ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஆரோக்கியமான ஒரு உணவுப் பழக்கத்தை மிகவும் நன்கு மேம்படுத்துவதற்காகவும் என்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை மேம்படுத்துவதையும், அனைத்து வயதினரிடையே ஆரோக்கியமான எதிர்காலத்தை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு தேசிய ஊட்டச்சத்து வாரத்தின் கருத்துரு, ‘Nutritious Diets for Everyone’ என்பதாகும்.

## உலக தேங்காய் தினம் - செப்டம்பர் 02

- இத்தினமானது முதன்முதலில் 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகத்தினால் (APCC) கொண்டாடப்பட்டது.
- சமையலில் அவற்றின் பயன்பாடு முதல் பல்வேறு தொழில்துறைகளில் அவற்றின் பங்கு வரை தேங்காய்களின் பல நன்மைகளை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- இது தேங்காய்களின் ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் அதன் பெரும் பொருளாதார முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Coconut for a Circular Economy: Building Partnership for Maximum Value" என்பதாகும்.

## தேசிய ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05





- கல்வியாளர்களை கௌரவிப்பதையும், சமூகத்தை மேம்படுத்துவதிலும் கல்வி ஊட்டச் செய்வதிலும் ஆசிரியர்களின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை அங்கீகரிப்பதும் இந்தத் தினத்தின் நோக்கமாகும்.

- இந்தத் தேதியானது டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் வகையிலும் அனுசரிக்கப்படுகிறது.
- அவர் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் மற்றும் புகழ்பெற்ற அறிஞர் மற்றும் தத்துவஞானி ஆவார்.
- 1962 ஆம் ஆண்டில் அவரது 77வது பிறந்தநாளில் முதல் ஆசிரியர் தினம் அனுசரிக்கப் பட்டது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், புது டெல்லியில் நடைபெற்ற விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 82 பேருக்கு 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருதினை வழங்கினார்.

## சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05

- அன்னை தெரசாவின் நினைவாக இந்த சர்வதேச தினம் கொண்டாடப் படுகிறது.
- பல தொண்டு நடவடிக்கைகளில் பங்கேற்பதன் பெரு முக்கியத்துவம் குறித்து தனி நபர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களிடையே விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொண்டு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மக்களை ஒன்றிணைப்பதற்கும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் நலனுக்காகப் பங்களிப்பதற்கும் இது ஒரு மதிப்பு மிக்க வாய்ப்பாகச் செயல்படுகிறது.
- அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற புகழ்பெற்ற அன்னை தெரசா அவர்கள் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதியன்று காலமானார்.




## உலக துச்சேன் நோய் விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 07

- உலகளவில் 300,000 நோயாளிகளைப் பாதித்துள்ள இந்நோய் பற்றிய விழிப்புணர்வை தொடர்ந்து அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஓர் அரிய நோயான துச்சேன் தசைச்சிதைவு நோய் முழு உடலிலும் பரவிப் பாதிக்கும் வரை காலப்போக்கில் தசைகளைப் பலவீனமாக்குகின்றது.

- தோராயமாக 5,000 ஆண் குழந்தைகளில் ஒருவர் இந்த நோயுடன் பிறக்கின்றனர்.
- இது X-குரோமோசோமில் ஏற்படும் பிறழ்வினால் ஏற்படுகிறது அதனால் தான் மிகவும் பிரதானமாக ஆண்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான கருத்துரு, 'Raise your voice for Duchenne' என்பதாகும்.

## சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினம் - செப்டம்பர் 07

- ஒவ்வோர் ஆண்டும், செப்டம்பர் மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று, உலக நாடுகள் சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினத்தினைக் கொண்டாடுகின்றன.
- இது கழுகுகளின் முக்கியத்துவம் மற்றும் அவை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- உலகளவில் உள்ள 23 கழுகு இனங்களில், பாதிக்கும் மேற்பட்டவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களின் பட்டியலில் பட்டியலிடப் பட்டுள்ளன.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 246 ஆக இருந்த கழுகுகளின் எண்ணிக்கை என்பது 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 308 ஆக அதிகரித்துள்ளது.
- முதுமலை-சத்தியமங்கலம்-பந்திப்பூர்-வயநாடு வளாகத்தில் 82% அளவில் கழுகுகள் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## சர்வதேச காவல்துறை ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 07

- ஐக்கிய நாடுகள் சபையானது 2023 ஆம் ஆண்டில் முதன்முறையாக சர்வதேச காவல் துறை ஒத்துழைப்பு தினத்தை அனுசரித்தது.
- இது காவல் மேற்பார்வை மற்றும் பொறுப்புடைமைக்கான விரிவான கட்டமைப்பை நிறுவுவதற்கான நீடித்த மற்றும் நீண்ட கால முன்னெடுப்பினை வலியுறுத்துகிறது.
- சர்வதேச குற்றவியல் காவல் ஆணையம் (ICPC) ஆனது 1923 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.

## நீல வானத்துக்கான தூயக் காற்றிற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 07

- மனித ஆரோக்கியத்தை நன்கு பாதுகாக்க காற்று மாசுபாட்டைக் குறைப்பது உட்பட காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் வலியுறுத்துகிறது.
- உலக சுகாதார ரீதியிலான சேதங்கள் ஆண்டிற்கு சுமார் 8.1 டிரில்லியன் டாலர் என்ற அளவில் மிகப்பெரும் செலவுகள் பொது சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு காற்று மாசுபாட்டால் ஏற்படுகின்றன.
- சர்வதேச மேம்பாட்டு நிதியில் தற்போது ஒரு சதவீதம் மட்டுமே தூய்மையானக் காற்று திட்டங்களுக்குச் செலவிடப்படுகிறது.
- தூய்மையானக் காற்று சார்ந்த முன்னெடுப்புகளில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டாலருக்கும் 30 டாலர் வரையிலான பொருளாதாரப் பலன்கள் கிடைக்கும்.


- இந்தியா போன்ற நாடுகளில், காற்று மாசுபாடு ஆனது தொழில்துறைக்கு ஆண்டிற்கு 95 பில்லியன் டாலரும் அல்லது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று சதவீதமும் செலவிடச் செய்கின்றன.

## சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 08

- இந்த நாள் அடிப்படை மனித உரிமை மற்றும் கண்ணியமாக விளங்கும் எழுத்தறிவின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Promoting multilingual education: Literacy for mutual understanding and peace" என்பதாகும்.
- சர்வதேச எழுத்தறிவு தினம் ஆனது 1966 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று யுனெஸ்கோ அமைப்பின் 14வது பொது மாநாட்டின் போது நிறுவப்பட்டது.
- இத்தினமானது முதல் முறையாக 1967 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.

## உலக உடலியக்க மருத்துவ தினம் - செப்டம்பர் 08


- இது உடலியக்க மருத்துவர்களின் பணியைக் கௌரவித்து, சுகாதாரப் பராமரிப்பில் உடலியக்க மருத்துவத்தின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கிறது.
- இந்தத் தினம் ஆனது முதன்முதலில் 1996 ஆம் ஆண்டில் உலக உடலியக்க மருத்துவக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்டது என்பதோடு இது முன்னர் உலக உடலியக்க மருத்துவக் கூட்டமைப்பு (WCPT) என அறியப்பட்டது.
- செப்டம்பர் 08 ஆம் தேதியானது 1951 ஆம் ஆணடில் WCPT நிறுவப் பட்டதை நினைவு கூருகிறது.




## தாக்குதலிலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான ஐநா சபையின் சர்வதேச தினம் - செப்டம்பர் 09

- இது உலகெங்கிலும் உள்ள கடும் மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் குழந்தைகளின் அவலநிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கத்தார் முன் வைத்த தீர்மானத்திற்குப் பிறகு 2020 ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், 22,557 குழந்தைகளுக்கு எதிராக சுமார் 32,990 கடுமையான வன்முறைகள் நடந்துள்ளன.
- உலகளவில் சுமார் 72 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் மோதல் காரணமாக பள்ளிக்குச் செல்ல முடியாமல் உள்ளனர்.
- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மட்டும் சுமார் 10,000 மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.




## உலக தற்கொலை தடுப்பு தினம் - செப்டம்பர் 10





- இத்தினமானது முதன்முதலில் 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது தற்கொலைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவது, அது குறித்த தவறான தகவல்களைக் குறைப்பது மற்றும் மக்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- சர்வதேச தற்கொலை தடுப்பு சர்வதேசச் சங்கம் (IASP) ஆனது உலக சுகாதார அமைப்புடன் இணைந்து இந்த நாளை ஏற்பாடு செய்தது.
- 2024-2026 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Changing the Narrative on Suicide" என்பதாகும்.

- ❖ உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 7,00,000 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.
- ❖ உலகளவில் 15 முதல் 29 வயதிற்குட்பட்டவர்கள் மத்தியில் பதிவாகும் இறப்புக்கான மூன்றாவது முக்கியக் காரணமாக தற்கொலை உள்ளது.

## தேசிய வனத் தியாகிகள் தினம் - செப்டம்பர் 11

- ❖ நாட்டின் காடுகள், வனவிலங்குகள் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த துணிச்சலான வீரர்களை கௌரவிப்பதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ❖ இது 1730 ஆம் ஆண்டு நிகழ்ந்த கெஜர்லி படுகொலையின் நினைவாக நிறுவப் பட்டது.
- ❖ இந்த நிகழ்வின் போது, அம்ரித தேவி பிஷ்னோய் மற்றும் பிஷ்னோய் சமூகத்தைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட நபர்கள் கெஜ்ரி மரங்களைப் பாதுகாப்பதற்காக தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்தனர்.
- ❖ மஹாராஜா அபய் சிங், தன்னுடைய அரண்மனையினைக் கட்டுவதற்காக மரங்களை வெட்டுமாறு வழங்கிய கட்டளையை எதிர்த்து அவர்கள் போராடினர்.

## இமயமலை திவாஸ் - செப்டம்பர் 09




- ❖ இது 2014 ஆம் ஆண்டில் உத்தரக்ண்ட் மாநில அரசால் தொடங்கப்பட்டது.
- ❖ இந்த முக்கியமான பிராந்தியத்தைப் பெருமளவில் பாதுகாப்பதற்கான நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Sustainable Himalayas: Preserving Nature and Culture" என்பதாகும்.
- ❖ இமயமலைத் தொடர் ஆனது மேற்கு-வடமேற்கிலிருந்து கிழக்கு-தென்கிழக்காக 2400 கிலோமீட்டர் தொலைவில் பரவியுள்ளது.
- ❖ 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட உலகின் இளம் மலைத்தொடர் இமயமலை ஆகும்.

- இமயமலையானது சுமார் 4.2 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு உள்ளது என்பதோடு வட மற்றும் தென் துருவங்களுக்கு அடுத்தபடியாக இது அதிகப் பனிப்பொழிவு மற்றும் பனிக்கட்டியைக் கொண்டுள்ளது.

## இந்தி மொழி திவாஸ் - செப்டம்பர் 14

- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று, இந்தி மொழிக்கு நாட்டின் அலுவல் மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது.
- இந்தி மொழியின் முக்கியப் பயன்பாட்டை ஊக்குவிப்பதும் அதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதும் இதன் நோக்கமாகும்.
- உலகெங்கிலும் சுமார் 60.88 மில்லியன் மக்கள் இந்தி மொழியைத் தாய்மொழியாகப் பயன்படுத்துகின்றனர்.

## சர்வதேச தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு தினம் - செப்டம்பர் 12





- தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பின் மதிப்பு மற்றும் நன்மைகளை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு இது ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- "A better tomorrow through South-South Cooperation" என்பது இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு ஆகும்.
- தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு என்பது அந்த நாடுகளின் சிறந்த தேசிய நல்வாழ்வுக்கும், தேசிய மற்றும் கூட்டு தன்னிறைவு மற்றும் சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கும் பெரும் பங்களிக்கின்ற தெற்கு நாடுகளின் மக்கள் மற்றும் நாடுகளுக்கிடையேயான ஒற்றுமையின் வெளிப்பாடே ஆகும்.

## உலக முதலுதவி தினம் - செப்டம்பர் 14

- 2001 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று உலக முதலுதவி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- மருத்துவ அவசரநிலைகளைச் சமாளிப்பதில் முதலுதவி வகிக்கும் முக்கியப் பங்கைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதையும், அத்தகைய சூழ்நிலை ஏற்படும் போது மக்களை முன் வந்து முதலுதவி ஆற்ற ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "First Aid and Sports" என்பதாகும்.





## தெற்கு நாடுகளுக்கான அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 16

- வளர்ந்து வரும் நாடுகளில் பல புதுமைகளை வளர்ப்பதையும் அறிவியல் திறன்களை மேம்படுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹவானாவில் நடைபெற்ற அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் தொடர்பான உச்சி மாநாட்டின் போது G77 நாடுகள் மற்றும் சீன நாட்டின் தலைவர்கள் இந்த நாளை நியமிக்க ஒப்புக் கொண்டனர்.
- இது வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கு இடையே உள்ள பெரும் இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கூட்டுறவு மற்றும் தகவல் பகிர்வை ஊக்குவிக்கிறது.

## தேசியப் பொறியாளர் தினம் - செப்டம்பர் 15

- இந்த நாள் மோக்ஸகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த நாளை நினைவு கூரும் தினமாகும்.
- மைசூரில் கட்டப்பட்ட கிருஷ்ண ராஜ சாகர் அணை அவரது மிகவும் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.
- 1955 ஆம் ஆண்டு பாரத ரத்னா விருதைப் பெற்ற இவர் இங்கிலாந்தின் நைட்வுட் என்ற பட்டமும் பெற்றவராவார்.
- இவர் 1912 முதல் 1918 வரை மைசூர் திவானாகப் பணியாற்றினார்.
- 1968 ஆம் ஆண்டில் இந்திய அரசு இந்தத் தினத்தினை அறிவித்தது.
- இந்தியாவைத் தவிர, இலங்கை மற்றும் தான்சானியாவிலும் செப்டம்பர் 15 அன்று பொறியாளர் தினம் அனுசரிக்கப் படுகிறது.




## சர்வதேச மக்களாட்சி தினம் - செப்டம்பர் 15





- ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் 2007 ஆம் ஆண்டில் ஐநா பொதுச் சபையால் இந்த சிறப்பு நாள் நிறுவப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டில் இந்த நாளிலேயே தான் சர்வதேச நாடுகளுக்கு இடையேயான பாராளுமன்றங்களின் அமைப்பானது (IPU) ஜனநாயகம் குறித்த ஒரு உலகளாவியப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டது.
- இந்த ஆண்டுக்கான கருத்துரு 'நல்ல நிர்வாகத்திற்கான ஒரு கருவியாக செயற்கை நுண்ணறிவு' என்பதாகும்.

## உலக ஓசோன் தினம் - செப்டம்பர் 16

- செப்டம்பர் 16, 2009 அன்று, வியன்னா உடன்படிக்கை மற்றும் மாண்ட்ரீயல் நெறிமுறை ஆகியவை ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் அனைத்து நாடுகளாலும் அங்கீகரிக்கப் பட்ட முதல் ஒப்பந்தங்களாக மாறின.

- ஓசோன் ($O_3$) என்பது மூன்று ஆக்ஸிஜன் அணுக்களைக் கொண்ட ஒரு வினை புரியக் கூடிய வாயு ஆகும்.
- இது இயற்கையாகவோ அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டதாகவோ பூமியின் உயர் வளிமண்டலத்தில் (ஸ்ட்ரேடோஸ்பியர்) காணப்படும்.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு “Montreal Protocol: Advancing Climate Actions” என்பதாகும்.
- மாண்ட்ரீயல் நெறிமுறை செப்டம்பர் 16, 1987 அன்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது ஓசோனைச் சிதைக்கும் பொருட்கள் (ODS) என குறிப்பிடப்படுகின்ற மனிதனால் உருவாக்கப் பட்ட இரசாயனங்களின் உற்பத்தி மற்றும் நுகர்வுகளை ஒழுங்குபடுத்தும் பலதரப்பு சுற்றுச்சூழல் ஒப்பந்தம் ஆகும்.
- இந்த ஓசோனைச் சிதைக்கும் பொருட்களால் படையடுக்கு மண்டல ஓசோன் படலம் சேதமடைகிறது.




## சர்வதேச இருதய மற்றும் இரத்தக் குழாய் சிகிச்சை முறை சர்வதேச தினம் - செப்டம்பர் 16

- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை அறிவிக்க முடிவு செய்தது.
- கல்வி மற்றும் வெகுஜன ஊடகங்கள் மூலம் இருதய நோய்கள் மற்றும் சிகிச்சை நடைமுறைகள், அது தொடர்பான சிக்கல்கள், அத்துடன் அதன் தடுப்பு மற்றும் சிகிச்சைகள் பற்றிய ஒரு பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதய நோய்கள் என்பது இதயம் மற்றும் அதன் இரத்த நாளங்களின் கோளாறுகளை உள்ளடக்கிய நோய்க் குழுவாகும்.
- இது உலகளவில் ஏற்படும் பெரும்பாலான மரணத்திற்கு முக்கியக் காரணம் ஆகும்.
- இதய நோய்களால் ஏற்படும் உயிரிழப்புகளில் முக்கால் பங்கிற்கும் அதிகமானவை குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் நிகழ்கின்றன.

## உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் - செப்டம்பர் 17

- 2019 ஆம் ஆண்டில், 72வது உலக சுகாதார சபையானது இந்த நாளை நிறுவுவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான சில நடவடிக்கைகளை ஊக்குவிப்பது மற்றும் பாதுகாப்பானச் சுகாதார நடைமுறைகளுக்காக பல்வேறு பங்குதாரர்களை ஒன்றிணைக்க ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.
- உலகளவில் பாதுகாப்பற்றப் பல மருத்துவ நடைமுறைகள் ஏற்படுத்தும் தீங்குகளின் குறிப்பிடத் தக்க பாதிப்பினை நிவர்த்தி செய்வதற்காக என்று இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Improving Diagnosis for Patient Safety" என்பதாகும்.





## 8வது இந்திய நீர் வாரம் 2024



- இது முதன்முதலில் 2012 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதோடு அது முதல் இத்தினம் ஆண்டிற்கு இருமுறை நடத்தப்படுகிறது.
- இது 4 நாட்கள் அளவிலான மாநாடு மற்றும் கண்காட்சியாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Partnerships and Cooperation for Inclusive Water Development and Management" என்பதாகும்.
- 2012, 2013, 2015, 2016, 2017, 2019 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் ஏழு முறை ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

## சர்வதேச சம ஊதிய தினம் - செப்டம்பர் 18

- இந்த நாள் ஆனது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே நிலவும் கடும் ஊதிய வேறுபாட்டைப் போக்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) கூற்றுப் படி, உலகளவில் ஆண்களை விட பெண்கள் தோராயமாக 23% குறைவாக ஊதியம் பெறுகிறார்கள்.
- உலகளவில், சுமார் 2.7 பில்லியனுக்கும் அதிகமான பெண்கள், ஆண்களுக்கு நிகரான வேலைகளைத் தேர்ந்தெடுப்பதில் இருந்து சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தப் பட்டு உள்ளனர்.
- சம ஊதிய சர்வதேசக் கூட்டணி (EPIC) என்ற அமைப்பானது ILO, UN பெண்கள் மற்றும் OECD ஆகியவற்றால் கட்டுப்படுத்தப்படுகிறது.
- எல்லா இடங்களிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான ஊதியத்தை வழங்கும் இலக்கினை அடைவதே இந்தக் கூட்டணியின் குறிக்கோள் ஆகும்.




## உலக மூங்கில் தினம் - செப்டம்பர் 18

- இந்த நாள் மூங்கில் தாவரத்தின் பல மருத்துவ மற்றும் நடைமுறைப் பயன்பாடுகளை எடுத்துரைக்கிறது.

- உலக மூங்கில் அமைப்பு (WBO) ஆனது அதன் வளங்காப்பு, நிலையானப் பயன்பாடு மற்றும் நமது சுற்றுச்சூழலின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
- இத்தினமானது 2009 ஆம் ஆண்டில் பாங்காக் நகரில் நடைபெற்ற எட்டாவது உலக மூங்கில் மாநாட்டின் போது நிறுவப் பட்டது.

## உலக நீர் கண்காணிப்புத் தினம் - செப்டம்பர் 20

- 2003 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் தூய்மையான நீர் அறக்கட்டளை (ACWF) அமைப்பானது இந்த நாளைத் தொடங்கியது.
- தொடக்கத்தில், 1972 ஆம் ஆண்டு அமெரிக்க தூய்மையான நீர் சட்டத்தின் நினைவாக அக்டோபர் 18 ஆம் தேதி இதற்காக தேர்வு செய்யப்பட்டது.
- ஆனால் இதில் பங்கேற்பாளர்கள் மற்றும் பங்கேற்கும் நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வேண்டி, இந்தத் தினத்திற்கான அதிகாரப்பூர்வ தேதியானது 2007 ஆம் ஆண்டில் செப்டம்பர் 18 என மாற்றப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Water for Peace' என்பதாகும்.
- நன்னீர்ப் பயன்பாட்டில் 72% ஆனது வேளாண்மையில் பயன்படுத்தப்படுகிறது.
- குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் 80% வேலைகள் ஆனது தண்ணீரைச் சார்ந்து உள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 700 மில்லியன் மக்கள் கடுமையான தண்ணீர் பற்றாக் குறையால் இடம்பெயர்வர்.
- 2040 ஆம் ஆண்டில், உலகளவில் 4 குழந்தைகளில் 1 குழந்தையானது மிக அதிக நீர் நெருக்கடியில் வாழும்.

## உலகத் துப்புரவு தினம் - செப்டம்பர் 20

- இது கடல் சார் குப்பைகள் மற்றும் கழிவு மேலாண்மை தொடர்பானப் பிரச்சனைகளை கையாள்வதை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய சமூக திட்டமாகும்.
- இது தூய்மையான புவிக் கிரகத்தினை உருவாக்குவதற்காக உலகம் முழுவதும் 157 நாடுகளை ஒன்றிணைக்கிறது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை என்பது இந்த நாளை அறிவித்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Arctic Cities and Marine Litter' என்பது ஆகும்.


## சர்வதேச அமைதி தினம் - செப்டம்பர் 21

- அமைதிக் கலாச்சாரத்தை வளர்ப்பதன் ஒரு அவசியத்தை உலகளவில் நினைவூட்டச் செய்வதற்கான தினமாக இது செயல்படுகிறது.
- 1981 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) ஆனது இந்த நாளை அறிவிப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Cultivating a Culture of Peace' என்பதாகும்.

## சர்வதேசக் கடலோரத் தூய்மை தினம் - செப்டம்பர் 21

- இந்த நாள் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- கடலோரத் தூய்மை மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் மீது மாசுபாட்டின் மிகவும் பாதகமான தாக்கம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Sea the Change' என்பதாகும்.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது 2006 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இந்த நாளின் அனுசரிப்பினை ஒருங்கிணைத்து வருகிறது.

## உலக அல்சைமர் நோய் தினம் - செப்டம்பர் 21





- அல்சைமர் நோய் மற்றும் டிமென்ஷியா (மறதி நோய்) பற்றிய பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது, புரிதலை மேம்படுத்துவது மற்றும் இந்த நிலைமைகள் குறித்த பல தவறான கருத்துக்களை எதிர்த்துப் போராடுவது இந்த நாளின் நோக்கமாகும்.
- இந்த நாள் ஆனது முதன்முதலில் 1994 ஆம் ஆண்டில் சர்வதேச அல்சைமர் நோய் அமைப்பின் (ADI) 10வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தொடங்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்த தினத்தின் கருத்துரு, "Time to act on dementia, Time to act on Alzheimer's" என்பதாகும்.
- அல்சைமர் நோயானது மூளையை சுருங்கச் செய்வதால், இறுதியில் மூளை செல்கள் செயலிழந்து விடுகின்றன.

## சர்வதேச சிகப்பு பாண்டா கரடி தினம் - செப்டம்பர் 21

- இந்த நாளானது செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- அழிவின் விளிம்பில் உள்ள மற்றொரு இனம் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிவப்பு பாண்டா கரடி என்பது இந்தியா, நேபாளம், பூடான் மற்றும் மியான்மர் மற்றும் தெற்கு சீனாவின் வடக்கு மலைகள் ஆகியவற்றின் காடுகளில் காணப்படும் ஒரு சிறிய மரத்தில் வாழும் பாலூட்டி இனமாகும்.

- அறிவியலுக்குத் தெரிந்த சிவப்பு பாண்டா கரடி அல்லது ஐலுரஸ் ஃபுல்ஜென்ஸ் என்பது முதன்முதலில் 1825 ஆம் ஆண்டில் குவியர் என்பவரால் விவரிக்கப்பட்டது.

## உலக காண்டாமிருக தினம் - செப்டம்பர் 22




- காண்டாமிருகம் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவற்றின் மீதான பாதுகாப்பின் அவசரத் தேவையையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜாவான், சுமத்ரான், கருப்பு, பெரிய ஒற்றைக் கொம்பு மற்றும் வெள்ளை காண்டா மிருகங்கள் என ஐந்து காண்டாமிருகங்கள் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Keep the Five Alive' என்பதாகும்.

## உலக நதிகள் தினம் - செப்டம்பர் 22

- இந்த நாள் என்பது ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிறன்று அனுசரிக்கப் படுகிறது.
- பூமியில் உயிர்கள் வாழ்வதில் நதிகள் வகிக்கும் மிகவும் இன்றியமையாதப் பங்கைப் பிரதிபலிக்கும் ஒரு தளத்தை இந்த நாள் வழங்குகிறது.
- இது முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்ட இத்தினமானது சர்வதேச நதி வலையமைப்பால் தொடங்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Waterways of Life" என்பதாகும்.

## சர்வதேச சைகை மொழி தினம் - செப்டம்பர் 23

- காது கேளாதோர் சமூகம் மற்றும் பிற சைகை மொழியைப் பயன்படுத்துபவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) கூற்றுப்படி, அவை பேச்சு மொழிகளிலிருந்து வேறு பட்ட முழுமையான இயற்கை மொழிகள் ஆகும்.

- ❖ இத்தினம், 1951 ஆம் ஆண்டில் காது கேளாதோர் உலகக் கூட்டமைப்பு (WFD) நிறுவப் பட்டதை நினைவு கூருகிறது.
- ❖ சர்வதேச காது கேளாதோர் வாரத்தின் ஒரு பகுதியாக 2018 ஆம் ஆண்டில் முதன் முதலில் இத்தினம் கொண்டாடப்பட்டது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Sign up for Sign Language Rights' என்பதாகும்.




## உலக மனிதக் குரங்கு தினம் - செப்டம்பர் 24

- ❖ இத்தினமானது இந்த அற்புதமான விலங்குகளைக் கொண்டாடுவதையும் அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 'கொரில்லா' என்ற சொல் ஆனது முதன்முதலில் 1847 ஆம் ஆண்டில் தாமஸ் ஸ்டாட்டன் சாவேஜ் - ஒரு மருத்துவர் மற்றும் ஜெஃப்ரிஸ் வைமன் - ஓர் இயற்கை ஆர்வலர் ஆகிய இருவரால் பயன்படுத்தப்பட்டது.
- ❖ சரியாக 1,063 மலை வாழ் கொரில்லாக்கள் (மனிதக் குரங்குகள்) இன்று காடுகளில் இருப்பதாக அறியப்படுகிறது.
- ❖ மலை வாழ் கொரில்லாக்கள் கிழக்கு-மத்திய ஆப்பிரிக்காவில் இரண்டு தனிமைப் படுத்தப் பட்ட குழுக்களாக வாழ்கின்றன என்பதோடு அவற்றுள் ஒன்று விருங்கா எரிமலைப் பகுதிகளிலும், மற்றொரு குழு உகாண்டாவின் அசாத்தியமான பிவிண்டி தேசியப் பூங்காவிலும் காணப்படுகின்றன.
- ❖ சுமார் 8-12 வயதுக்கு இடைப்பட்ட ஆண் குரங்குகள் 'பிளாக்பேக்' என்று அழைக்கப் படுகின்றன.
- ❖ பின்னர் 12 வயதிலிருந்தே, அவற்றின் முதுகு மற்றும் இடுப்புப் பகுதிகளில் வெள்ளி நிற ரோமம் உருவாவதால் அவை 'சில்வர்பேக்' என்று அழைக்கப்படுகின்றன.

## உலக ரோஜா தினம் - செப்டம்பர் 22

- ❖ இது புற்றுநோயாளிகளின் நலன்புரி நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ புற்றுநோயைப் பற்றி மக்களுக்குக் கற்பித்தல் மற்றும் அந்த நோயுடன் கடுமையாகப் போராடுபவர்களை ஊக்கப்படுத்துவதில் இந்த நாள் கவனம் செலுத்துகிறது.

- 1996 ஆம் ஆண்டு புற்றுநோயுடன் போராடி உயிரிழந்த கனடா நாட்டினைச் சேர்ந்த 12 வயது சிறுமியான மெலிண்டா ரோஸை இந்த நாள் கௌரவிக்கின்றது.

## நாட்டு நலப்பணித் திட்ட தினம் - செப்டம்பர் 24

- நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) என்ற கருத்தானது மேஜர் ஜெனரல் ஜெகநாத் ராவ் போன்ஸ்லேவால் முன்மொழியப்பட்டது.
- செப்டம்பர் 24, 1969 அன்று, NSS திட்டத்தின் தந்தை என்றழைக்கப்படும் அப்போதைய இந்தியாவின் கல்வி அமைச்சராக இருந்த டாக்டர் வி.கே. ஆர்.வி. ராவால் இது அறிமுகப் படுத்தப்பட்டது.
- NSS அமைப்பின் குறிக்கோளுரை “Not Me but You” என்பதாகும்.




## உலக மருந்தாளுனர் தினம் - செப்டம்பர் 25





- உலக சுகாதாரத்தை மேம்படுத்துவதில் அவர்களின் முக்கியப் பங்களிப்புகளுக்காக மருந்தாளுனர்களை கௌரவிப்பதும், அங்கீகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

- ❖ உலகெங்கிலும் உள்ள மருந்தாளுனர்கள் வகிக்கும் முக்கியப் பாத்திரங்களைப் பற்றியப் பொது விழிப்புணர்வை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் முயற்சிகளை இந்த நாள் ஊக்குவிக்கிறது மற்றும் ஆதரிக்கிறது.
- ❖ 1912 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், சர்வதேச மருந்துக் கூட்டமைப்பு (FIP) நிறுவப் பட்டது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Pharmacists: Meeting global health needs" என்பதாகும்.

## அந்த்யோதயா திவாஸ் - செப்டம்பர் 25

- ❖ இது பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.
- ❖ இவர் 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் தேதியன்று உத்தரப்பிரதேச மாநிலம் மதுராவில் பிறந்தார்.
- ❖ இவர் பாரதிய ஜன சங்கத்தின் (BJS) இணை நிறுவனர் ஆவார்.
- ❖ இந்த நாள் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்களை வெகுவாக மேம்படுத்துதல், சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வகையிலான ஒரு வளர்ச்சியை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகிறது.




## உலக கடல்சார் தினம் - செப்டம்பர் 26

- ❖ இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழன் அன்று அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இது உலகெங்கிலும் உள்ள கப்பல் போக்குவரத்து மற்றும் இன்ன பிற கடல்சார் நடவடிக்கைகளின் முக்கியத்துவம் குறித்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Navigating the Future: safety first!" என்பதாகும்.





## அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினம் - செப்டம்பர் 26

- இதன் நோக்கம் என்பது அணு ஆயுதங்களின் அச்சுறுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அவற்றை ஒழிப்பதை ஊக்குவிப்பதுமாகும்.
- இது 2013 ஆம் ஆண்டில் ஐநா பொதுச் சபையால் (UNGA) அறிவிக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான ஒப்பந்தம் (TPNW), அல்லது தடை ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.
- 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இது 70 பங்குதாரர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- இதில் மேலும் 27 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன, ஆனால் இன்னும் இறுதி ஒப்புதல் அளிக்கவில்லை.

## உலக கருத்தடைத் தினம் - செப்டம்பர் 26

- இது குடும்பக் கட்டுப்பாடு மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்து தனிநபர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு பல்வேறு கருத்தடைத் தேர்வுகள் பற்றிய விழிப்பு உணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கருத்தடை பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிப்பதுடன் தனிநபர்களின் (ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும்) ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "A choice for all. Freedom to plan, power to choose" என்பது ஆகும்.



## உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் - செப்டம்பர் 26

- இது ஆரோக்கியமான சூழலுக்கும் மற்றும் மனித நல்வாழ்வுக்கும் இடையே உள்ள ஒரு அத்தியாவசியத் தொடர்பை எடுத்துக் காட்டுகிறது.
- இந்த தினம் 2011 ஆம் ஆண்டில் சர்வதேசச் சுற்றுச்சூழல் ஆரோக்கிய கூட்டமைப்பால் (IFEH) தொடங்கப்பட்டது.
- இது அனைவருக்கும் ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்தை உறுதிப்படுத்த சுற்றுப்புற சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Our land Our future" என்பதாகும்.




## உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27

- இந்த நாள் 1970 ஆம் ஆண்டில் UNWTO சட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதை நினைவு கூருகிறது.
- பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு மற்றும் அமைதியை நன்கு மேம்படுத்துவதில் சுற்றுலா ஆற்றும் முக்கியப் பங்கை நினைவும் கூரும் நாளாக இந்த நாள் விளங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Tourism and Peace" என்பதாகும்.

## உலக வெறிநாய்க்கடி நோய் (ரேபீஸ்) தினம் - செப்டம்பர் 28

- இதன் நோக்கம் வெறி நாய்க்கடி நோய்த் தடுப்பு பற்றிய ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மற்றும் இந்தப் பயங்கரமான நோயை தடுத்து பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகும்.
- இந்தத் தினமானது ரேபீஸ் நோய்க்கு முதல் தடுப்பூசியைக் கண்டறிந்த பிரெஞ்சு வேதியியலாளரும், நுண்ணுயிரியலாளருமான லூயிஸ் பாஸ்டர் மறைந்த தினத்தைக் குறிக்கிறது.
- இந்த வருடத்தின் கருத்துரு: : "Breaking Rabies Boundaries" என்பதாகும்.




## சர்வதேசப் பொது தகவல் அணுகல் தினம் - செப்டம்பர் 28

- இது உயிர்களைக் காப்பாற்றுவதற்கும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், பொது மக்கள் தகவல்களை அணுகுவதற்கு உத்தரவாதம் அளிக்கும் அரசியலமைப்பு, சட்டப் பூர்வ அல்லது கொள்கைகளைக் கொண்டிருப்பதன் ஒரு நன்மையை எடுத்துக் காட்டுகிறது.
- இந்தத் தினத்தை யுனெஸ்கோ அமைப்பானது 17 நவம்பர் 2015 அன்று அறிவித்தது.
- இந்தத் தினம் நிலையான வளர்ச்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை அடைவதில் தகவல் அணுகல் தன்மையின் மிகவும் முக்கியப் பங்கை வலியுறுத்துகிறது.

## உலக இதய தினம் - செப்டம்பர் 29


- இது இதய நோய் மற்றும் இதயம் சார் நோய்களை நிர்வகிப்பதற்கான, அதன் தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- உலகளவில் இதய நோய்கள் (CVDs) இறப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.
- ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக, உலகளாவிய இறப்புகளில் சுமார் 31% அல்லது 20 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இதய நோயால் இறக்கின்றனர்.
- உலக இதயக் கூட்டமைப்பு 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை "Use Heart for Action" என்ற கருத்துருவுடன், புதிய மூன்றாண்டு உலக இதய தினப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.




## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30

- இது மொழியியல் மற்றும் கலாச்சாரப் பிளவுகளை இணைக்கச் செய்வதில் மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் அவர்களின் மிகவும் விலைமதிப்பற்ற ஒரு பங்களிப்பை அங்கீகரிக்கிறது.


- இந்த நாள் மொழி பெயர்ப்பாளர்களின் புரவலராகக் கருதப்படும் பைபிள் மொழி பெயர்ப்பாளர் புனித ஜெரோமின் மறைவுத் தினத்தைக் கொண்டாடுகிறது.
- அவர் கிரேக்க கையெழுத்துப் பிரதிகளிலிருந்து பைபிளின் புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை, லத்தீன் மொழியில் மொழி பெயர்த்த சில முன்னெடுப்புகளுக்காக அறியப் படுகிறார்.





# இதரச் செய்திகள்

## சருமப் பராமரிப்பு தயாரிப்புப் பொருட்களில் நுண்நெகிழிகள்

- இயங்கலையிலும் கடைகளிலும் வாங்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச 45 தயாரிப்புப் பொருட்களில் நுண்நெகிழிகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தியாவில் பகுப்பாய்வு செய்யப்பட்ட அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புப் பொருட்களில் 49.12% நுண்ணிய நெகிழி துகள்கள் இருப்பதாக ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.
- 45% தயாரிப்புப் பொருட்களில் பாலிஎதிலின் முதன்மையான பலபடிச் சேர்மமாகவும், பாலிப்ரோப்பிலீன், பாலிஸ்டிரீன், பாலியூரிதீன் மற்றும் பாலிகாப்ரோலாக்டோன் ஆகியவற்றுடன் ஒழுங்கற்ற அல்லது மென்மையான நுண்நெகிழிகள் இங்கு காணப் படுகின்றன.
- குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சில தயாரிப்புகளில் (23.33%) செல்லுலோஸ் நுண் துகள்கள் உள்ளன.
- தோராயமாக, மொத்த தயாரிப்புகளில் 1.34% பொருட்கள் நுண் நெகிழித் துகள்களைக் கொண்டிருந்தன என்ற நிலையில் அதில் அதிகபட்சமாக 5.04 சதவீதமும், சிலவற்றில் குறைவாக 0.04 சதவீதமும் நுண் நெகிழித் துகள்கள் காணப்பட்டன.




## நிலையான விகித மருந்துக் கலவை சார்ந்த மருந்துகளுக்குத் தடை




- இந்திய அரசாங்கம் செஸ்டன் கோல்ட் மற்றும் ஃபோராசெட் போன்ற பிரபலமான மருந்துகள் உள்ளிட்ட சுமார் 156 நிலையான விகித மருந்துக் கலவை சார்ந்த (FDC) மருந்துகளை (பல்வேறு மருந்துகள் குறிப்பிட்ட விகிதத்தில் ஒரே மருந்தாக கலக்கப் பட்ட மருந்து) தடை செய்துள்ளது.
- FDC என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறியப்பட்ட மருந்துகளின் ஒற்றைத் தவணை வடிவிலான கலவையாகும்.
- 2018 ஆம் ஆண்டு முதல், இதுபோன்ற 328 மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- FDC மருந்துகள் ஆனது, காசநோய் மற்றும் நீரிழிவு நோய் போன்றப் பாதிப்புகளைக் கொண்ட நோயாளிகளுக்கானது என்பதோடு இது போன்ற நோய்ப் பாதிப்பு உள்ள நபர்கள் அதற்காகத் தொடர்ந்து பல மருந்துகளை உட்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.
- நோயாளிகள் ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ள வேண்டிய மாத்திரைகளின் இவை எண்ணிக்கையைக் குறைத்து அதன் மூலம் மருத்துவச் சிகிச்சையை இடைவிடாது கடைப்பிடிப்பதை மேம்படுத்த உதவுகின்றன.
- 1988 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் உற்பத்தி மற்றும் விற்பனைக்காக அங்கீகரிக்கப் பட்ட 3,450 FDC மருந்துகளை ஆய்வு செய்ய அரசாங்கம் ஆனது 2014 ஆம் ஆண்டில் ஒரு குழுவை அமைத்தது.
- இக்குழு அதில் 963 மருந்துகளை மிக முரணானவை எனக் கண்டறிந்து, உடனடியாக அவற்றைத் தடை செய்ய பரிந்துரைத்தது.

- மேலும் ஆய்வு செய்ய வேண்டிய FDC மருந்துகளின் தொகுப்பையும் இது அடையாளம் கண்டுள்ளது.
- இவற்றில் இதுவரை 499 FDC மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளன.

## 7வது இராஷ்ட்ரிய போஷான் மாதம் 2024





- இந்த ஒரு மாத காலப் பிரச்சாரம் ஆனது ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்துவதையும், நாடு முழுவதும் முழுமையான நல்வாழ்வை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள குழந்தைகள், இளம்பருவப் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே நிலவும் மிகவும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்காக இது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இது இரத்த சோகை, வளர்ச்சி கண்காணிப்பு, ஊட்டச்சத்து ஈடேற்ற உணவு, போஷன் பி பதாய் பீ, சிறந்த ஆளுமைக்கானத் தொழில்நுட்பம் மற்றும் ஏக் பெட் மா கே நாம் உள்ளிட்ட முக்கிய கருப்பொருள்களில் கவனம் செலுத்தும்.

## கோமாரி நோய் பாதிப்பில்லாத மண்டலங்கள்

- எட்டு மாநிலங்களில் கோமாரி நோய் பாதிப்பில்லாத மண்டலங்களை ஏற்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- அவை கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, உத்தரகாண்ட், பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகியனவாகும்.
- இது இந்திய விலங்குப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை விரிவுபடுத்தச் செய்வதையும், நாட்டின் உலகளாவியச் சந்தை இருப்பை நன்கு மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோமாரி நோய் என்பது காட்டு மற்றும் வளர்ப்பு விலங்குகள், குறிப்பாக கால்நடைகள், பன்றிகள் மற்றும் செம்மறி ஆடுகளைப் பாதிக்கும் அதிகத் தொற்றுத் திறன் மிக்க ஒரு வைரஸ் நோயாகும்.

- ❖ இந்த வைரஸ் நோய், கால்நடைகளின் கால் மற்றும் வாயில் காயங்களை ஏற்படுத்தி, கால்நடைகளுக்கு காய்ச்சல் ஏற்படச் செய்வதோடு இந்த நோய்ப் பாதிப்புள்ள கால் நடைகள் தீவனத்தை உட்கொள்ளாது.




## திருவாசகத்தின் அச்சிடல் வரலாறு




- ❖ 1868 ஆம் ஆண்டில் சைவத் துறவி மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகத்தினை திருநெல்வேலியைச் சேர்ந்த தமிழ் அறிஞர் கா.பீர் காத்தரொளி ராவுத்தர் வெளியிட்டார்.
- ❖ ராவுத்தரின் திருவாசகப் பதிப்பு ஆனது, திருப்புன்கூர் சிவலோகநாதப் பண்டிதரால் சரி பார்க்கப் பட்டது.
- ❖ இந்நூலானது, காஞ்சிபுரத்தில் திருவேங்கட முதலியார் என்பவர் நடத்திய இயற்றமிழ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
- ❖ திருவாசகத்தில் உள்ள சிவபுராணம் பொதுவாக அகவல் என்று வர்ணிக்கப்படுகிறது, ஆனால் ராவுத்தர் அது கலிவெண்பா என்பதை நிரூபிக்க வேண்டி தொல்காப்பியத்தை மேற்கோள் காட்டினார்.

- இந்நூல் 140 வருட இடைவெளிக்குப் பிறகு 2008 ஆம் ஆண்டில் T.N.இராமச்சந்திரன் தஞ்சாவூரைச் சேர்ந்த தமிழறிஞராவார்.
- அச்சிடப்பட்ட சைவ இலக்கியங்களில் திருவாசகம் முதன்மையானதாகும்.
- இது 1835 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது, அதைத் தொடர்ந்து திருக்கோவையார் 1841 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.


## லோதல் துறைமுகம் பற்றிய ஆய்வு

- காந்தி நகரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, லோதல் நகரில் கப்பல் துறை இருந்ததை உறுதிப்படுத்தும் புதிய ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளது.
- ஹரப்பா நாகரிகத்தின் போது சபர்மதி ஆறு ஆனது லோதல் நகர் (தற்போது அந்த இடத்திலிருந்து 20 கி.மீ தொலைவில் பாய்கிறது) வழியாக ஓடியதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- அகமதாபாத் நகரினை லோதல், நல் சரோவர் சதுப்பு நிலம் மற்றும் லிட்டில் ரான் வழியாக மற்றொரு ஹரப்பா தளமான தோலாவிராவுடன் இணைக்கும் ஒரு பயணப் பாதையும் இருந்தது.




## PresVu கண் சொட்டு மருந்து

- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு (DCGI) ஆனது, என்டோட் பார்மாசுட்டிகல்ஸ் நிறுவனத்தின் PresVu என்ற கண் சொட்டு மருந்துக்கான உரிமத்தை இடை நிறுத்தி வைத்துள்ளது.
- இது வெள்ளெழுத்து (ப்ரெஸ்பியோபியா) உள்ளவர்களுக்கு எழுத்துகளைப் படிக்க உதவும் கண்ணாடிகளின் தேவையைக் குறைப்பதற்கானதாகும்.
- நிறுவனத்தின் அங்கீகரிக்கப்படாத விளம்பரங்கள், தயாரிப்பு பொருளின் பாதுகாப்பு தரம் மற்றும் நோயாளிகளால் அவை தவறாகப் பயன்படுத்தப்படுவதைப் பற்றிய பல சந்தேகங்களை உருவாக்குவதன் காரணமாக இந்த இடை நிறுத்த உத்தரவு வழங்கப் பட்டுள்ளது.




## A1 அல்லது A2 ரக பால் எனப்படும் கோரல்கள்

**2 be or not 2 be**


Customers often pay more for the promise of A2 milk without verifying the authenticity of the product at source

| | Indigenous 'Desi Cow' | Crossbred, exotic cow |
|---|---|---|
| Types | Gir, Sahiwal, Tharparkar | Jersey, Holstein |
| Physical Attributes | Distinct hump, leafy ears | No hump, roundish ears |
| Milk Yield | 5-6 litres a day | 15-20 litres a day |
| Genetic attribute | A2/A2 | A1/A2 |
| Cost of DNA certification | Rs 5,000 - 7,000 per cow | |
| Cost of daily test (Random sampling for A2 protein) | Rs 3,000 - 4,000 per batch/sample | |

- A2 ரக பால், நெய் அல்லது தயாரிப்புகள் ஆனது A1 ரக பால்/தயாரிப்புகளை விட மேன்மையானது என்ற உணவு/பால் பொருள் நிறுவனங்களின் அறிவியல்பூர்வமற்ற கோரிக்கைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்க FSSAI ஓர் அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.
- 'A1' மற்றும் 'A2' வகை பால் மற்றும் பால் பொருட்கள் என்ற கோரல்கள், தவறான தகவல்களை வழங்குவதாக கூறி அதன் பொட்டலங்களில் இருந்து அவை அகற்றப்பட வேண்டும் என்று FSSAI அறிவுறுத்தியுள்ளது.
- 'A1' மற்றும் 'A2' ரக பால் கொழுப்புப் பொருட்களுக்கு இடையேயான வேறுபாடு பீட்டா கேசீன் எனப்படும் புரதத்தின் கட்டமைப்பே ஆகும்.

## வேலையின்மை மற்றும் இதய நோய் ஆபத்து

- ICMR தலைமையிலான ஒரு ஆய்வில், வேலையில்லாதவர்கள் அதிக இருதய நோய்கள் ஏற்படும் ஆபத்தில் இருப்பதாகவும், அதைத் தொடர்ந்து அதிக இரத்த சர்க்கரை அளவு உள்ளவர்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
- பெண்களை விட ஆண்களுக்கு இரண்டு மடங்கு அதிகமாக இதய நோய் வருவதற்கான வாய்ப்பு 10% அதிகமாக உள்ளது.
- உயர் இரத்த சர்க்கரையானது இதய நோய் அபாயத்தைக் கணிசமாக அதிகரிக்கிறது
- இதனால் பெண்கள் சுமார் 85% அளவில் அதிக ஆபத்தை எதிர் கொள்கின்றனர் என்ற நிலையில் ஆண்களுக்கு 77% அதிக ஆபத்து உள்ளது.
- பணியில் உள்ளவர்கள் மற்றும் வீட்டு வேலை செய்யும் சுமார் 87-88% பேருக்கு இருதய நோய்கள் (CVD) ஏற்படும் அபாயம் மிகவும் குறைவாக உள்ள நிலையில் வேலை இல்லாதவர்களில், சுமார் 54% அளவில் வேலையில்லாதவர்களுக்கு மட்டுமே இந்த அபாயம் குறைவாக உள்ளது.




## அங்கோர் வாட் – கம்போடியா

- டைம்ஸ் டிராவல் நிறுவனமானது அங்கோர் வாட் கோயிலைப் புகைப்படம் எடுக்க மிகவும் ஏற்ற ஆசியாவின் மிகவும் சிறந்த யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள மற்ற உலகப் பாரம்பரியத் தளங்களில் இந்தியாவின் தாஜ் மஹால்; விஜயநகரப் பேரரசின் ஹம்பி; பெய்ஜிங்கில் உள்ள சீனப் பெருஞ்சுவர் மற்றும் பல தளங்கள் அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அங்கோர் வாட்டிற்கு 651,857 சர்வதேசப் பார்வையாளர்கள் வருகை தந்தனர்.
- 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டமைக்கப்பட்ட இது உலகின் மிகப்பெரிய மத நினைவுச் சின்னமாகும்.
- 1992 ஆம் ஆண்டில், இது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளமாக அங்கீகரிக்கப் பட்டது.



## ISO/UNDP PAS 53002

- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு (UNDP) மற்றும் சர்வதேச தர நிலைப் படுத்தல் அமைப்பு ஆகியவை 'ISO/UNDP PAS 53002' தரவரிசையினை அறிமுகப் படுத்தியுள்ளன.
- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான பெரும் பங்களிப்புகளை துரிதப் படுத்துவதற்கான உலகின் முதல் சர்வதேச வழிகாட்டுதல் இதுவாகும்.
- இது நிறுவனங்களுக்கு SDG இலக்குகளை அவற்றின் பல முக்கியச் செயல்பாடுகளில் வைப்பதற்கும் அவற்றின் நேர்மறையானத் தாக்கத்தை அதிகரிப்பதற்குமான மதிப்பு மிக்க ஆதாரத்தை வழங்குகிறது.




## FTI-TTP திட்டம்

- இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் ஆனது சமீபத்தில் அதன் மூன்றாவது முனையத்தில் குறிப்பிட்ட பயணிகளுக்கான மிக விரைவான குடியேற்ற (உள்நுழைவு வசதி) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நம்பகமான பயணிகள் விரைவான உள் நுழைவு ஏற்பாட்டுத் திட்டம் (FTI-TTP) ஆனது நம்பகமான பயணிகளின் சர்வதேசப் பயணங்களின் போது காத்திருப்புக் காலத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இது இந்தியக் குடிமக்கள் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்கள் (OCI) அட்டை தாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் ஆனது குடியேற்றச் செயல்முறையை 15-20 நிமிடங்களில் இருந்து சில வினாடிகள் என்ற கால அளவில் குறைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- FTI-TTP ஆனது வரும் மாதங்களில் மற்ற நகரங்களிலும் அறிமுகப்படுத்தப்படும்.




## ICAR-NISA நிறுவனத்தின் 100வது ஆண்டு நிறைவு

- ICAR-NISA ஆனது 1924 ஆம் ஆண்டில் ஜார்க்கண்டின் ராஞ்சியில் உள்ள இந்திய இயற்கை ரெசின்கள் (பிசின்கள்-குங்கிலியம்) மற்றும் பசைகள் ஆய்வுக் கல்வி நிறுவனமாக நிறுவப்பட்டது.
- இது 2022 ஆம் ஆண்டில் ICAR-NISA என மறுபெயரிடப்பட்டு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- இது முதன்மை வேளாண் பொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல் மற்றும் தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் வேளாண் சுற்றுலா போன்ற தொடர்புடைய செயல்பாடுகளை உள்ளடக்கியது.
- வேளாண் விளைபொருட்கள், எஞ்சியப் பொருட்கள மற்றும் துணை விளைப் பொருட்களை உணவு, தொழில்துறை மற்றும் மருத்துவப் பயன்பாட்டிற்கான உயர் மதிப்பு கொண்ட பொருட்களாக மாற்றும் செயல்முறைகள் இதில் அடங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★